**தொடர்பு எண்: 02/17/900/0001/04** 2013 பெப்புருவரி 11

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## செய்தித்தாள்களில் வங்கிகளின் காலாண்டு நிதியியல் கூற்றுக்களை வெளியிடுவதன் மூலம் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தல்

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் எமது முன்னைய கடிதத் தொடர்புகள் மற்றும் கலந்துரையாடல்கள் தொடர்பாக நாம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் காலாண்டு நிதியியல் கூற்றுக்களை 2013இன் முதலாம் காலாண்டிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வெளியிடுவதற்கான புதிய படிவமொன்றை இணைத்திருக்கிறோம்.

இதன்படி, மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் 2005 செத்தெம்பர் 30ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கையின் 4ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட படிவமானது, இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் மூலம் நீக்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

பிரதி: செயலாளர் - நாயகம், இலங்கை வங்கிகள் சங்கம் (உத்தரவாதம்) லிமிடெட்

**இணைப்பு**

**................................ வங்கி**
**................................ முடிவடைந்த காலப்பகுதிக்குரிய**
**வருமானக் கூற்று**

| ரூபா ஆயிரம்களில் | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி |
| | தி/மா/ஆ இலிருந்து தி/மா/ஆ வரை | தி/மா/ஆ இலிருந்து தி/மா/ஆ வரை | தி/மா/ஆ இலிருந்து தி/மா/ஆ வரை | தி/மா/ஆ இலிருந்து தி/மா/ஆ வரை |
| வட்டி வருமானம் | | | | |
| வட்டிச் செலவினங்கள் | | | | |
| **தேறிய வட்டி வருமானம்** | | | | |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | | | | |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | | | | |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | | | | |
| வியாபார நடவடிக்கைகள் மூலமான தேறிய இலாபம்/ (நட்டம்) | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாகச் சந்தைப் | | | | |
| பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் | | | | |
| சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம்/ (நட்டம்) | | | | |
| நிதியியல் முதலீடுகளிலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்) | | | | |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய) | | | | |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | | | | |
| கடன்கள் மற்றும் ஏனைய நட்டங்களுக்கான பெறுமதி குறைப்பு | | | | |
| தனிப்பட்ட பெறுமதி குறைப்பு | | | | |
| திரண்ட பெறுமதி குறைப்பு | | | | |
| ஏனையவை | | | | |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | | | |
| தனிப்பட்ட செலவினங்கள் | | | | |
| பெறுமானத் தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு | | | | |
| ஏனைய செலவினங்கள் | | | | |
| **பெறுமதிகூட்டப்பட்ட வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு** | | | | |
| **இலாபம்/ (நட்டம்)** | | | | |
| நிதியியல் பணிகள் மீதான பெறுமதிகூட்டப்பட்ட வரி | | | | |
| **பெறுமதிகூட்டப்பட்ட வரிக்குப் பின்னரான** | | | | |
| **தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | | | | |
| இணைக் கம்பனிகள் மற்றும் கூட்டு முயற்சிகளின் இலாபப் பங்கு | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **வரிக்கு முன்னரான இலாபம்/(நட்டம்)** | | | | |
| வரிச் செலவினங்கள் | | | | |
| **காலப்பகுதிக்கான இலாபம்/(நட்டம்)** | | | | |
| **பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்:** | | | | |
| தாய்க் கம்பனியின் உரிமையாளர்களுக்கு | | | | |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | | | | |
| **இலாபத்தின் மீதான பங்கு இலாபம்** | | | | |
| சாதாரண பங்கொன்றிற்கான அடிப்படை இலாபம் | | | | |
| சாதாரண பங்கொன்றிற்கான குறைவடைந்த இலாபம் | | | | |

**................................ வங்கி**

**................................. முடிவடைந்த காலப்பகுதிக்குரிய**

**அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று**

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| **ரூபா ஆயிரம்களில்** | தி/மா/ஆ இலிருந்து தி/மா/ஆ வரை | தி/மா/ஆ இலிருந்து தி/மா/ஆ வரை | தி/மா/ஆ இலிருந்து தி/மா/ஆ வரை | தி/மா/ஆ இலிருந்து தி/மா/ஆ வரை |
| **காலப்பகுதிக்கான இலாபம்/(நட்டம்)** | | | | |
| **வரி நீங்கலான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | | | |
| மீள்மதிப்பீட்டு மிகையில் ஏற்பட்ட மாற்றங்கள் | | | | |
| குறித்துரைக்கப்பட்ட நலத்திட்டங்கள் மீதான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் | | | | |
| (வெளிநாட்டு தொழிற்பாட்டுக்கான நிதிக் கூற்றுக்களின் நாணயப் பரிமாற்றம் காரணமாக ஏற்படும்) | | | | |
| விற்பனைக்குக் கிடைக்கக் கூடிய நிதியியல் சொத்துக்களை மீள்அளவீடு செய்வதன் மூலமான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் | | | | |
| காசுப்பாய்ச்சல் காப்பு ஏற்பாடுகள் மீதான இலாபங்கள் அல்லது நட்டங்கள் | | | | |
| ஏனையவை | | | | |
| இணைக் கம்பனிகள் மற்றும் கூட்டு முயற்சிகளின் இலாபப் பங்கு | | | | |
| கழி: ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானப் பகுதிகளின் தொடர்பான வரிச் செலவினம்/ (வருமானம்) | | | | |
| **காலப்பகுதிக்கான வரி நீங்கலான ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | | | |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம்** | | | | |
| **பகிர்ந்தளிக்கப்படுவதற்கு:** | | | | |
| தாய்க் கம்பனியின் உரிமையாளர்களுக்கு | | | | |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | | | | |

................................ வங்கி
.................................. இல் உள்ளவாறான
நிதியியல் நிலைமைக் கூற்று

| ரூபா ஆயிரம்களில் | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி |
| | தி/மா/ஆ இல் உள்ளவாறு | தி/மா/ஆ இல் உள்ளவாறு | தி/மா/ஆ இல் உள்ளவாறு | தி/மா/ஆ இல் உள்ளவாறு |
| **சொத்துக்கள்** | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | | | |
| மத்திய வங்கிகளுடனான மீதிகள் | | | | |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | | | | |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | | | |
| வர்த்தகப்படுத்தலுக்காக வைக்கப்பட்டுள்ள ஏனைய நிதியியல் சொத்துக்கள் | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள் | | | | |
| வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் | | | | |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் | | | | |
| நிதியியல் முதலீடுகள் - விற்பனைக்கு கிடைக்கத்தக்கதாக உள்ளவை | | | | |
| நிதியியல் முதலீடுகள் - முதிர்ச்சியடையும் வரை வைக்கப்பட்டுள்ளவை | | | | |
| இணைக் கம்பனிகளிலான முதலீடுகள் | | | | |
| துணைக் கம்பனிகள் மற்றும் கூட்டுமுயற்சிகளிலான முதலீடுகள் | | | | |
| சொத்து, பொறி மற்றும் கருவிகள் | | | | |
| முதலீட்டுச் சொத்துக்கள் | | | | |
| நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | | | | |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | | | | |
| ஏனைய சொத்துக்கள் | | | | |
| **மொத்தச் சொத்துக்கள்** | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை | | | | |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | | | |
| வர்த்தகப்படுத்தலுக்காக வைக்கப்பட்டுள்ள ஏனைய நிதியியல் பொறுப்புக்கள் | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் பொறுப்புக்கள் | | | | |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | | | | |
| ஏனைய கடன்பாடுகள் | | | | |
| வழங்கப்பட்ட படுகடன் பிணைகள் | | | | |
| நடப்பு வரிப் பொறுப்புக்கள் | | | | |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | | | | |
| ஏனைய ஏற்பாடுகள் | | | | |
| ஏனைய பொறுப்புக்கள் | | | | |
| இணைக் கம்பனிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | | | | |
| கீழ்நிலை தவணைப் படுகடன்கள் | | | | |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | | | |
| **உரிமை மூலதனம்** | | | | |
| கூறப்பட்ட மூலதனம்/ஒதுக்கப்பட்ட மூலதனம் | | | | |
| நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம் | | | | |
| பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் | | | | |
| ஏனைய ஒதுக்கங்கள் | | | | |
| பங்குதாரர்களின் மொத்த உரிமை மூலதனம் | | | | |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்குரியது | | | | |
| **மொத்த உரிமை மூலதனம்** | | | | |
| **மொத்த உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | | | | |
| **எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகள்** | | | | |
| **விஞ்ஞாபன தகவல்கள்** | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | | | | |

குறிப்பு: கூறப்பட்ட தொகைகள் பெறுமதி குறைப்பு மற்றும் பெறுமானத் தேய்வு நீங்கலாக உள்ளன.

................................ வங்கி

................................. முடிவடைந்த காலப்பகுதிக்குரிய

பங்கு மூலதன மாற்றங்களின் கூற்று

வங்கி/ குழுமம்

| ரூபா ஆயிரம்களில் | கூறப்பட்ட மூலதனம்/ ஒதுக்கப்பட்ட மூலதனம் | | | ஒதுக்குகள் | | | | மொத்தம் | கட்டுப்படுத் தாத உரிமை | மொத்த உரிமை மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வாக்குரிமை யுள்ள சாதாரண பங்குகள் | வாக்குரிமை யற்ற சாதாரண பங்குகள் | ஒதுக்கப் பட்ட மூலதனம் | ஒதுக்கு நிதியம் | மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | பிடித்து வைக்கப் பட்ட வருவாய்கள் | ஏனைய ஒதுக்குகள் | | | |
| தி/மா/ஆ அன்று மீதி (ஆரம்ப மீதி) | | | | | | | | | | |
| **ஆண்டுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய மொத்த வருமானம்** | | | | | | | | | | |
| ஆண்டுக்கான இலாபம்/(நட்டம்) | | | | | | | | | | |
| ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் (வரி நீங்கலாக) | | | | | | | | | | |
| **ஆண்டுக்கான அனைத்தையுமுள்ளடக்கிய மொத்த வருமானம்** | | | | | | | | | | |
| **உரிமை மூலதன உடமையாளர்களுடனான உரிமை மூலதனத்துடன் நேரடியாக இனங்காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்** | | | | | | | | | | |
| பங்கு வழங்கல்/ ஒதுக்கப்பட்ட மூலதனத்தில் அதிகரிப்பு | | | | | | | | | | |
| செயற்படுத்தப்பட்ட பங்கு விருப்பார்வங்கள் | | | | | | | | | | |
| மிகை இலாப வழங்கல் | | | | | | | | | | |
| உரிமை வழங்கல் | | | | | | | | | | |
| காலப்பகுதியில் ஒதுக்கங்களுக்கு மாற்றப்பட்டவை | | | | | | | | | | |
| உரிமை மூலதன உடமையாளர்களுக்கான பங்கிலாபம் | | | | | | | | | | |
| தலைமை காரியாலயத்திற்கு மாற்றப்பட்ட இலாபம் | | | | | | | | | | |
| சொத்து, பொறி மற்றும் கருவிகளின் மீள்மதிப்பீட்டு இலாபம்/ (நட்டம்) (செலவு முறை கடைப்பிடிக்கப்பட்டிருப்பின்) | | | | | | | | | | |
| ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | | | | | | | | | | |
| **உரிமை மூலதன உடமையாளர்களுடனான மொத்தக் கொடுக்கல்வாங்கல்கள்** | | | | | | | | | | |
| தி/மா/ஆ அன்று மீதி (இறுதி மீதி) | | | | | | | | | | |

................................ வங்கி
காசுப்பாய்ச்சல்கள் கூற்று
................................. முடிவடைந்த காலப்பகுதிக்குரியது

| ரூபா ஆயிரம்களில் | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி |
| | தி/மா/ஆ | தி/மா/ஆ | தி/மா/ஆ | தி/மா/ஆ |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | | | |
| வரிக்கு முன்னரான இலாபம் | | | | |
| சீராக்கங்கள்: | | | | |
| வரிக்கு முன்னரான இலாபத்தில் அடங்கியுள்ள காசல்லா விடயங்கள் | | | | |
| தொழிற்பாட்டு சொத்துக்களிலான மாற்றங்கள் | | | | |
| தொழிற்பாட்டு பொறுப்புக்களிலான மாற்றங்கள் | | | | |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய இலாபம் | | | | |
| இணைக் கம்பனிகள் மற்றும் கூட்டு முயற்சிகளின் | | | | |
| இலாபங்களின் பங்கு | | | | |
| துணை மற்றும் இணை கம்பனிகளிலிருந்தான பங்கு இலாப வருமானம் | | | | |
| கீழ்நிலைப் படுகடன்கள் மீதான வட்டிச் செலவு | | | | |
| ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடுக) | | | | |
| வரையறுக்கப்பட்ட காப்புத் திட்டங்களுக்கு | | | | |
| செலுத்திய பங்களிப்பு | | | | |
| செலுத்திய வரி | | | | |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | | | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| சொத்து, பொறி மற்றும் கருவிகளின் கொள்வனவு | | | | |
| சொத்து, பொறி மற்றும் கருவிகளின் விற்பனையிலிருந்தான பெறுகைகள் | | | | |
| நிதியியல் முதலீடுகளின் கொள்வனவு | | | | |
| நிதியியல் முதலீடுகளின் விற்பனை மற்றும் முதிர்வுகளின் மூலமான பெறுகைகள் | | | | |
| அருவச் சொத்துக்களின் தேறிய கொள்வனவு | | | | |
| துணை மற்றும் இணை கம்பனிகளின் முதலீடுகளின் கொள்வனவிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல் | | | | |
| துணைக் கம்பனிகளின் விற்பனை மூலமான தேறிய காசுப்பாய்ச்சல் | | | | |
| இணைக் கம்பனிகளின் மற்றும் கூட்டு முயற்சிகளின் விற்பனை மூலமான பெறுகைகள் | | | | |
| துணை மற்றும் இணை கம்பனிகளிலான முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | | | | |
| ஏனையவை (தயவுசெய்து குறிப்பிடவும்) | | | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் (பாவிக்கப்பட்ட)/ இருந்தான தேறிய காசு** | | | | |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| சாதாரண பங்கு மூலதன வழங்கல் மூலமான தேறிய பெறுகைகள் | | | | |
| ஏனைய உரிமை மூலதனச் சாதனங்களின் வழங்கல் மூலமான தேறிய பெறுகைகள் | | | | |
| கீழ்நிலைப் படுகடன் வழங்கல் மூலமான தேறிய பெறுகைகள் | | | | |
| கீழ்நிலைப் படுகடன் மீள்கொடுப்பனவு | | | | |
| கீழ்நிலைப் படுகடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவு | | | | |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு செலுத்திய பங்கிலாபம் | | | | |
| தாய்க் கம்பனியின் பங்குதாரர்களுக்கு செலுத்திய பங்கிலாபம் | | | | |
| ஏனைய உரிமை மூலதனச் சாதனங்களின் உடமையாளர்களுக்குச் செலுத்திய பங்கிலாபம் | | | | |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | | | | |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | | | | |
| காலப்பகுதியின் ஆரம்பத்திலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் தொடர்பான செலாவணி வேறுபாடுகள் | | | | |
| காலப்பகுதியின் முடிவிலிருந்த காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | | | |

குறிப்பு : இலங்கை கணக்கீட்டு நியமம் 7இல் குறிப்பிடப்பட்ட இரண்டு செயன்முறைகளில் ஒன்றினை, காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிப்பதற்கு பயன்படுத்த வங்கிக்கு தெரிவு உள்ளது.

................................ வங்கி
.................................. இல் உள்ளவாறான
நிதியியல் சாதனங்களின் அளவீட்டு அடிப்படையிலான பகுப்பாய்வு

அ. வங்கி - நடப்புக் காலப்பகுதி

| ரூபா ஆயிரம்களில் | வ.வை | இ.அ.ந. ச.பெ.கு | மு.வ. வை | கடன் தீர்ப்பனவுச் செலவு | வி.கி | காப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | | | | | | | |
| மத்திய வங்கிகளுடனான மீதிகள் | | | | | | | |
| வங்கிகளுடனான வைப்புக்கள் | | | | | | | |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | | | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட ஏனைய நிதியியல் சொத்துக்கள் | | | | | | | |
| வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் | | | | | | | |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் | | | | | | | |
| நிதியியல் முதலீடுகள் | | | | | | | |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | | | | | | | |

| ரூபா ஆயிரம்களில் | வ.வை | இ.அ.ந. ச.பெ.கு | கடன் தீர்ப்பனவுச் செலவு | காப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை | | | | | |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | | | | | |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட ஏனைய நிதியியல் பொறுப்புக்கள் | | | | | |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | | | | | |
| ஏனைய கடன்பாடுகள் | | | | | |
| வழங்கப்பட்ட படுகடன் பிணைகள் | | | | | |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | |

வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டிருப்பவை - வ.வை
இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்டவை - இ.அ.ந.ச.பெ.கு
கடன்கள் மற்றும் வருமதிகள்/ கடன் தீர்ப்பனவிலுள்ள வைப்புக்கள் - கடன் தீர்ப்பனவுச் செலவு
முதிர்ச்சியடையும் வரை வைக்கப்பட்டிருப்பவை - மு.வ.வை
வி.கி - விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவை
சந்தைப் பெறுமதிச் சாதனங்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் காப்பு - காப்பு

**ஆ. வங்கி - மேற்குறிப்பிட்டவாறான முன்னைய காலப்பகுதி**

**இ. குழுமம் - மேற்குறிப்பிட்டவாறான நடப்புக் காலப்பகுதி**

**ஈ. குழுமம் - மேற்குறிப்பிட்டவாறான முன்னைய காலப்பகுதி**

................................ வங்கி
.................................. இல் உள்ளவாறான
தெரிந்தெடுக்கப்பட்ட செயலாற்றக் குறிகாட்டிகள் (ஒழுங்குபடுத்துதல் அறிக்கைப்படுத்தலின்படி)

| விடயம் | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | தி/மா/ஆ | தி/மா/ஆ | தி/மா/ஆ | தி/மா/ஆ |
| **ஒழுங்குபடுத்துதல் மூலதனப் போதுமை** | | | | |
| மைய மூலதனம் (அடுக்கு 1 மூலதனம்), ரூ.'000 | | | | |
| மொத்த மூலதன அடித்தளம், ரூ.'000 | | | | |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் %ஆக மைய மூலதனப் போதுமை விகிதம் (குறைந்தபட்சத் தேவைப்பாடு, 5%) | | | | |
| இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களின் %ஆக மொத்த மூலதனப் போதுமை விகிதம் (குறைந்தபட்சத் தேவைப்பாடு, 10%) | | | | |
| **சொத்துக்களின் தரம் (கடன் சொத்துப்பட்டியலின் தரம்)** | | | | |
| திரண்ட செயற்படாக் கடன்களின் விகிதம், % (இடைநிறுத்தி வைக்கப்பட்ட வட்டி நீங்கலாக) | | | | |
| தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம், % (இடைநிறுத்தி வைக்கப்பட்ட வட்டி மற்றும் ஒதுக்கம் நீங்கலாக) | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **இலாபத்தன்மை** | | | | |
| வட்டி இலாபம், % | | | | |
| சொத்துக்களிலிருந்தான வருவாய் (வரிக்கு முந்திய), % | | | | |
| உரிமை மூலதனத்திலிருந்தான வருவாய், % | | | | |
| **ஒழுங்குமுறைப்படுத்தல் திரவத்தன்மை** | | | | |
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள், ரூ.'000 | | | | |
| நியதிச்சட்ட திரவச் சொத்துக்கள் விகிதம், % | | | | |
| (குறைந்தபட்சத் தேவை, 20%) | | | | |
| உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு | | | | |
| கரைகடந்த வங்கித்தொழில் பிரிவு | | | | |

**அத்தாட்சிப்படுத்துகை:**

.................................. வங்கியைச் சேர்ந்த பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் நிதியியல் கட்டுப்பாட்டாளர்/ இணக்கப்பாட்டு அலுவலர் ஆகிய கீழ் கையொப்பமிடப்பட்ட நாங்கள் கூட்டாக அத்தாட்சிப்படுத்துவதாவது:

(அ) இலங்கை மத்திய வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட வரைவிலக்கணங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்புகளுக்கிணங்கவே மேற்கூறப்பட்ட கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன;

(ஆ) இக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள தகவல்கள், கணக்காய்வு செய்யப்பட்டவை என அறிவிக்கப்படாதவிடத்து அவை கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

(பெயர்)
(கையொப்பமிடப்பட்டது) பிரதான நிறைவேற்று
அலுவலர்
திகதி: தி/மா/ஆ

(பெயர்)
(கையொப்பமிடப்பட்டது) நிதியியல் கட்டுப்பாட்டாளர்
அல்லது இணக்கப்பாட்டு அலுவலர்
திகதி: தி/மா/ஆ

## திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) மற்றும் 76ஜே(1) இன் நியதிகளின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**தலைவர்**
**நாணயச் சபை**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு
2013 ஏப்பிறல் 4

### 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்
### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் பங்குச் சந்தைக்கான வெளிப்படுத்துகை

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1) ஆகிய பிரிவுகளினால் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி நாணயச் சபையானது முறையே உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் (இதனகத்துப் பின்னர் உரிமம் பெற்ற வங்கிகள் என குறிப்பிடப்படும்) பங்குச் சந்தைக்கான வெளிப்படுத்துகை தொடர்பில் மீளாய்வுகளை மேற்கொண்டதுடன், வங்கித்தொழில் முறைமையின் பாதுகாப்பினையும் ஆற்றல் வாய்ந்த தன்மையினையும் மேம்படுத்தும் நோக்குடன், முன்மதியுடைய மட்டமொன்றில் சாத்தியமான ஏதேனும் இடர்நேர்வுகளை தணிப்பதற்காக, பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவ நியமங்களைப் பின்பற்றுமாறு உரிமம் பெற்ற வங்கிகளை தேவைப்படுத்துவதற்கு தீர்மானித்தது.

**எடுத்துக்காட்டல்**

1. இப்பணிப்புரைகள் 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

**பங்குகள் மீதான கடன் வசதி வழங்கும் வர்த்தகத்தின் மீதான உள்ளக வரையறை**

2. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வாடிக்கையாளர்/ முதலீட்டாளர்களுக்கு பங்குகளின் மீது கடன் வசதிகளை வழங்கலாம்:

(i) வர்த்தக வங்கி பின்வருவன தொடர்பில் உள்ளக வரையறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:

அ. தனிப்பட்ட வாடிக்கையாளர்/ முதலீட்டாளர் பங்கு சொத்துப்பட்டியலின் சந்தைப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்ட அத்தகைய வாடிக்கையாளர்/ முதலீட்டாளர்களின் கடன் வசதி வழங்கல் வர்த்தகப்படுத்தலின் வெளிப்படுத்துகையானது நடைமுறையிலுள்ள ஏதேனும் நியதிச் சட்ட வரையறைகளுக்குட்பட்டிருத்தல்; அத்துடன்

ஆ. உரிமம் பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்த வெளிநின்ற தொகையினை அடிப்படையாகக் கொண்ட கூட்டு கடன் வசதி வழங்கலில் வர்த்தகப்படுத்தல் வெளிப்படுத்துகைகள்.

(ii) கடன் வசதி வர்த்தகப்படுத்தல் வசதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அனைத்துப் பங்குகளும் கடன் வசதி வர்த்தப்படுத்தலை வழங்குகின்ற வங்கியினது பிணையின் கீழ் இருத்தல் வேண்டும்.

**பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கான உத்தரவாதங்களை வழங்குவதன் மீதான வரையறை**

3.1 ஆரம்பப் பங்கு வழங்கல்களிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக, அத்தகைய ஆரம்பப் பங்கு வழங்கலின் பெறுமதியில் ஐம்பது சதவீதத்தினை விஞ்சாத விதத்தில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று உத்தரவாதங்களை வழங்கலாம்.

3.2 காசு வைப்புக்களுக்கெதிராக வழங்கப்பட்ட உத்தரவாதங்களுக்கு பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்குறிப்பிட்ட வரையறையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(i) காசு வைப்புக்கள் உத்தரவாதத்தின் பெறுமதியிலும் பார்க்க குறைவானதாக இல்லாததாக இருக்குமிடத்து

(ii) காசு வைப்புக்கள் வங்கியிலிருந்தான ஏதேனும் கடன்களிலிருந்து நிதியிடப்படாதிருக்குமிடத்து; அத்துடன்

(iii) வாடிக்கையாளர்கள் தமது கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுமிடத்து அத்தகைய காசு வைப்புக்களை வங்கிகள் தமது உடமையில் வைத்திருப்பதற்கான உரிமையினைக் கொண்டிருக்குமிடத்து.

**பணிப்பாளர் சபையின் வகிபாகம்**

4. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற வங்கிகளின் பணிப்பாளர் சபையும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளினது கிளைகளின் தலைமை அலுவலகம்/ பிராந்திய அலுவலகங்களும் ஒப்புதலளிக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை வழிகாட்டல்கள் மற்றும் மேலே 2(1)இல் உள்ளவாறான கடன் வசதி வர்த்தகப்படுத்தலுக்கான முன்மதியுடைய வரையறைகள் உட்பட இருப்புச் சந்தை நடவடிக்கைகளுக்கான அவற்றின் வெளிப்படுத்துகை மீதான உள்ளகக் கட்டுப்பாடுகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதுடன் கொடுகடன், திரவத்தன்மை மற்றும் தற்போது இடம்பெற்று வரும் அடிப்படையில் பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவ தகவல்களுடன் கூடிய திரட்சி என்பனவற்றையும் மதிப்பீடு செய்து கொள்ளுதல் வேண்டும்.

**திரட்சிகள் மீதான கட்டுப்பாடு**

5. ஒன்றுதிரண்ட இடர்நேர்வுகளைத் தணிக்கும் விதத்தில் ஒவ்வொரு வங்கியும் நியாயமான எண்ணிக்கை கொண்ட வாடிக்கையாளர்களிடையே பங்குகளின் சொத்துப்பட்டியலைப் பன்முகப்படுத்திக் கொள்வதன் மூலம் கடன் வசதியளித்தல் வர்த்தக வசதிகளைப் பரப்பியமைத்தல் வேண்டும்.

**அறிக்கையிடல்**

6. இணைப்பு ‘அ’ இல் உள்ள அறிக்கையிடும் படிவத்திற்கிணங்க உரிமம் பெற்ற ஒவ்வொரு வங்கியும் பங்குச் சந்தைக்கான வெளிப்படுத்துகை விபரங்களை ஒவ்வொரு காலாண்டினையும் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

**பணிப்புரைகளை நீக்கிவிடுதல்**

7. பின்வரும் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

(i) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட பங்குச் சந்தைக்கான வெளிப்படுத்துகை மீதான பணிப்புரைக்கான திருத்தங்கள் மீதான 2011ஆம் ஆண்டு ஓகத்து 26ஆம் நாளிடப்பட்ட 2011ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை மற்றும் 2011ஆம் ஆண்டு திசெம்பர் 16ஆம் திகதியிடப்பட்ட 2011ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை;

(ii) உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட பங்குச் சந்தைக்கான வெளிப்படுத்துகை மீதான பணிப்புரைக்கான திருத்தங்கள் மீதான 2011ஆம் ஆண்டு ஓகத்து 26ஆம் நாளிடப்பட்ட 2011ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை மற்றும் 2011ஆம் ஆண்டு திசெம்பர் 16ஆம் நாளிடப்பட்ட 2011ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரை.

**இணைப்பு அ**

சேரல் : வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி
உரிமம் பெற்ற வங்கியின் பெயர் :
முடிவடைந்த் காலாண்டு :

**பங்குச் சந்தை வெளிப்படுத்துகைக்கான காலாண்டுக் கூற்று**

அ. பங்குச் சந்தைக்கான வெளிப்படுத்துகை

| விடயம் | ஐந்தொகை வெளிப்படுத்துகை மீது | | | | ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகை | | | மொத்த வெளிப்படுத்துகை (ஏ) = (ஈ + எ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கடன் வசதி வர்த்தகப் படுத்தல் வசதிகள் (அ) | பட்டியலிடப்பட்ட பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட ஏனைய கடன்கள் (ஆ) | ஏனையவை[ஐ] (இ) | துணை மொத்தம் (ஈ) = (அ+ஆ+இ) | வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் மொத்தப் பெறுமதி (உ) | ஒப்புறுதி மற்றும் ஏனைய கடப்பாடுகள், கொடுகடன் தொடர் போன்றன (ஊ) | துணை மொத்தம் (எ) = (உ + ஊ) | | |
| வெளிநின்ற தொகை (ரூ. மில்.) | | | | | | | | | |
| மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் வெளிநின்ற தொகையின் % மாக | | | | | | | | | |

**ஆ. ஆரம்பப் பங்கு வழங்கலில் பங்குகளின் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட உத்தரவாதங்கள்**

| | ஆரம்பப் பங்கு வழங்கலின் பெயர் (ஐ) | ஆரம்பப் பங்கு வழங்கலின் அளவு (ஒ) | முழுமையாகக் காசினை அடிப்படையாகக் கொண்ட உத்தரவாதங்கள் (ரூ.மில்.) (ஓ) | காசு வைப்பு இல்லாமல் வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் (ரூ.மில்.) (ஔ) | வழங்கப்பட்ட உத்தரவாதங்களின் மொத்தப் பெறுமதி (ரூ.மில்) (க) = (ஓ + ஔ) |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | மொத்தம் | | | | |

குறிப்புகள்:[ஐ] ஏதுமிருப்பின், தயவுசெய்து தனித்தனியாக விபரங்களைத் தரவும்

இக்கூற்றினை ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்ததும் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். தயவுசெய்து banksup@cbsl.lk என்ற முகவரிக்கு மின்னஞ்சலில் அல்லது 2477711 இற்கு தொலைநகலில் அனுப்பவும்.

**திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1) ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**தலைவர்**
**நாணயச் சபை**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு
2013 ஏப்பிறல் 4

## 2013ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்
## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினது அசையாச் சொத்துக்களினை விற்பனை செய்தல், மாற்றல் செய்தல், ஒப்படைத்தல் அல்லது அகற்றிவிடுதல் மீதான கட்டுப்பாடு

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1)ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி நாணயச் சபையானது உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினது அசையாச் சொத்துக்களினை விற்பனை செய்தல், மாற்றல் செய்தல், ஒப்படைத்தல் அல்லது அகற்றிவிடுதல் மீதான கட்டுப்பாடுகளின் மீது பின்வரும் பணிப்புரைகளை விடுக்கின்றது.

1. படுகடனைச் செலுத்தத் தவறியமைக்காக கையகப்படுத்தப்பட்ட அசையாச் சொத்துக்கள் நீங்கலாக, எந்தவொரு உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் எழுத்து மூலமான முன் அனுமதி இல்லாமல் சொத்துக்களின் சந்தைப் பெறுமதிக்குக் குறைவாகவோ அல்லது வங்கியின் ஏட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளவாறான சொத்துக்களின் மதிப்பீட்டினை அதிகரிக்கும் விதத்தில் அச்சொத்துக்களின் சந்தைப் பெறுமதிக்கு மேலாகவோ எந்தவொரு அசையாச் சொத்துக்களையும் விற்கவோ மாற்றல் செய்யவோ, ஒப்படைக்கவோ அல்லது அகற்றிவிடவோகூடாது.

2. அசையாச் சொத்துக்களின் விற்பனை, மாற்றல் தொடர்பான கட்டுப்பாட்டின் மீதான 1997 நவெம்பர் 21ஆம் நாளிடப்பட்ட பணிப்புரைகள் இத்தால் நீக்கப்படுகின்றன.

**தொடர்பு எண்: 02/17/500/0540/001** 2013 ஏப்பிறல் 05

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா / அம்மணி,

## திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவின் கீழ் திரவச் சொத்துக்களின் வரைவிலக்கணம்

நிறைகாப்புடைய கூறுநம்பிக்கைகளில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் செய்யப்படும் முதலீடுகளை, பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவின் கீழ் "திரவச் சொத்துக்கள்" தொடர்பான வரைவிலக்கணத்தின் விடயம் (ஜி) இன் நியதிகளில் திரவச் சொத்துக்களாக கருதப்பட வேண்டுமென நாணயச் சபை தீர்மானித்திருக்கிறது.

(அ) நிறைகாப்புடைய கூறுநம்பிக்கைகள் நீண்ட கால சமவாய நிதியங்களாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நிறைகாப்புடைய கூறுநம்பிக்கைகளின் அடிப்படை முதலீட்டுச் சொத்துப்பட்டியல் எப்பொழுதும் இலங்கை அரசாங்கப் பிணையங்களாக இருத்தல் வேண்டும்.

(இ) நிறைகாப்புடைய கூறுநம்பிக்கைகளிலுள்ள முதலீட்டில் 90 சதவீதம் மட்டுமே திரவச் சொத்துக்களாக கருப்படுதல் வேண்டும்.

நிறைகாப்புடைய கூறுநம்பிக்கைகளின் முதலீடுகளின் தகுதி வாய்ந்த பெறுமதிகள், உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவிற்கான (பீஎஸ்டி-எம்எவ்-04-எல்டி) நியதி திரவச் சொத்து விகிதம் மீதான மாதாந்த வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றின் குறியீட்டு இலக்கமான 4.1.2.4.0.0 இன் கீழ் அறிக்கையிடப்பட வேண்டும் என உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு மேலும் அறிவிக்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

தொடர்பு எண்: 02/17/500/0540/001 2013 ஏப்பிறல் 05

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா / அம்மணி,

## திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1)ஆம் பிரிவின் கீழ் திரவச் சொத்துக்களின் வரைவிலக்கணம்

நிறைகாப்புடைய கூறுநம்பிக்கைகளில் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் செய்யப்படும் முதலீடுகளை, பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1)ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் திரவச் சொத்து பணிப்புரையின் விடயம் 3.11இன் நியதிகளில் திரவச் சொத்துக்களாக கருதப்பட வேண்டுமென நாணயச் சபை தீர்மானித்திருக்கிறது.

(அ) நிறைகாப்புடைய கூறுநம்பிக்கைகள் நீண்ட கால சமவாய நிதியங்களாக இருத்தல் வேண்டும்.

(ஆ) நிறைகாப்புடைய கூறுநம்பிக்கைகளின் அடிப்படை முதலீட்டுச் சொத்துப்பட்டியல் எப்பொழுதும் இலங்கை அரசாங்கப் பிணையங்களாக இருத்தல் வேண்டும்.

(இ) நிறைகாப்புடைய கூறுநம்பிக்கைகளிலுள்ள முதலீட்டில் 90 சதவீதம் மட்டுமே திரவச் சொத்துக்களாகக் கருப்படுதல் வேண்டும்.

நிறைகாப்புடைய கூறுநம்பிக்கைகளின் முதலீடுகளின் தகுதி வாய்ந்த பெறுமதிகள், உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவிற்கான (பீஎஸ்டி-எம்எவ்-04-எல்டி) நியதி திரவச் சொத்து விகிதம் மீதான மாதாந்த வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றின் குறியீட்டு இலக்கமான 4.1.2.4.0.0 இன் கீழ் அறிக்கையிடப்பட வேண்டும் என உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு மேலும் அறிவிக்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
பணிப்பாளர் வங்கி மேற்பார்வை

**திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**தலைவர்**
**நாணயச் சபை**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு
2013 ஏப்பிறல் 12

## 2013ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட கம்பனி ஆளுகை மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 46(1)ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தினைப் பயன்படுத்தி, நாணயச் சபையானது இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கான கம்பனி ஆளுகையின் மீதான வங்கித்தொழில் சட்டத்தின் 2007ஆம் ஆண்டு திசெம்பர் 26ஆம் திகதியிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரையின் 3(3)(ii) இலக்க பணிப்புரையினை திருத்துவதற்காக பின்வரும் பணிப்புரைகளை விடுக்கிறது.

1. இப்பணிப்புரையானது வங்கித்தொழில் சட்டத்தின் 2013ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பணிப்புரைகள் என எடுத்துக்காட்டப்படலாம்.
2. பின்வரும் புதிய பணிப்புரையானது வங்கித்தொழில் சட்டத்தின் 2007 திசெம்பர் 26ஆம் திகதியிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 11ஆம் இலக்கப் பணிப்புரையின் 3(3)(ii) இற்கு பதிலீடாக அமைதல் வேண்டும்.

**3(3)(ii)** ஆளொருவர், வங்கியின் துணை நிறுவனங்கள் அல்லது இணை நிறுவனங்கள் உட்பட 20இற்கு மேற்பட்ட கம்பனிகள்/ நிறுவகங்கள்/ நிறுவனங்களுக்கு பணிப்பாளராக பதவி வகித்தல் கூடாது.

**திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1) ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
தலைவர்
நாணயச் சபை
இலங்கை மத்திய வங்கி

கொழும்பு
2013 ஏப்பிறல் 12

## 2013ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கு விடுக்கப்பட்ட கம்பனி ஆளுகை மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 76ஜே(1)ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தினைப் பயன்படுத்தி, நாணயச் சபையானது இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகளுக்கான கம்பனி ஆளுகையின் மீதான வங்கித்தொழில் சட்டத்தின் 2007ஆம் ஆண்டு திசெம்பர் 26ஆம் திகதியிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிப்புரையின் 3(3)(ii) இலக்க பணிப்புரையினை திருத்துவதற்காக பின்வரும் பணிப்புரைகளை விடுக்கிறது.

1. இப்பணிப்புரையானது வங்கித்தொழில் சட்டத்தின் 2013ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க பணிப்புரைகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. பின்வரும் புதிய பணிப்புரையானது வங்கித்தொழில் சட்டத்தின் 2007 திசெம்பர் 26ஆம் திகதியிடப்பட்ட 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்கப் பணிப்புரையின் 3(3)(ii) இற்கு பதிலீடாக அமைதல் வேண்டும்.

**3(3)(ii)** ஆளொருவர், வங்கியின் துணை நிறுவனங்கள் அல்லது இணை நிறுவனங்கள் உட்பட 20இற்கு மேற்பட்ட கம்பனிகள்/ நிறுவகங்கள்/ நிறுவனங்களுக்கு பணிப்பாளராக பதவி வகித்தல் கூடாது.

**தொடர்பு எண்: 02/19/150/0104/001** 2013 ஏப்பிறல் 17

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

**உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்கு ஒழுங்குமுறைப்படுத்தல் வரையறைகளிலிருந்து விலக்களித்தல்**

உரிமம் பெற்ற வங்கிகளின் வெளிநாட்டுக் கடன்கள் தொடர்பான 2013ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கும் பொருட்டு பின்வரும் விதிவிலக்கல்களுக்கு நாணயச் சபை ஒப்புதலை வழங்கியுள்ளது.

அ) இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட 1997 சனவரி 13ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை பீடி/எவ்எக்ஸ்/196 இன் நியதிகள் தொடர்பாக வங்கிகளின் மூலதன நிதியத்தின் 15 சதவீதம் கொண்ட வரையறையிலிருந்து 2013இலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் ஒவ்வொன்றினதும் ஐ.அ.டொலர் 50 மில்லியன் கொண்ட வெளிநாட்டுக் கடன்பாடுகளும் தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சியினால் மேற்கொள்ளப்பட்ட மேலும் ஐ.அ.டொலர் 250 மில்லியன் கொண்ட கடன்பாடும்.

ஆ) தொடர்பான வங்கிகளின் வேளாண்மைத் துறைக்கான கட்டாயக் கடன் வழங்கலைக் கணிக்கும் பொழுது, மொத்தக் கடன்களிலிருந்து மேற்குறிப்பிட்ட நிதியத்தின் பயன்பாட்டினூடாக வழங்கப்பட்ட வேளாண்மையல்லாக் கொடுகடன் வசதிகள்.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

**தொடர்பு எண்: 02/17/800/0014/001** 2013 ஏப்பிறல் 24

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

**முதலீட்டு நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் மீதான வழிகாட்டல்களுக்கான திருத்தங்கள்**

"மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்களின் பந்தி 3.1(iii) இற்கான திருத்தமொன்றும் முதலீட்டு நிதிய கணக்கின் பயன்பாடு தொடர்பான பயன்பாட்டின் மீதான தகவல்களை இணங்குவிப்பின் பொருட்டு மாதாந்த அடிப்படையில் சமர்ப்பிப்பதற்கான திருத்தப்பட்ட படிவமும் இத்தால் இணைக்கப்பட்டுள்ளன." மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2011 ஒத்தோபர் 31ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதம் இத்தால் புறக்கீடு செய்யப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

**இணைப்பு**

**முதலீட்டு நிதியக் கணக்குகளின் தொழிற்பாடுகள் தொடர்பாக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான வழிகாட்டல்களுக்கான திருத்தங்கள்**

மேலேயுள்ளவற்றின் 3.1(iii) இற்குப் பதிலாக பின்வரும் வழிகாட்டல்கள் புகுத்தப்படுகின்றன.

3.1(iii) 2013 மே 1ஆம் நாள் தொடக்கம் பின்வரும் நோக்கங்களுக்கு மட்டுமே கடன் வழங்கப்படல் வேண்டும்.

(அ) பெருந்தோட்டப் பயிர்களின் பயிர்ச் செய்கை/ பழவர்க்கங்கள், காய்கறிகள், கொக்கோ, வாசனைத் திரவியங்கள் உள்ளிட்ட வேளாண்மைப் பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்பிடி என்பனவற்றிற்கான நீண்ட காலக் கடன்கள்
(ஆ) தொழிற்சாலைகள்/ ஆலைகளை நவீனமயப்படுத்தல்/ நிறுவுதல்/ விரிவாக்கம் செய்தல்
(இ) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்: ரூ.600 மில்லியனுக்கும் குறைவான ஆண்டு மொத்த புரள்வினைக் கொண்ட தொழில் முயற்சிகளுக்கு ரூ.200 மில்லியன் வரையிலான கடன்கள்
(ஈ) தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் வெளிமூலங்களிலிருந்து வியாபாரச் செயற்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல்
(உ) உட்கட்டமைப்பு அபிவிருத்தி
(ஊ) கல்வி: தொழிற் பயிற்சி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி
(எ) வீடமைப்பு: வதிவிட நோக்கங்களுக்கான வீட்டு நிருமாணத்திற்காக வாடிக்கையாளரொருவருக்கு ரூ.2 மில்லியன் வரை
(ஏ) வீடமைப்பு அபிவிருத்தி: வதிவிட நோக்கங்களுக்காக குறைந்த செலவில் வீடுகளை அமைத்தல்
(ஐ) சுற்றுலா விடுதிகளின் நிருமாணம் மற்றும் அதனுடன் தொடர்பான நோக்கங்களுக்கு
(ஒ) சூரிய வலு உட்பட நிலைபேறுடைய வலு மூலங்களில் முதலீடு செய்தல்/ கொள்வனவு செய்வதற்கு ரூ.10 மில்லியன் வரை
(ஓ) மகளிர் தொழில் முயற்சியாண்மை துணிகரத் தொழில் முயற்சி மூலதன செயற்றிட்டங்களுக்கு ரூ.10 மில்லியன் வரை
(ஔ) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களை மீளமைப்புச் செய்தல்

**முதலீட்டு நிதியக் கணக்கின் பயன்பாடு**

வங்கியின் பெயர்:
முடிவடைந்த மாதம்: (ரூ.000')

| | விடயம் | | | தொகை |
|---|---|---|---|---|
| **அ.** | **முதலீட்டு நிதியக் கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட மொத்தம்** | | | **XXXX** |
| **ஆ.** | **வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள்** | | | **XXXX** |
| | **துறை** | **விபரணம்** | **தொகை** | |
| (அ) | பெருந்தோட்டப் பயிர்களின் பயிர்ச் செய்கை/ பழவர்க்கங்கள், காய்கறிகள், கொக்கோ, வாசனைத் திரவியங்கள் உள்ளிட்ட வேளாண்மைப் பயிர்கள் மற்றும் விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்பிடி என்பனவற்றிற்கான நீண்ட காலக் கடன்கள் | | XX | |
| (ஆ) | தொழிற்சாலைகள்/ ஆலைகளை நவீனமயப்படுத்தல்/ நிறுவுதல்/ விரிவாக்கம் செய்தல் | | XX | |
| (இ) | சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள்: ரூ.600 மில்லியனுக்கும் குறைவான ஆண்டு மொத்த புரள்வினைக் கொண்ட தொழில் முயற்சிகளுக்கு ரூ.200 மில்லியன் வரையிலான கடன்கள் | | XX | |
| (ஈ) | தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் வெளிமூலங்களிலிருந்து வியாபாரச் செயற்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல் | | XX | |
| (உ) | உட்கட்டமைப்பு அபிவிருத்தி | | XX | |
| (ஊ) | கல்வி: தொழிற் பயிற்சி மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி | | XX | |
| (எ) | வீடமைப்பு: வதிவிட நோக்கங்களுக்கான வீட்டு நிருமாணத்திற்காக வாடிக்கையாளரொருவருக்கு ரூ.2 மில்லியன் வரை | | XX | |
| (ஏ) | வீடமைப்பு அபிவிருத்தி: வதிவிட நோக்கங்களுக்காக குறைந்த செலவில் வீடுகளை அமைத்தல் | | XX | |
| (ஐ) | சுற்றுலா விடுதிகளின் நிருமாணம் மற்றும் அதனுடன் தொடர்பான நோக்கங்களுக்கு | | XX | |
| (ஒ) | சூரிய வலு உட்பட நிலைபேறுடைய வலு மூலங்களின் முதலீடு செய்தல்/ கொள்வனவு செய்வதற்கு ரூ.10 மில்லியன் வரை | | XX | |
| (ஓ) | மகளிர் தொழில்முயற்சியாண்மை துணிகரத் தொழில்முயற்சி மூலதன செயற்றிட்டங்களுக்கு ரூ.10 மில்லியன் வரை | | XX | |
| (ஔ) | மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களை மீளமைப்புச் செய்தல் | | XX | |
| **துணை மொத்தம்** | | | | |
| **இ.** | **அரச பிணையங்களிலான மொத்த முதலீடு - நீண்ட காலம்** | | **XXXX** | |
| | **- குறுங்காலம்** | | **XXXX** | |
| **துணை மொத்தம்** | | | | **XXXX** |
| **ஈ.** | **பயன்படுத்துவதற்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மீதி (அ-ஆ-இ)** | | | **XXXX** |

குறிப்பு: அறிக்கையிடும் மாதத்திற்கு அடுத்து வரும் ஒவ்வொரு மாதத்தின் 10ஆம் திகதியளவில் மேற்குறிப்பிட்ட விபரங்களை mayadunne@cbsl.lk மற்றும் jayaminiw@fpd.treasury.gov.lk என்ற முகவரிகளுக்கு பிரதிகளுடன் dbsd@cbsl.lk இற்கு மின்னஞ்சல் செய்தல் வேண்டும்.

**தொடர்பு எண்: 02/04/008/0002/003** 2013 ஏப்பிறல் 30

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## வேளாண்மைத் துறைக்கான கட்டாயக் கடன் வழங்கல்

வேளாண்மைத் துறைக்கான கட்டாய கடன் வழங்கலுடன் தொடர்பான இணங்குவிப்புக்கள் மீதான கோரிக்கைகள் மற்றும் கலந்துரையாடல்கள் பற்றி நாம் இங்கே குறிப்பிடுவதுடன் நாணயச் சபையின் பின்வரும் விடயங்கள் பற்றி அறிவிப்பதற்காகவும் இதனை எழுதுகின்றோம்.

அ) மேற்குறிப்பிட்ட இணங்குவிப்பு நோக்கத்திற்காக வேளாண்மை தொடர்பான வரைவிலக்கணத்தில் பயிர்ச்செய்கை, பதனிடல் மற்றும் உள்நாட்டு வேளாண்மை உற்பத்திகளை வர்த்தகப்படுத்தல் என்பனவற்றிற்காக வழங்கப்பட்ட கடன்களையும் முற்பணங்களையும் உள்ளடக்குவதற்கு உரிமம் பெற்ற வங்கிகளை அனுமதித்தல்.

(ஆ) வேளாண்மைத் துறைக்கான கட்டாய கடன் வழங்கலின் விகிதத்தினைக் கணிக்கையில் மொத்தக் கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்து பின்வருவனவற்றை நீக்கி விடுதல்:

(i) கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளினாலும் வெளிநாட்டுக் கிளைகளினாலும் இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட கடன்களையும் முற்பணங்களையும் படிப்படியான அடிப்படையில், அத்தகைய முற்பணத்தில் 2013இல் 50 சதவீதத்தினையும் 2014இலிருந்து 100 சதவீதத்தினையும்; அத்துடன்

(ii) அரசாங்கத்தினால் ஊக்குவிக்கப்படும் பாரிய அரச மற்றும் ஏனைய உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கான நேரடி நிதியிடல்.

(இ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் கட்டாய கடன் வழங்கலின் பொருட்டு வேளாண்மைத் துறைக்குக் கடன் வழங்குவதற்காக ஏனைய வங்கிகளுக்கும் நிதிக் கம்பனிகளுக்கும் வழங்கிய அவர்களின் கடன்களை உள்ளடக்குவதற்கு, தொடர்பான வங்கிகளினால் அத்தகைய கடன்கள் பேணப்படுவதனை அடையாளம் காண்பதற்குப் பொருத்தமான கண்காணிப்புப் பொறிமுறையொன்று இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அனுமதியளித்தல்.

2. பின்வருவனவற்றிற்கான முற்பணங்கள் உட்பட உள்நாட்டு வேளாண்மை உற்பத்திகளின் பதனிடல் மற்றும் வர்த்தகப்படுத்தலுக்காக வழங்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும்:
   அ) உள்நாட்டு வேளாண்மை உற்பத்திகளைப் பயன்படுத்தி பெறுமதி கூட்டல்களை மேற்கொள்வதற்காக தயாரிப்புக் கம்பனிகளுக்கான முற்பணங்கள்; அத்துடன்
   ஆ) வேளாண்மை உற்பத்தியாளர்களுக்கான தொழிற்படும் மூலதனத்தையும் ஏனைய மூலதனத் தேவைப்பாடுகளையும் வழங்குவதற்கு இடையேற்பாட்டாளர்களாகவும் வேளாண்மை உற்பத்திகளின் விற்பனைகளுக்கு வசதியளிப்பவர்களாகவும் தொழிற்படும் கம்பனிகள்

3. வேளாண்மைத் துறைக்கான கடன் வழங்கலுக்காக ஏனைய உரிமம் பெற்ற வங்கிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களின் கீழான கண்காணிப்பு பொறிமுறையானது, கடன்பட்ட வங்கிகள் அத்தகைய கடன் வசதிகளை, மேற்குறிப்பிட்டவற்றுடன் இணங்கியொழுகுவதனைப் பொறுத்தவரையில் வேளாண்மைத் துறைக்கான கடன் வழங்கலாக கருதவில்லை என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்ணாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

**தொடர்பு எண்: 02/17/600/002/001** 2013 யூன் 7

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## கொடுகடன் அட்டைகள், ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வீதங்கள்

கடந்த அண்மைக் காலத்தில் இலங்கை மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலையினை தளர்த்தியிருக்கின்றமையானது கொள்கை வீதங்களில் குறைப்பினை ஏற்படுத்தி, குறுங்கால வட்டி வீதங்களின் குறைப்பிற்கு வழிவகுத்திருக்கின்றது. இவ்வபிவிருத்திகளைக் கருத்திற் கொண்டு, மத்திய வங்கி கடன் வழங்கல் மீதான வட்டி வீதங்களைக் குறைக்குமாறு வங்கிகளைப் பல தடவைகள் கேட்டுக் கொண்டிருக்கின்றது. குறிப்பிட்ட வங்கிகளின் ஒரு சில சாதனங்களின் வட்டி வீதங்களில் சிறிதளவு குறைப்பு அவதானிக்கப்பட்டுள்ள போதிலும் வங்கித்தொழில் துறை முழுவதிலும் பரந்தளவு குறைப்புக்கள் தேவைப்படுத்தப்படுகின்றன.

2. மேற்குறிப்பிட்டவற்றைக் கருத்திற் கொண்டு, நாணயச் சபையானது பின்வருவனவற்றின் மீதான வட்டி வீதத்தினை குறைக்குமாறு கீழே கையொப்பமிட்டுள்ளவரை அறிவுறுத்தியிருக்கிறது.
   (i) கொடுகடன் அட்டை முற்பணங்கள் மீதான வட்டியை ஆண்டிற்கு தற்போதைய 28 சதவீதத்திலிருந்து 24 சதவீதத்திற்குக் குறைத்தல்; அத்துடன்
   (ii) ஏனைய கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டிகளை அவற்றின் தற்போதைய மட்டத்திலிருந்து பொருத்தமான விதத்தில் ஆண்டிற்கு 24 சதவீதத்தினை விஞ்சாத விதத்தில் குறைத்தல்.

3. இதற்கமைய, மேற்குறிப்பிட்டவற்றுக்கு இணங்கியொழுகுவதற்குத் தேவையான வழிமுறைகளை மேற்கொள்ளுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்ணாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

**தொடர்பு எண்: 02/17/600/0026/001** 2013 யூன் 12

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## நிதியியல் கம்பனிகளுக்கான நிதியியல் கடன் வசதிகள்

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 1989 மாச்சு 20ஆம் நாளிடப்பட்ட தொடர்பு எண். பீஎஸ்/13/89 இன் கீழ் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரயோகம் இத்தால் நீக்கப்பட்டுள்ளமை பற்றி தங்களுக்கு அறியத் தரப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்ணாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

**தொடர்பு எண்: 02/17/600/002/001** 2013 யூலை 26

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீது உரிமம் பெற்ற வங்கிகளினால் விதிக்கப்படும் தண்ட வட்டி வீதங்களின் மீது உச்சவரம்பை விதித்தல்

செலுத்தத் தவறிய கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீது உரிமம் பெற்ற வங்கிகளினால் விதிக்கப்பட்ட தண்ட வட்டி வீதங்களை இலங்கை மத்திய வங்கி மீளாய்வு செய்திருப்பதுடன் அத்தகைய வீதங்கள் அளவுக்கு விஞ்சிய விதத்தில் உயர்வாக இருக்கின்றன என்ற கருத்தினையும் அது கொண்டிருக்கிறது. இது கடனைச் செலுத்தத் தவறிய கடன்பாட்டாளர்கள் கடன்களை மீளச் செலுத்தும் பொழுது நியாயமற்ற சுமையினைத் தோற்றுவிக்கிறது. விதிக்கப்பட்டு வரும் அத்தகைய மிகையான வட்டி வீதங்களின் விளைவாக கடன்களை உறுதியான முறையில் தீர்ப்பனவு

செய்யமுடியாமல் இருப்பது வங்கிகளின் நிதியியல் நிலைமைகளின் மீதும் அதேபோன்று நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீதும் மோசமான தாக்கமொன்றினை உருவாக்குகிறது. மேலும், உயர்ந்த வட்டி வீதங்கள் பொருளாதாரத்தில் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திக்கும் முட்டுக்கட்டையாக விளங்குகிறது.

2. இலங்கை மத்திய வங்கியினால் அண்மையில் நடத்தப்பட்ட அளவீடுகள், நிலுவையிலுள்ள தொகையின் மீதும் சில சமயங்களில் வெளிநிற்கின்ற மொத்தத் தொகையின் மீது விதிக்கப்பட்ட ஆரம்ப வட்டி வீதங்களிலும் பார்க்க, வங்கிகளினால் விதிக்கப்படும் ஆண்டொன்றிற்கு 2 சதவீதம் தொடக்கம் 20 சதவீதம் வரையிலான தண்ட வட்டி வீதங்கள் கூடுதலாக இருப்பதனை எடுத்துக்காட்டுகின்றன. குத்தகை வசதிகளைப் பொறுத்தவரை செலுத்தத் தவறிய வாடகை மீதான தண்ட வீதங்கள் ஆரம்ப வீதங்களிலும் பார்க்க ஆண்டொன்றிற்கு 36 சதவீதத்திலிருந்து 48 சதவீதம் வரையிலான வீச்சில் உயர்வாகக் காணப்பட்டன.

3. மேற்குறிப்பிட்டவற்றைக் கருத்திற் கொண்டு, நாணயச் சபையானது ஏற்கனவே வழங்கப்பட்ட கடன் வசதிகள் உட்பட அனைத்துக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீதும் விதிக்கப்படுகின்ற தண்ட வட்டி வீதங்களை 2013 ஓகத்து 1ஆம் திகதியிலிருந்து செலுத்தத் தவறிய காலப்பகுதியில் நிலுவையிலுள்ள தொகையின் மீது ஆண்டொன்றிற்கு 2 சதவீதத்திற்கு விஞ்சாததொரு மட்டத்திற்கு குறைப்பதற்கு அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளையும் கோருமாறு கீழே கையொப்பமிட்டவரை அறிவுறுத்தியுள்ளது.

4. இதற்கமைய, மேற்குறிப்பிட்டவற்றுடன் இணங்கியொழுகுவதற்குத் தேவையான வழிமுறைகளை மேற்கொள்ளுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

**திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) மற்றும் 76ஜே(1) இன் நியதிகளுக்கிணங்க நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**தலைவர்**
**நாணயச் சபை**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு
2013 யூலை 31

## 2013ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்
## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான மேற்பார்வை மீளாய்வு செயன்முறை (பாசல் II இன் தூண் 2)

2006ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தினை 46(1) மற்றும் 76ஜே(1) ஆம் பிரிவு என்பனவற்றினால் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை பயன்படுத்துகின்ற விதத்தில் நாணயச் சபையானது மேற்பார்வை மீளாய்வு செயற்பாட்டினை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, 2006 யூனில் பன்னாட்டு தீர்ப்பனவிற்கான வங்கியின் வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பாசல் குழுவின் பாசல் II மூலதன உடன்படிக்கையான "மூலதன அளவீடுகள் மற்றும் மூலதன நியமங்களின் பன்னாட்டு ஒருங்கிணைப்பு - திருத்தப்பட்ட ஒரு கட்டமைப்பு" இன் நியமங்களில் முறையே உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்குமாக 2013ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணிப்புரைகளை இத்தால் விடுக்கின்றது.

| | | |
|---|---|---|
| **வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல்** | 1.1 | வங்கித்தொழில் சட்டத்தின் பிரிவுகள் 19(7) மற்றும் 76ஜி(7) இன் நியதிகளில், பாசலில் பன்னாட்டு தீர்ப்பனவிற்கான வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட மூலதனப் போதுமைக்கான வழிகாட்டல்களை பின்பற்றுவதன் மூலமாக இயன்றவரை நடைமுறைச் சாத்தியமானளவிற்கு ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினாலும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியினாலும் பேணப்பட வேண்டிய மூலதனப் போதுமை விகிதத்தினை தீர்மானிப்பதற்கான அதிகாரம் நாணயச் சபைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. |
| | 1.2 | வங்கித்தொழில் முறைமையின் ஆற்றல் வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்தும் பொருட்டு, வங்கித்தொழில் சட்டத்தின் 46(1) மற்றும் 76ஜே(1) இன் நியதிகளில் முறையே உரிமம் பெற்ற ஏதேனும் வர்த்தக வங்கிகளும் உரிமம் பெற்ற ஏதேனும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் எந்தவொரு விடயத்திலும் எந்த விதத்தில் நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி அத்தகைய வங்கிகளுக்கு பணிப்புரைகளை விடுப்பதற்கு நாணயச் சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. |
| **குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளுக்கும் மேலாக மூலதனப் போதுமையினைப் பேணுதல்** | 2.1 | 2007 திசெம்பர் 26ஆம் திகதியிடப்பட்ட 2007இன் வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள் எண் 9 மற்றும் 10 கொண்ட வங்கித்தொழில் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கிணங்கி ஒழுகக் கூடியதாக இருந்த போதும் கூட ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் எல்லா நேரங்களிலும் அனைத்து இடர்நேர்வுகளின் வெளிப்படுத்துகைகளையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் 2014 சனவரி 01ஆம் நாளிலிருந்து போதுமான மூலதனத்தினைப் பேணுதல் வேண்டும் |
| | 2.2 | மேலேயுள்ள பணிப்புரை 2.1இல் குறிப்பிடப்பட்டுள்ள மூலதனப் போதுமையினை நிர்ணயிக்கும் பொழுது ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் இங்கே இணைக்கப்பட்டுள்ள மேற்பார்வை மீளாய்வு செயற்பாடுகள் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை கருத்தில் கொள்ளுதல் வேண்டும். |
| **ஆற்றல்மிக்க உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தல்** | 3.1 | இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மேற்பார்வை மீளாய்வு செயற்பாடு தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் பகுதி II இல் குறித்துரைக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்க ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் ஆற்றல்மிக்க உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயற்பாட்டினை உருவாக்கி நடைமுறைக்கிடல் வேண்டும். |
| **மேற்பார்வை மீளாய்வும் மதிப்பீட்டு செயற்பாடும்** | 4.1 | இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மேற்பார்வை மீளாய்வு செயற்பாடு தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் பகுதி III இற்கிணங்க வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அல்லது வங்கி மேற்பார்வைத் திணைக்களத்தின் பரீட்சிப்பாளர்கள் பின்வரும் விடயங்களை மீளாய்வு செய்து மதிப்பீடு செய்தல் வேண்டும். |

அ. உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயற்பாடு;

ஆ. இப்பணிப்புரைகளிலும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மேற்பார்வை மீளாய்வு செயற்பாடு தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிலும் எடுத்துக்காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கிணங்கி ஒழுகுதல்; அத்துடன்

இ. ஒவ்வொரு வங்கியினாலும் பேணப்படும் மூலதனத்தின் போதுமை.

**மேற்பார்வைத் தலையீடு**

5.1 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மேற்பார்வை மீளாய்வு செயற்பாடு தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் பகுதி IV இற்கிணங்க குறைந்தபட்சத் தேவைப்பாடுகளுக்கும் குறைவாக வங்கியொன்றின் மூலதனம் வீழ்ச்சியடைகின்ற ஆரம்ப கட்டத்தில் இலங்கை மத்திய வங்கி தலையீட்டினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**ஒழுங்குமுறைப்படுத்தல் தொடர்பாக அறிக்கையிடல்**

6.1 ஒவ்வொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியும் நிதியாண்டு முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயற்பாட்டு ஆவணத்தினை வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள வங்கிகளைப் பொறுத்தவரை, இப்பணிப்புரைகள் மற்றும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மேற்பார்வை மீளாய்வுச் செயற்பாடு தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் நோக்கங்களுக்காகவும் "சபை" என்பது தொடர்பான வங்கிகளை மேற்பார்வை செய்யும் தலைமை அலுவலகம் அல்லது பிராந்திய அலுவலகம் எனப் பொருள்படும்.

6.2 மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயற்பாட்டு ஆவணமானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மேற்பார்வை மீளாய்வு செயற்பாடு தொடர்பான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பின் இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள படிவத்திற்கிணங்க தயாரிக்கப்படுதல் வேண்டும். எனினும், இப்படிவமானது மிகக் குறைந்ததொரு தேவைப்பாடாகக் கருதப்பட வேண்டுமென்பதுடன் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கி ஒவ்வொன்றினதும் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயற்பாட்டு ஆவணம் அனைத்தையுமுள்ளடக்கியதாகவும் அதன் அளவு, வியாபாரத்தின் தன்மை மற்றும் வியாபார நடவடிக்கையின் சிக்கலான தன்மை என்பனவற்றுடன் தொடர்பானதாகவும் இருத்தல் வேண்டும்.

## 2013 ஆண்டின் 5ம் இலக்க வங்கித் தொழில் சட்டம் பணிப்புரைக்கான இணைப்பு

## மேற்பார்வை மீளாய்வு செயற்பாடு தொர்பாடன ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு (பாசல் II இன் தூண் 2)

### பகுதி I - பொதுநோக்கு

**1 அறிமுகம்**

1.1 வங்கிகள் மூலதனப் போதுமையினை அளவிடுவதற்கு பரந்தளவு அணுகுமுறைகளை வழங்குவதன் மூலம், ஒழுங்குமுறைப்படுத்தல் செயன்முறையிலுள்ள இடர்நேர்வு முகாமைத்துவத்தில் காணப்படும் சிறந்த நடைமுறைகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு பாசல் II மூலதனப் போதுமைக் கட்டமைப்பு எதிர்பார்க்கிறது. மிகப் பரந்தளவு விடயங்கள் மற்றும் இடர்நேர்வுகளுக்கான மிகக் கூருணர்திறன் ஆகிய இரண்டினையும் கொண்ட ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளையும் அத்துடன் வங்கிகளின் இடர்நேர்வு நாட்டத்துடன் மிக நெருக்கமாக இணைந்து போகக்கூடியன போன்ற விடயங்களையும் வழங்குவதற்கும் பாசல் II கட்டமைப்பு எதிர்பார்க்கிறது. பாசல் II கட்டமைப்பு மூன்று பரஸ்பர மீள்பலப்படுத்தல் தூண்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

அ. தூண் 1: வங்கிகள் எதிர்நோக்கும் இடர்நேர்வுகளின் மூன்று முக்கிய கூறுகளான கொடுகடன் சந்தை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பனவற்றிற்கான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடு

ஆ. தூண் 2: மேற்பார்வை மீளாய்வு செயன்முறை: வங்கிகள் அவற்றின் மூலதனப் போதுமையினை தாமே மதிப்பீடு செய்து கொள்ளுதல் மற்றும் வங்கிகள் அவற்றின் இடர்நேர்வுகளை கண்காணித்து முகாமைப்படுத்துவதற்குத் தேவையான மிகச் சிறந்த இடர்நேர்வு முகாமைத்துவ நுணுக்கங்களை உருவாக்கிப் பயன்படுத்துவதற்கு அவற்றினை ஊக்குவித்தல்; மற்றும்

இ. தூண் 3: சந்தை ஒழுங்குகள்: பொருண்மை சார்ந்த ரீதியில் அதிகரித்த வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள்.

1.2 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் (இதனகத்துப் பின்னர் "வங்கிகள்" எனக் குறிப்பிடப்படும்) மேற்பார்வை மீளாய்வு செயன்முறையானது அவற்றின் மூலதனப் போதுமையினை மதிப்பிடுவதற்காகவும் வங்கிகள் பாசல் II தூண் 1 இன் கீழான குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகளின் மூலம் உள்ளடக்கப்படாத அல்லது போதுமானளவில் உள்ளடக்கப்படாத இடர்நேர்வுகளை உள்ளடக்கத்தக்க விதத்தில் மேலதிக மூலதனத்தினைக் கொண்டுள்ளனவா என்பதனை தீர்மானிப்பதற்காகவும் நடத்தப்படுகின்றன.

**2. மேற்பார்வை மீளாய்வு செயன்முறையின் குறிக்கோள்கள்**

மேற்பார்வை மீளாய்வு செயன்முறை பின்வருவனவற்றை எதிர்பார்க்கிறது.

2.1 மிகச் சிறந்த இடர்நேர்வு முகாமைத்துவ நுணுக்கங்களைப் பயன்படுத்துவதற்கு வங்கிகளை ஊக்குவித்தல் - வங்கி உள்ளாகக் கூடிய இடர்நேர்வுகளின் மட்டம் மற்றும் வங்கிகளினால் பேணப்பட வேண்டிய மூலதனத் தேவைப்பாடுகளின் மட்டத்தினைத் தீர்மானிக்கும் கட்டுப்பாட்டுச் சூழல்;

2.2 இடர்நேர்வுகளுடன் தொடர்பான மூலதனப் போதுமையினை மதிப்பிடும் பொருட்டு வங்கிகளின் இடர்நேர்வுகளை அடிப்படையாகக் கொண்ட மேற்பார்வையினை அதிகரித்தல்;

2.3 அனைத்து இடர்நேர்வுகளுக்கெதிராக பேணப்பட வேண்டிய மூலதனத்தின் மட்டத்தினை தீர்மானிக்கின்ற வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயன்முறையினை மதிப்பிடுதல் மற்றும் அனைத்து இடர்நேர்வுகளுக்கும் உதவக்கூடிய விதத்தில் வங்கிகள் போதுமானளவு மூலதனத்தினைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துதல்; மற்றும்

2.4 மிகப் பொதுவான வியாபார தீர்மானங்களிலும் வரவு செலவுத்திட்டங்களிலும் வியாபார அலகுகளுக்கு மூலதனத்தினை ஒதுக்குகின்றமை போன்ற மிகக் குறித்துரைக்கூடிய தீர்மானங்களிலும் தனிப்பட்ட கொடுகடன் தீர்மானச் செயன்முறைகளை மதிப்பிடுகின்ற போதும் வங்கிகள் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயன்முறையினைப் பயன்படுத்துவதனை உறுதிப்படுத்தல்.

3. மேற்பார்வை மீளாய்வு செயன்முறை ஆளுகையின் தத்துவங்கள்

மேற்பார்வை மீளாய்வு செயன்முறையானது பாசல் II மூலதனக் கட்டமைப்பின் தூண் 2 இல் தரப்பட்டுள்ள பின்வரும் நான்கு முக்கிய தத்துவங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

அ. வங்கிகள் அவற்றின் இடர்நேர்வு தோற்றப்பாடுகள் தொடர்பான அவற்றின் ஒட்டுமொத்த மூலதனப் போதுமையினை மதிப்பிடுவதற்கான செயன்முறையினையும் அவற்றின் மூலதன மட்டங்களைப் பேணுவதற்கான உபாயத்தினையும் (தூண் 2இன் தத்துவம் 1 - மேற்பார்வை மீளாய்வு செயன்முறை)

ஆ. ஒழுங்குமுறைப்படுத்துநர் என்ற ரீதியில் இலங்கை மத்திய வங்கி வங்கிகளின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயன்முறையினையும் உபாயங்களையும் அதேபோன்று கண்காணிப்பினை மேற்கொள்வதற்கான அதன் இயலாற்றலையும் மீளாய்வு செய்து மதிப்பிடும் என்பதுடன் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமைக்கு (தூண் 2இன் தத்துவம் 2 - மேற்பார்வை மீளாய்வு செயன்முறை)

இ. வங்கிகள் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன விகிதங்களுக்கு மேலாக தொழிற்பட வேண்டுமென இலங்கை மத்திய வங்கி எதிர்பார்ப்பதுடன் வங்கிகள் குறைந்தபட்ச அளவிலும் பார்க்கக் கூடுதலான அளவில் மூலதனங்களை வைத்திருக்க வேண்டுமெனவும் தேவைப்படுத்தப்பட்டன. (தூண் 2 இன் தத்துவம் 3 - மேற்பார்வை மீளாய்வு செயன்முறை)

ஈ. குறிப்பிட்ட வங்கியொன்றின் இடர்நேர்வுப் பண்புகளுக்கு உதவுவதற்குத் தேவையான குறைந்தபட்ச மட்டங்களுக்குக் கீழே மூலதனம் வீழ்ச்சியடைவதனைத் தடுப்பதற்காக இலங்கை மத்திய வங்கி ஆரம்பக் கட்டமொன்றில் தலையிடும். (தூண் 2இன் தத்துவம் 4 - மேற்பார்வை மீளாய்வு செயன்முறை)

4. வாய்ப்பும் பிரயோகத் தன்மையும்

இவ்வொழுங்கு முறைப்படுத்தல் கட்டமைப்பு தனியான (தனி) மற்றும் ஒன்றுதிரட்டப்பட்ட (குழுமம்) ஆகிய இரண்டு விதங்களிலும் வங்கிகளுக்கு பிரயோகிக்கப்படலாம்.

## பகுதி II - உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை

5. உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையினை அபிவிருத்தி செய்து பேணுதல்

5.1 ஒவ்வொரு வங்கியும் அதன் தொழிற்பாடுகள் மற்றும் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டிற்காக வலுவானதும் சிறந்த முறையில் ஆவணப்படுத்தப்பட்டதுமான உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையினை அபிவிருத்தி செய்து பேணுதல் வேண்டுமென்பதுடன் முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

5.2 வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையானது பின்வரும் ஐந்து முக்கிய பண்புகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அ. சபை மற்றும் மூத்த முகாமைத்துவ மேற்பார்வை

ஆ. இடர்நேர்வுகளின் அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீடு

இ. ஆற்றல்வாய்ந்த மூலதன மதிப்பீடுகள்

ஈ. கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்

உ. உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் சுயாதீனமான மீளாய்வு

5.3 வங்கியொன்று அதன் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையினை தொடர்பான வங்கியின் அளவு, சிக்கலான தன்மை மற்றும் வியாபார உபாயங்களுக்கிணங்க வடிவமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

6. பணிப்பாளர் சபையும் மூத்த முகாமைத்துவ மேற்பார்வையும்

6.1 உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறைக்கான சபையின் பொறுப்பாண்மைகள்

அ. சபை வங்கியானது தற்போதைய மற்றும் எதிர்கால மூலதனத் தேவைகள், எதிர்பார்க்கப்படும் மூலதனச் செலவினம் விரும்பத்தக்க மூலதன மட்டம் மற்றும் வெளிநாட்டு மூலதன மூலங்கள் என்பனவற்றைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்ற உபாயத் திட்டமொன்றினைக் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

ஆ. சபையானது இலக்கிடல் மட்டத்தினையும் மூலதன உள்ளமைப்பினையும் மீளாய்வு செய்து ஒப்புதலளிக்க வேண்டியதுடன் அத்தகைய இலக்குகளை குறைந்தபட்சம் ஆண்டு தோறுமாவது நிர்ணயித்து கண்காணிப்பதற்கான செயற்பாட்டினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இ. சபையானது மூத்த முகாமைத்துவம் பின்வருவனவற்றை மேற்கொள்கிறது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(i) உபாயக் குறிக்கோள்கள் தொடர்பில் வங்கியின் தற்போதைய மற்றும் எதிர்கால மூலதனத் தேவைப்பாடுகளின் பகுப்பாய்வினை மேற்கொள்ளுதல்;

(ii) வங்கியினால் எதிர்நோக்கப்பட்ட இடர்நேர்வு வகைகளை மதிப்பிடுவதற்கான கட்டமைப்புக்களை உருவாக்குவதுடன் வங்கியின் மூலதன மட்டங்களுக்கு ஏற்படக்கூடிய இவ்விடர்நேர்வுகளுடன் தொடர்பான முறைமைகளை உருவாக்குதல்;

(iii) இடர்நேர்வு மதிப்பீடுகள் மீதான உள்ளக கொள்கைகளுடன் இணங்கிச் செல்வதனைக் கண்காணிப்பதற்கான முறைகளை உருவாக்குவதுடன் மூலதனமட்டங்களுக்கு ஏற்படும் இடர்நேர்வுகள் தொடர்பிலான செயன்முறைகளை மேற்கொள்ளுதல்; அத்துடன்

(iv) வங்கி முழுவதிலும் வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு கலாச்சாரமொன்றினை உருவாக்குதல்.

ஈ. வங்கியின் அழுத்தப் பரீட்சிப்புச் செயன்முறைகள் தொடர்பில் சபையானது காத்திரமான மேற்பார்வைக்கு ஒப்புதலளித்து அதனை பிரயோகித்தல் வேண்டும்.

உ. பின்வருவனவற்றை மேற்கொள்ளும் பொருட்டு சபையானது குறைந்தபட்சம் ஆண்டுதோறுமாவது வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையினை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல் வேண்டும்.

(i) பொருண்மை இடர்நேர்வுகளின் மட்டம் மற்றும் போக்குகளையும் மூலதன மட்டங்கள் மீதான அவற்றின் தாக்கத்தினையும் மதிப்பிடுதல்

(ii) மூலதன மதிப்பீட்டு அளவீட்டு முறைமையில் பயன்படுத்தப்பட்ட முக்கிய எடுகோள்களின் கூருணர்திறனையும் நியாயமான தன்மையினையும் மதிப்பீடு செய்தல்

(iii) பல்வேறு இடர்நேர்வுகளுக்கெதிராக வங்கி போதுமான மூலதனத்தினைக் கொண்டிருப்பதனையும் உருவாக்கப்பட்டுள்ள மூலதனப் போதுமை இலக்குகளுடன் இணங்கிச் செல்வதனையும் நிர்ணயித்தல்; அத்துடன்

(iv) வங்கியின் எதிர்கால மூலதனத் தேவைப்பாடுகளை அதன் அறிக்கையிடப்பட்ட இடர்நேர்வு தோற்றப்பாட்டின் அடிப்படையில் மதிப்பிடுவதுடன் அதற்கிணங்க உபாயத்திட்டத்திற்குத் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளுதல்.

ஊ. தற்போதைய மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக வங்கி உள்ளாகக் கூடிய அனைத்துப் பொருண்மையான இடர்நேர்வுகளுக்கீடான விதத்தில் வங்கியின் மூலதனப் போதுமையினை மதிப்பிடுவதில் உதவும் விதத்தில் தரம் மற்றும் கணியம் சார்ந்த இரண்டு வகைத் தகவல்களும் வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட வருடாந்த அறிக்கை/ கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களில் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருப்பதனை சபை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

எ. சபையானது வருடாந்த உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை ஆவணத்திற்கு ஒப்புதலளித்தல் வேண்டும்.

6.2 உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறைக்கான மூத்த முகாமைத்துவத்தின் பொறுப்பாண்மைகள்

மூத்த முகாமைத்துவம் பின்வருவனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

அ. தற்போது இடம்பெற்றுவரும் அடிப்படையில் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையின் ஒதுக்கீட்டுத் தன்மையினை உறுதிப்படுத்துதல்;

ஆ. உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயன்முறையின் வடிவமைப்பு மற்றும் தொழிற்பாட்டினை சிறந்த முறையில் விளங்கிக் கொண்டிருத்தல்;

இ. இடர்நேர்வு தோற்றப்பாடு மற்றும் வங்கியின் வியாபார உபாயங்கள் என்பனவற்றின் அடிப்படையில் அதற்குப் பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை உருவாக்குவதற்கும் வங்கியின் மூலதனத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவச் செயன்முறைகளுடன் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையினை ஒருங்கிணைப்பதற்கும் பொறுப்பாக இருத்தல். இது தொடர்பில், மூத்த முகாமைத்துவம் குறைந்தபட்சம் பின்வருவனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்:

(i) அனைத்து பொருண்மையான இடர்நேர்வுகளையும் அடையாளங்கண்டு, அளவீட்டு, அறிக்கையிடுவதற்காக வலுவான கொள்கைகளும் நடைமுறைகளும் உருவாக்கப்பட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்படல்;

(ii) பொருண்மை வாய்ந்த இடர்நேர்வுகளின் மட்டம் மற்றும் போக்கும் மூலதன மட்டங்களின் மீது அவற்றின் தாக்கத்தினையும் மதிப்பீடு செய்தல்;

(iii) மூலதன மதிப்பீடு மற்றும் அளவை முறைமையில் பயன்படுத்தப்படும் முக்கியமான எடுகோள்களின் கூருணர்திறனையும் நியாயமான தன்மைகளையும் மதிப்பிடல்;

(iv) வங்கியினால் எதிர்நோக்கப்படும் இடர்நேர்வுகளுக்கெதிராக வங்கி போதுமான மூலதனத்தினைக் கொண்டுள்ளதா என்பதனை தீர்மானித்தல்;

(v) வங்கியின் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டின் அடிப்படையில் எதிர்கால மூலதனத் தேவைகளை மதிப்பிடுவதுடன் இதன் உபாயத் திட்டத்திற்கு அவசியமான சீராக்கங்களை முன்மொழிதல்; அத்துடன்

(vi) வலுவான தன்மை மற்றும் ஒருங்கிணைந்த தன்மை என்பனவற்றிற்காக உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை வருடாந்த சுயாதீனமான மீளாய்விற்கு உட்பட்டிருப்பதனை உறுதிப்படுத்தல்.

ஈ. அழுத்தப் பரீட்சிப்பினை விருத்தி செய்து தொழிற்படுத்துவதில் தீவிரமான ஈடுபாட்டினை மேற்கொள்ளும் விதத்திலும் மாதிரித் தொழிற்பாட்டிற்குப் போதுமான தேர்ச்சியையும் தகுதிவாய்ந்த மூலவளங்களையும் ஒதுக்கும் விதத்திலும் அதன் அழுத்தப் பரீட்சிப்புச் செயன்முறையின் மீது சபையினால் ஒப்புதலளிக்கப்பட வேண்டிய அனைத்தையுமுள்ளடக்கியதும் போதுமானதுமான எழுத்து மூலமான கொள்கைகளையும் நடைமுறைகளையும் நிறுவுதல்.

உ. சபைக்கான வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையின் கிரமமான அறிக்கையிடலை உறுதிப்படுத்தல்

ஊ. இணைப்பு I இல் தரப்பட்டுள்ள குறித்துரைக்கப்பட்ட படிவத்திற்கிணங்க வருடாந்த உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை ஆவணங்களைத் தயாரித்தல்; அத்துடன்

எ. சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையின் வருடாந்த ஆவணத்தினை தொடர்பான வங்கியின் நிதியியல் ஆண்டு முடிவடைந்ததிலிருந்து ஆறு மாதங்களுக்குள் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**7. இடர்நேர்வுகளின் அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீடு**

7.1 வங்கியினால் எதிர்நோக்கப்படும் ஐந்தொகை மற்றும் ஐந்தொகைக்கு வெளியேயான வெளிப்படுத்துகைகளிலிருந்து தோன்றுகின்ற அனைத்துப் பொருண்மை வாய்ந்த இடர்நேர்வுகளையும் வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை அடையாளம் காணப்பட வேண்டியதுடன் இவ்விடர்நேர்வுகள் சாதாரணமான மற்றும் அழுத்த நிலைமைகள் இரண்டின் கீழும் நம்பகமான முறையில் கணியப்படுத்தப்படவும் வேண்டும். ஆகவே, உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை பின்வரும் இடர்நேர்வுகளைக் கட்டுப்படுத்தல் வேண்டும்.

அ. தூண் 1 இன் கீழ் கண்டறியப்பட்ட இடர்நேர்வுகள்: கொடுகடன், சந்தை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள்

ஆ. தூண் 1 இன் கீழ் முழுமையாகக் கண்டறிப்படாத இடர்நேர்வுகள்: ஒன்றுதிரண்ட இடர்நேர்வு (கொடுகடன் இடர்நேர்வு) வட்டி வீதம்/ வங்கி ஏட்டில் காணப்படும் வருவாய் இடர்நேர்வு வீதம் (சந்தை இடர்நேர்வு) மற்றும்

இ. தூண் 1 இனால் கண்டறியப்படாத இடர்நேர்வு வகைகள்: தூண் 1 இன் கீழ் குறிப்பிட்டு வலியுறுத்தப்படாத இடர்நேர்வுகள் இவை திரவத்தன்மை இடர்நேர்வு, திரட்சி இடர்நேர்வு, கீர்த்தி இடர்நேர்வு, இணங்கியொழுகுவது தொடர்பான இடர்நேர்வு, உபாய மற்றும் வியாபார இடர்நேர்வு மற்றும் எஞ்சிய இடர்நேர்வு.

7.2 வங்கியொன்று ஒழுங்குமுறைப்படுத்தல், பொருளாதாரம் அல்லது வியாபாரச் சூழலிலிருந்து தோன்றக்கூடிய மற்றைய வெளிப்புற இடர்நேர்வுக் காரணிகளை அடையாளம் காண்பதற்கு இயலக்கூடியதாயிருத்தல் வேண்டும். மேலும், போதுமான கம்பனி ஆளுகையையும் உள்ளக கட்டுப்பாட்டு ஒழுங்குகள் உள்ளடக்கிய சரியான இடர்நேர்வு முகாமைத்துவமும் காத்திரமான உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையில் அடித்தளத்தில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

7.3 இடர்நேர்வு அளவிடல் முறைமைகள், வங்கியினால் எதிர்நோக்கப்படும் இடர்நேர்வுகளின் தன்மையினையும் அளவினையும் கண்டறிவதற்குப் போதுமானளவிற்கு அனைத்தையுமுள்ளடக்கியதாகவும் வலுவானதாகவும் இருத்தல் வேண்டும்.

7.4 இலகுவில் அளவிடமுடியாத இடர்நேர்வுகளை தரம்சார் மதிப்பீடுகளையும் முகாமைத்துவ முடிவுகளையும் பயன்படுத்தி மதிப்பிடுதல் வேண்டும்.

7.5 இடர்நேர்வுகளை அளவிடும் பொழுது, வங்கியின் மூலதனம் மற்றும் தொழிற்பாடுகளில் கடுமையான மோசமான பாதிப்புக்களை அல்லது குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய சாத்தியமான நிகழ்வுகளை அல்லது சந்தை மாற்றங்களை அடையாளம் காண்பதற்கு அனைத்தையுமுள்ளடக்கியதும் வலுவானதுமான அழுத்தப் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

7.6 இடர்நேர்வுகளை மதிப்பிடும் பொழுது, வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஏற்புடைத்தான பணிப்புரைகளையும் வங்கிகள் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**8. ஆற்றல் வாய்ந்த மூலதன மதிப்பீடு**

உள்ளக மூலதன ஒதுக்கும் மதிப்பீட்டுச் செயன்முறையும் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

8.1 வங்கிகள், குறிக்கோள்களையும் அத்தகைய குறிக்கோள்களை எய்துவதற்கான கால அளவையும், மூலதனத் திட்டமிடல் செயற்பாட்டின் பரந்தளவு நியதிகளையும் அத்தகைய செயற்பாட்டின் பொறுப்புக்களையும் குறிப்பிடுகின்ற சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட தெளிவான மூலதனத் திட்டமொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8.2 இடர்நேர்வு மட்டம் மற்று உயர்வடைந்து செல்லும் மேலதிக மூலதனம் வியாபார நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படுகின்றமை அல்லது இடர்நேர்வுகளைத் தணிக்கின்ற நுணுக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றமை போன்ற பிறழ்வான மற்றும் எதிர்பாராத சந்தர்ப்பங்களை கையாள்வதற்கான பொதுவான தடங்கலற்ற திட்டம் என்பனவற்றுடன் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளில் மூலதனத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கு வங்கிகள் எவ்வாறான திட்டங்களை வகுத்திருத்தல் வேண்டும்.

8.3 வங்கிகள் அவற்றின் இடர்நேர்வுத் தோற்றப்பாடு, வங்கி தொழிற்படுகின்ற வியாபாரச் சுற்றுவட்டத்தின் நிலைமை மற்றும் வியாபாரத் திட்டங்கள் என்பனவற்றுடன் இசைந்து செல்கின்ற மூலதன இலக்குகளை ஏற்படுத்துதல் வேண்டும்.

8.4 மூலதன மட்டங்களைப் பேணுவதற்கான உள்ளக உபாயமானது இடர்நேர்வுகளை உள்ளடக்கும் விரும்பத்தக்க மட்டத்தினைப் பிரதிபலிப்பது மட்டுமன்றி கடன் வளர்ச்சி எதிர்பார்ப்புக்கள், எதிர்கால மூலவளங்கள் மற்றும் நிதிகளின் பயன்பாடு மற்றும் பங்கிலாபக் கொள்கை போன்ற காரணிகளையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

8.5 வைத்திருக்கப்படுகின்ற மூலதனத் தொகை இடர்நேர்வுகளின் அளவிடப்பட்ட தொகையினை மட்டுமன்றி இடர்நேர்வினை அளவிடுகையில் ஏற்படுகின்ற சாத்தியமான நிச்சயமற்ற தன்மைகளும் கணக்கில் கொண்ட மேலதிக தொகையொன்றினையும் பிரதிபலித்தல் வேண்டும்.

8.6 மூலதனத்தினை மதிப்பிடுகையில் வங்கியானது இழப்புக்களை ஈர்த்துக் கொள்வதற்காக அதன் மூலதனத்தின் தரத்தினையும் இயலளவையும் மதிப்பீடு செய்து கொள்ளுதல் வேண்டும்.

8.7 வங்கியானது அதன் மூலதன மதிப்பீட்டு அணுகுமுறை கோட்பாட்டு ரீதியாக ஆற்றல் வாய்ந்தது என்பதனையும் பெறுபேறுகள் நியாயமானவை என்பதனையும் மத்திய வங்கிக்கு விளக்குதல் வேண்டும்.

**9 கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்**

9.1 இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளை அறிக்கையிடுவதற்காகவும் மூலதனத் தேவைப்பாடுகளைப் பாதிக்கின்ற இடர்நேர்வுத் தோற்றப்பாடுகளை வங்கி எவ்வாறு மாற்றுகின்றது என்பதனை மதிப்பிடுவதற்குமான போதுமை முறைமையொன்றினை வங்கி உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

9.2. வங்கியின் சபையும் மூத்த முகாமைத்துவமும் பின்வருவனவற்றை மேற்கொள்ளுதல் வேண்டும்.

அ. வங்கியின் இடர்நேர்வுத் தோற்றப்பாடுகள் மற்றும் அவர்களின் பொறுப்புக்களை மேற்கொள்வதனை வசதிப்படுத்துவதற்குப் பொருத்தமான விதத்தில் மூலதனத் தேவைப்பாடுகள் மீதான அறிக்கைகளைப் பெறுதல்

ஆ. பொருண்மை வாய்ந்த இடர்நேர்வுகளின் மட்டத்தையும் போக்கையும் மூலதன மட்டங்களின் மீதான அவற்றின் தாக்கத்தினையும் மதிப்பிடல்.

இ. மூலதன மதிப்பீட்டு அளவை முறைமையில் பயன்படுத்தப்பட்ட முக்கிய எடுகோள்களின் கூருணர்திறனையும் நியாயமான தன்மையினையும் மதிப்பிடல்.

ஈ. வங்கி இடர்நேர்வுகளுக்கெதிராகப் போதுமான மூலதனத்தனை வைத்திருப்பதனையும் நிறுவப்பட்ட மூலதனப் போதுமை இலக்குகளுக்கு இணங்கியொழுகுவதனையும் நிர்ணயித்தல்.

உ. வங்கியின் அறிக்கையிடப்பட்ட இடர்நேர்வு தோற்றப்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட அதன் எதிர்கால மூலதனத் தேவைப்பாடுகளை மதிப்பிடுவதுடன் அதற்கேற்ப வங்கியின் உபாயத் திட்டமிடலுக்கும் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ளுதல்.

**10. உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் சுயாதீனமான மீளாய்வு**

10.1 மூலதன மதிப்பீட்டுச் செயன்முறைக்கு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பு இன்றியமையாததாகும். மூலதன மதிப்பீட்டுச் செயன்முறையின் காத்திரமான கட்டுப்பாடு சுயாதீனமான மீளாய்வினையும் பொருத்தமானவிடத்து உள்ளக அல்லது வெளிவாரி கணக்காய்வுகளுடன் தொடர்புபட்டதாகவும் காணப்படும்.

10.2 உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயன்முறையினை உருவாக்குவதற்கு அல்லது நடைமுறைக்கிடுவதற்குப் பொறுப்பாகவுள்ள ஆள் அல்லது ஆட்கள் சுயாதீனமான மீளாய்வில் ஈடுபடக்கூடாது.

10.3 வங்கிகள் அவற்றின் ஒருங்கிணைப்பு, துல்லியமான தன்மை, நியாயமன நடவடிக்கைகள் என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்காக அவை அவற்றின் இடர்நேர்வு முகாமைத்துவச் செயற்பாட்டின் சுயாதீனமான மீளாய்வினை காலத்திற்குக் காலம் நடத்துதல் வேண்டும். மீளாய்வு செய்ய வேண்டிய துறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

அ. வங்கியின் மூலதன மதிப்பீட்டு செயன்முறையின் பொருத்தமான தன்மை அதன் நடவடிக்கைகளின் தன்மை, செயற்பரப்பு மற்றும் சிக்கலான தன்மையினைத் தருகின்றது

ஆ. பாரிய வெளிப்படுத்தல்களையும் இடர்நேர்வு திரட்சிகளையும் அடையாளம் காணுதல்

இ. வங்கியின் மதிப்பீட்டு செயன்முறைக்கு பயன்படுத்தப்படும் தரவு உள்ளீடுகளின் துல்லியமும் பூரணமானதுமான தன்மை

ஈ. மதிப்பீட்டு செயன்முறையில் பயன்படுத்தப்பட்ட சூழலின் நியாயமானதும் பெறுமதிமிக்கதுமான தன்மை

உ. அழுத்தப் பரீட்சிப்பு மற்றும் எடுகோள்கள் மற்றும் உள்ளீடுகளின் பகுப்பாய்வு

## பகுதி III - மேற்பார்வை மீளாய்வு மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறை

11 முக்கிய கூறுகள்

பின்வரும் முக்கிய கூறுகளை உள்ளடக்குகின்ற மேற்பார்வை மீளாய்வு மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறையானது வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரினால் அல்லது வங்கி மேற்பார்வைத் திணைக்களப் பரீட்சகர்களினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

அ. வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயன்முறையின் மீளாய்வு

ஆ. வங்கியின் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டின் மீளாய்வு

இ. வைத்திருக்கப்படுகின்ற மூலதனத்தின் மட்டம் மற்றும் தரம் பற்றிய மீளாய்வு; மற்றும்

ஈ. மேற்பார்வை மீளாய்வு மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறையின் பெறுபேறுகளை வங்கிக்கு அறிவித்தல்

12 மீளாய்வினை மேற்கொள்ளும் முறையியல்கள்

மேற்பார்வை மீளாய்வு மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறையானது பின்வருவனவற்றை ஒன்றிணைந்த நடவடிக்கைகளுடன் தொடர்பானதாக இருத்தல் வேண்டும்.

அ. தோற்றப்பாடுகளின் பரீட்சிப்புக்கள் அல்லது புலனாய்வுகள்

ஆ. தொடர்ச்சியான மேற்பார்வை

இ. வங்கி முகாமைத்துவத்துடனான கலந்துரையாடல்கள்

ஈ. உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களின் வேலை பற்றிய மீளாய்வு; அத்துடன்

உ. காலத்திற்குக் காலம் அறிக்கையிடல்

13 குறிக்கோள்கள்

மீளாய்வின் குறிக்கோள்களாவன:

அ. வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீடுகள் மற்றும் உபாயங்களின் போதுமை பற்றியும் அது போன்று ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன விகிதங்களுக்கு இணங்குவதனைக் கண்காணித்து உறுதிப்படுத்தும் அவற்றின் ஆற்றலையும் மதிப்பீடு செய்தல்

ஆ. வங்கியானது குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன விகிதத்திற்கும் மேலாகத் தொழிற்படுகின்றது என்பதனையும் மூலதன உள்ளமைப்பு வங்கித்தொழில் வியாபாரத்தின் தன்மை மற்றும் அளவிற்கு ஏற்புடைத்தாக இருக்கிறது என்பதனையும் உறுதிப்படுத்தல்

இ. தற்போது நிலவுகின்ற அல்லது ஏற்படக்கூடிய சாத்தியமான பிரச்சனையையும் வங்கி எதிர்நோக்குகின்ற முக்கிய இடர்நேர்வுகளையும் அவர்களது உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பிலுள்ள குறைபாடுகளையும் மற்றும் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையின் பெறுபேறுகளின் மீது தங்கியிருக்கக்கூடிய தன்மையின் அளவு என்பனவற்றை அடையாளம் காணுதல்

ஈ. வங்கியின் இடர்நேர்வுகளைத் தவிர்க்கும் பண்புகளுக்கு உதவியளிக்கும் விதத்தில் தேவைப்படுத்தப்பட்ட குறைந்தபட்ச மட்டங்களுக்குக் கீழே மூலதனம் வீழ்ச்சியடைவதனைத் தவிர்ப்பதற்காக ஆரம்பக் கட்டத்திலேயே தலையீடுகளை மேற்கொள்ளுதல்

உ. இச்செயன்முறைகளின் பெறுபேறுகள் திருப்தியளிக்காதவிடத்து பொருத்தமான மேற்பார்வை நடவடிக்கைகளையும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளையும் மேற்கொள்ளுதல்

14 உள்ளடக்கம்

மேற்பார்வை மீளாய்வு மற்றும் மதிப்பிடல் செயன்முறையானது வங்கியின் தூண் 1 இன் இயல்பாகவே இணைந்து காணப்படும் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளையும் தூண் 2 இன் இயல்பாகவே இணைந்து காணப்படும் இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளையும் உள்ளடக்கும்.

15 தரம் சார்ந்த மதிப்பீடுகள்

தூண் 2 இடர்நேர்வுகளை உடனடியாக கணிக்கமுடியாதவிடத்து, முன்மதியுடையதும் திட்டமிடப்பட்டதுமான மட்டங்களுக்குள் உண்மையான இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளைக் கட்டுப்படுத்துவதற்குக் காத்திரமான இடர்நேர்வு ஆளுகை, மேற்பார்வை முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகள் என்பனவற்றினூடாக வங்கியின் இயலாற்றல் பற்றிய தரம் சார்ந்த மதிப்பீடுகள் தொடர்பில் மேற்பார்வை தொடர்பான முடிவு பயன்படுத்தப்படல் வேண்டும்.

16 வங்கிகளுடனான கலந்துரையாடல்கள்

உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை தொடர்பாக மேற்பார்வை மீளாய்வு மற்றும் மதிப்பீட்டுச் செயன்முறை வங்கியுடன் தீவிரமான கலந்துரையாடல்களில் ஈடுபடுகிறது. இதனூடாக இலங்கை மத்திய வங்கி பின்வருவனவற்றை எதிர்பார்க்கிறது.

அ. வங்கியின் பொதுவான கட்டுப்பாடு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பிற்கு ஆழமான உள்ளக நன்மைகள்

ஆ. குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடுகள் மற்றும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட உள்ளக மூலதனத் தொகை என்பனவற்றின் கீழ் உள்ளடக்கப்படாத இடர்நேர்வுகளை வங்கிகள் எவ்வாறு அணுகுகின்றன என்பதனை நெருக்கமாக விளங்கிக் கொள்ளும் தன்மையினை உருவாக்குதல்

இ. அடையாளம் காணுதல், அளவிடல், கண்காணித்தல், கட்டுப்படுத்துதல், தணித்தல் மற்றும் அதன் இடர்நேர்வுகளை அறிக்கையிடல் என்பனவற்றிற்கான வங்கி பேணி வருகின்ற பொறிமுறைகளை விளங்கிக் கொள்ளுதல்; அத்துடன்

ஈ. வங்கியின் தற்போதைய இடர்நேர்வு வெளிப்படுத்துகைகளையும் அதேபோன்று எதிர்கால திட்டமிடப்பட்ட மூலதன மூலங்களையும் உள்ளடக்குவதற்கு மதிப்பிடப்பட்டவற்றிற்கு மேலாக மேலதிக மூலதனம் அவசியமானதா என்பதனை விளங்கிக் கொள்ளுதல்

16.2 கலந்துரையாடல்கள் வங்கிகள் அவற்றின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயன்முறைக்குப் பொருத்தமான மாற்றங்களைச் செய்வதற்கான வாய்ப்புக்களை வழங்கும்.

16.3 மேற்பார்வை மீளாய்வு மதிப்பீட்டுச் செயன்முறையின் பெறுபேறுகளை தொடர்பூட்டல்:

அ. மேற்பார்வை மீளாய்வு மதிப்பீட்டுச் செயன்முறைகள் முடிவடைந்ததன் பின்னர் வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரானவர் வங்கியின் குறைந்தபட்ச மூலதனப் போதுமை விகிதத்தில் அதிகரிப்பினை ஏற்படுத்த வழிவகுக்கக் கூடிய ஏதேனும் கரிசனைக்குரிய துறைகள் உட்பட, மதிப்பீட்டின் பெறுபேறுகளின் அடிப்படையில் வங்கியுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியும்.

ஆ. வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் மதிப்பீட்டின் பெறுபேறுகளை விளக்குவதுடன் வங்கியின் கரிசனைக்குரிய விடயங்கள் ஏதுமிருப்பின் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான பொருத்தமான சீர்செய்யும் நடவடிக்கைகளையும் விதந்துரைப்பார். மூலதனத்தில் முன்மொழிறப்பட்ட அதிகரிப்பு ஏதுமிருப்பின் தீர்மானங்களை இறுதிப்படுத்த முன்னர் (பிரதிநிதித்துவத்தினை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களுடன்) வங்கிகளுக்கு அறிவிக்கப்படும்.

## பகுதி IV - மேற்பார்வைத் தலையீடு

17 **மேற்பார்வை மீளாய்வு மதிப்பீட்டுச் செயன்முறையின் பெறுபேறுகளினது அடிப்படையில் இலங்கை மத்திய வங்கி ஆரம்பக் கட்டமொன்றில் பின்வருவனவற்றின் பொருட்டு தலையிடலாம்.**

அ. தொடர்பான வங்கியின் குறைந்தபட்சத் தேவைப்பாட்டிற்குக் கீழே மூலதனம் வீழ்ச்சியடைவதனைத் தடுப்பதற்கு; அத்துடன்

ஆ. நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பாதிக்கக்கூடிய தாக்கங்களைத் தடுப்பதற்கு

18 **மூலதன மட்டத்தினைப் பொறுத்து, பின்வருவனவற்றை உள்ளடக்கிய பரந்தளவு ரீதியான மேற்பார்வை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்:**

அ. வங்கிகள் அவற்றின் மூலதன நிலைமையினையும் மட்டங்களையும் மேம்படுத்துவதற்காக தார்மீக நடைமுறைகள் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்;

ஆ. இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் உட்பட வங்கியின் உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையினை மேம்படுத்தல்;

இ. மூலதனத்தினை பழைய நிலைக்குக் கொண்டு வரும் திட்டத்தினை சமர்ப்பிக்குமாறு வங்கிகளை தேவைப்படுத்தல்;

ஈ. பங்கிலாபங்கள், வியாபார நடவடிக்கைகள், கையேற்புக்கள், முதலீடுகள் போன்றவற்றில் கொடுப்பனவுகளின் மீது கட்டுப்பாடுகளை விதித்தல்; அத்துடன்

உ. சபை அத்துடன் அல்லது மூத்த முகாமைத்துவத்தினை மாற்றுமாறு தேவைப்படுத்தல்.

**இணைப்பு I**

## உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை ஆவணத்தினைத் தயாரிப்பதற்கான குறித்துரைக்கப்பட்ட படிவம்

**1 பொதுவானது**

1.1 உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை ஆவணத்தின் நோக்கம் யாதெனில் வங்கியினது இடர்நேர்வுகளின் தற்போதைய மதிப்பீடுகளையும் இவ்விடர்நேர்வுகளை வங்கி எவ்வாறு தணிப்பதற்கு எண்ணியுள்ளதென்பதனையும் மற்றைய தணித்தல் காரணிகளைக் கருத்திற் கொள்கையில் தற்போதும், எதிர்காலத்திலும் எவ்வளவு மூலதனம் தேவைப்படும் என்பதனையும் சபை/ மூத்த முகாமைத்துவம் மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிப்பதாகும்.

1.2 வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையின் வருடாந்த ஆவணமானது கீழேயுள்ள பந்தி 2 இல் தரப்பட்டுள்ள உள்ளடக்கத்திற்கிணங்க தயாரிக்கப்படல் வேண்டும்.

1.3 எனினும், வங்கிகளின் வியாபாரமும் இடர்நேர்வுத் தோற்றப்பாடுகளும் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்கு வேறுபடும் என்பதனாலும் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை ஆவணம் வங்கிகளினது வியாபாரத்தின் அளவு, தன்மை மற்றும் சிக்கலான தன்மை என்பனவற்றிற்கு விகிதசமமாக இருக்க வேண்டும் என்பதனாலும் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் நீளத்திலும் படிவ அமைப்பிலும் நியாயமான அளவு வேறுபாடுகள் இருத்தல் வேண்டுமென மத்திய வங்கி எதிர்பார்க்கிறது.

1.4 ஆகவே, இப்படிவத்தினைப் பயன்படுத்துவது மீளாய்வுச் செயன்முறையினை வங்கிக்கும் அதேபோன்று இலங்கை மத்திய வங்கிக்கும் மிகப் பயனுடையதாக்கும்.

1.5 உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை ஆவணத்தின் அடிப்படைக் காலமும் நிதியியல் தரவும் முன்னைய நிதியியல் ஆண்டின் முடிவிலுள்ளவாறான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் தரவிற்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும்.

1.6 உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை ஆவணத்தின் எறிவு செய்யப்பட்ட நிதியியல் தரவு குறைந்தபட்சம் மூன்று நிதியியல் ஆண்டுகளுக்கானதாக இருத்தல் வேண்டும்.

**2 உள்ளடக்கம்**

2.1 நிறைவேற்றுத் தொகுப்பு
2.2 பின்னணி
2.3 சபை மற்றும் மூத்த முகாமைத்துவ மேற்பார்வை
2.4 இடர்நேர்வு ஆளுகை
2.5 ஆற்றல்மிக்க அழுத்தப் பரீட்சிப்பு செயன்முறைகள்
2.6 மூலதனத் திட்டமிடல்
2.7 எறிவு செய்யப்பட்ட நிதியியல் தரவு மற்றும் மூலதன மதிப்பீடு

**3 நிறைவேற்றுத் தொகுப்பு**

இப்பிரிவானது உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையின் முறையியலையும் பொதுநோக்கையும் பெறுபேறுகளையும் தருகின்றது. இப்பொதுநோக்கு பின்வருவனவற்றை உள்ளடக்கும்.

அ. அறிக்கையின் நோக்கமும் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையினால் உள்ளடக்கப்பட்டுள்ள குழும நிறுவனங்களும்;

ஆ. வங்கியின் உபாய நிலை, அதன் ஐந்தொகை வலிமை மற்றும் எதிர்கால இலாபத்தன்மை உட்பட நிதியியல் எதிர்வுகூறல்;

இ. ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன முகாமைத்துவம்;

ஈ. ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதன மதிப்பீடு - தூண் 1;

உ. உள்ளக மூலதன மதிப்பீடு - தூண் 2;

ஊ. விகித முகாமைத்துவம்: தூண் 1 இன் கீழான மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகளுடன் ஒப்பிடுகையில் வங்கி வைத்திருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்ற உள்ளக மூலதனம் எவ்வளவாகவும் எந்த உள்ளமைப்பிலும் இருத்தல் வேண்டும்;

எ. இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறைகளும் மதிப்பீடும்;

ஏ. மூலதனம் மற்றும் பங்கிலாபத் திட்டங்களின் விபரணங்கள்; எதிர்காலத்தில் மூலதனத்தினை முகாமைத்துப்படுத்துவதற்கு வங்கி எதிர்பார்த்திருக்கும் முறைகளும் என்ன நோக்கத்திற்காக அவை பயன்படுத்தப்படவுள்ளன என்பதும்;

ஐ. அழுத்தப் பரீட்சிப்பு அணுகுமுறை; அத்துடன்

ஒ. ஒப்புதல் தொடர்பான விபரங்கள்.

**4 பின்னணி**

இப்பிரிவானது நிறுவன ரீதியான அமைப்பு மற்றும் வியாபார வழிமுறைகள், குழும அமைப்பு (சட்டம் மற்றும் தொழிற்பாடுகள்) இலாபம், பங்கிலாபங்கள், உரிமை மூலதனம், ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் ஒப்பிடுகையில் வைத்திருக்கப்படும் மூலதன மூலவளங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய வங்கியின் நிதியியல் தரவுகள், மொத்தச் சொத்துக்கள், மொத்தக் கடன் மற்றும் முற்பணங்கள், மொத்த வைப்புக்கள் மற்றும் வங்கியின் எதிர்காலத்திற்கான சிக்கல்கள் எதனையும் கொண்டிருக்கக்கூடிய தரவுகளின் போக்குகளிலிருந்து கண்டறியக் கூடியதாகவுள்ள ஏதேனும் முடிவுகள் என்பனவற்றை உள்ளடக்கும்.

**5 சபை மற்றும் மூத்த முகாமைத்துவ மேற்பார்வை**

இப்பிரிவானது பின்வரும் தகவல்களை வழங்கும்:

அ. கம்பனி ஆளுகை அமைப்பு;

ஆ. சபை மற்றும் மூத்த முகாமைத்துவ மேற்பார்வை;

இ. உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை ஆளுகை அமைப்பு;

ஈ. கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடுகள்; அத்துடன்

உ. உள்ளகக் கட்டுப்பாடுகளும் சுயாதீனமான மீளாய்வும்

**6 இடர்நேர்வு ஆளுகை**

இப்பிரிவானது பின்வருவனவற்றை வழங்கும்

அ. இடர்நேர்வு நாட்டம்

ஆ. இடர்நேர்வு முகாமைத்துக் கட்டமைப்பு

இ. ஒழுங்குமுறைப்படுத்தல் இடர்நேர்வு மதிப்பீடு (தூண் 1)

- (i) கொடுகடன் இடர்நேர்வு
- (ii) சந்தை இடர்நேர்வு
- (iii) தொழிற்பாட்டு இடர்நேர்வு

ஈ. உள்ளக இடர்நேர்வு மதிப்பீடு (தூண் 2)

- (i) திரட்சி இடர்நேர்வு
- (ii) வங்கித்தொழில் ஏட்டில் வட்டி வீத இடர்நேர்வு
- (iii) தீர்ப்பனவு இடர்நேர்வு
- (iv) திரவத்தன்மை இடர்நேர்வு
- (v) இணங்குவிப்பு இடர்நேர்வு
- (vi) உபாய/ வியாபார இடர்நேர்வு
- (vii) கீர்த்தி இடர்நேர்வு
- (viii) எஞ்சிய இடர்நேர்வு

**7 ஆற்றல் வாய்ந்த அழுத்தப் பரீட்சிப்புச் செயன்முறைகள்**

இப்பிரிவானது வங்கியின் அழுத்தப் பரீட்சிப்புச் செயன்முறைகளின் பின்வரும் விபரங்களைத் தருகிறது.

அ. அழுத்தப் பரீட்சிப்புச் செயன்முறையின் பொதுநோக்கு

ஆ. அழுத்தச் சூழல்/ வகைகள்

இ. அழுத்தப் பரீட்சிப்பின் பெறுபேறுகளையும் பங்கு மூலதனத்திற்கான அதன் தாக்கத்தினையும் கலந்துரையாடுதல்

ஈ. அழுத்த நிலைமைகள் தொடர்பான பரந்த வீச்சிலான இடர்நேர்வுத் தணிப்பு அல்லது தடங்கலற்ற திட்டம்

**8 மூலதன திட்டமிடல்**

இப்பிரிவானது வங்கிகளின் மூலதனத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவச் செயன்முறைகளின் விபரங்களைத் தருகின்றது. இது குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

அ. வங்கியின் உபாய நோக்கு மற்றும் வியாபாரத் திட்டத்தினை கணக்கில் கொண்டு அதன் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டுடன் தொடர்பான வங்கியின் குறுங்கால மற்றும் நீண்ட கால மூலதனப் போதுமை இலக்குகள்;

ஆ. வங்கியின் பொதுவான இடர்நேர்வு தோற்றப்பாடு மற்றும் நிதியியல் நிலைமைகளுடன் இசைந்து செல்கின்ற ஒப்புதலளிக்கப்பட்ட மூலதன இலக்குகள்;

இ. வங்கியின் இடர்நேர்வுத் தோற்றப்பாட்டுடன் தொடர்பான அதன் பொதுவான மூலதனப் போதுமையினைத் தீர்மானிப்பதற்கான அணுகுமுறை; மற்றும்

ஈ. முடிவுரை.

**9 எறிவு செய்யப்பட்ட நிதியியல் நிலைமை மற்றும் மூலதன மதிப்பீடு**

இப்பிரிவானது பின்வருவன தொடர்பில் தூண் 1 மற்றும் தூண் 2 இன் தேவைப்பாடுகளை விளக்குகிறது.

அ. வங்கியின் வியாபாரத் தோற்றப்பாட்டிற்கு எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள், இது தொழிற்படுவதற்கு எதிர்பார்க்கின்ற சூழல், இதன் எறிவு செய்யப்பட்ட வியாபாரத் திட்டங்கள் (பொருத்தமான வியாபார துறைகளின்படி) மற்றும் அடுத்த மூன்றிலிருந்து ஐந்தாண்டுகள் வரையான காலப்பகுதிக்கான எறிவு செய்யப்பட்ட நிதியியல் நிலைமை; மற்றும்

ஆ. இவ்வியாபாரத் திட்டங்களைக் கருத்திற் கொள்கையில், இப்பிரிவானது அவற்றின் தற்போதைய இடர்நேர்வு வெளிப்படுத்துகையினையும் அதேபோன்று எதிர்காலத் திட்டமிடப்பட்ட மூலதன மூலங்களினையும் உள்ளடக்குவதற்கு மதிப்பிடப்பட்ட தொகைக்கும் மேலாக மேலதிக மூலதனம் தேவையானதா என்பது பற்றி வங்கியின் மதிப்பீடு பற்றி கலந்துரையாடப்படும்.

**தொடர்பு எண்: 02/17/800/0014/01** 2013 ஒகத்து 19

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## முதலீட்டு நிதியக் கணக்கு

நீங்கள் அறிந்தவாறு, உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 113(6)ஆம் பிரிவின் நியதிகளில், இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் முதலீட்டு நிதியக் கணக்கினைப் பயன்படுத்தாத ஏதேனும் வங்கி 2013 யூலை 1ஆம் நாளிலுள்ளவாறு முதலீட்டு நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருக்கும் அத்தகைய நிதியத்தினை திரட்டிய நிதியத்திற்கு மாற்றல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இது தொடர்பாக உள்நாட்டரசிறைத் திணைக்களம் 2013 யூலை 01ஆம் நாளன்று உள்ளவாறு வங்கிகளின் முதலீட்டு நிதியக் கணக்கிலுள்ள பயன்படுத்தப்படாத நிதியத்தினை அறிக்கையிடுமாறு மத்திய வங்கியினைக் கோரியுள்ளது.

ஆகவே, பயன்படுத்தப்படாத தொகையினை 2013 ஒகத்து 23ஆம் திகதியளவில் திருமதி கல்யாணி தகநாயக்க, துணை ஆணையாளர், உள்நாட்டரசிறைத் திணைக்களத்திற்கு கீழே கையொப்பமிடப்பட்டவருக்கு ஒரு பிரதியுடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

**தொடர்பு எண்: 02/17/800/0002/002** 2013 செத்தெம்பர் 17

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## நிதியியல் கூற்றுக்களையும் ஏனைய வெளிப்படுத்துகைகளையும் வெப்தளத்தில் வெளியிடுதல்

2013 ஒகத்து 28ஆம் நாளன்று நடைபெற்ற முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டவாறு, சந்தை வினைத்திறனை மேம்படுத்துவதற்கும் ஆரோக்கியமான போட்டித்தன்மையினை ஊக்குவிப்பதற்கும் ஒரே சீரான, போதுமான வெளிப்படுத்துகை நடைமுறைகள் மிக முக்கியமானவைகளாகக் காணப்படுகின்றன. இவற்றினையும் வங்கித்தொழில் தொழிற்பாடுகள் மற்றும் சந்தை ஒழுங்குகளின் வெளிப்படையான தன்மைகளையும் மேலும் அதிகரிக்கும் பொருட்டு ஒவ்வொரு வங்கியும் அவை தொடர்பான வெப்தளங்கள் தொடர்பான பின்வரும் வெளியீடுகளின் தேவைப்பாடுகளை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

| கால இடைவெளி | வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள் |
|---|---|
| ஆண்டுதோறும் | (i) வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கை/ நிதியியல் கூற்றுக்கள் அத்துடன்/ அல்லது பின்வரும் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட அறிக்கைகள்,<br>(அ) வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளைத் தயாரிப்பது தொடர்பில் 1998 யூன் 02ஆம் நாள் மற்றும் 2013 பெப்புருவரி 11ஆம் நாளன்று விடுக்கப்பட்ட சுற்றறிக்கைகள்.<br>(ஆ) பணிப்புரை இல. 3(8): கம்பனி ஆளுகை மீதான 2007ஆம் ஆண்டின் 11ஆம் மற்றும் 12ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகளின் “வெளிப்படுத்துகை”.<br>(ii) வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளைப் பொறுத்த வரையில், மேலேயுள்ள விடயம் (i) (ஆ) 2011 சனவரி 03ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இணங்குவதாயிருத்தல் வேண்டும். |
| ஆண்டிற்கு இரு தடவை | (i) ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புத் தொடர்பில் 2011ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் கீழ் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களின் வெளிப்படுத்துகைத் தேவைப்பாடுகள் மீதான விடயம் ‘எச்’ இன் பணிப்புரை 1.5 இன் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் தரம் தொடர்பான வெளிப்படுத்துகைகள். இணையத்தளத்திலான அத்தகைய வெளியீடானது, 2011ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையின் கீழான தொடர்பான தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதாகக் கருதப்படுதல் வேண்டும்.<br>(ii) இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் என்பனவற்றுடன் இணங்கிச் செல்லும் விதத்தில், வங்கிகள் மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்குப் பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ள முடியும். |
| காலாண்டு | பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட காலாண்டு நிதியியல் கூற்றுக்களின் மீதான வெளியீடுகள் தொடர்பில் 2005 செத்தெம்பர் 30, 2006 சனவரி 26, 2006 பெப்புருவரி 21 மற்றும் 2013 பெப்புருவரி 11 ஆகிய திகதிகளில் விடுக்கப்பட்ட சுற்றறிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட காலாண்டு நிதியியல் கூற்றுக்கள். |

இதன்படி, மேற்குறிப்பிட்ட விடயங்களுடன் இணங்கியொழுகுவதற்குத் தேவையான வழிமுறைகளை மேற்கொள்ளுமாறு நீங்கள் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

**தொடர்பு எண்: 02/17/900/0001/004** 2013 ஒத்தோபர் 11

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு
வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## செய்தித்தாள்களிலும் வெப்தளத்திலும் மேலதிக காலாண்டுத் தகவல்களை வெளிப்படுத்தல்

வங்கிகளின் காலாண்டு நிதியியல் கூற்றுக்களை பத்திரிகைகளில் வெளியிடுவதன் மூலமும் நிதியியல் கூற்றுக்களையும் ஏனைய வெளிப்படுத்தல்களையும் வெப்தளத்தில் வெளியிடுவதன் மூலமும் மேற்கொள்ளப்படும் பகிரங்க வெளிப்படுத்தல்கள் பற்றிய எமது முறையே 2013 பெப்புருவரி 11ஆம் திகதி மற்றும் 2013 செத்தெம்பர் 17ஆம் திகதி இடப்பட்ட சுற்றறிக்கைகள் தொடர்பாக.

ஒவ்வொரு வங்கியும், இணைப்பில் தரப்பட்டுள்ளவாறு, 2013இன் 3ஆம் காலாண்டிலிருந்து செய்தித்தாள்களிலும் அவை தொடர்பான வெப்தளங்களிலும் வெளியிடப்படும் அவற்றின் காலாண்டு வெளியீடுகளில் பின்வரும் விடயங்கள் மீதான மேலதிக வெளிப்படுத்தல்களை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

1. ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் பெறத்தக்கவைகளும்
2. ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் பெறத்தக்கவைகளும் - சாதனங்களின்படி
3. ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் பெறத்தக்கவைக்காக இக்காலப்பகுதியில் தனிப்பட்ட மற்றும் கூட்டு பெறுமதி இழப்புக்களில் ஏற்பட்ட அசைவுகள்
4. ஏனைய வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை - சாதனங்களின்படி

இதற்கமைய, மேலேயுள்ளவற்றுடன் இணங்கியொழுகும் விதத்தில் தேவையான வழிமுறைகளை மேற்கொள்ளுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

**இணைப்பு**

## செய்தித்தாள்களிலும் வெப்தளத்திலும் மேலதிக காலாண்டுத் தகவல்களை வெளிப்படுத்தல்

1) ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி |
| ***ரூபா ஆயிரங்களில்*** | **தி/மா/ஆ இல் உள்ளவாறு** | **தி/மா/ஆ இல் உள்ளவாறு** | **தி/மா/ஆ இல் உள்ளவாறு** | **தி/மா/ஆ இல் உள்ளவாறு** |
| மொத்தக் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் | | | | |
| (*கழி*): தனிப்பட்ட பெறுமதியிழப்பு | | | | |
| ஒன்றுசேர்ந்த பெறுமதியிழப்பு | | | | |
| இலாபம் மற்றும் நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்டவை உள்ளடங்கலாக தேறிய கடன்கள் மற்றும் பெறத்தக்கவை | | | | |
| (*கழி*): இலாபம் அல்லது நட்டத்தினூடாக சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் | | | | |
| **தேறிய கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்** | | | | |

2) ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் - சாதனங்களின்படி

| | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி |
| **ரூபா ஆயிரங்களில்** | **தி/மா/ஆ இல் உள்ளவாறு** | **தி/மா/ஆ இல் உள்ளவாறு** | **தி/மா/ஆ இல் உள்ளவாறு** | **தி/மா/ஆ இல் உள்ளவாறு** |
| **சாதனங்களின்படி - உள்நாட்டு நாணயம்** | | | | |
| மேலதிகப் பற்று | | | | |
| தவணைக் கடன்கள் | | | | |
| பெறத்தக்க குத்தகை வாடகை | | | | |
| கடன் அட்டைகள் | | | | |
| அடகுபிடித்தல் | | | | |
| ஏனைய கடன்கள் (தயவுசெய்து குறிப்பிடுக) | | | | |
| **துணை மொத்தம்** | | | | |
| சாதனங்களின்படி - வெளிநாட்டு நாணயம் | | | | |
| மேலதிகப் பற்று | | | | |
| தவணைக் கடன்கள் | | | | |
| ஏனைய கடன்கள் (தயவுசெய்து குறிப்பிடுக) | | | | |
| **துணை மொத்தம்** | | | | |
| மொத்தம் | | | | |

3) ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளுக்கான காலப்பகுதியில்
**தனிப்பட்ட மற்றும் ஒன்றுசேர்ந்த பெறுமதியிழப்புக்களில் ஏற்பட்ட அசைவுகள்**

| ரூபா ஆயிரங்களில் | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி |
| | தி/மா/ஆ இல் உள்ளவாறு | தி/மா/ஆ இல் உள்ளவாறு | தி/மா/ஆ இல் உள்ளவாறு | தி/மா/ஆ இல் உள்ளவாறு |
| தனிப்பட்ட பெறுமதியிழப்பு | | | | |
| திதி/மாமா/ஆஆ இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | | | | |
| வருமானக் கூற்றிற்கான விதிப்பனவு/ (மீண்டும் பதியப்பட்டவை) | | | | |
| ஆண்டு காலப்பகுதியில் பதிவழிப்பு | | | | |
| ஏனைய அசைவுகள் | | | | |
| திதி/மாமா/ஆஆ இல் உள்ளவாறு இறுதி மீதி | | | | |
| ஒன்றுசேர்ந்த பெறுமதியிழப்பு | | | | |
| திதி/மாமா/ஆஆ இல் உள்ளவாறு ஆரம்ப மீதி | | | | |
| வருமானக் கூற்றிற்கான விதிப்பனவு/ (மீண்டும் பதியப்பட்டவை) | | | | |
| ஏனைய அசைவுகள் | | | | |
| திதி/மாமா/ஆஆ இல் உள்ளவாறு இறுதி மீதி | | | | |
| மொத்தப் பெறுமதியிழப்பு | | | | |

4) ஏனைய வாடிக்கையாளர்களுக்குச் செலுத்த வேண்டியவை - சாதனங்களின்படி

| ரூபா ஆயிரங்களில் | வங்கி | | குழுமம் | |
|---|---|---|---|---|
| | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி | நடப்புக் காலப்பகுதி | முன்னைய காலப்பகுதி |
| | தி/மா/ஆ இல் உள்ளவாறு | தி/மா/ஆ இல் உள்ளவாறு | தி/மா/ஆ இல் உள்ளவாறு | தி/மா/ஆ இல் உள்ளவாறு |
| சாதனங்களின்படி - உள்நாட்டு நாணயம் | | | | |
| கேள்வி வைப்புக்கள் (நடைமுறைக் கணக்குகள்) | | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | | | | |
| நிலையான வைப்புக்கள் | | | | |
| ஏனைய வைப்புக்கள் (தயவுசெய்து குறிப்பிடுக) | | | | |
| துணை மொத்தம் | | | | |
| சாதனங்களின்படி - வெளிநாட்டு நாணயம் | | | | |
| கேள்வி வைப்புக்கள் (நடைமுறைக் கணக்குகள்) | | | | |
| சேமிப்பு வைப்புக்கள் | | | | |
| நிலையான வைப்புக்கள் | | | | |
| ஏனைய வைப்புக்கள் (தயவுசெய்து குறிப்பிடுக) | | | | |
| துணை மொத்தம் | | | | |
| மொத்தம் | | | | |

**தொடர்பு எண்: 02/17/800/0007/001** 2013 நவெம்பர் 08

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு
வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## தவறாக வழிநடத்தும் மற்றும் ஒழுக்க விழுமியங்களுக்குப் புறம்பான விளம்பரங்கள்

தவறாக வழிநடத்தும் மற்றும் ஒழுக்க விழுமியங்களுக்குப் புறம்பான விளம்பரங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு அனைத்து வங்கிகளையும் கேட்டுக் கொள்கின்ற 2008 நவெம்பர் 6ஆம் திகதியிடப்பட்ட எமது சுற்றறிக்கை இல. 02/17/800/0007/001 இன்பால் தங்களின் கவனத்தை ஈர்ப்பதுடன் பொதுமக்கள், சாதனங்களின் தன்மை பற்றியும் ஏற்புடைத்தான பயனுறு வட்டி வீதம் பற்றியும் தெளிவாக விளங்கிக் கொள்வதனை இயலச் செய்யும் விதத்தில் அனைத்து முக்கியமான தகவல்களும் புலனாகக் கூடியவாறு எடுத்துக்காட்டப்படுகின்றமையினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

2013 ஒத்தோபர் 24ஆம் திகதி நடைபெற்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, வங்கிகள் தவறாக வழிநடத்துகின்ற மற்றும் ஒழுக்க விழுமியங்களுக்குப் புறம்பான விதத்தில், உதாரணமாக, வைப்புக்களினது வட்டி மற்றும் ஆண்டிற்கான பயனுறு வீதத்தின் வெளியீடு மிகச் சிறிய எழுத்தில் காணப்படுவதுடன் இது மிகச் சிறியதாக அல்லது வட்டி வருவாய் அதாவது வட்டி வீதம் அல்லது ஆண்டு சதவீத விளைவு என்பனவற்றை வெளிப்படுத்தாமல் வைப்புக்களை ஊக்குவிக்கின்ற ஏனைய முக்கிய தகவல்களிலும் பார்க்கக் குறைந்தளவில் வங்கிகள் விளம்பரங்களை வெளியிடுகின்றன.

ஆகவே, நாங்கள் பொதுமக்கள் சரியான தகவல்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்வதனை இயலச் செய்யும் விதத்தில் அனைத்து விளம்பரங்கள், கட்டுரைகளில் பெயரளவு வட்டி வீதங்கள், ஆண்டு பயனுறு வட்டி வீதம் மற்றும் வங்கியின் கொடுகடன் தரமிடல் உட்பட **அனைத்து முக்கிய தகவல்களும்** ஒரே முக்கியத்துவமான முறையில் பிரசன்னப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் 2008ஆம் ஆண்டின் நவெம்பர் 6ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கை 01/17/800/0007/001 இற்கு இணங்கியொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

**தொடர்பு எண்: 02/17/550/0014/001** 2013 நவெம்பர் 22

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு
வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறைமையின் கீழ் புதிய கூற்றுக்களின் அறிமுகம்

வங்கிகளின் தற்போதைய தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு அறிக்கையிடல் முறைமையானது புதிய கணக்கீட்டு நியமங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் நிதியியல் தரவுகளை ஒழுங்குமுறைப்படுத்தி திரட்சிப்படுத்தும் நோக்குடன் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன. ஆரம்ப கட்ட நடவடிக்கையாக பின்வரும் கூற்றுக்கள் உருவாக்கப்பட்டு வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறையினுள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பீஎஸ்டி-ஏஎவ்-01-எவ்பி - நிதியியல் நிலைமைக் கூற்று
(ஆ) பீஎஸ்டி-ஏஎவ்-02-சி1 - அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

வெப்தளத்தில் பதிவேற்றும் செயன்முறைகளுக்கு வசதியளிக்கும் விதத்தில், 2012ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் அடிப்படையில் 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுக்கான மேற்குறிப்பிட்ட கூற்றுக்களை பூரணப்படுத்தி திசெம்பர் 20ம் நாள் அன்று அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிப்பதற்குத் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு தாங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இவ்விடயம் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவையாயின் செல்வி சுரேகா கெட்டவல, மூத்த துணைப் பணிப்பாளரை தொலைபேசி: 2398602 அல்லது மின்னஞ்சல்: sureka@cbsl.lk மூலம் திரு. மகேந்திரா ஆரியரத்னா, மூத்த பணிப்பாளரை தொலைபேசி: 2477109 அல்லது மின்னஞ்சல்: mahendra@cbsl.lk மூலமும் தொடர்பு கொள்ளலாம்.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

**தொடர்பு எண்: 02/17/500/0540/001** 2013 திசெம்பர் 04

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் முதலீடு செய்வதற்கு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை அனுமதித்தல்

திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 25ஆம் பிரிவுகளின் நியதிகளில், நிதி திட்டமிடல் அமைச்சரின் ஒப்புதலுடன், நாணயச் சபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகள், இரண்டாந்தரச் சந்தையில் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் முதலீடு செய்வதற்கு அதிகாரமளித்துள்ளது.

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

**தொடர்பு எண்: 02/17/500/0540/001** 2013 திசெம்பர் 04

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவின் கீழ் திரவச் சொத்துக்களின் வரைவிலக்கணம்

திருத்தப்பட்டவாறான, 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 86ஆம் பிரிவின் கீழ் "திரவச் சொத்துக்கள்" தொடர்பான வரைவிலக்கணத்தின் விடயம் (எ)இன் நியதிகளில், நாணயச் சபையானது, இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகளை திரவச் சொத்துக்களாகக் கருதலாம் எனத் தீர்மானித்திருக்கிறது.

2. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்:

(i) வங்கித்தொழில் சட்டத்தின் 21ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் நோக்கங்களுக்காக, வர்த்தக வங்கிகள் அவற்றின் திரவச் சொத்துக்களின் விகிதத்தினைக் கணிப்பதில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் செய்யப்பட்ட அவற்றின் முதலீடுகளின் நாளாந்த சந்தைப் பெறுமதியினையும் கணக்கில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்; அத்துடன்

(ii) நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகளின் தகுதியுடைய பெறுமதியினை விடயத்தினைப் பொறுத்து பின்வருவனவற்றின் கீழ் அறிவித்தல் வேண்டும்:

(அ) உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளுக்கான நியதி திரவச் சொத்து விகிதத்தின் மீதான மாதாந்த வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றின் குறியீட்டு இலக்கம் 4.1.2.4.0.0 (பீஎஸ்டி-எம்எவ்-04-எல்டி); மற்றும்

(ஆ) கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளுக்கான நியதி திரவச் சொத்து விகிதத்தின் மீதான மாதாந்த வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றின் குறியீட்டு இலக்கம் 4.2.2.4.0.0 (பீஎஸ்டி-எம்எவ்-04-எல்எவ்).

உங்கள் உண்மையுள்ள,
திருமதி ரி எம் ஜே வை பி பர்னாந்து
**பணிப்பாளர் வங்கி மேற்பார்வை**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**

1843/8 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி திங்கட்கிழமை
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி **I** : தொகுதி **(I)** - பொது
**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**
**நாணய விதிச் சட்டம்**

நாணய விதிச் சட்டம், (அத்தியாயம் 422) பிரிவு 32உ இன் கீழ் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**தலைவர்**
**நாணயச் சபை**

**இலங்கை மத்திய வங்கி**
**கொழும்பு**
2013 திசெம்பர் 23

## இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள் 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகளுக்கான திருத்தம்

**எடுத்துக்காட்டல்**

1.1 இந்த ஒழுங்குவிதிகள் 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்ட ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்பட வேண்டும்.

**மூல ஒழுங்குவிதியில் திருத்தங்கள்**

2.1 2010ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28ஆந் திகதியிடப்பட்ட 1673/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2010ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட ஒழுங்குவிதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

2.2 ஒழுங்கு விதி 3.1இல் “இந்தத் திட்டம் இலங்கைக் காப்புறுதித் திட்டம் எனப் பெயரிடப்படும்” எனும் சொற்களுக்குப் பதிலீடாக “இந்தத் திட்டம் இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம் எனப் பெயரிடப்படும் (இதனகத்துப் பின்னர் இது “இத்திட்டம்” எனக் குறிப்பிடப்படும்).”

2.3 ஒழுங்குவிதி 7.1இல் “இத்திட்டமானது “வைப்புக் காப்புறுதி நிதியம்” எனும் பெயரைக் கொண்ட நிதி ஒன்றைக் கொண்டிருக்கும்” எனும் சொற்களுக்குப் பதிலீடாக இத்திட்டமானது “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியம்” எனும் பெயரைக் கொண்ட நிதி ஒன்றைக் கொண்டிருக்கும் என்ற சொற்களைக் கொண்டிருக்கும்.

2.4 ஒழுங்குவிதி 9.7இல் “வைப்புக் காப்புறுதி நிதியம்” எனும் சொற்களுக்குப் பதிலீடாக இச்சொற்கள் ஒழுங்குவிதியில் இடம்பெறும் இடங்களிலெல்லாம் “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவி நிதியம்” என்ற சொற்களைக் கொண்டிருக்கும்.

2.5 ஒழுங்குவிதி 10.5இல் “இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டம்” எனும் சொற்களுக்குப் பதிலீடாக இச்சொற்கள் ஒழுங்குவிதியில் இடம்பெறும் இடங்களிலெல்லாம் “இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை உதவித் திட்டம்” என்ற சொற்களைக் கொண்டிருக்கும்.

**நடைமுறைக்கு வரும் திகதி**

3.1 இத்திருத்தங்கள் 2013 நவெம்பர் 22ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

2013 சனவரி 15

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## மாத இறுதியில் கையிலுள்ள காசு மீதிகள் பற்றிய கிளைவாரியான கூற்றுக்கள்

இது, இலங்கை மத்திய வங்கியுடனான காசுக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான வழிகாட்டல்கள் பற்றிய சுற்றறிக்கை எண் 2007-1 தொடர்பானது. வழிகாட்டலின் பிரிவு 2.7இன் நியதிகளின்படி, அனைத்து வர்த்தக வங்கிகளும் இணைப்பு I இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலும் ஒவ்வொரு கிளையினதும் கையிலுள்ள காசு மீதியினை நாணய இனங்களின் அடிப்படையில், அடுத்துவரும் மாதத்தின் முதல் வாரப் பகுதியில் அறிக்கையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

கிளை வாரியான மீதிகளை அறிக்கையிடாமல் வங்கிகள் கையிலுள்ள மொத்தக் காசு மீதிகளையே வழமையாக அறிக்கையிட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டிருக்கின்றது.

இத்தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகுமாறும் இணைக்கப்பட்டுள்ள படிவத்திலுள்ளவாறு உங்கள் வங்கியின் காசு மீதிகளை கிளை வாரியாக சமர்ப்பிக்குமாறும் நாங்கள் உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

உங்கள் உண்மையுள்ள,
**கண்காணிப்பாளர் நாணயம்**

படி: காசு முகாமையாளர்கள்

**இணைப்பு I**

**............... இல் உள்ளவாறு கையிலுள்ள காசு மீதி***

வங்கியின் பெயர்: ..................................................................

| கிளை | நாணயத் தாள்கள் | | | | | | | | | மொத்தப் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.5000/- | ரூ.2000/- | ரூ.1000/- | ரூ.500/- | ரூ.200/- | ரூ.100/- | ரூ.50/- | ரூ.20/- | ரூ.10/- | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

| கிளை | நாணயக் குத்திகள் | | | | | | மொத்தப் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூ.10/- | ரூ.5/- | ரூ.2/- | ரூ.1/- | சதம் -/50 | சதம் -/25 | |
| | | | | | | | |
| | | | | | | | |

* மாத முடிவிலுள்ள மீதி

**தொடர்பு எண்: 12/01/008/0002/002** 2013 சனவரி 31

சுற்றறிக்கை **எண்: 2013-1**

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## நாணயத் தாள்களை தரம் பிரிப்பதற்கான நியம அளவுகள்

இலங்கை மத்திய வங்கியின் நாணயத் திணைக்களத்துடனான காசுக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான வழிகாட்டல்கள் பற்றிய 2007 மாச்சு 12ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை எண் 2007-1 இற்கு மேலதிகமாக.

அனைத்து வர்த்தக வங்கிகளும் 2013.03.01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் நாணயத் தாள்களை தரம் பிரிப்பது தொடர்பில் இணைப்பு 1இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறு இத்தால் அறிவுறுத்தப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள,

**கண்காணிப்பாளர் நாணயம்**

படி: காசு முகாமையாளர்கள்

**இணைப்பு I**

## நாணயத் தாள்களைத் தரம் பிரிப்பதற்கான நியம அளவு

**பொதுவான அறிவுறுத்தல்கள்**

1. அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும், தமது வாடிக்கையாளர்களினால் வைப்புச் செய்யப்பட்ட நாணயத் தாள்களினது உண்மைத்தன்மையினையும் நல்ல தரத்தினையும் (சுற்றோட்டத்திற்கு விடத்தக்கவை/ பொருத்தமானவை) உறுதிப்படுத்துவதற்காக வாடிக்கையாளர்களினால் அவ்வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்ட நாணயத் தாள்களை கருமபீடங்களில் அல்லது தன்னியக்கக் கூற்றுப் பொறிகளினூடாக வழங்குவதற்கு முன்னர் தரம் பிரித்து சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

2. நாணயத் தாள்களை பொருத்தமானவை (பயன்படுத்தக் கூடியவை) அல்லது பொருத்தமற்றவை (பயன்படுத்த முடியாதவை) என தரம் பிரிப்பதற்கு இணைப்பு II இலுள்ள அட்டவணையிலுள்ள நியம அளவினைப் பயன்படுத்துதல் வேண்டும். சுற்றோட்டத்திற்குப் பொருத்தமற்றவையென இலங்கை மத்திய வங்கியினால் கருதப்படுகின்ற பொருத்தமற்ற நாணயத் தாள்களின் கட்புலப் பிரதிமை இணைப்பு III இல் தரப்பட்டுள்ளது. பொருத்தமானதா என்பதனைத் தீர்மானிப்பதற்கு தாளின் இரண்டு பக்கமும் பரிசோதிக்கப்படுதல் வேண்டும்.

3. இச்சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்கள் அல்லது வழிகாட்டல்கள் தொடர்பில் ஏதேனும் தெளிவுபடுத்தல்களுக்கு நாணயத் திணைக்களத்தின் பின்வரும் அலுவலர்களை தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| கண்காணிப்பாளர் | 011-2477355 |
| மேலதிகக் கண்காணிப்பாளர் | 011-2477603 |
| மேலதிகக் கண்காணிப்பாளர் | 011-2477014 |
| துணைக் கண்காணிப்பாளர் | 011-2477362 |
| மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | 011-2398648 |

**இணைப்பு II**

**பயன்படுத்தத்தக்க மற்றும் பயன்படுத்த முடியாத (சேதமடைந்தவை மற்றும் உருத்திரிபடைந்தவை உள்ளடங்கலாக) நாணயத் தாள்களை வேறாக்குவதற்கான நியம அளவு**

| இல. | நியம அளவு | விபரணம் |
|---|---|---|
| 1 | அழுக்கடைந்தவை | நாணயத் தாளின் மீது அழுக்கு அல்லது திரவம் படிந்திருத்தல், நிறம் மாறியிருத்தல் மற்றும் தேய்ந்து போதல் |
| 2 | துவளக்கூடியவை | மிகையாக மடிக்கப்பட்டதன் காரணமாக துவண்டு போன தோற்றத்தைக் கொண்டவை மற்றும் உறுதியாக இல்லாத அல்லது கிழியக்கூடிய நாணயத் தாள் |
| 3 | கசக்கியவை/ மடிந்தவை | கட்புலத் தோற்றத்தினைப் பாதிக்கக்கூடிய தாள் முழுவதிலும் காணப்படும் பல்வேறு மடிப்புக்கள் |
| 4 | மை தேய்ந்து வெளிறிப் போதல் | கழுவப்பட்டதன் காரணமாக அல்லது இரசாயனத் தாக்கங்களுக்கு உட்பட்டதன் காரணமாக நாணயத் தாளின் ஒரு பகுதி அல்லது முழுவதினதும் தோற்றம் தேய்ந்து/ வெளிறி அல்லது நிறம் மங்கிப் போதல் |
| 5 | கறைகள் | நீர், எண்ணெய், தீந்தை, மை அல்லது அவற்றை ஒத்த பொருட்களின் காரணமாக தாளின் தோற்றத்தினை மாற்றமடையச் செய்த தெளிவாகப் புலனாகக்கூடிய 225 சதுர மி.மீற்றருக்கும் கூடுதலான பரப்பளவினைக் கொண்ட ஏதேனும் அடையாளம் |
| 6 | கிழிந்தவை | தாளின் எந்தவொரு மூலையும் 5 மி.மீற்றருக்கும் கூடுதலான அளவால் கிழிந்திருத்தல் |
| 7 | துளைகள் | 20 சதுர மி.மீற்றருக்கும் கூடுதலான பரப்பளவினை உள்ளடக்கிய புலனாகக்கூடிய துளைகள் அல்லது ஒன்றிற்கும் கூடுதலான 50 சதுர மி.மீற்றருக்கும் கூடுதலான மொத்தப் பரப்பளவினைக் கொண்ட துளைகளைக் கொண்ட நாணயத் தாள்கள் |
| 8 | மூலைகள் அல்லது பகுதிகள் இல்லாது போதல் | மூலைகள் அல்லது 30 சதுர மி.மீற்றருக்கும் கூடுதலான அளவில் ஓரங்கள் கிழிந்த நாணயத் தாள்கள் |
| 9 | வேண்டுமென்றே சிதைக்கப்பட்ட/ மாற்றம் செய்யப்பட்டவை | படம் வரையப்பட்டு, வார்த்தைகள், இலக்கங்கள், கையொப்பம், அடையாளங்கள் என்பன எழுதப்பட்டதன் மூலம் சிதைக்கப்பட்ட அல்லது தொடர் இலக்கம், திகதி, கையொப்பம் பெறுமதி மற்றும் தாளின் தோற்றத்தில் ஏதேனும் வழியில் குறிப்பிடத்தக்களவிற்கு மாற்றம் செய்யப்பட்ட தாள்கள் |
| 10 | பாதுகாப்பு நூல் இல்லாது போதல் | பாதுகாப்பு நூல் இல்லாத நாணயத் தாள்கள் |
| 11 | எதிர்பாராமல் சேதமடைந்தவை | இயற்கை அனர்த்தம், விபத்துக்கள் (வெள்ளம், தீ, கடுமையான வெப்பம் போன்றவை) என்பனவற்றினால் தோற்றம் மாற்றப்பட்ட அல்லது சேதமடைந்த நாணயத் தாள்கள் |
| 12 | உருச் சிதைக்கப்பட்டவை/ நாணயத் தாளின் ஒரு பகுதி இல்லாத நாணயத் தாள் | தாளின் அரைப்பகுதிக்கும் கூடுதலான பகுதி தெளிவாகவுள்ள நாணயத் தாள் அல்லது தாள் பல்வேறு துண்டுகளாகக் கிழிந்து போய் ஒன்றுசேர்ந்து இணைக்கப்பட்ட நாணயத் தாள் |

**இணைப்பு III**

“இலங்கையின் நாணயத் தாள்களைத் தரம் பிரிப்பதற்கான அளவுமுறை” என்ற நாணய முகாமைத்துவத்தின் கீழ் இணைப்பு II இன் கீழ் குறிப்பிடப்பட்ட நாணயத் தாள்களின் மாதிரித் தோற்றம் இலங்கை மத்திய வங்கியின் வெப்தளத்தில் (www.cbsl.gov.lk) கிடைக்கத்தக்கதாகவுள்ளது.

**தொடர்பு எண்: 12/02/003/0004/005** 2013 பெப்புருவரி 27

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## போலி நாணயத் தாள்களை அடையாளம் காணுதல்

வர்த்தக வங்கிகளின் அலுவலர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அறிவூட்டுவதற்காக, போலி நாணயத் தாள்களை அடையாளம் காண்பது தொடர்பில் அநேக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட போதிலும், வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்பட்ட நாணயத் தாள் கட்டுக்களில் போலி நாணயத் தாள்களும் இருப்பதனை மத்திய வங்கி அநேக தடவைகள் கண்டுபிடித்திருக்கிறது.

வர்த்தக வங்கிகள் சிலவற்றின் அலுவலர்கள் போலி நாணயத் தாள்களைக் கண்டறிந்து கொள்வதில் தவறிழைப்பது தொடர்பில் மத்திய வங்கி ஆழ்ந்த கரிசனைகளை வெளிப்படுத்திக் கொள்ள விரும்புகிறது. இது, வங்கிகளின் பக்கத்திலுள்ள குறிப்பிடத்தக்க தொழிற்பாட்டு இடர்நேர்வுகளைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது.

ஆகவே, போலி நாணயத் தாள்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து கொள்வதற்குத் தேவைப்படும் போதுமான பயிற்சியையும் தேர்ச்சி அபிவிருத்தியையும் வர்த்தக வங்கி அலுவலர்களுக்கு குறிப்பாக காசுத் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு வழங்குவது அவசியமென்ற கருத்தினை மத்திய வங்கி கொண்டிருக்கின்றது. மேலும், இதேபோன்று வங்கி அலுவலர்களும் தமது வாடிக்கையாளர்களுக்கு போலி நாணயத் தாள்களைக் கண்டறிவது தொடர்பில் தேவையான அறிவூட்டலை வழங்குவது அவசியமாகும்.

வங்கி அலுவலர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் அறிவூட்டுகின்ற அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்வதற்கு நாம் ஊக்குவிப்பதுடன் கோரிக்கை விடுக்கப்படுமிடத்து நாணயத் திணைக்களம் அத்தகைய நிகழ்ச்சித்திட்டத்தினை நடத்துவதற்குத் தேவையான வள ஆளணியினரையும் சாதனங்களையும் வழங்கும்.

இது தொடர்பில் நீங்கள் நாணயத் திணைக்கள துணைக் கண்காணிப்பாளர் திரு. ஜி. கே. கே. கமகே (தொலைபேசி இல.0112477362) அல்லது மூத்த உதவிக் கண்காணிப்பாளர் திரு. டி. என். வீரசிங்க (தொலைபேசி இல.0112398736) ஆகியோரைத் தொடர்பு கொள்ளலாம்.

உங்கள் உண்மையுள்ள,
**கண்காணிப்பாளர் நாணயம்**

**தொடர்பு எண்: 12/01/008/0002/002** 2013 யூன் 04
**சுற்றறிக்கை எண்: 2013-2**

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## வானூர்தி நிலையத்திலுள்ள காசுப் பரிமாற்று நிலையங்களினூடாக உயர்தர நாணயத் தாள்களை வழங்குதல்

பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்திலுள்ள சில வர்த்தக வங்கிகளின் காசுப் பரிமாற்று நிலையங்கள் வெளிநாட்டு நாணயங்களை மாற்றுகின்ற அல்லது வேறு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற வாடிக்கையாளர்களுக்கு பாவிக்க முடியாத பொருத்தமற்ற இலங்கை நாணயத் தாள்களை வழங்கி வருவதாக மத்திய வங்கியின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இது, இலங்கை மத்திய வங்கியின் தூய நாணயத் தாள் தொழிற்பாட்டிற்கு எதிரானதொரு நடைமுறையாகும். இது நாட்டின் நன்மதிப்பினை குறிப்பாக வெளிநாட்டவர்களிடையே மோசமாகப் பாதிக்கும் நடவடிக்கையாகும்.

பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் காசுப்பீடங்களைப் பேணுகின்ற அனைத்து வர்த்தக வங்கிகளும் எல்லா நேரங்களிலும் உயர்தரமான நாணயத் தாள்கள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள,
**நாணயக் கண்காணிப்பாளர்**

**தொடர்பு எண்: 12/02/008/0002/002**
**சுற்றறிக்கை எண்: 2013-3** 2013 செத்தெம்பர் 13

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## இலங்கை மத்திய வங்கியுடனான நாணய வைப்புக்களில் காணப்படும் வேறுபாடுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான வழிகாட்டல்கள்

தொழிற்பாட்டு இடர்நேர்வுகளைத் தணிப்பதற்காக, நாணயத் தாள்களை எண்ணுகின்ற செயன்முறைகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக வர்த்தக வங்கிகளினால் வைப்புச் செய்யப்படும் காசுக்கட்டுக்களில் கண்டறியப்பட்ட வேறுபாடுகளை சரிசெய்யும் பொருட்டு நாணயத் திணைக்களத்தினால்

தற்பொழுது மேற்கொள்ளப்பட்டுவரும் நடைமுறையினை நிறுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி தீர்மானித்திருக்கின்றது.
வர்த்தக வங்கிகளின் காசுக் கட்டுகளில் கண்டறியப்பட்ட எண்ணிக்கைக் குறைவு மற்றும் போலி நாணயத் தாள் என்பனவற்றைச் சீர்செய்யும் நோக்கத்துடன், மத்திய வங்கி தொடர்பான வர்த்தக வங்கியின் நடைமுறைக் கணக்கில் அத்தொகைகளைப் பற்று வைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருப்பதுடன் அத்தகைய எண்ணிக்கைக் குறைவு மற்றும் போலி நாணயத் தாள்கள் தொடர்பான அவசியமான அனைத்துத் தகவல்களை மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கு வழங்கும். ஆகவே, கணக்கிடும் வேளையில் கண்டறியப்படும் எண்ணிக்கைக் குறைவினை அல்லது/ அத்துடன் போலி நாணயத் தாள்களை தீர்ப்பனவு செய்வதற்காக வர்த்தக வங்கிகளின் பிரதிநிதிகள் நாணயத் திணைக்களத்திற்கு காசு எதனையும் எடுத்துவரத் தேவையில்லை.

காசு சரிபார்த்தலினை மேற்பார்வை செய்கின்ற நடவடிக்கையுடன் தொடர்பான அனைத்து வங்கிப் பிரதிநிதிகளுக்கும் இச்சுற்றறிக்கையின் உள்ளடக்கங்களைப் பற்றி நன்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றமையினை அனைத்து வர்த்தக வங்கிகளும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியதுடன் மேலே குறிப்பிடப்பட்ட புதிய நடைமுறையினை 2013 ஒத்தோபர் 01ஆம் நாளிலிருந்து பின்பற்றுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

இச்சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல் அல்லது வழிகாட்டல்கள் பற்றி ஏதேனும் தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமிடத்து தயவுசெய்து நாணயத் திணைக்களத்தின் பின்வரும் அலுவலர்களைத் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| கண்காணிப்பாளர் | 011-2477355 |
| மேலதிகக் கண்காணிப்பாளர் | 011-2477603 |
| துணைக் கண்காணிப்பாளர் | 011-2488028 |
| மூத்த உதவிக் கண்காணிப்பாளர் (கணக்கு) | 011-2477365 |
| உதவிக் கண்காணிப்பாளர் (கணக்கு) | 011-2477369 |

உங்கள் உண்மையுள்ள,
**நாணயக் கண்காணிப்பாளர்**

படி: காசு முகாமையாளர்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**

**1796/21 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது

**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**
**இலங்கை மத்திய வங்கியினால் செய்யப்படும் அறிவித்தல்**

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க, நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 10 (இ) ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**தலைவர்**
**இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை**

கொழும்பு
2013 பெப்புருவரி 07

**பணத் தரகுத் தொழில் ஒழுங்குவிதிகள்**

**எடுத்துக்காட்டலும் நடைமுறைக்கு வரும் நாளும்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணத் தரகுத் தொழில் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம். இவ்வொழுங்குவிதிகள் 2013 பெப்புருவரி 15ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**அதிகாரச் சான்றிதழ்**

2. இலங்கை மத்திய வங்கியின் (இதனகத்துப் பின்னர் மத்திய வங்கி என அழைக்கப்படும்) நாணயச் சபையினால் வழங்கப்பட்ட (இதனகத்துப் பின்னர் சபை என அழைக்கப்படும்) “அதிகாரச் சான்றிதழ்” இல்லாமல் பணத் தரகுத் தொழிலில் எந்தவொரு ஆளும் ஈடுபடவோ அல்லது இன்னுமொரு ஆளை ஈடுபடுத்தவோ கூடாது.

**விண்ணப்பிப்பதற்கான தகுதி**

3. 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியொன்று குறைந்தபட்சம் பத்து மில்லியன் ரூபாவுக்குச் (ரூபா 10,000,000/-) சமமான கூறப்பட்ட மூலதனத்தினை அல்லது சபையினால் காலத்திற்குக்காலம் நிர்ணயிக்கப்படும் அத்தகைய வேறு மூலதனத்தினைக் கொண்டிருக்கின்றவிடத்து மாத்திரமே மேலேயுள்ள (2) ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட அதிகாரச் சான்றிதழுக்காக விண்ணப்பிக்க தகுதியுடையதாகும்.

**விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்தல்**

4. அதிகாரச் சான்றிதழை வழங்குவதற்கான பரிசீலனையின் பொருட்டு விண்ணப்பதாரக் கம்பனி:

(அ) “அதிகாரச் சான்றிதழுக்கான” விண்ணப்பமொன்றினை இவ்வொழுங்குவிதியில் விபரிக்கப்பட்ட படிவத்தில் விண்ணப்பம் செய்து ஒழுங்குவிதிகளில் (6) இல் விபரிக்கப்பட்டுள்ள அத்தகைய ஏனைய ஆவணங்களுடன் சேர்த்து இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களப் பணிப்பாளரிடம், சமர்ப்பித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) மேற்குறிப்பிட்ட ஒழுங்குவிதி 4(அ) இல் குறிப்பிடப்பட்ட விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பிக்கும் கம்பனியின் சபையினது தீர்மானமொன்றினூடாக சரியானது என உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**மாற்றத்திற்குள்ளாகும் நடைமுறை**

5. (அ) பணத் தரகுத் தொழிலில் ஏற்கனவேயுள்ள மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட “ஆட்சேபனையற்ற கடிதம்” ஒன்றை வைத்திருக்கும் எவரேனும் ஆளும் இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வருகின்ற நாளன்று அல்லது அதற்குப்பின் பணத் தரகுத் தொழிலை மேற்கொள்ள விரும்பியுள்ள எவரேனுமாளும் மேலேயுள்ள ஒழுங்குவிதி (4) இல் வழங்கப்பட்டுள்ளவாறான விண்ணப்பப் படிவத்தினை ஒழுங்குவிதி நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து மூன்று (3) மாத காலப்பகுதிக்குள் “அதிகாரச் சான்றிதழ்” இனைச் சபையிடமிருந்து பெறுவதற்கான விண்ணப்பத்தினை பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) மேலேயுள்ள ஒழுங்குவிதி 5 (அ)இல் குறிப்பிடப்பட்ட ஆளொருவருக்கு இவ்வொழுங்கு விதியில் விபரிக்கப்பட்டவாறான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு இவ்வொழுங்கு விதியின் திகதியிலிருந்து ஒரு (1) ஆண்டு காலம் வழங்கப்படும்.

(இ) மத்திய வங்கியினால் ஏற்கனவே வழங்கப்பட்ட “ஆட்சேபனையற்ற கடிதம்” இவ்வொழுங்கு விதி நடைமுறைக்கு வந்ததிலிருந்து மூன்று (3) மாதங்களின் பின்னர் தானாகவே காலாவதியாகிவிடும். எது எவ்வாறெனினும், “ஆட்சேபனையற்ற கடிதத்தினை” வைத்திருப்பவர் மேலேயுள்ள 5(அ) ஒழுங்குவிதியினைப் பூர்த்தி செய்திருக்குமிடத்து அத்தகைய கடிதம் இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து ஒரு (1) ஆண்டின் பின்னர் மாத்திரமே காலாவதியாக வேண்டும்.

**விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

6. வேறுவிதமாக குறிப்பிடப்பட்டாலன்றி “ஆட்சேபனையற்ற கடிதத்துடன்” தற்பொழுது தொழிற்படுகின்றவர்கள் உட்பட விண்ணப்பதாரக் கம்பனி பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தினால் விபரிக்கப்பட்ட படிவத்தில் “அதிகாரச் சான்றிதழுக்கான” விண்ணப்பத்தினை பின்வரும் ஆவணங்கள்/ தகவல்களுடன் சேர்த்து சமர்பித்தல் வேண்டும்:

(அ) கம்பனியின் அகவிதியின் பிரதி மற்றும் கம்பனிப் பதிவாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் படிவம் 20;

(ஆ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட “ஆட்சேபனையற்ற கடிதத்துடன்” ஏற்கனவே பணத் தரகுத் தொழிலை நடத்துகின்ற ஆளொருவரைத் தவிர வேறு தகைமையுடைய ஆளொருவர் விண்ணப்பமொன்றினை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் சாத்தியவள அறிக்கையின் பிரதி;

(இ) முதன்மை நிறைவேற்று அலுவலர் உட்பட பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினராக நியமிக்கப்பட்டுள்ள அனைவரினதும் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் மற்றும் கடவுச்சீட்டு இலக்கங்கள், பதவிகள், முகவரிகள் மற்றும் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் தொடர்பான விபரங்கள்;

(ஈ) படிவம் டிஓடி/எம்பீ/002 இலுள்ளவாறு முதன்மை நிறைவேற்று அலுவலரினதும் பணிப்பாளர்களினதும் சத்தியக் கடதாசிகள்;

(உ) அனைத்து முக்கிய பங்குடமையாளர்களினதும் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், கடவுச்சீட்டு இலக்கம் என்பன;

(ஊ) பணத் தரகுத் தொழிலில் ஈடுபடுவது பற்றி கம்பனியின் அகவிதியில் குறிப்பிடப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் கம்பனி அதன் தொழிலாக பணத் தரகுத் தொழிலில் ஈடுபடுவதற்கு விண்ணப்பதாரக் கம்பனிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதனைக் குறிப்பிடும் சபையின் தீர்மானம்;

(எ) கம்பனி குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்துள்ளது என்பதனை நிரூபிக்கின்ற ஆவண ரீதியிலான சான்று;

(ஏ) தடங்கலற்ற தொழிற்திட்டத்தின் பிரதியொன்று; அத்துடன்

(ஐ) பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளினால் குறித்துரைக்கப்படக்கூடிய வேறு ஏதேனும் தகவல்கள்.

**சரியான தகவல்கள் வழங்கப்பட வேண்டும்**

7. அதிகாரச் சான்றிதழுக்கான விண்ணப்பத்திலுள்ள ஏதேனும் தகவல்கள் அல்லது அது தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் மற்றைய ஆவணங்களில் அல்லது இவ்வொழுங்கு விதிகளின் கீழ் அதிகாரச் சான்றிதழ் வழங்குவதற்கான விண்ணப்பதாரியின் பொருத்தப்பாடு பற்றிக் கண்டறிவதற்காக நடத்தப்பட்ட ஏதேனும் விசாரணை அல்லது புலனாய்வுகளின் போது அவை பொய்யானவையாக அல்லது பூர்த்தி செய்யப்படாதவையாக அல்லது பிழையானவையாக இருக்குமிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படும், அதிகாரச் சான்றிதழ் இரத்துச் செய்யப்படும் அல்லது விண்ணப்பதாரி/ அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனி, சபை பொருத்தமானது எனக் கருதும் அத்தகைய ஏதேனும் வழிமுறைகளுக்கு உட்பட வேண்டியிருக்கும்.

**ஆண்டுச் சான்றிதழ் கட்டணம்**

8. (அ) ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியும் மத்திய வங்கிக்கு ஆண்டுச் சான்றிதழ் கட்டணத்தினையும் சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக் கூடிய வேறு ஏதேனும் கட்டணங்களையும் செலுத்துதல் வேண்டும்.

(ஆ) செலுத்தப்படத்தக்க கட்டணங்களும் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான ஏனைய அறிவித்தல்களும் பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளினால் விடுக்கப்படும் சுற்றறிக்கைகள் மூலம் அறிவிக்கப்படும்.

**பணத் தரகுத் தொழிலை முடிவுறுத்துதல்**

9. (அ) அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியொன்று தொழிலினை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்குமிடத்து அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனி தொழிலை முடிவுறுத்துவதற்கு குறைந்தபட்சம் மூன்று (3) மாதங்களுக்கு முன்னதாக அவ்வாறு முடிவுறுத்துவதற்கான தீர்மானம் பற்றி பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளுக்கு அறிவித்தல் வேண்டும்.

(ஆ) அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனி இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட அதிகாரச் சான்றிதழினை தொழிலினை முடிவுறுத்தியதன் பின்னர் மூன்று (3) வேலை நாட்களுக்குப் பிந்தாத விதத்தில் கையளித்தல் வேண்டும்.

**அனுமதிக்கத்தக்க நடவடிக்கைகள்**

10. அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியொன்றின் அனுமதிக்கத்தக்க நடவடிக்கைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

(அ) முகவரொருவராக பணத் தரகுத் தொழில், வெளிநாட்டுச் செலாவணித் தரகுத் தொழில், வங்கிகளுக்கிடையிலான பணத் தரகுகளில் ஈடுபடுதல், இலங்கையிலும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டுச் சந்தைகளிலுமுள்ள பணம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளில் வாடிக்கையாளர்களுடனான நிதியியல் சாதனங்களின் கொடுக்கல்வாங்கல்களைப் பொறுத்தவரையில் ஏற்பாட்டாளராக அல்லது இடையீட்டாளராகவும் விளங்குதல்;

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனி ஈடுபடுவதற்கென சபையினால் காலத்திற்குக் காலம் அதிகாரமளிக்கப்படக் கூடிய வேறு ஏதேனும் பணத் தரகுத் தொழிலுடன் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

**தரகுப் பணம் மற்றும் கட்டணங்கள்**

11. பணத் தரகுக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியொன்று அத்தகைய வழங்கப்பட்ட பணிக்காக தரகுப்பணம் அல்லது கட்டணங்களைப் பெறுவதற்கு உரித்துடையதாக இருத்தல் வேண்டும்.

**தொழிற்பாட்டு ஒழுங்குகள்**

12. அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியொன்று:

(அ) முதன்மையாளராகவன்றி, கொடுக்கல்வாங்கல்களுக்கான தரகுகளை மேற்கொள்வதில் தரகரொருவராக, முகவராக, ஏற்பாட்டாளராக அல்லது இடையீட்டாளராக மாத்திரம் தொழிற்படுவதாகவும்;

(ஆ) ஒழுக்காற்றுக் கோவை வழிகாட்டலாக பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளினால் ஒப்புதலளிக்கப்பட்ட ஒழுக்கக் கோவையினைப் பின்பற்றுதல் அல்லது பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளினால் ஒப்புதலளிக்கப்பட்ட அத்தகைய ஒழுக்கக் கோவை இல்லாதவிடத்து அசோசியேசன் கம்பிஸ்ட் இன்ரநஷனலே (ஏசிஐ) மாதிரிக் கோவையினைப் பின்பற்றுகின்றதாகவும்;

(இ) உள்வரும் கட்டளைகளுக்கான குவிவு மையமாகவும், தொடர்பான நிதியியல் சாதனங்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளைக் கண்காணிப்பவராகவும் நிலுவையிலுள்ளதும் நிறைவேற்றப்படாததுமான கொடுக்கல்வாங்கல்களைப் பேணுகின்றதாகவும்;

(ஈ) கொடுக்கல்வாங்கல்களின் ஆரம்பப் பேச்சுவார்த்தைகளின் போதும் அது நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாகவும் கொடுக்கல்வாங்கல்களுக்கான அடிப்படையான (உ-ம்: பொருத்தமான வணிகத்திற்காக இணைத்தரப்பினரைக் கண்டறிதல்) தகைமை பெறுவதற்கான நிபந்தனைகளைத் தெளிவாகக் குறிப்பிடுவதாகவும்;

(உ) எல்லா நேரங்களிலும் தொழில்சார் நிபுணத்துவத்துடன் நடந்து கொள்ள வேண்டியதுடன் தெளிவானதும் பிழையான அர்த்தங்கள் கொள்ளப்படாததுமான சொற்பதங்களைப் பயன்படுத்துவதாகவும்;

(ஊ) தனித்தனியான கணக்குகளைக் கொண்ட, முழுமையானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான பதிவேடுகளைப் பேணுகின்றதாகவும்;

(எ) கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கான தமது உண்மையான விருப்பத்தினை இரு தரப்பினரும் வெளிப்படுத்தும் வரை முதன்மையாளரின் பெயர்களை வெளியிடாமலும்;

(ஏ) கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட்டுள்ள ஏதேனும் பணத் தரகுக் கம்பனி அத்துடன்/ அல்லது வேறு எவரேனும் தரப்பினர் தவறான நடத்தைகள் அல்லது முறையற்ற விதங்களில் நடப்பதற்கான அறிகுறிகள்/ சான்றுகள் இருக்குமாயின், அத்தகைய அறிகுறிகள் அல்லது சான்றுகள் தெரிய வருமாயின் அதனை பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளுக்கு அறிவித்தலும்;

(ஐ) தொடர்பான நிதியியல் சாதனங்கள் பற்றிய அறிவில் நிபுணத்துவம் கொண்டவர்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன் நிதியியல் சாதனங்கள் தொடர்பான கேள்வி மற்றும் நிரம்பல் நியமங்கள் மற்றும் நியதிகள் மற்றும் அவை தொடர்பான சந்தைத் தகவல்கள் பற்றி முழுமையாக கலந்துரையாடக் கூடியவர்களாகவும் அறிவு பெற்றவர்களாகவும்;

(ஒ) இணைத்தரப்பினர்களுடன் தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் போது மத்திய வங்கியினால் வெளிநாட்டுச் செலாவணி மற்றும் பணச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் மீது வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் தொடர்பான விடயங்களுக்கு இணங்கி நடப்பவர்களாகவும்;

(ஓ) உணர்வு பூர்வமான தகவல்களை அடையாளம் கண்டு அவற்றைக் கையாளத் தேவையான தேர்ச்சியையும் கவனிப்பையும் பெறத்தக்க விதத்தில் போதுமான பயிற்சியை தொழிற்பாட்டு அலுவலர்களுக்கு வழங்கக்கூடியதாகவும்;

இருத்தல் வேண்டும்.

**முதன்மை அலுவலர்களுக்குத் தேவையான தகுதி மற்றும் பொருத்தம்**

13. அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனிகளிலுள்ள முதன்மை நிறைவேற்று அலுவலர், பணிப்பாளர் அல்லது முதன்மை முகாமைத்துவ ஆளணியினர் உள்ளிட்ட குறிப்பிட்ட பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட ஆட்கள் அவர்/ அவர்களுக்குப் பொறுப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தக்க தகுதியும் பொருத்தமும் உடையவராகவும் தேவைப்படுத்தப்பட்ட அனுபவம், தகைமைகள் மற்றும் தகுதியைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**முதன்மை அலுவலர்களாக நியமிக்கப்படுவதற்குத் தடையாகவுள்ள தகைமையீனங்கள்**

14. ஆளொருவர் பின்வருமாறிருப்பின் அத்தகைய ஆள் விடயத்திற்கேற்ப அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியொன்றின் பணிப்பாளராகவோ, முதன்மை நிறைவேற்று அலுவலராகவோ அல்லது முதன்மை முகாமைத்துவ ஆளணியினராகவோ நியமிக்கப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுப்பதற்கு, அத்தகைய பதவியை வகிப்பதற்குத் தகுதியற்றவராதல் வேண்டும்:

(அ) பணத் தரகு, நிதி, சட்டம், வியாபாரம் அல்லது நிருவாகம் அல்லது ஏதேனும் தொடர்பான துறையில் கல்வியியல் அல்லது தொழில்சார் நிபுணத்துவத் தகைமைகள் அல்லது காத்திரமான அனுபவத்தினைக் கொண்டிராதவிடத்து;

(ஆ) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள நீதிமன்றத்தினால் பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராக அல்லது வங்கி முறிந்தவராக வெளிப்படுத்தப்பட்டிருப்பின்;

(இ) ஒழுக்கக்கேட்டை உறுதிப்படுத்துகின்ற தவறொன்றுக்காக ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின்;

(ஈ) எந்தவொரு நீதிமன்றத்தினதும் ஏதேனும் தீர்ப்பினை அல்லது கட்டளையைத் திருப்தி செய்வதற்கு, அல்லது கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியிருப்பின்;

(உ) இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள பொலிசாரினால் ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் உயர் தொழில்சார் கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால், நியாய சபையினால் உருவாக்கப்பட்ட வேறேதேனும் குழுவினால் மோசடி, ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியல் செயல் தொடர்பில் ஏதேனும் புலனாய்விற்கு அல்லது விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்குமிடத்து;

(ஊ) அவ்வாறு நியமிக்கப்படுவதற்கு அல்லது தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நேர் முன்னரான கடந்த பதினைந்து ஆண்டு காலப்பகுதியின் எவ்வேளையிலும் மோசம், ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியல் செயல் என்பன தொடர்பில் இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால், உயர் தொழில்சார் கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால் நியாய சபையினால் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் குழுவினால் குற்றவாளியாகக் காணப்பட்டிருப்பின்;

(எ) இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் கம்பனிச் சபையில் பணிப்பாளரொருவராக, பிரதான நிறைவேற்று அல்லது வேறு அலுவலராகச் செயலாற்றுவதிலிருந்து ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் அதிகாரசபையினால் அகற்றப்பட்டிருப்பின் அல்லது இடைநிறுத்தப்பட்டிருப்பின்;

(ஏ) ஒரு மோசடி, ஏமாற்றுகை, நேர்மையீனம் அல்லது வேறு ஒத்த குற்றவியல் செயல் என்பனவற்றை உட்படுத்துகின்ற தவறொன்றிற்காக நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளுக்கு அமைந்தவராயிருப்பின்;

(ஐ) சித்த சுவாதீனமற்றவரென தகுதி வாய்ந்த நியாயதிக்கம் கொண்ட நீதிமன்றமொன்றினால் வெளிப்படுத்தப்பட்டிருப்பின்;

(ஒ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் அத்துடன்/ அல்லது ஏதேனும் முதனிலை வணிகரொன்றில் முதன்மை நிறைவேற்று அலுவலராக அல்லது பணிப்பாளராக அல்லது வேறு ஏதேனும் அதிகார பதவியை வகிப்பவராக இருக்குமிடத்து.

**பணத் தரகு வியாபாரத்தினைக் கட்டுப்படுத்துவதன் மீதான கட்டுப்பாடுகள்**

15. உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று அத்துடன்/ அல்லது முதனிலை வணிகர் அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியின் பங்குகளை வைத்திருக்கவோ பங்கு மூலதன பங்கேற்பைக் கொண்டிருக்கவோ அல்லது அந்நிறுவனத்தின் பணிப்பாளர்கள் அல்லது முதன்மை அலுவலர்களின் மீது கட்டுப்பாடுகளையோ கொண்டிருக்கக்கூடாது.

**விலைக்கோரல்களை தொடர்பூட்டுகின்றமை**

16. வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் விலைக்கோரல்களை (விலைகள்/ வீதங்கள்) தெரியப்படுத்துகின்ற போது அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியானது:

(அ) செலாவணி வீதங்களில் பிறழ்வுகளை ஏற்படுத்தும் நோக்குடன் விலைக்கோரல்களை தெரியப்படுத்தவோ;

(ஆ) முதன்மையாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு விலைக்கோரலைக் கௌரவப்படுத்தும் நோக்கமெதுவும் இல்லாதவிடத்து, மற்றைய சந்தைப் பங்கேற்பாளர்களைத் தவறாக வழிநடத்துவதற்காக மாத்திரம் விலைக்கோரல்களை தெரியப்படுத்தவோ;

(இ) நடைமுறையில் நிலவுகின்ற சந்தை வீதங்கள் மற்றும் வங்கிகளுக்கிடையிலான தவணைக் கொடுக்கல்வாங்கல்களின் அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் தொடர்பான வீதங்களை அறிவிக்கவோ; கூடாது.

**உள்ளகக் கட்டுப்பாடுகளின் நோக்கம்**

17. பின்வரும் குறிக்கோள்களை உறுதி செய்யும் விதத்தில் ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியும் ஆற்றல் வாய்ந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) வினைத்திறனும் காத்திரமான தன்மையும் கொண்ட தொழிற்பாடுகள் (தொழிற்பாட்டு குறிக்கோள்கள்);

(ஆ) நம்பகத்தன்மையும் பூரணத்துவம் வாய்ந்ததுமான நிதியியல் மற்றும் முகாமைத்துவத் தகவல்கள் (தகவல் குறிக்கோள்கள்); அத்துடன்

(இ) ஏற்புடைத்தான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுதல் (இணங்கியொழுகும் குறிக்கோள்).

**உள்ளகக் கட்டுப்பாடுகள்**

18. ஒழுங்குவிதியில் (17) குறிப்பிடப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

(அ) உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் கிரமமாக மீளாய்வு செய்யப்படல் வேண்டும் அத்துடன்/ அல்லது இற்றைப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் தொழிற்பாட்டு அலுவலர் அனைவரும் சிறந்த அறிவினைக் கொண்டவர்களாகவும் இணங்கியொழுகுபவர்களாகவும் இருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்;

(ஆ) அனைத்துக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாகவும் தெளிவான ஆவணச்சான்றுகளுடன் இலத்திரனியல் ரீதியாக அல்லது வேறு ஏதேனும் விதத்தில், ஒழுங்குமுறைப்படுத்தல் நோக்கங்களுக்காக குறைந்தபட்சம் மூன்று (3) ஆண்டுகளுக்குச் சரியான முறையில் பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்;

(இ) 10 ஆவது ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட பணிகளை மட்டும் மேற்கொள்வதனைக் கடுமையாகப் பின்பற்றுதல் வேண்டும்;

(ஈ) 18(இ) ஆவது ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட அத்தகைய தொலைபேசி பதிவுகளை (குரல் பதிவு) இரண்டு மாதங்களுக்கு (2) குறையாததொரு காலப்பகுதிக்கு பேணுதல் வேண்டும்;

(உ) தொலைபேசிக் கலந்துரையாடல் பதிவேடுகளை ஆட்கள் அணுகுவதனைக் கட்டுப்படுத்துகின்ற முறைமைகள் கடுமையாகப் பேணப்படுதல் வேண்டும்;

(ஊ) தொழிற்பாட்டுத் தளத்தினுள்ளே ஊழியர்கள் தனிப்பட்ட செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்படக்கூடாது;

**தரகர் உறுதிப்படுத்தல்**

19. (அ) அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனி கொடுக்கல்வாங்கல் இடம்பெற்று இருபது (20) நிமிடங்களுக்கிடையில் அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களையும் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் அத்தகைய உறுதிப்படுத்தல் குறைந்தபட்சம் பின்வரும் தகவல்களை உள்ளடக்கியதாகவும் இருத்தல் வேண்டும்:

(i) கொடுக்கல்வாங்கல் திகதி மற்றும் செல்லுபடியாகும் திகதி;

(ii) இணைத்தரப்பினர்களின் பெயர்;

(iii) தீர்ப்பனவு அறிவுறுத்தல்கள்; *அத்துடன்*

(iv) பொருத்தமானவிடத்து பணத் தரகர் நிறுவனத்தினால் விதிக்கப்பட்ட தரகு உட்பட எந்தவொரு கொடுக்கல்வாங்கல்களுடனும் தொடர்பான அனைத்து விபரங்கள்.

(ஆ) தரகர் உறுதிப்படுத்தலை அதன் துல்லியத் தன்மையினை, தொடர்பான வணிகத்தினை தொடங்கியவர் எவரோ அவர்களின் கட்டுப்பாடுகளெதுவுமின்றி மிக நுணுக்கமாக ஆராய்ந்ததன் பின்னர் பின்னரங்க அலுவலகத்திலிருந்து அனுப்புதல் வேண்டும்.

**அறிக்கையிடும் தேவைப்பாடுகள்**

20. அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனி செயலாற்ற அறிக்கையினை மாதாந்த அடிப்படையில் இங்கே "அட்டவணை அ" இல் இணைக்கப்பட்டுள்ள விபரிக்கப்பட்ட படிவத்தில் அடுத்துவரும் மாதத்தின் ஐந்து (5) வேலை நாட்களுக்குப் பிந்தாமல் பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளுக்கு இலத்திரனியல் முறையில் மின்னஞ்சல் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**ஏடுகளைப் பரீட்சித்தல்**

21. எந்தவொரு அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியினதும் கணக்கேடுகளையும் ஏனைய பதிவேடுகள்/ நடவடிக்கைகளையும் பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் எந்தவொரு நேரத்திலும் பரீட்சிக்கலாம் அல்லது அவரின் திணைக்களத்திலுள்ள எவரேனும் அலுவலர்களுக்கு அவற்றைப் பரீட்சிக்க அனுமதியளிக்கலாம். அத்தகைய பரீட்சிப்புக்களுக்கு வசதியளிக்கும் விதத்தில் அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனிகளும் துல்லியமான மேற்பார்வைத் தகவல்களை அல்லது அத்தகைய வேறு ஏதேனும் தகவல்களை பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளினால் அல்லது அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் கேட்டுக் கொள்ளப்பட்டவாறு, எல்லா நேரத்திலும் வழங்குதல் வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**இவ்வொழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகத் தவறுதல்**

22. இவ்வொழுங்கு விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகத் தவறுமிடத்து அத்துடன்/ அல்லது பொய்யான அல்லது பிழையான தகவல்களை வழங்குதல் அல்லது குறிப்பிடத்தக்களவு தகவல்களை வழங்கத் தவறுதல் என்பன சபையானது விசாரணைகளின் பின்னர் பின்வருவன உட்பட அது தேவையானது எனக் கருதும் ஏதேனும் ஒரு நடவடிக்கையினை எடுப்பதற்கு வழிவகுக்கும்:

(அ) அத்தகைய தவறிழைத்த அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனிக்கு எச்சரிக்கையினை விடுத்தல்;

(ஆ) தவறிழைத்த பணத் தரகுக் கம்பனியினை 10 ஆவது விதியில் குறிப்பிடப்பட்ட சில பணத் தரகு நடவடிக்கைகளை மேற்கொள்வதிலிருந்து தகைமையிழக்கச் செய்தல்;

(இ) சபையினால் வழங்கப்பட்ட அதிகாரச் சான்றிதழை இரத்துச் செய்தல்.

**வரைவிலக்கணங்கள்**

23. சூழ்நிலைகள் வேறு விதத்தில் தேவைப்படுத்தினாலன்றி இவ்வொழுங்கு விதிகளில் -

(அ) "ஏசிஜ மாதிரிக் குறியீடு" என்பது அசோசியேசன் கம்பிஸ்ட் இன்ரநஷனலே அல்லது நிதியியல் சந்தை அமைப்பினால் பின்பற்றப்படும் சுய ஆளுகை மாதிரிக் குறியீடு எனப் பொருள்படும்;

(ஆ) "அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனி" என்பது இவ்வொழுங்குவிதிகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட அதிகாரச் சான்றிதழை வைத்திருக்கும் ஏதேனும் கம்பனி எனப் பொருள்படும்;

(இ) "சபை" என்பது நாணய விதிச் சட்டத்தின் கீழ் (அத்தியாயம் 422) நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை எனப் பொருள்படும்;

(ஈ) "அதிகாரச் சான்றிதழ்" என்பது இவ்வொழுங்குவிதிகளின் கீழ் பணத் தரகர் தொழிலில் ஈடுபடுவதற்கு கம்பனியொன்றிற்குச் சபையினால் வழங்கப்பட்ட அங்கீகாரம் எனப் பொருள்படும்;

(உ) “வாடிக்கையாளர்” என்பது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் எதிர்காலத்தில் வெளிநாட்டு நாணய வர்த்தகத்தில் ஈடுபட அனுமதிக்கப்பட்ட மற்றைய ஏதேனும் நிறுவனம், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள், முதனிலை வணிகர்கள், நிதி முகாமைத்துவக் கம்பனிகள், ஓய்வூதிய நிதியம், கூறுநம்பிக்கைக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள், கம்பனித் திறைசேரிகள், அரச நிறுவனங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரமளிக்கப்பட்ட ஏனைய நிதியியல் நிறுவனங்கள் எனப் பொருள்படும்;

(ஊ) “கம்பனி” என்பது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு தனியார் அல்லது பகிரங்க வரையறுக்கப்பட்ட கம்பனியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள கம்பனி எனப் பொருள்படும்;

(எ) “பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகள்” என்பது நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) கீழ் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் தலைவர் எனப் பொருள்படும்;

(ஏ) “நிதியியல் சாதனங்கள்” என்பது மொத்த விற்பனை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணய வங்கி வைப்புக்கள், உடன் மற்றும் முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி (இலங்கை ரூபாவிற்கெதிரான ஏதேனும் நாணயம் மற்றும் உடனடி மற்றும் பரஸ்பர பரிமாற்றல் குறுக்கு நாணயங்கள்) வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல்கள், வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல்கள், நாணய விருப்பத்தேர்வுகள் மற்றும் எதிர்வுகள், அரச மற்றும் கம்பனி முறிகள் உட்பட நிலையான வருமானப் பிணையங்கள், மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள், அழைப்புப் பணம் மற்றும் தவணைப் பணம், தொகுதிக் கடன்கள், வர்த்தகப் பத்திரங்கள், வாக்குறுதிச் சான்றிதழ் பிணையமயப்படுத்தல்கள் அல்லது சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிதியியல் சாதனங்கள் எனப் பொருள்படும்;

(ஐ) “உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை” என்பது கம்பனியின் தொழிலினை ஒழுங்காகவும் வினைத்திறனுடைய முறையிலும் கொண்டு நடத்துவதற்கும் முகாமைத்துவக் கொள்கைகள் பின்பற்றப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் சொத்துக்களை பாதுகாத்துக் கொள்வதற்கும் பதிவேடுகளினை சாத்தியமானளவிற்கு பூரணமாகவும் துல்லியமான தன்மையுடன் பாதுகாப்பதற்கும் என முகாமைத்துவத்தினால் நிறுவப்பட்டுள்ள நிதி மற்றும் வேறுவிதமான விடயங்களையும் கட்டுப்படுத்துகின்ற முழுமையான முறைமை எனப் பொருள்படும்;

(ஒ) “முக்கியமான முகாமைத்துவ ஆளணியினர்” என்பது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அந்நிறுவனத்தின் செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கும் பணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரமும் பொறுப்புடமையும் கொண்ட அத்தகைய நிறுவனத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட (நிறைவேற்று அல்லது வேறு வகையான) ஆளொருவர் எனப் பொருள்படும்;

(ஓ) “பணத் தரகுத் தொழில்” என்பது செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்படவுள்ள தரகுகள் அல்லது தரகுக் கட்டணங்களினைப் பரிசீலனையில் கொண்டு இடையேற்பாட்டாளராக செயற்படுகின்ற தரகர்களுடனான பணம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளில் வாங்குநர்களுக்கும் விற்பனையாளர்களுக்குமிடையில் கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்கு செய்கின்ற வியாபாரம் எனப் பொருள்படும்;

(ஔ) “ஆட்சேபனையற்ற கடிதம்” என்பது இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்கு வரும் நாளன்று பணத் தரகர் தொழிலில் ஏற்கனவே ஈடுபட்டிருக்கின்ற நிறுவனமொன்றிற்கு பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகளினால் (அல்லது முதன்மைக் கணக்காளரினால் 2002 சனவரி 01 இற்கு முன்னர் கடிதம் வழங்கப்பட்டிருக்குமாயின்) வழங்கப்படுகின்ற பணம் மற்றும் இலங்கையிலுள்ள வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தரகு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்பதனைத் தெரிவிக்கின்ற கடிதம் எனப் பொருள்படும்;

(க) “தொழிற்பாட்டு அலுவலர்” என்பது ஒழுங்குவிதி (10) இல் குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகர்களின் ஊழியர்களை உள்ளடக்கும் எனப் பொருள்படும்;

(ங) “முதனிலை வணிகர்” என்பது 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்;

(ச) “முதன்மையாளர்” என்பது ஒன்றில் வாங்குநராகவோ அல்லது விற்பனையாளராகவோ தொழிற்படுகின்ற கொடுக்கல்வாங்கலின் பிரதான தரப்பினர் எனப் பொருள்படும். முதன்மையாளர் ஒருவர் தனது சொந்தக் கணக்கில் இடர்நேர்வுகளுக்கு தானே பொறுப்பு என்ற அடிப்படையில் வாங்கும் விற்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்;

(ஞ) “பிணையங்கள்” என்பது படுகடன் பிணையங்கள், பெறுதி உடன்படிக்கைகள் என்பன உள்ளிட்ட நிதியியல் பெறுமதிகளைக் காட்டுகின்ற கைமாற்றத்தக்க நிதியியல் சாதனங்கள் எனப் பொருள்படும்;

(ட) “குறிப்பிடப்பட்ட மூலதனம்” என்பது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் தரப்பட்டுள்ள அதே கருத்தினைக் கொண்டிருக்கும்;

(ண) “இணைப்பு வழி” என்பது அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனிகளுக்கும் தொடர்பான முதன்மையாளருக்குமிடையில் விரிவாக்கப்பட்ட பிரத்தியேகமான தொடர்பூட்டல்கள் எனப் பொருள்படும்.

**அட்டவணை அ**

அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியின் பெயர்: ....................................................................

முடிந்த காலப்பகுதி: ..............................................................

| | கொடுக்கல்வாங்கல்களின் அளவு* (முகப்புப் பெறுமதி) | | வருமானம் | |
|---|---|---|---|---|
| | ஐ.அ. டொலருக்குச் சமனானது | இலங்கை ரூபா | ஐ.அ. டொலருக்குச் சமனானது | இலங்கை ரூபா |
| **வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள்** | | | | |
| ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா உடனடி | | | | |
| பரஸ்பர பரிமாற்றல் | | | | |
| குறுக்கு நாணயம் | | | | |
| வைப்புக்கள் | | | | |
| **வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல்வாங்கல்கள்** | | | | |
| அழைப்புப் பணம் | | | | |
| தவணைப் பணம் | | | | |
| **அரசாங்கப் பிணையங்கள்** | | | | |
| உடனடி | | | | |
| மீள்கொள்வனவு/ நேர்மாற்று மீள்கொள்வனவு | | | | |
| பணிகள் (வர்த்தகப் பத்திரங்கள்) | | | | |
| **ஏனையவை** | | | | |

* ஒருபக்க கொடுக்கல்வாங்கலை மட்டும் கணக்கிலெடுக்கவும் - வாங்குதல் அல்லது விற்றல்

ஏனைய தகவல்கள்:

அ. மூலதனம் மற்றும் ஒதுக்குகள்:
ஆ. வரிக்குப் பின்னரான இலாபம்:
இ. ஊழியர்களின் எண்ணிக்கை:
ஈ. முதன்மை அலுவலர்கள்:
உ. பணிப்பாளர் சபை:

**சுற்றறிக்கை இல: 35/05/004/005/002** 2013 பெப்புருவரி 14

சேரல்: அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட பணத்தரகர்களுக்கும்

## அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனிகளின் ஆண்டுச் சான்றிதழ் கட்டணம்

**2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பணத் தரகுத் தொழில் ஒழுங்குவிதிகளினது** (8 ஆவது) ஒழுங்குவிதியின் பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. குறிப்பிடப்பட்ட ஏற்பாட்டின் மூலம் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை பின்வருமாறு தீர்மானித்திருக்கிறது:

- அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியொன்றினால் செலுத்தப்பட வேண்டிய 2013ஆம் ஆண்டிற்கும் அதற்கு அப்பாலுக்குமான ஆண்டுச் சான்றிதழ்க் கட்டணம் மறு அறிவித்தல் வரை இருநூற்றி ஐம்பது ஆயிரம் ரூபாவாக (ரூ.250,000.00) இருத்தல் வேண்டும்; அத்துடன்
- ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட பணத் தரகுக் கம்பனியும் ஒவ்வொரு கலண்டர் ஆண்டிற்குமான, ஆண்டிற்கு ஏற்புடைத்தான சான்றிதழ் கட்டணத்தினை, அதிகாரச் சான்றிதழை வழங்கும் நேரத்தில் செலுத்துதல் வேண்டும் ((முதல் சந்தர்ப்பத்தில்)

  *என்பதுடன்*

  தொடர்ந்து அத்தகைய சான்றிதழைப் புதுப்பிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் சனவரி 31 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ கொடுப்பனவினைச் செலுத்துதல் வேண்டும்.

கொடுப்பனவுகள் “இலங்கை மத்திய வங்கி” இன் பெயரில் வரையப்பட்ட காசோலை மூலமாக செலுத்தப்படுதல் வேண்டும்.

ஒப்பம் ஆர் ஏ ஏ ஜயலத்
**பணிப்பாளர் உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: 35/01/005/0007/06** 2013 ஏப்பிறல் 22

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

## ஒதுக்குத் தேவைப்பாடுகள்

1. (i) 2002 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க நாணய விதி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, நாணய விதிச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்கங்களின் அத்தியாயம் 422) பிரிவுகள் 10 (இ) 93, 94, 96 மற்றும் 97 இன் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் செய்யப்பட்ட அறிவித்தலின்பாலும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2013 ஏப்பிறல் 12 ஆம் திகதியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி இல. 1805/39 இல் பிரசுரிக்கப்பட்ட **ஒழுங்கு விதிகள் "டி"** இன்பாலும் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

   (ii) நாணய விதிச் சட்டத்தின் 93ஆம் பிரிவின் ஏற்பாட்டு நியதிகளின்படி, இலங்கையில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகள் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அனைத்து வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராகவும் ஒதுக்குகளைப் பேணுதல் வேண்டும்.

2. (i) நாணய விதிச் சட்டத்தின் 94ஆம் பிரிவின் ஏற்பாட்டு நியதிகளுக்கிணங்க, மேற்குறிப்பிட்ட ஒழுங்கு விதி (1)இல் குறித்துரைக்கப்பட்டவாறு வர்த்தக வங்கிகள் அவற்றின் வைப்புப் பொறுப்புக்கெதிராக வைத்திருக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகள், அத்தகைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தில் 8 சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றாக இருத்தல் வேண்டும்.

   (ii) மேலே குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதி (1) இல் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புகளுக்கெதிராக வர்த்தக வங்கிகளினால் வைத்திருக்கப்பட வேண்டிய ஒதுக்குத் தேவைகள் மத்திய வங்கியிலுள்ள ரூபா வைப்பு வடிவங்களில் காணப்படலாம்.

3. வர்த்தக வங்கிகளின் வைப்புக்களினது கணித்தல் மற்றும் பேணல் நோக்கங்களுக்காக ஒவ்வொரு கலண்டர் மாதமும் இரண்டு காலப்பகுதிகளாக பிரிக்கப்படுதல் வேண்டும் (அதாவது **காலப்பகுதி அ** மற்றும் **காலப்பகுதி ஆ**).

   (i) **காலப்பகுதி அ** 1ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரை (இரண்டும் உள்ளடங்கலாக); மற்றும்

   (ii) **காலப்பகுதி ஆ** 16ஆம் திகதி தொடக்கம் ஒவ்வொரு மாதத்தின் இறுதி நாள் வரை (இரண்டும் உள்ளடங்கலாக)

4. (i) ஏதேனும் ஒரு மாதத்தில் காலப்பகுதி அ இல் வர்த்தக வங்கியொன்றினால் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ள ஒதுக்குகள், முன்னைய மாதத்தின் காலப்பகுதி அ இனுடைய சராசரி நாளாந்த வைப்புப் பொறுப்புக்களினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்; அதேவேளை ஏதேனும் ஒரு மாதத்தில் காலப்பகுதி ஆ இல் பேணப்பட வேண்டிய ஒதுக்குகள் அதற்கு முன்னைய மாதத்தின் காலப்பகுதி ஆ இனுடைய சராசரி நாளாந்த வைப்புப் பொறுப்புக்களினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

   (ii) கணிப்பீட்டுக் காலப்பகுதியில் வைப்புப் பொறுப்புக்களின் சராசரி நாளாந்த தொகையினைக் கணிக்கும் பொழுது வைப்பு பொறுப்புக்களின் பற்று மீதிகள் அதன் வரவு மீதிகளுக்கெதிராக எதிரீடு செய்யப்படாமல் அது பூச்சியமாகக் கருதப்படுதல் வேண்டும்.

5. வர்த்தக வங்கிகள் மேலேயுள்ள ஒழுங்குவிதி 4இல் குறித்துரைக்கப்பட்ட மொத்த வைப்புப் பொறுப்புக்களில் இரண்டு சதவீதத்திற்கு மேற்பட்டதும் ஆனால் நான்கு சதவீதத்தை விஞ்சாததுமான ஒரு தொகையினை, அத்தகைய வங்கியினால் ஒதுக்காக பேண வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தொகையின் ஒரு பகுதியை இலங்கை நாணயத் தாள்களினதும் குத்திகளினதும் வடிவத்தில் பேணலாம். அத்தகைய நாணயத் தாள்களும் குத்திகளும் தொடர்பான கணிப்பீட்டு காலப்பகுதிக்காக கணிக்கப்பட்ட இலங்கை நாணயத் தாள்களினதும் குத்திகளினதும் சராசரி உடமைகளாகக் காணப்படுதல் வேண்டும்.

6. இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்கள பணிப்பாளர், வர்த்த வங்கிகளால் மத்திய வங்கியில் பேணப்பட வேண்டிய ஆகக் குறைந்த நாளாந்த வைப்புக்களின் தேவைப்பாடுகளை காலத்திற்குக் காலம் சுற்றறிக்கையொன்றின் மூலம் அறிவுறுத்தலாம்.

7. ஒதுக்குகளில் ஏற்படும் எந்தவொரு குறைப்பின் மீதும் நாள் ஒன்றிற்கு ஒரு சதவீதத்தின் பத்திலொன்று என்ற வீதத்தில் (0.1%)வட்டி வீதம் வர்த்தக வங்கிகளினால் மத்திய வங்கிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய வட்டி சட்டத்தின் 96ஆம் பிரிவின் கீழ் அத்தகைய ஒதுக்குகள் கணிக்கப்படும் தொடர்பான ஒதுக்குப் பேணுதல் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் ஐந்து (5) வேலை நாட்களுக்குப் பிந்தாமல் செலுத்தப்படுதல் வேண்டும்.

8. உள்நாட்டுத் தொழிற்பாடுகள் பணிப்பாளரினால் அல்லது அவரின் சார்பில் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினால் வெளியிடப்படும் அறிவித்தலானது அதாவது:

   (அ) அத்தகைய வர்த்தக வங்கிகளின் ஒதுக்குகள் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகளின் தொகையிலும் பார்க்க குறைவாக உள்ளதென;

   (ஆ) தொடர்பான காலப்பகுதியில் அத்தகைய ஒதுக்கில் குறைபாடுகள் காணப்படுகின்றதென;

   (இ) அத்தகைய குறைவாகவுள்ள தொகை; அத்துடன்

   (ஈ) குறைவாகவுள்ள தொகை மீது செலுத்தப்படற்பாலதான பெறுமதியான வட்டித் தொகை

   என்பனவற்றை எடுத்துக்கூறுவதான அறிவித்தலொன்று, அத்தகைய வங்கியிடமிருந்து வரவேண்டிய வட்டி பற்றி அத்தகைய வங்கிக்குச் செய்யப்படுகின்ற போதுமான அறிவித்தல் எனக் கருதப்படுதல் வேண்டும்.

9. ஒவ்வொரு வர்த்தக வங்கியும் அட்டவணை அ இல் விதந்துரைக்கப்பட்ட படிவத்தில் போதுமான விபரங்களுடன் பின்வரும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியின், பணிப்பாளர், உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

   காலப்பகுதி அ விற்கான கணிப்பீடுகள்: அதே மாதத்தின் 22ஆம் நாள் முடிவடைவதற்கு முன்னர்

   காலப்பகுதி ஆ விற்கான கணிப்பீடுகள்: உடனடுத்து வரும் மாதத்தின் 7ஆம் நாள் முடிவடைவதற்கு முன்னர்

   அவ்வாறு சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதி விடுமுறை தினமாக இருக்குமிடத்து அதனை உடனடுத்துவரும் வேலை நாளன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

10. இவ்வொழுங்கு விதிகள், காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 2003ஆம் ஆண்டு மாச்சு 20ஆம் திகதியிடப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானி இல. 1280/17 இல் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதி ஈ இன் நடைமுறையிலுள்ள விதிகளுக்கு எவ்விதமான பங்கமுமின்றி 2013 மே 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவருதல் வேண்டும்.

    இவ்வொழுங்கு விதியில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய -

    "வைப்புப் பொறுப்புக்கள்" என்பது பின்வருவனவாகவுள்ள ஒரு வர்த்தக வங்கியின் அனைத்துப் பொறுப்புக்களும் எனப் பொருள்படுதல் வேண்டும்:-

இலங்கை நாணயத்தில் கணக்கிடப்படுவனவான கேள்வி வைப்புக்கள், சிறப்பு வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், கால வைப்புக்கள், வங்கிகளுக்கிடையேயான அழைப்பு பணச் சந்தையில் வர்த்தக வங்கியல்லாத ஏதேனும் நிறுவனம் ஒன்றினால் இடப்பட்ட தொகைகள், நாணயக் கடிதங்களுக்கு எதிரான அளவு வைப்புக்கள் மற்றும் ஓய்வூதிய நிதியம், சிறுவர் வைப்புத் திட்டங்கள் மற்றும் அதையொத்த திட்டங்கள் எவையேனும் இருப்பின் அத்தகைய சிறப்பு வைப்புத் திட்டங்கள் அத்துடன் நம்பிக்கைப் பொறுப்பாகவோ வங்கியின் வைப்பாளர்களினால் இலங்கை நாணயத்தில் செய்யப்பட்ட வைப்புக்களின் விளைவாக அவ்வைப்பாளர்களின் சார்பாகவோ வைத்திருக்கப்படும் சொத்துக்கள் எனப் பொருள்படும். எனினும், மேற்குறிப்பிடப்பட்டவை வர்த்தக வங்கிகளுக்கிடையேயான வைப்புக்களை உள்ளடக்கமாட்டா.

“கேள்வி வைப்புக்கள்” என்பது இலங்கை ரூபாவில் கணக்கிடப்படுவனவும், காசோலை, வரைவு அல்லது கட்டளை மூலம் கோரப்படுவதன் மீது சட்டப்படியான நாணயத்தில் செலுத்தப்படுவதற்கு அமைந்ததுமான வர்த்தக வங்கியொன்றின் எல்லா வைப்புப் பொறுப்புக்களும் எனப் பொருள்படுதல் வேண்டும்; ஆனால் அது நிபந்தனைகளுக்குட்பட்டு செலுத்தப்படுவதற்கானதாக இருப்பின் அத்தகைய பொறுப்பு எதனையும் உள்ளடக்காது.

“சிறப்பு வைப்புக்கள்” என்பது 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழ் ஏதேனும் சிறப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பணத்திலிருந்து எழுவனவான ஒரு வர்த்தக வங்கியின் எல்லா வைப்புப் பொறுப்புக்களும் எனப் பொருள்படுதல் வேண்டும்.

“சேமிப்பு வைப்புக்கள்” என்பது கேள்வி வைப்புக்கள், தவணை வைப்புக்கள் மற்றும் மேலே வரையறுக்கப்பட்டவாறான சிறப்பு வைப்புக்கள் என்பன தவிர்ந்த இலங்கை நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட அனைத்து வைப்புப் பொறுப்புக்கள் எனப் பொருள்படும்.

“தவணை வைப்புக்கள்” என்பது முதிர்வுக் காலப்பகுதியொன்றுக்கு ஏற்றுக்கொள்ளப்படுவனவும், கோரப்படுவதன் மீது மீளப் பெறப்பட முடியாதனவும் வட்டியுடன் மீளச் செலுத்தப்படுவனவுமான இலங்கை நாணயத்தில் கணக்கிடப்பட்ட எல்லா வைப்புப் பொறுப்புக்களும் எனப் பொருள்படுதல் வேண்டும்.

ஒப்பம் ஆர் ஏ ஏ ஜயலத்
**பணிப்பாளர் உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

## அட்டவணை அ

### அறிக்கைப் படிவம்
### நாளாந்தச் சராசரி வைப்புப் பொறுப்புக்களின் அறிக்கை
### (ரூபா வைப்புப் பொறுப்புக்கள்)

வங்கியின் பெயர்: ..........................................................................................

(.............................................) இருந்து (.................................................) வரையான காலத்திற்கு
திகதி திகதி

பணிப்பாளர்,
உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு 01.

கீழே அறிக்கையிடப்பட்ட வைப்புப் பொறுப்புத் தொகைகளின் சராசரித் தொகை மேலே குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் ஒவ்வொரு நாட்களிலும் தொழில் முடிவடையும் போது வங்கியின் ஏடுகளில் காட்டப்பட்ட வைப்பு மீதிகளை அடிப்படையாகக் கொண்டன.

| (i)<br>**கேள்வி வைப்புக்கள்** | (ii)<br>**தவணை வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புக்கள்** | (iii)<br>**சிறப்பு வைப்புக்கள், நாணயக் கடிதங்களுக்கெதிரான வைப்பு அளவுகள் முதலியன உட்பட ஏனைய எல்லா வைப்புப் பொறுப்புக்களும்** [*1] | (iv)<br>**மொத்தம்** |
|---|---|---|---|
| | | | |

[*1] வைப்புச் சான்றிதழ்களைப் பொறுத்தவரை தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட தொகையானது செலுத்தப்பட்ட பெறுமதியாக இருத்தல் வேண்டும்.

## தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகள்

.........................................................., .......................................................... இல் தொடங்கும் காலப்பகுதிக்கானது

1. .......................................................... ரூபாவின் ..........................................................% ரூபா ................................................
   (நாளாந்த சராசரி மொத்த ரூபா வைப்புப் பொறுப்புக்கள்)
2. வைப்புப் பொறுப்புக்களின் 2 சதவீதத்திற்கும் கூடுதலாக ஆனால் 4 சதவீதத்தை விஞ்சாத இலங்கை நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளின் சராசரி ரூபா ................................................
3. ஒதுக்குப் பேணல் காலப்பகுதியில் பேணப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட மொத்த ஒதுக்குகள் (1-2) ரூபா ................................................

நாங்கள்/ நான், மேற்கூறிய கூற்று சரியானது எனவும் இவ்வங்கியின் ஏடுகளுக்கு இணங்கவுள்ளது எனவும் மேலே காட்டப்பட்ட எண் தொகைகள் இந்நோக்கத்திற்கென இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விதந்துரைக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு இணங்கவுள்ளது எனவும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்/ சான்றுபடுத்துகின்றோம்.

திகதி: ..................................................... ................................................

அலுவலரின் ஒப்பம்

குறிப்பு -

(அ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் நீங்கலாக, ஏதேனும் ஒரு நிறுவனத்தினால் செய்யப்பட்ட வைப்புக்கள் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகளைப் பேணுவதற்காக குறித்துரைக்கப்பட்ட விகிதங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

(ஆ) அனைத்துத் தொகைகளும் கிட்டிய ரூபாவில் காட்டப்படல் வேண்டும்.

ஒப்பம் ஆர் ஏ ஏ ஜயலத்
**பணிப்பாளர் உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: 35/01/005/0007/07** 2013 ஏப்பிறல் 22

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

## ஒதுக்குத் தேவைப்பாடு - குறைந்தபட்ச நாளாந்த வைப்பு

திருத்தப்பட்டவாறான நாணய விதிச் சட்டத்தின் (இலங்கை சட்டவாக்கங்களின் அத்தியாயம் 422) பிரிவுகள் 10(இ), 93, 94, 96 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட அறிவுறுத்தலின்பாலும், அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் இலங்கை மத்திய வங்கியில் வைத்திருக்க வேண்டிய குறைந்தபட்ச நாளாந்த வைப்புத் தேவைப்பாட்டு நியதிகளின்படி 2013 ஏப்பிறல் 12 ஆம் நாளன்று “ஒழுங்கு விதி டி” தொடர்பாக வெளியிடப்பட்ட இல. 1805/39 கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின்பாலும் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

“ஒழுங்கு விதி டி” இன் ஒழுங்கு விதி 6இன் நோக்கத்திற்காக, ஒரு வர்த்தக வங்கியினால் வைத்திருக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச நாளாந்த வைப்புத் தேவைப்பாடானது, குறிக்கப்பட்ட ஒரு நாளின் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகளின் தொண்ணூறு (90) சதவீதமாக இருக்க வேண்டுமென இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்துள்ளது.

ஒப்பம் ஆர் ஏ ஏ ஜயலத்
**பணிப்பாளர் உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: 35/01/005/0006/31** 2013 மே 21

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்

## மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை வழங்கும் பொழுது மீள்கொள்வனவு நிலையியல் வசதிகளைப் பயன்படுத்துதல்

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் 2012 மாச்சு 14ஆம் நாளிடப்பட்ட இல.35/01/005/006/30 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல் தொடர்பானது. மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடத்தும் நாட்களில் மீள்கொள்வனவு நிலையியல் வசதி மீதான ரூ.100 மில்லியன் கொண்ட வரையறை 2013 யூன் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் புறக்கீடு செய்யப்படும் என்பது பற்றி அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஒப்பம் ஆர் ஏ ஏ ஜயலத்
**பணிப்பாளர் உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: 35/01/005/0007/08** 2013 யூன் 26

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

## ஒதுக்குத் தேவைப்பாடுகள்

நாணய விதிச் சட்டத்தின் (இலங்கைச் சட்டவாக்கங்களின் அத்தியாயம் 422) பிரிவுகள் 10(இ), 93, 94, 96 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் செய்யப்பட்ட அறிவித்தலின்பாலும் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2013 யூன் 26ஆம் நாளன்று வெளியிடப்பட்ட இலக்கம் 1816/13 கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின்பாலும் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

குறிப்பிட்ட அறிவித்தலுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவற்றின் இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக, அத்தகைய வைப்புப் பொறுப்புக்களின் மொத்தத்தில் ஆறு சதவீதத்திற்கு (6.00 சதவீதம்) சமமான தொகையினை ஒதுக்காகப் பேண வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட திருத்தம் 2013 யூலை 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். 2013 ஏப்பிறல் 22ஆம் நாளிடப்பட்ட இலக்கம் 35/01/005/007/06 மற்றும் 35/01/005/007/07 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் உள்ளடக்கப்பட்ட மற்றைய அனைத்து அறிவுத்தல்களும் தொடர்ந்தும் ஏற்புடைத்தனவாக இருக்கும்.

ஒப்பம் ஆர் ஏ ஏ ஜயலத்
**பணிப்பாளர் உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**

1816/13 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி I : தொகுதி (I) - பொது
**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**
நாணய விதிச் சட்டம்

நாணய விதிச் சட்டத்தின் (இலங்கை முதன்மைச் சட்டவாக்கத்தின் 422ஆம் அத்தியாயம்) 10(இ), 93, 94, 96 மற்றும் 97ஆம் பிரிவுகளின் கீழ் திருத்தப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால் இயற்றப்பட்ட ஒழுங்குவிதிகள்.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**ஆளுநர்**
**இலங்கை மத்திய வங்கி**

கொழும்பு
2013 யூன் 26

## ஒழுங்குவிதி “ஈ”
## ஒதுக்குத் தேவைப்பாடுகள்

நாணயச் சபையால் இயற்றப்பட்டதும் 2013, ஏப்பிறல் 12ஆந் திகதிய 1805/39ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான ஒழுங்குவிதி “ஈ” ஆனது 2013, யூலை 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

ஒழுங்குவிதி 2(i) இல் ‘8 சதவீதம்’ எண்தொகையையும் சொற்களையும் நீக்கி அதனிடத்து ‘6 சதவீதம்’ என்ற எண்தொகையையும் சொற்களையும் பதிலிடுவதன் மூலம்

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: 35/01/005/0006/32** 2013 யூலை 24

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்

## பத்திரங்களற்ற அரச பிணையங்களில் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

இது, மேலேயுள்ள தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மீதான 2004 சனவரி 27ஆம் நாளிடப்பட்ட எமது சுற்றறிக்கை இல. 35/01/005/0006/04 தொடர்பானது. “ஏல முறைமையின் கீழான மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள்” என்ற தலைப்பிலான விடயத்தின் கிளைவாசகங்கள் 1 மற்றும் 2 அத்துடன் சொல்லப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் “நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள்” என்ற தலைப்பிலான விடயத்தின் ஆ இன் கிளைவாசகங்கள் 1 மற்றும் 2 என்பன பின்வருமாறு வாசிக்கப்படும் விதத்தில் இத்தால் உடனடியாகத் திருத்தப்படுகின்றன.

**அ. ஏலமிடும் முறைமையின் கீழான மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள்**

1. மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் காலம் ஓரிரவிலிருந்து ஒரு கிழமையாக இருக்கும். சரியான காலம் சந்தைத் தேவைப்பாடுகள் மற்றும் கொள்கைச் சூழலை மதிப்பீடு செய்த பின்னர் சந்தைத் தொழிற்பாடுகள் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. சந்தைத் தொழிற்பாடுகள் குழு, பணச் சந்தையில் திரவ நிலைமையினை காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்த பின்னர், கணனி வழி உடனடி இலத்திரனியல் விலைக் குறிப்பீட்டு முறைமை அத்துடன்/ அல்லது பணச் சந்தைத் திரையில் அறிவிப்பதன் மூலமாக 10.30 மணியளவில் பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து விலைக்கோரல்களைக் கோரும். அறிவித்தலானது வழங்குவதற்கு முன்வைக்கப்பட்ட தொகை, முதிர்ச்சித் திகதி/ காலம் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

**ஆ. நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள்**

1. நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் காலம் ஓரிரவிலிருந்து ஒரு கிழமையாக இருக்கும். சரியான காலம் சந்தைத் தேவைப்பாடுகள் மற்றும் கொள்கைச் சூழலை மதிப்பீடு செய்த பின்னர் சந்தைத் தொழிற்பாடுகள் குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. சந்தைத் தொழிற்பாடுகள் குழு, பணச் சந்தையில் திரவ நிலைமையினை காலத்திற்குக் காலம் மதிப்பீடு செய்த பின்னர், கணனி வழி உடனடி இலத்திரனியல் விலைக் குறிப்பீட்டு முறைமை அத்துடன்/ அல்லது பணச் சந்தைத் திரையில் அறிவிப்பதன் மூலமாக 09.30 மணியளவில் பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து விலைக்கோரல்களைக் கோரும். அறிவித்தலானது வழங்குவதற்கு முன்வைக்கப்பட்ட தொகை, முதிர்ச்சித் திகதி/ காலம் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.

ஒப்பம் ஆர் ஏ ஏ ஜயலத்
**பணிப்பாளர் உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: 35/01/005/0010/15** 2013 ஓகத்து 30

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு

## உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்

நாணயக் கடிதங்கள் திறக்கப்படும் நேரத்தில் நாணயக் கடிதங்கள் திறக்கப்படுகின்ற வங்கிகளில் இறக்குமதிப் பெறுமதியில் 100 சதவீதமான குறைந்தபட்ச காசு அளவு வைப்புச் செய்யப்பட்டமையின் மூலம் நாணயக் கடிதங்கள் உத்தரவாதப்படுத்தப் பட்டிருந்தாலொழிய அட்டவணை 'அ' இல் (இணைக்கப்பட்டுள்ளது) குறித்துரைக்கப்பட்ட விடயங்களின் இறக்குமதிக்காக 2013 ஓகத்து 30ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வர்த்தக வங்கிகளினால் நாணயக் கடிதங்கள் திறக்கப்படகூடாது என வர்த்தக வங்கிகள் இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

அட்டவணை 'அ' இல் குறிப்பிடப்பட்ட விடயங்களின் இறக்குமதிகளை உத்தரவாதப்படுத்துகின்ற ஏற்கனவேயுள்ள நாணயக் கடிதங்களைப் பொறுத்தவரையில், மேற்குறிப்பிட்ட பந்தியில் விபரிக்கப்பட்ட நியதிகள் தவிர, அத்தகைய நாணயக் கடிதங்களின் பெறுமதியில் அதிகரிப்புக்கள் எதனையும் வங்கிகள் அனுமதிக்கக்கூடாது.

சுற்றறிக்கையினால் விதிக்கப்பட்ட குறைந்தபட்ச அளவுத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு வங்கிகள் அத்தகைய வாடிக்கையாளர்களை இயலச் செய்யும் நோக்கத்திற்காக, அவர்களது இறக்குமதி வாடிக்கையாளர்களுக்கு எந்தவொரு முற்பணத்தினையும் வழங்கக்கூடாது. எனினும், அளவு வைப்புக்களின் மீது வட்டியைச் செலுத்தலாம்.

அளவு வைப்புத் தேவைப்பாடுகள் இச்சுற்றறிக்கையிலுள்ளவாறு பெறப்பட்டுள்ளன என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வங்கிகள் தொடர்பான பொருள் பட்டியலை புறக்குறிப்பீடு செய்து கொள்ளுதல் வேண்டும்.

வங்கிகள் மறுஅறிவித்தல் வரை இப்பணிப்புரைக்கு இணங்கி ஒழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

ஒப்பம் ஆர் ஏ ஏ ஜயலத்
**பணிப்பாளர் உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**
**இலங்கை மத்திய வங்கியின் நாணயச்**
**சபைக்காகவும் அதன் சார்பாகவும்**

### அட்டவணை அ

### 2013 ஓகத்து 30

### நாணயக் கடிதங்களுக்கெதிராக 100 சதவீத அளவு வைப்புத் தேவைப்படுகின்ற விடயங்களின் பட்டியல்

| எச்.எஸ். தலைப்பு / எச்.எஸ். குறியீடு | விபரம் |
|---|---|
| **87.02** | **ஓட்டுநர் உட்பட பத்து அல்லது அதற்கும் கூடுதலான ஆட்கள் பயணிக்கக்கூடிய உந்து ஊர்திகள்** |
| 8702.10 | அழுத்த வெப்பமூட்டல் உள்ளக வெப்பம் உறக்கூடிய பிஸ்ரன் எந்திரத்துடன் கூடியது (டீசல் அல்லது ஓரளவு டீசல்) |
| | ஓட்டுநர் உட்பட 13 பயணிகள் (வயது வந்தோர்) இருக்கைக்கு குறைவான உந்து ஊர்திகள், மூன்றரை ஆண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8702.10.11 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8702.10.12 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள், இரண்டாண்டு பழமையை விஞ்சாதவை |
| 8702.10.13 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள், இரண்டாண்டு பழமையை விஞ்சியவை |
| 8702.10.19 | ஏனையவை |
| | ஓட்டுநர் உட்பட 13 பயணிகள் (வயது வந்தோர்) இருக்கைக்கு குறையாத உந்து ஊர்திகள், மூன்றரை ஆண்டுகள் பழமையை விஞ்சியவை |
| 8702.10.21 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள் |
| 8702.10.29 | ஏனையவை |
| | ஓட்டுநர் உட்பட 13 அல்லது அதற்கும் கூடுதலான (வயது வந்தோர்) ஆனால் 20 ஆட்களுக்கும் குறைவான (வயது வந்தோர்) போக்குவரத்திற்கான உந்து ஊர்திகள், 5 ஆண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8702.10.31 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8702.10.32 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள், இரண்டாண்டு பழமையை விஞ்சாதவை |
| 8702.10.33 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள், இரண்டாண்டு பழமையை விஞ்சியவை |
| 8702.10.39 | ஏனையவை |
| | ஓட்டுநர் உட்பட 13 அல்லது அதற்கும் கூடுதலான (வயது வந்தோர்) ஆனால் 20 ஆட்களுக்கும் குறைவான (வயது வந்தோர்) போக்குவரத்திற்கான உந்து ஊர்திகள், 5 ஆண்டுகள் பழமையை விஞ்சியவை |
| 8702.10.41 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள் |
| 8702.10.49 | ஏனையவை |
| | ஏனையவை, ஐந்தாண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8702.10.51 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |

| | |
|---|---|
| 8702.10.52 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள், இரண்டாண்டு பழமையை விஞ்சாதவை |
| 8702.10.53 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள், இரண்டாண்டு பழமையை விஞ்சியவை |
| 8702.10.59 | ஏனையவை |
| | ஏனையவை, ஐந்தாண்டுகளுக்கும் கூடுதலான பழமை வாய்ந்தவை |
| 8702.10.61 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள் |
| 8702.10.69 | ஏனையவை |
| 8702.90 | ஏனையவை |
| | ஓட்டுநர் உட்பட 13 பயணிகள் (வயது வந்தோர்) இருக்கைக்கு குறையாத உந்து ஊர்திகள், மூன்றரை ஆண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8702.90.11 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8702.90.12 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள், இரண்டாண்டு பழமையை விஞ்சாதவை |
| 8702.90.13 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள், இரண்டாண்டு பழமையை விஞ்சியவை |
| 8702.90.19 | ஏனையவை |
| | ஓட்டுநர் உட்பட 13 பயணிகள் (வயது வந்தோர்) இருக்கைக்கு குறையாத உந்து ஊர்திகள், மூன்றரை ஆண்டுகள் பழமையை விஞ்சியவை |
| 8702.90.21 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள் |
| 8702.90.29 | ஏனையவை |
| | ஓட்டுநர் உட்பட 13 அல்லது அதற்கும் கூடுதலான (வயது வந்தோர்) ஆனால் 20 ஆட்களுக்கும் குறைவான (வயது வந்தோர்) போக்குவரத்திற்கான உந்து ஊர்திகள், 5 ஆண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8702.90.31 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8702.90.32 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள், இரண்டாண்டு பழமையை விஞ்சாதவை |
| 8702.90.33 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள், இரண்டாண்டு பழமையை விஞ்சியவை |
| 8702.90.39 | ஏனையவை |
| | ஓட்டுநர் உட்பட 13 அல்லது அதற்கும் கூடுதலான (வயது வந்தோர்) ஆனால் 20 ஆட்களுக்கும் குறைவான (வயது வந்தோர்) போக்குவரத்திற்கான உந்து ஊர்திகள் 5 ஆண்டுகள் பழமையை விஞ்சியவை |
| 8702.90.41 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள் |
| 8702.90.49 | ஏனையவை |
| | ஏனையவை, ஐந்தாண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8702.90.51 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8702.90.52 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள், இரண்டாண்டு பழமையை விஞ்சாதவை |
| 8702.90.53 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள், இரண்டாண்டு பழமையை விஞ்சியவை |
| 8702.90.59 | ஏனையவை |
| | ஏனையவை, ஐந்தாண்டுகளுக்கும் கூடுதலான பழமை வாய்ந்தவை |
| 8702.90.61 | 87.03 தலைப்பினைக் கொண்ட திருத்தியமைக்கப்பட்ட ஊர்திகள் |
| 8702.90.69 | ஏனையவை |
| **87.03** | **நிலைய பார ஊர்திகள் மற்றும் ஓட்டப் பந்தய ஊர்திகள் உட்பட ஆட்களின் போக்குவரத்துக்கென முக்கியமாக வடிவமைக்கப்பட்ட (87.02 தரப்பினைக் கொண்ட ஊர்திகள் தவிர்ந்தவை) உந்து ஊர்திகள் மற்றும் ஏனைய உந்து ஊர்திகள்** |
| 8703.10 | பனிக்கட்டியில் பயணம் செய்யக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்ட விசேட ஊர்திகள், குழிப்பந்தாட்ட உந்து ஊர்திகள் மற்றும் அதையொத்த ஊர்திகள்: |
| 8703.10.10 | இரண்டாண்டுகளுக்குக் குறைவான பழமை வாய்ந்தவை |
| 8703.10.20 | இரண்டாண்டுகளுக்கும் கூடுதலான பழமை வாய்ந்தவை |
| | தீப்பொறியை உருவாக்கும் ஊர்திகள் வெப்பமுறக்கூடிய உள்ளக பிஸ்ரன் எந்திரத்துடன் கூடிய அழுத்த வெப்பமூட்டல் |
| 8703.21 | 1,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவு |
| | முச்சில்லு வண்டிகள் |
| 8703.21.51 | இரண்டு விசை அடிகளைக் கொண்ட பெற்றோல் எந்திரம் |
| 8703.21.52 | ஏனையவை, திரவப் பெற்றோலியம் வாயு என்பனவற்றினால் இயங்கக்கூடியது. இரண்டு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.21.53 | ஏனையவை, திரவப் பெற்றோலியம் வாயு என்பனவற்றினால் இயங்கக்கூடியவை. இரண்டு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.21.54 | ஏனையவை, இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.21.55 | ஏனையவை, இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |

| | |
|---|---|
| | நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8703.21.61 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.21.62 | நடை வண்டி |
| 8703.21.69 | ஏனையவை |
| 8703.21.70 | நிலைய பார ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகள் பழமையை விஞ்சியவை |
| | ஏனையவை |
| 8703.21.71 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.21.79 | ஏனையவை |
| 8703.21.91 | கலப்பு மின்னியல் ஊர்திகள், இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.21.92 | ஏனையவை, இரண்டாண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8703.21.93 | இரண்டாண்டுகள் பழமையை விஞ்சியவை |
| 8703.22 | 1,000 சிசி உருளை இயலளவை விஞ்சியவை, ஆனால் 1,500 சிசியை விஞ்சாதவை |
| | நிலைய பார ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8703.22.51 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.22.59 | ஏனையவை |
| | நிலைய பார ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகள் பழமையை விஞ்சியவை |
| | ஏனையவை, இரண்டாண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8703.22.61 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.22.69 | ஏனையவை |
| 8703.22.71 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.22.79 | ஏனையவை |
| | ஏனையவை, இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.22.81 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.22.89 | ஏனையவை |
| 8703.23 | 1,500 சிசியை விஞ்சிய இயலளவு கொண்ட உருளைகள் ஆனால், 3,000 சிசியை விஞ்சாதவை |
| | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவைக் கொண்ட நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப் பந்தய ஊர்திகளை உள்ளடக்கிய உந்து ஊர்திகள், இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.23.51 | 1,600 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.23.52 | 1,600 சிசி உருளை இயலளவினை விஞ்சாத ஏனையவை |
| 8703.23.53 | ஏனைய கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.23.59 | ஏனையவை |
| | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவைக் கொண்ட நிலைய பார ஊர்திகள் மற்றும் ஓட்டப் பந்தய ஊர்திகளை உள்ளடக்கிய உந்து ஊர்திகள், இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.23.61 | 1,600 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.23.62 | 1,600 சிசி உருளை இயலளவினை விஞ்சாத ஏனையவை |
| 8703.23.63 | ஏனையவை, கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.23.69 | ஏனையவை |
| | 2,000 சிசியை விஞ்சிய உருளை இயலளவைக் கொண்ட நிலைய பார ஊர்திகள் மற்றும் ஓட்டப் பந்தய ஊர்திகளை உள்ளடக்கிய உந்து ஊர்திகள், இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.23.71 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.23.79 | ஏனையவை |
| | நிலைய ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகள் விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.23.81 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.23.89 | ஏனையவை |
| | ஏனையவை |
| 8703.23.91 | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட கலப்பு மின்னியல் ஊர்திகள் இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தமை |

| | |
|---|---|
| 8703.23.92 | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட ஏனையவை, இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.23.93 | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட ஏனையவை, இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.23.94 | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட ஏனையவை, இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.23.95 | 2,000 சிசியை விஞ்சிய உருளை இயலளவினைக் கொண்ட கலப்பு மின்னியல் ஊர்திகள், இரண்டாண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8703.23.96 | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட ஏனையவை, இரண்டாண்டுகள் பழமையை விஞ்சியவை |
| 8703.23.97 | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட ஏனையவை, இரண்டாண்டுகள் பழமையை விஞ்சியவை |
| 8703.23.98 | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட ஏனையவை, இரண்டாண்டுகள் பழமையை விஞ்சியவை |
| 8703.24 | 3,000 சிசியை விஞ்சிய இயலளவினை கொண்ட உருளை |
| | நிலைய பார ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகள் பழமையை விஞ்சாதவை |
| 8703.24.51 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.24.59 | ஏனையவை |
| | நிலைய பார ஊர்திகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.24.61 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.24.69 | ஏனையவை |
| | ஏனையவை, இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.24.71 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.24.79 | ஏனையவை |
| | ஏனையவை, இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.24.81 | கலப்பு மின்னியல் ஊர்திகள் |
| 8703.24.89 | ஏனையவை |
| | அழுத்த வெப்பமூட்டல் உள்ளக வெப்பமுறக்கூடிய பிஸ்ரன் எந்திரத்துடன் கூடிய ஏனைய ஊர்திகள் (டீசல் அல்லது ஓரளவு டீசல்) |
| 8703.31 | 1,500 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்டது. |
| 8703.31.50 | இரண்டாண்டுகள் பழமையை விஞ்சாத முச்சில்லு வண்டிகள் |
| 8703.31.60 | இரண்டாண்டுகளை விஞ்சிய பழமையைக் கொண்ட முச்சில்லு வண்டிகள் |
| 8703.31.70 | நிலைய பார வண்டிகள் மற்றும் ஓட்டப் பந்தய ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.31.80 | நிலைய பார வண்டிகள் மற்றும் ஓட்டப் பந்தய ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | ஏனையவை: |
| 8703.31.91 | இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.31.92 | இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.32 | 1,500 சிசியை விஞ்சிய ஆனால் 2,500 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்டவை |
| | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட நிலையப் பார ஊர்திகள் மற்றும் போட்டிப் பந்தய ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.32.51 | 1,600 சிசியை விஞ்சாத உருளை இயலளவைக் கொண்டவை |
| 8703.32.59 | ஏனையவை |
| 8703.32.60 | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட நிலையப் பார ஊர்திகள் மற்றும் போட்டிப் பந்தய ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட நிலையப் பார ஊர்திகள் மற்றும் போட்டிப் பந்தய ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.32.71 | நிரந்தரமான நான்கு சில்லு ஓட்ட இயலளவையும் 800 கி.கிராமிற்குக் கூடிய மொத்தச் சுமையினையும் (ஆட்கள் மற்றும் சரக்கு) கொண்ட ஏணி வகையிலான பார அடிச்சட்டத்துடன் கூடிய தனியாக மூடப்பட்ட உடற்கோர்ப்பினைக் கொண்ட ஓட்டுநர் உட்பட 7 அல்லது அதற்குக் கூடுதலான (வயது வந்தோர்) ஆட்கள் பயணம் செய்வதற்கான ஊர்திகள் |
| 8703.32.79 | ஏனையவை |
| 8703.32.80 | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட நிலையப் பார ஊர்திகள் மற்றும் போட்டிப் பந்தய ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | ஏனையவை |
| 8703.32.91 | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்டது, இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |

| | |
|---|---|
| 8703.32.92 | 2,000 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்டது, இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.32.93 | குறிப்பாக, வதிவதற்கான சாதனங்கள் பொருத்தப்பட்ட (தூங்குவதற்கு, சமைப்பதற்கு மற்றும் கழிவறை வசதிகள் போன்றவற்றுடன் கூடிய) 2,000 சிசியை விஞ்சிய உருளை இயலளவினைக் கொண்ட உந்து ஊர்தி இல்லங்கள், இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.32.94 | ஏனையவை, 2,000 சிசியை விஞ்சிய உருளை இயலளவைக் கொண்டவை, இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.32.95 | 2,000 சிசியை விஞ்சிய உருளை இயலளவினைக் கொண்டவை, இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.33 | 2,500 சிசியை விஞ்சிய உருளை இயலளவினைக் கொண்டவை, இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.33.50 | நிலைய பார வண்டிகள் ஓட்டப் பந்தய ஊர்திகள் உட்பட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.33.60 | நிலைய பார வண்டிகள் ஓட்டப் பந்தய ஊர்திகள் உட்பட உந்து ஊர்திகள், இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | ஏனையவை, இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.33.71 | குறிப்பாக வதிவதற்கான சாதனங்கள் பொருத்தப்பட்ட (தூங்குவதற்கு, சமைப்பதற்கு மற்றும் கழிவறை வசதிகள் போன்றவற்றுடன் கூடிய) உந்து ஊர்திகள் |
| 8703.33.79 | ஏனையவை |
| 8703.33.80 | ஏனையவை, இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.90 | ஏனையவை |
| 8703.90.10 | மின்னியல் முச்சில்லு வண்டிகள், இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.90.20 | மின்னியல் முச்சில்லு வண்டிகள், இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.90.30 | ஏனையவை, மின்னியல், இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8703.90.40 | ஏனையவை, மின்னியல், இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.90.50 | ஏனையவை, இரண்டாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8703.90.60 | ஏனையவை, இரண்டாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| **87.04** | **பொருட்களைக் கொண்டு செல்வதற்கான உந்து ஊர்திகள்** |
| 8704.21.30 | தேசிய துணைப் பிரிவு 8704.21.52 இலுள்ள ஊர்திகளுக்கு எந்திரங்கள் மற்றும் அறைகளுடன் கூடிய அடிச்சட்டங்கள் பொருத்தப்பட்டவை, ஐந்தாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | முச்சில்லு வண்டிகள்: |
| 8704.21.41 | நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.21.42 | நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | அறைகள் மற்றும் சரக்குகள் பகுதிக்காக தனியான உடற்கோப்பினைக் கொண்ட ஊர்திகள், ஓட்டுநர் உட்பட மூன்று ஆட்கள் (வயது வந்தோர்) அல்லது அதற்கும் குறைவானவர்களுக்காக வடிவமைக்கப்பட்டவை. அறையில் மேலதிக இடவசதிகள் எதுவுமில்லை. ஏனைய நோக்கங்களுக்காக மாற்றிப் பயன்படுத்தலாம் என்பதுடன் இதன் சரக்குக் கொண்டு செல்லும் இயலளவு 1,500 கி.கிறாம் அல்லது அதற்கும் கூடுதலானவை. |
| 8704.21.51 | நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.21.52 | நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | அறைகள் மற்றும் சரக்குகள் பகுதிக்காக தனியான உடலமைப்பினைக் கொண்ட ஊர்திகள், ஓட்டுநர் உட்பட மூன்று ஆட்கள் (வயது வந்தோர்) அல்லது அதற்கும் குறைவானவர்களுக்காக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அறையில் மேலதிக இடவசதிகள் எதுவுமில்லை. ஏனைய நோக்கங்களுக்காக மாற்றிப் பயன்படுத்தலாம் என்பதுடன் இதன் சரக்குக் கொண்டு செல்லும் இயலளவு 1,500 கி.கிறாம் அல்லது அதற்கும் கூடுதலானதாகும். |
| 8704.21.61 | நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.21.62 | நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | அறை மற்றும் சரக்குப் பகுதிகளுக்காக தனித்தனியான உடற்கோப்பினைக் கொண்ட ஏனைய ஊர்திகள், அறையானது ஓட்டுநர் உட்பட 6 ஆட்களுக்கு (வயது வந்தோர்) அல்லது அதற்கும் குறைவானவர்களுக்காக வடிவமைக்கப்பட்டவை, ஏனைய பயன்பாட்டிற்காக பயன்படுத்தக்கூடிய விதத்தில் அறையில் மேலதிக இடவசதிகள் இல்லை. அத்துடன், சரக்குகளைக் கொண்டு செல்லும் இயலளவு 800 கி.கிறாம் அல்லது அதற்கும் கூடுதலானவை. எனினும், ஊர்தியின் முன்பக்கம் முழுமையாக நீண்டிருக்கும் எந்திரப் பிரிவுடன் கூடிய ஊர்திகளைப் போன்றனவல்லாதவை. |
| 8704.21.71 | நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.21.72 | நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | அறைகள் மற்றும் சரக்குகள் பகுதிக்காக தனியான உடற்கோப்பினைக் கொண்ட ஊர்திகள், ஓட்டுநர் உட்பட மூன்று ஆட்கள் (வயது வந்தோர்) அல்லது அதற்கும் குறைவானவர்களுக்காக வடிவமைக்கப்பட்டவை. அறையில் மேலதிக இடவசதிகள் எதுவுமில்லை. ஏனைய நோக்கங்களுக்காக மாற்றிப் பயன்படுத்தலாம் என்பதுடன் இதன் சரக்குக் கொண்டு செல்லும் இயலளவு 1,500 கி.கிறாம் அல்லது அதற்கும் கூடுதலானதாக இருக்கும். |
| 8704.21.81 | நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.21.82 | நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | ஏனையவை: |

| | |
|---|---|
| 8704.21.91 | அறை மற்றும் சரக்குப் பகுதிகளுக்காக தனியான உடலமைப்புக்களுடன் கூடிய ஊர்திகள், நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.21.92 | அறை மற்றும் சரக்குப் பகுதிகளுக்காக தனியான உடலமைப்புக்களுடன் கூடிய ஊர்திகள், நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8704.31 | மொத்த தேறிய நிறை ஐந்து தொன்களை விஞ்சாதவை |
| | முச்சில்லு வண்டிகள்: |
| 8704.31.11 | இரண்டு படிமுறைகளைக் கொண்ட பெற்றோல் எந்திரம் |
| 8704.31.12 | ஏனையவை, நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.31.13 | ஏனையவை, நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8704.31.20 | தேசிய துணைப் பிரிவு 8704.21.52 இலுள்ள ஊர்திகளுக்கு எந்திரங்கள் மற்றும் அறைகளுடன் கூடிய அடிச்சட்டங்கள் பொருத்தப்பட்டவை, நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.31.30 | தேசிய துணைப் பிரிவு 8704.21.52 இலுள்ள ஊர்திகளுக்கு எந்திரங்கள் மற்றும் அறைகளுடன் கூடிய அடிச்சட்டங்கள் பொருத்தப்பட்டவை, நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | அறைகள் மற்றும் சரக்குகள் பகுதிக்காக தனியான உடற்கோப்பினைக் கொண்ட ஊர்திகள், ஓட்டுநர் உட்பட மூன்று ஆட்கள் (வயது வந்தோர்) அல்லது அதற்கும் குறைவானவர்களுக்காக வடிவமைக்கப்பட்டவை. அறையில் மேலதிக இடவசதிகள் எதுவுமில்லை. ஏனைய நோக்கங்களுக்காக மாற்றிப் பயன்படுத்தலாம் என்பதுடன் இதன் சரக்குக் கொண்டு செல்லும் இயலளவு 1,500 கி.கிறாம் அல்லது அதற்கும் கூடுதலானவை. |
| 8704.31.41 | நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.31.42 | நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | அறை மற்றும் சரக்குப் பகுதிகளுக்காக தனித்தனியான உடற்கோப்பினைக் கொண்ட ஏனைய ஊர்திகள், அறையானது ஓட்டுநர் உட்பட 6 ஆட்களுக்கு (வயது வந்தோர்) அல்லது அதற்கும் குறைவானவர்களுக்காக வடிவமைக்கப்பட்டவை, ஏனைய பயன்பாட்டிற்காக பயன்படுத்தக்கூடிய விதத்தில் அறையில் மேலதிக இடவசதிகள் இல்லை. அத்துடன், சரக்குகளைக் கொண்டு செல்லும் இயலளவு 800 கி.கிறாம் அல்லது அதற்கும் கூடுதலானவை. எனினும், ஊர்தியின் முன்பக்கம் முழுமையாக நீண்டிருக்கும் எந்திரப் பிரிவுடன் கூடிய ஊர்திகளைப் போன்றனவல்லாதவை. |
| 8704.31.51 | நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.31.52 | நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | அறை மற்றும் சரக்குப் பகுதிகளுக்காக தனித்தனியான உடலமைப்புக்களைக் கொண்ட ஏனைய ஊர்திகள், அறையானது ஓட்டுநர் உட்பட 6 ஆட்களுக்கு (வயது வந்தோர்) அல்லது அதற்கும் குறைவானவர்களுக்காக வடிவமைக்கப்பட்டிருக்கிறது, ஏனைய பயன்பாட்டிற்காக பயன்படுத்தக்கூடிய விதத்தில் அறையில் மேலதிக இடவசதிகள் இல்லை. அத்துடன், சரக்குகளைக் கொண்டு செல்லும் இயலளவு 800 கி.கிறாம் அல்லது அதற்கும் கூடுதலானது. எனினும், எந்திரங்களின் பிரிவுகளுடன் கூடிய இவ்வூர்திகள் ஏனைய ஊர்திகளின் முன்பக்கத்திற்கு முழுமையாகவே உடற்கோப்பு நீண்டிருக்கும். |
| 8704.31.61 | நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.31.62 | நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | 1,500 கி.கிறாமுக்கும் குறைவான மொத்தத் தேறிய நிறையைக் கொண்ட ஏனைய ஊர்திகள் |
| 8704.31.71 | நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.31.72 | நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| | ஏனையவை: |
| 8704.31.91 | அறை மற்றும் சரக்குப் பகுதிகளுக்காக தனியான உடலமைப்புக்களுடன் கூடிய ஊர்திகள், நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.31.92 | அறை மற்றும் சரக்குப் பகுதிகளுக்காக தனியான உடலமைப்புக்களுடன் கூடிய ஊர்திகள், நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8704.31.93 | ஏனையவை, நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.31.99 | ஏனயவை, நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8704.90 | ஏனையவை: |
| 8704.90.10 | மின்னியல் முச்சில்லு வண்டிகள், ஐந்தாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.90.20 | மின்னியல் முச்சில்லு வண்டிகள், ஐந்தாண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8704.90.30 | ஏனைய மின்னியல் ஐந்தாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.90.40 | ஏனைய மின்னியல் ஐந்தாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.90.50 | ஏனையவை, நான்கு ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8704.90.60 | ஏனையவை, நான்கு ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| **87.06** | **87.01 இலிருந்து 87.05 வரையான தலைப்புக்களைக் கொண்ட உந்து ஊர்திகளுக்கான எந்திரங்களுடன் பொருத்தப்பட்ட அடிச்சட்டங்கள்** |
| 8706.00.10 | ஓட்டுநர் உட்பட 28 அல்லது அதற்கும் கூடுதலான பயணிகளைக் கொண்டு செல்லக்கூடிய 87.02 தலைப்பினைக் கொண்ட உந்து ஊர்திகளுக்கான எந்திரங்கள் பொருத்தப்பட்ட புதிய அடிச்சட்டங்கள் |

| | |
|---|---|
| 8706.00.20 | 87.02 தலைப்பினைக் கொண்ட ஏனைய உந்து ஊர்திகளுக்கான எந்திரங்கள் பொருத்தப்பட்ட புதிய அடிச்சட்டங்கள் |
| 8706.00.30 | 3,000 கி.கிறாம் அல்லது அதற்கும் கூடுதலான தேறிய நிறையுடன் கூடிய 8704.21, 8704.22, 8704.23, 8704.31 மற்றும் 8704.32 ஆகிய தலைப்புக்களைக் கொண்ட உந்து ஊர்திகளுக்கான எந்திரங்கள் பொருத்தப்பட்ட புதிய அடிச்சட்டங்கள் |
| 8706.00.40 | ஏனையவை, ஏனைய உந்து ஊர்திகளுக்கான எந்திரங்கள் பொருத்தப்பட்ட புதிய அடிச்சட்டங்கள் |
| 8706.00.50 | எந்திரங்களுடன் பொருத்தப்பட்ட பயன்படுத்தப்பட்ட அடிச்சட்டங்கள் |
| **87.07** | **87.01 இலிருந்து 87.05 வரையிலான தலைப்புக்களைக் கொண்ட உந்து ஊர்திகளுக்கான உடற்கோப்புக்கள் (கப்ஸ் உட்பட)** |
| 8707.10 | 87.03 தலைப்பினைக் கொண்ட ஊர்திகளுக்கானவை |
| 8707.90 | ஏனையவை: |
| 8707.90.10 | வெட்டுவதன் மூலம் பிரதான ஊர்தியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டமையின் மூலம் ஏனைய உடற்பாகங்களுக்கும் வாடகை ஊர்திகளுக்கும் இணைக்கப்படுகின்றவை ஆனால் அத்தகைய இணைப்புக்களின் காரணமாக உயர்மட்டத்தில் வகைப்படுத்தப்படாதவை |
| 8707.90.20 | ஓட்டுநர் உட்பட 28 அல்லது அதற்கும் கூடுதலான ஆட்கள் பயணம் செல்வதற்கான 87.02 தலைப்பினைக் கொண்ட உந்து ஊர்திகளுக்கானவை |
| 8707.90.30 | ஏனையவை, 3,000 கி.கிறாம்களை விஞ்சிய தேறிய நிறைகளைக் கொண்ட 87.04 தலைப்பினையுடைய சரக்கு வண்டிகள் மற்றும் பார ஊர்திகளின் தயாரிப்பிற்கானவை |
| 8707.90.90 | ஏனையவை |
| **87.08** | **87.01 இலிருந்து 87.05 வரையிலான தலைப்புக்களைக் கொண்ட உந்து ஊர்திகளின் உதிரிப்பாகங்கள் மற்றும் பொருத்திகள்** |
| 8708.10 | தள்ளும் வண்டிகள் மற்றும் அவற்றின் பாகங்கள் |
| | உடற்கோப்புக்களின் ஏனைய பாகங்களும் பொருத்துக்களும் (கப்ஸ் உட்பட) |
| 8708.29 | ஏனையவை |
| 8708.29.10 | உடற்கோப்பின் வெட்டப்பட்ட பாகங்களும் கப்சுக்களும் |
| 8708.29.90 | ஏனையவை |
| 8708.40 | கியர் கருவிகளும் அதன் பாகங்களும் |
| 8708.50 | ஏனைய கடத்திக் கூறுகளுடன் வழங்கப்படுகின்ற அல்லது வழங்கப்படாத மற்றும் ஓட்டப்படாத அச்சுக்கள் மற்றும் அவற்றின் பாகங்கள் |
| 8708.70 | வீதி ஊர்திகள் மற்றும் உதிரிப் பாகங்கள் மற்றும் அவற்றின் துணைப் பொருத்துக்கள் |
| 8708.70.10 | தேய்வின் அடையாளங்களைக் காட்டுகின்ற டயர்களுடன் பொருத்தப்பட்ட றிம்கள் |
| 8708.70.20 | ஏனையவை, டயர்களுடன் பொருத்தப்பட்ட றிம்கள் |
| 8708.70.90 | ஏனையவை |
| 8708.80 | நிறுத்தி வைத்தல் முறைமைகள் மற்றும் அவற்றின் உதிரிப் பாகங்கள் (அதிர்வுகள் நீக்கி உட்பட) |
| | ஏனைய உதிரிப் பாகங்கள் மற்றும் பொருத்திகள் |
| 8708.91 | றேடியற்றர்கள் மற்றும் அவற்றின் உதிரிப் பாகங்கள் |
| 8708.92 | சைலன்சர்கள் மற்றும் வெளியேற்றல் குழாய்கள் அவற்றின் பாகங்கள் |
| 8708.93 | கிளச்சுக்கள் மற்றும் அவற்றின் உதிரிப் பாகங்கள் |
| 8708.94 | ஸ்ரேறிங் வளையங்கள், ஸ்ரேறிங் தூபிகள் மற்றும் ஸ்ரேறிங் பெட்டிகள் அவற்றின் உதிரிப் பாகங்கள் |
| 8708.95 | காற்றடிப்பி முறையுடன் கூடிய பாதுகாப்பான காற்று பைகள் மற்றும் அதன் உதிரிப்பாகங்கள் |
| 8708.99 | ஏனையவை: |
| 8708.99.10 | எந்திரங்களுடன் பொருத்தப்படாத புதிய அடிச்சட்டங்கள் ஆனால் 3,000 கி.கிறாம் அல்லது அதற்கும் கூடுதலான தேறிய நிறையுடன் கூடிய 87.02 மற்றும் 87.04 தலைப்பினைக் கொண்ட உந்து ஊர்திகளுக்கான பொருத்துக்களுடன் அல்லது பொருத்துக்கள் இல்லாமல் |
| 8708.99.20 | எந்திரங்களுடன் பொருத்தப்படாத ஏனைய புதிய அடிச்சட்டங்கள், பொருத்துக்களுடன் அல்லது இல்லாமல் |
| 8708.99.30 | எந்திரங்களுடன் பொருத்தப்படாத ஏனைய பயன்படுத்தப்பட்ட அடிச்சட்டங்கள் ஆனால் பொருத்தப்பட்ட அல்லது பொருத்தப்படாதவை |
| 8708.99.40 | உந்து ஊர்திகளின் வெட்டப்பட்ட பாகங்கள் |
| 8708.99.90 | ஏனையவை |
| **87.11** | **உந்து ஊர்திகள் (உந்திகள் பொருத்தப்பட்ட ஈருருளிகள் உட்பட) மற்றும் துணை உந்திகளுடன் பொருத்தப்பட்ட ஈருருளிகள், பக்க ஊர்திகளுடன் பக்க ஊர்திகள் இல்லாமல்; பக்க ஊர்திகள்** |
| 8711.10 | 50 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட அழுத்த வெப்பமூட்டல் உள்ளக வெப்பமுறக்கூடிய பிஸ்ரன் எந்திரத்துடன் கூடியவை |
| 8711.10.10 | மூன்று ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8711.10.20 | மூன்று ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |

| | |
|---|---|
| 8711.20 | 50 சிசியை விஞ்சிய ஆனால் 250 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட அழுத்த வெப்பமூட்டல் உள்ளக வெப்பமுறக்கூடிய பிஸ்ரன் எந்திரத்துடன் கூடியவை |
| 8711.20.10 | 50 சிசியை விஞ்சிய ஆனால் 200 சிசியை விஞ்சாதவை, மூன்று ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8711.20.20 | 50 சிசியை விஞ்சிய ஆனால் 200 சிசியை விஞ்சாதவை, மூன்று ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8711.20.30 | மூன்று ஆண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8711.20.40 | மூன்று ஆண்டுகளை விஞ்சிய பழமை வாய்ந்தவை |
| 8711.30 | 250 சிசியை விஞ்சிய ஆனால் 500 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட அழுத்த வெப்பமூட்டல் உள்ளக வெப்பமுறக்கூடிய பிஸ்ரன் எந்திரத்துடன் கூடியது |
| 8711.30.10 | 250 சிசியை விஞ்சிய ஆனால் 350 சிசியை விஞ்சாதவை, மூன்றாண்டுகளை விஞ்சாத பழமை வாய்ந்தவை |
| 8711.30.90 | ஏனையவை |
| 8711.40 | 500 சிசியை விஞ்சிய ஆனால் 800 சிசியை விஞ்சாத உருளை இயலளவினைக் கொண்ட அழுத்த வெப்பமூட்டல் உள்ளக வெப்பமுறக்கூடிய பிஸ்ரன் எந்திரத்துடன் கூடியது |
| 8711.50 | 800 சிசியை விஞ்சிய உருளை இயலளவினைக் கொண்ட அழுத்த வெப்பமூட்டல் உள்ளக வெப்பமுறக்கூடிய பிஸ்ரன் எந்திரத்துடன் கூடியது |
| 8711.90 | ஏனையவை |
| 8711.90.10 | மின்னியல் ரீதியாக தொழிற்படுத்தப்படுகின்ற உந்து ஈருருளிகள் |
| 8711.90.90 | ஏனையவை |

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: 35/01/005/0010/16** 2013 செத்தெம்பர் 24

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்

**உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

இது, மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான எமது 2013 ஓகத்து 30ஆம் திகதியிடப்பட்ட இல.35/01/005/0010/15 கொண்ட சுற்றறிக்கை தொடர்பானது. மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் நியதிகளில், 100 சதவீத குறைந்தபட்சக் காசு அளவுத்தேவைப்பாட்டினைப் பேண வேண்டுமென்ற தேவைப்பாடு, பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்வதற்குட்பட்டு, தீர்வைச் சலுகைகளுடன் உந்து ஊர்திகளை இறக்குமதி செய்வதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உரிமத்தினை வைத்திருக்கும் (உரிம உடமையாளர்) ஆட்களின் சார்பில் புகழ்பெற்ற உந்து ஊர்தி முகவர்களினால் நிறுவப்பட்ட திரட்டப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடிதம் தொடர்பில் தளர்த்தல்களை மேற்கொள்ளலாம் என உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. குறிப்பிட்ட அளவுத் தேவைப்பாடுகள், தனிப்பட்ட ரீதியில் உரிமம் வைத்திருப்பவர்களினால் உள்நாட்டு ஊர்தி முகவரின் சார்பில் தனிப்பட்ட அடிப்படையில் நாணயக் கடிதத்தினை உள்நாட்டு ரீதியாக நிறுவியதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என்பதனையும் இந்நோக்கத்திற்காக போதுமானளவு ஆவணச் சான்றுகள் பேணப்பட்டுள்ளன என்பதனையும் வர்த்தக வங்கிகள் உறுதிப்படுத்துதல் வேண்டும்.
2. ஒன்றுதிரட்டப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடிதத்தின் பெறுமதியானது, மேலே விடயம் 1இல் குறிப்பிடப்பட்ட அத்தகைய அடையாளம் காணப்பட்ட நாணயக் கடிதத்தின் ஒன்றுசேர்ந்த பெறுமதியினை விஞ்சக்கூடாது.

ஒப்பம் ஆர் ஏ ஏ ஜயலத்
**பணிப்பாளர் உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**
**இலங்கை மத்திய வங்கியின் நாணயச்**
**சபைக்காகவும் அதன் சார்பாகவும்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல: 35/01/005/0010/17** 2013 ஒத்தோபர் 21

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு

**உந்து ஊர்திகளின் இறக்குமதிக்கான நாணயக் கடிதத்திற்கெதிரான அளவுத் தேவைப்பாடுகள்**

இது, மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பான எமது 2013 ஓகத்து 30ஆம் திகதியிடப்பட்ட இல.35/01/005/0010/15 கொண்ட சுற்றறிக்கை தொடர்பானது. மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையில் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சக் காசு அளவுத் தேவைப்பாடுகள், பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு நிலையான வைப்புக்களில் வைத்திருக்கப்படுகின்ற பணங்களையும் அவர்களுக்கு உரித்தானதொன்றாகக் கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்படலாம் என்பது பற்றி உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. அத்தகைய நிலையான வைப்புக்கள் தொடர்பான நாணயக் கடிதம் திறக்கப்பட்ட வங்கியிலேயே வைத்திருக்கப்படல் வேண்டும்; அத்துடன்
2. அத்தகைய நிலையான வைப்புக்கள் தொடர்பான நாணயக் கடிதம் யாருடைய பெயரில் திறக்கப்பட்டதோ (இறக்குமதியாளர்) அவரின் கணக்குகளில் இருத்தல் வேண்டும்.

ஒப்பம் ஆர் ஏ ஏ ஜயலத்
**பணிப்பாளர் உள்நாட்டுத் தொழிற்பாடுகள்**
**இலங்கை மத்திய வங்கியின் நாணயச்**
**சபைக்காகவும் அதன் சார்பாகவும்**

தொடர்பு எண்: 06/04/03/2013 2013 சனவரி 01

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு

2012 யூலை 11ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண்: 06/04/05/2012 கொண்ட வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கின் மீதான பணிப்புரையின் பந்தி 3 நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி இடப்படுகிறது.

"**3.** வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளை நடைமுறை, சேமிப்பு அல்லது கால வைப்புக்கள் வடிவில் ஏதேனுமொரு வெளிநாட்டு நாணயத்தில் திறக்க முடியும். எனினும், காசோலைப் புத்தகம் நடைமுறைக் கணக்கிற்கு எதிராக வழங்கப்படக்கூடாது."

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேடமானது

1791/15 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**
**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**
**(இலங்கை சட்டவாக்கத்தின் அத்தியாயம் 423)**

## வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டம்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3ஆம் மற்றும் 48ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் விதத்தில் குறிப்பிட்ட சட்டத்தின் 5 மற்றும் 7ஆம் பிரிவுகளின் நியதிகளில், 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றிற்கு இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரிடமிருந்து கடன்படுவதற்கு, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்படுகிறது.

1. 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கருத்தின்படி உத்தரவாதத்தின் மூலமான வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றிற்கு அல்லது கரைகடந்த கம்பனியொன்றிற்கு இவ்வனுமதி ஏற்படைத்தாகாது.
2. வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டம் 01.01.2013ஆம் ஆண்டு தொடங்கி 31.12.2015இல் முடிவடைதல் வேண்டும்.
3. வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டத்தின் கீழ் கம்பனியொன்றிற்கான உயர்ந்தபட்ச கடன்பாடு ஐக்கிய அமெரிக்க டொலர் 30 மில்லியனாக அல்லது அதற்குச் சமமான பெறுமதியில் வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயமாக இருத்தல் வேண்டும். எது எவ்வாறெனினும், கம்பனியொன்றிற்கான உயர்ந்தபட்சக் கடன்பாடு, கலண்டர் ஆண்டொன்றிற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 10 மில்லியனாக அல்லது அதற்குச் சமமான பெறுமதியில் வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயமாக இருத்தல் வேண்டும்.
4. இங்கு குறிப்பிடப்பட்ட வரையறைகளை விஞ்சி கடன்படத் தேவையுடைய ஏதேனும் கம்பனி செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2013 சனவரி 01

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை அதிவிசேடமானது

1791/16 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**
**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**
**(இலங்கை சட்டவாக்கத்தின் அத்தியாயம் 423)**

1. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3ஆம் மற்றும் 48ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் விதத்தில் குறிப்பிட்ட சட்டத்தின் 5, 6, 6ஏ மற்றும் 7ஆம் பிரிவுகளின் கீழ், இலங்கையில் வதியும் ஆளொருவரினால், அத்தகைய ஆளினால் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் தொடர்பான கொடுப்பனவாக வெளிநாட்டு நாணயத்தினை ஏற்றுக்கொள்வதற்கு, அத்தகைய நாணயத்தினை ஏற்றுக்கொண்டவர் அத்தகைய ஆளின் உடமையிலிருந்து பின்வரும் விதத்தில் அத்தகைய நாணயத்தினை 7 நாட்களுக்குள் அகற்றுதல் வேண்டும் என்ற நிபந்தனைக்குற்பட்டு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.
   (அ) அத்தகைய நாணயத்தினை ஏற்றுக்கொண்ட ஆளினால் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் அவரின் பெயரில் திறக்கப்பட்டு பேணப்பட்டு வரும் வெளிநாட்டு செலாவணி உழைப்போர் கணக்கொன்றில் வைப்புச் செய்தல்;
   (ஆ) உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றிற்கு விற்பனை செய்தல்.
2. இலங்கையிலுள்ள துறைமுகங்களுக்கு வருகைதரும் அல்லது அங்கிருந்து வெளிச்செல்லும் பயணிகளுக்கு தீர்வையற்ற சலுகைகளின் கீழ் பொருட்களையும் பணிகளையும் வழங்குவதற்கென அனுமதிக்கப்பட்ட வியாபாரங்களை கொண்டு நடத்துகின்ற இலங்கையில் வதியும்

ஆட்களுக்கு அவ்வாறு பொருட்களும் பணிகளும் எப்பயணிகளுக்கு வழங்கப்பட்டனவோ அப்பயணிகளின் வதிவிட அந்தஸ்தினைக் கருத்திற் கொள்ளாது இவ்வர்த்தமானியின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2013 சனவரி 01

**தொடர்பு எண்: 06/04/04/2013** 2013 சனவரி 02

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## வெளிநாட்டுச் செலாவணியின் முன்னோக்கிய விற்பனைகளும் கொள்வனவுகளும்

வாடிக்கையாளர்கள் செலாவணி இடர்நேர்வுகளுக்கு உள்ளாவதிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்கும் பொருட்டு அத்தகைய வாடிக்கையாளர்களுடன் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு முன்னோக்கிய ஒப்பந்தங்களை (இதனகத்துப் பின்னர் 'ஒப்பந்தம்' என குறிப்பீடு செய்யப்படும்) மேற்கொள்ளலாம் என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(i) மதிப்பிடப்பட்டதொரு கொடுக்கல்வாங்கல் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தமொன்றினை உள்ளடக்கிய ஏதேனும் ஒப்பந்தம், இது, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட நடைமுறைக் கணக்கு கொடுக்கல்வாங்கல்கள் அல்லது மூலதனக் கணக்கு கொடுக்கல்வாங்கல்கள் (இதனகத்துப் பின்னர் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் என குறிப்பீடு செய்யப்படும்) தொடர்பிலானதாக இருத்தல் வேண்டும்.

(ii) மேலே குறிப்பிடப்பட்ட மதிப்பிடப்பட்ட கொடுக்கல்வாங்கல் பெறுமதியானது, முன்னைய மூன்று ஒப்பந்தங்களின் பெறுமதியினது சராசரியினைக் கொண்ட கடந்த செயலாற்றத்தின் அடிப்படையில் அல்லது உடனடியாக முற்போந்த ஒப்பந்தத்தின் பெறுமதியின் அடிப்படையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவரின் உறுதிப்படுத்தலுக்கு உட்பட்டு எப்பெறுமதி உயர்வானதாக இருக்கின்றதோ அதன் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(iii) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கலின் நம்பகத்தன்மை பற்றி திருப்திப்படுதல் வேண்டும்.

(iv) முன்னோக்கிய ஒப்பந்தத்தின் செயலாற்றத் திகதியானது, தொடர்பான குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கலின் நியதிகளில், விடயத்தினைப் பொறுத்து, வெளிநாட்டுச் செலாவணியிலான கொடுப்பனவு அல்லது பெறுகைத் திகதிக்கு அப்பால் நீடிக்கப்படகூடாது. முன்னோக்கிய ஒப்பந்தத்தின் செயலாற்றத் திகதி குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கலின் கொடுப்பனவுத் திகதிக்கு முன்னதாக வருமாயின் அத்தகைய ஒப்பந்தத்தினை குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கலின் முதிர்ச்சித் திகதியுடன் பொருந்தத்தக்கதாக மாற்றியமைத்தல் வேண்டும்.

(v) இன்னொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்களை நிறுவியுள்ள வாடிக்கையாளருடனும், குறிப்பிட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படுமிடத்து ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியும்.

2. 2012.03.01ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண்: 06/04/01/2012 கொண்ட பணிப்புரை இத்தால் நீக்கப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/05/2013** 2013 சனவரி 02

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு, தொடர்பு எண்: இசி/08/88(டி) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பந்தி 2.2 இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரவுகளுக்கு மேலதிகமாக வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றிற்கு பின்வருவனவற்றை வரவு வைப்பதற்கு அனுமதிக்கப்படுகிறது.

"(உ) அதே கணக்கு வைத்திருப்பவரின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்தான நிதிகளின் மாற்றல்"

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/06/2013** 2013 சனவரி 02

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கு

சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கொன்றிற்கு அனுமதிக்கப்பட்ட வரவுகளுக்கு மேலதிகமாக, பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்து அதே கணக்கு வைத்திருப்பவரின் சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கிற்கு நிதியங்களை மாற்றல் செய்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/07/2013** 2013 சனவரி 02

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான அனுமதிக்கப்பட்ட வரவுகளுக்கு மேலதிகமாகப் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்து அதே கணக்கு வைத்திருப்பவரின் வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு நிதியங்களை மாற்றல் செய்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/08/2013** 2013 சனவரி 02

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## வதிவற்ற இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

வதிவற்ற இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான அனுமதிக்கப்பட்ட வரவுகளுக்கு மேலதிகமாகப் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்து அதே கணக்கு வைத்திருப்பவரின் வதிவற்ற இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு நிதியங்களை மாற்றல் செய்வதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை
## அதிவிசேடமானது

1791/43 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**
**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் சட்டவாக்கத்தின் (423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள் இலங்கை**

1. திருத்தப்பட்டவாறான 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இலங்கைச் சட்டவாக்கத்தின் 423ஆம் அத்தியாயம்) ஏற்புடைத்தான விதத்தில் 7, 10, 11, 15 மற்றும் 30 (5) ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக 1995ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு சட்டத்தின் நியதிகளில் குறித்துரைக்கப்பட்ட வியாபார தொழில்முயற்சியாக வகைப்படுத்தப்பட்டுள்ள கம்பனியொன்றிலுள்ள இலங்கை ரூபாவில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை அங்கீகரிக்கப்பட்ட நாட்டு நிதியங்கள், அங்கீகரிக்கப்பட்ட பிராந்திய நிதியங்கள் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள், மற்றும் இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையர் உட்பட இலங்கைக்கு வெளியே வதிகின்ற தனிப்பட்டவர்கள் ஆகியோருக்கு பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்கும் இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

   (i) முன்னுரிமைப் பங்குகளின் காலம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து மூன்றாண்டுகளுக்கு குறைவாக இருத்தல்கூடாது;
   (ii) பங்குகளை மீட்பது வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஓராண்டிற்கு முன்னதாக தொடங்கப்படக்கூடாது என்பதுடன் இது எஞ்சிய காலப்பகுதி முழுவதிலும் விகிதசமமான முறையில் கட்டம் கட்டமாகவும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்;
   (iii) அவ்வாறு வழங்கப்பட்ட பங்குகள் சாதாரண பங்குகளுக்கு மாற்றத்தக்கனவாக இருப்பின் அத்தகைய மாற்றுதல்கள் எந்தவொரு நேரத்திலும் மேற்கொள்ள முடியும் என்பதுடன் திருத்தப்பட்டவாறான 2002.04.19ஆம் திகதியிடப்பட்ட 1232/14 ஆம் இலக்க அதிவிசேட அரச வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட விதிவிலக்கல்கள் மற்றும் வரையறைகளுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்;
   (iv) இத்தால் கொடுக்கல்வாங்கல் தரப்பினராக அனுமதிக்கப்பட்டவர் இலங்கைக்கு வெளியே வதியும் ஒருவராக இருக்குமிடத்து, அத்தகைய ஆள் இலங்கைக்கு வெளியே வதிபவர் என்பதற்கு ஆதாரமாக பங்குமாற்றல் படிவத்திற்கும் அல்லது பங்கு விண்ணப்பப்படிவத்தில் எது ஏற்புடைத்தானதோ அதில் பயன்மிக்க வெளிப்படுத்துகையொன்றினை செய்தல் வேண்டும்;
   (v) இத்தால் அனுமதிக்கப்பட்ட பங்குகளின் வழங்கல் அல்லது கொடுக்கல்வாங்கல்களுக்கான கொடுப்பனவுகளை செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் சார்பில் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்க இலங்கையிலுள்ள அத்தகைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்பட்ட பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்து அல்லது அக்கணக்குகளுக்கு மட்டுமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும்;
   (vi) இங்கே அனுமதிக்கப்பட்ட எந்தவொரு கொடுக்கல்வாங்கல் தொடர்பிலும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று, உரிமம் பெற்ற பங்குதரகர் அல்லது அதிகாரம்பெற்ற வேறு எவரேனும் ஆள் பங்குகளின் விற்பனைப் பெறுகைகள், பங்கு இலாபங்கள் மற்றும் தரகுகள் போன்ற கொடுப்பனவுகளை மேலே V ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பங்குகள் முதலீட்டு கணக்குகளுக்கு அல்லது கணக்குகளிலிருந்தே மேற்கொள்ளுதல் வேண்டும்.

2. பின்வருவனவற்றிற்கும் இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது:-
   (அ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 11ஆவது பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நாட்டு நிதியங்கள், அங்கீகரிக்கப்பட்ட பிராந்திய நிதியங்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள் மற்றும் இலங்கைக்கு வெளியே வதியும் தனிப்பட்டவர்களினால் 1ஆம் பிரிவின் iv, v மற்றும் vi இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு 1ஆம் பந்தியின் நியதிகளுக்கிணங்க கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளுக்கான மாற்றல்களுக்கு;
   (ஆ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் 1ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட viஇன் நிபந்தனைகளுக்கு இணங்க இத்தால் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு ஏதேனும் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு அல்லது வரவு வைப்பதற்கு;

3. பின்வருவனவற்றைப் பாதிக்கும் விதத்தில் அல்லது தாக்கத்தினைக் கொண்டிருக்கும் விதத்தில் எவ்வித பொருள் கோடலும் உள்ளடக்கப்பட்டிருக்கக்கூடாது:-
   (அ) 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆவது பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன்படிக்கையினை மேற்கொண்டமையின் மூலம் வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்திலிருந்து எவ்விதிவிலக்குகள் அளிக்கப்பட்டுள்ளனவோ அத்தகைய விதிவிலக்கல்களின் அளவிற்கு;
   (ஆ) எழுதப்பட்ட வேறேதேனும் சட்டங்களின் ஏற்பாடுகள்.

பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2012 திசெம்பர் 04

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**
1792/28 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**
**பகுதி I : தொகுதி (I) - பொது**
**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**
**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்கள்**
**(இலங்கைச் சட்டவாக்கத்தின் 423ஆம் அத்தியாயம்)**

2010 நவெம்பர் 22ஆம் திகதியிடப்பட்ட 1681/10ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தலானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

1. துணைப்பந்தி 2.1 இன் விடயம் (அ) இலுள்ள “உள்முக முதலீட்டுக் கணக்கு” என்பதற்குப் பதிலாக “பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு (இதனகத்துப் பின்னர் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு என அழைக்கப்படும்)” என்ற சொற்களை பதலீடு செய்வதன் மூலமும்; அத்துடன்
2. பந்தி 1 இலுள்ள துணைப்பந்தி 2.2 இலும் பந்தி 3 இலுள்ள துணைப்பந்தி 3.1 இலுமுள்ள “உள்முக முதலீட்டுக் கணக்கு” என்பதற்குப் பதிலாக “பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு” என்ற சொற்களைப் பதிலீடு செய்வதன் மூலமும்.

பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2013 சனவரி 10

**தொடர்பு எண்: 06/04/09/2013** 2013 சனவரி 23

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## உள்முக முதலீட்டுக் கணக்கு

உள்முக முதலீட்டுக் கணக்கு என்ற தலைப்பில் 2010 நவெம்பர் 22ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண்: 06/04/10/2010 கொண்ட பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறமை பற்றி தங்களுக்கு அறியத் தரப்படுகிறது.

இதற்கமைய குறிப்பிட்ட பணிப்புரையின் கீழ் திறக்கப்பட்ட கணக்குகள் இலங்கை ரூபாக் கணக்குகளாக தொடர்ந்தும் தொழிற்படுத்தப்பட முடியும்.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/10/2013** 2013 சனவரி 24

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு

2012 யூலை 11ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண்: 06/04/05/2012 கொண்ட வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு தொடர்பான பணிப்புரையின் 2ஆம் பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வருவன இடப்படுகின்றன.

“2. தகைமையுடைய ஆட்கள்
i. வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும் பின்வரும் ஆட்கள்:
   அ. தனிப்பட்டவர்கள்
   ஆ. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
   இ. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட தனியுடமை மற்றும் பங்குடமை
   ஈ. 2007ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் கீழ் வெளிநாட்டுக் கம்பனிகளாகப் பதிவு செய்யப்பட்ட இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
ii. 2013.01.01ஆம் திகதியிடப்பட்ட இல. 1791/15 கொண்ட அரச அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்களின் நியதிகளுக்கிணங்க நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டத்தின் கீழ் கடன் பெற்ற தகைமையுடைய கடன்பாட்டாளர்கள்.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/11/2013** 2013 சனவரி 24

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கு

வெளிநாடுகளிலிருந்து கடன்படுவதற்கு கம்பனி நிறுவனங்களுக்கு வசதிகளை வழங்கும் மேலுமொரு வழிமுறையாக, இந்நோக்கத்திற்காக குறித்துரைக்கப்பட்ட கணக்குகளைத் திறக்க வேண்டுமென்ற தேவைப்பாடு இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. ஆகவே, வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கு தொடர்பாக 2013.01.01ஆம் திகதி விடுக்கப்பட்ட தொடர்பு எண்: 06/04/02/2013 கொண்ட பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

2013.01.01ஆம் திகதியிடப்பட்ட இல. 1791/15 கொண்ட வர்த்தமானியில் (அதிவிசேடம்) பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் நியதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டத்தின் கீழ் தகைமையுடைய கடன்பாட்டாளர்களினால் பெறப்பட்ட கடன் தொகையினை இந்நோக்கத்திற்காக திறக்கப்பட்ட “வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர்” கணக்கு உட்பட குறிப்பிட்ட கடன்பாட்டாளரின் பெயரில் திறக்கப்பட்டு பேணப்படும் எந்தவொரு வங்கியின் கணக்கிற்கும் வரவு வைப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். மேலும், வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுக் கணக்கின் கீழ் பெறப்பட்ட கடன்கள் மற்றும் தொடர்பான விதிப்புக்கள் மற்றும் கட்டணங்கள் என்பனவற்றின் மீள்கொடுப்பனவுகள் தொடர்பான வெளிமுகப் பணவனுப்பல்களை மேற்கொள்வதற்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் அனுமதிக்கப்படுகின்றனர்.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**
**1795/32 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை**
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

பகுதி **I** : தொகுதி **(I)** - பொது
**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச.வா. 423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள்**

## செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7ஆம் மற்றும் 31ஆம் பிரிவுகளின் நியதிகளின்படியான அனுமதி

2011 ஓகத்து 18ஆம் திகதியிடப்பட்ட 1719/24 ஆம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தலிற்கு பந்தி (iii) இனை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது:-

“(iii) வதிவற்ற இலங்கையர் தொடர்பில் இத்தால் வழங்கப்பட்ட அனுமதி இலங்கையில் பிறந்த வதிவற்ற ஆட்களுக்கும் வழங்கப்படுதல் வேண்டும்.”

பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2013 சனவரி 30

**தொடர்பு எண்: 06/04/12/2013** 2013 சனவரி 31

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

### இலங்கைக்கு வெளியே வதியும் முதலீட்டாளர்கள் கூறு நம்பிக்கைகளில் முதலீடுகளை மேற்கொள்ளுதல்

2013.01.31ஆம் திகதியிடப்பட்ட இல.1795/39 கொண்ட வர்த்தமானியில் (அதிவிசேடம்) பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் நியதிகளுக்கிணங்க, கூறுநம்பிக்கைகளிலுள்ள கூறுகளில் முதலீடு செய்வதற்கு வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள் மற்றும் இலங்கைக்கு வெளியே வதியும் முதலீட்டாளர்கள் (இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர் உட்பட) ஆகியோருக்கு பொதுவான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. அதிகாரம்பெற்ற வணிகர்கள், குறிப்பிட்ட அரச வர்த்தமானி அறிவித்தலுக்கேற்ப கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிக்குமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

3. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், கூறுநம்பிக்கையினால் பேணப்படும் கணக்குகளின் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான பதிவேடுகளைப் பேண வேண்டியதுடன் முதலீட்டாளர்களிடமிருந்து, கூறுநம்பிக்கை ஒன்றிற்கு பெறப்பட்ட, மொத்த முதலீடுகள், இலங்கைக்கு வெளியே வதியும் முதலீட்டாளர்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்த மீள்கொடுப்பனவுகள் தொடர்பான பதிவேடுகளை காலாண்டு அடிப்படையில் செலாவணிக் கட்டுப்பாட்டாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**
1795/39 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**
**பகுதி I : தொகுதி (I) - பொது**
**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**

## செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ.ச.வா. 423ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்

1. **செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவுகள் 7, 10, 11 மற்றும் 15ஆம் நியதிகளில் அனுமதி:**
   (அ) திருத்தப்பட்டவாறான 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின்படி தொழிற்படுகின்ற கூறுநம்பிக்கைகளில் உள்ள கூறுகளை வழங்குவதற்கும் மாற்றல் செய்வதற்கும் பொருந்தத்தக்க விதத்தில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவுகள் 10, 11 மற்றும் 15ஆம் பிரிவுகளின் நோக்கங்களுக்காக, 2ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள், இலங்கைக்கு வெளியே வதிகின்ற தனிப்பட்டவர்கள் (இலங்கைக்கு வெளியேயுள்ள வதியும் இலங்கையர்கள் உட்பட) ஆகியோர்க்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது;
   (ஆ) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7இன் நோக்கங்களுக்காக, ஏதேனும் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக அல்லது மேலேயுள்ள துணைப் பந்தி (அ) இன் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவரின் கணக்கில் வரவு வைப்பதற்கான அனுமதி இத்தால் வழங்கப்படுவதுடன், அத்தகைய கொடுப்பனவுகள் அல்லது வரவுகள் பந்தி 2(இ) இன் நிபந்தனைகளுக்கிணங்க மட்டுமே மேற்கொள்ள முடியும்.

2. **நிபந்தனைகள்:**
   (அ) இத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்களின் ஒரு தரப்பினராக இருக்கும் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவர் கூறுகளின் கொள்வனவுகளுக்கான விண்ணப்பப் படிவத்தில், அத்தகைய ஆள் இலங்கைக்கு வெளியே வதியும் ஆள் என்பதனை நிரூபிக்கும் பிரகடனமொன்றினைச் செய்தல் வேண்டும்;
   (ஆ) கூறுகளின் வழங்கலினைக் கொள்வனவு செய்வதற்காக அல்லது மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவுகளை:-
      (i) பிணையங்கள் முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்து; அல்லது மேலேயுள்ள பந்தி 1(அ) இல் குறிப்பிடப்பட்டவாறான முதலீடு செய்யும் ஆளொருவரின் பெயரில் இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வங்கியொன்றில் திறக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பேணப்படுகின்ற கணக்கொன்றிலிருந்து; அல்லது
      (ii) மேலேயுள்ள பந்தி 1(அ) இல் குறிப்பிடப்பட்டவாறு முதலீடு செய்யும் ஆளினால் மேற்கொள்ளப்பட்ட உள்முகப் பணவனுப்பல் மூலம் கிடைத்த பெறுகைகளிலிருந்து,
      மட்டுமே மேற்கொள்ளல் வேண்டும்.
   (இ) இத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான மீட்புப் பெறுகைகள், விற்பனைப் பெறுகைகள், வருமானம் மற்றும் ஏனைய நன்மைகள் போன்ற பணத்தின் கொடுப்பனவுகளின் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள முகாமைத்துவக் கம்பனி, நம்பிக்கைப் பொறுப்பாளர், உரிமம் பெற்ற வர்த்தக வங்கி, உரிமம் பெற்ற தரகர் அல்லது மற்றைய எவரேனும் ஆள் அத்தகைய கொடுப்பனவுகளை முதலீட்டாளரினால் குறித்துரைக்கப்படுகின்றவாறு, ஒன்றில் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு, இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் திறக்கப்பட்ட ஏதேனும் கணக்கிற்கு அல்லது வெளிமுகப் பணவனுப்பல் ஒன்றின் மூலம் மேற்கொள்ளல் வேண்டும்;
   (ஈ) கூறு உடமையாளர்கள் ஏதேனும் கூறு நம்பிக்கைகளினால் வழங்கப்படும் அல்லது மாற்றல் செய்யப்படும் கூறுகள் தொடர்பில் பதிவேடுகளைப் பேணுகின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள முகாமைத்துவ கம்பனியொன்று அல்லது வேறு எவரேனும் ஆள், வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிச் சபைகள் அல்லது இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர் (இலங்கைக்கு வெளியே வதியும் இலங்கையர் உட்பட) அல்லது அவர்களது நியமனத்தர்களை இவ்வறித்தலின் நியதிகளுக்கிணங்க அத்தகைய வழங்கல் அல்லது மாற்றல்களுக்கு ஏற்புடைத்தான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கேற்ப அத்தகைய ஆட்கள் திருப்திகரமான சான்றுகளை சமர்ப்பித்தாலொழிய அத்தகைய கூறு நம்பிக்கைக் கூறுகளின் உடமையாளர்களாக பதிவு செய்தலாகாது.

3. **விளக்கம்:**
   (அ) “கூறு நம்பிக்கை”, “முகாமைத்துவ கம்பனி”, “நம்பிக்கைப் பொறுப்பாளர்”, “கூறு நம்பிக்கை உடைமையாளர்” என்பன திருத்தப்பட்டவாறான 1987ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் அதே கருத்துக்களைக் கொண்டிருக்கும்;
   (ஆ) “இலங்கையில் வதியும் ஆள்”, “இலங்கைக்கு வெளியே வதியும் ஆள்” என்போர் 1972.04.21ஆம் திகதியிடப்பட்ட 15007 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்டவாறான அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

4. 2011.08.18ஆம் திகதியிடப்பட்ட இல.1719/22 கொண்ட அரச வர்த்தமானியில் (அதிவிசேடமானது) பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இத்தால் நீக்கப்படுகிறது.

பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**கொழும்பு**
2013 சனவரி 31

**தொடர்பு எண்: 06/04/13/2013** 2013 பெப்புருவரி 21

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு

இது, 2012 யூலை 11ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/05/2012 இனைக் கொண்ட வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு மீதான பணிப்புரையின் 7ஆம் பந்தி தொடர்பாகக் குறிப்பிடுகிறது.

2. திருத்தப்பட்ட அறிக்கையிடல் தேவைப்பாட்டு படிவம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

3. பணிப்புரை இல. 06/04/05/2012 உடன் இணைக்கப்பட்ட படிவம் 2013.03.31ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

4. அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களும் 2013.04.01 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் புதிய அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்கு இணங்கியொழுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல. 30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01

வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளின் மாதாந்தக் கூற்று

வங்கியின் பெயர்: ........................................ அறிக்கையிடும் மாதம்: ........................................

| கணக்கின் வகை | நாணயம் | மாதத்தின் ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை | வரவுகள் | | | பற்றுக்கள் | | மாத இறுதியில் நிலுவை | மாத இறுதியில் கணக்கு களின் மொத்த எண் ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | உள்முகப் பணவனுப் பல்கள் | வரவு வைக்கப் பட்ட மொத்த வட்டி | ஏனைய வரவுகள் | வெளிமுகப் பணவனுப் பல்கள் | ஏனைய பற்றுக்கள் | | |
| ஏற்றுமதியாளர்கள் | | | | | | | | | |
| மறைமுக ஏற்றுமதியாளர்கள் | | | | | | | | | |
| தொழில்சார் நிபுணத்துவப் பணிகளை வழங்குவோர் | | | | | | | | | |
| பயண முகவர்கள் | | | | | | | | | |
| உள்ளீட்டு மூலப் பொருட்களை வழங்குவோர் | | | | | | | | | |
| இரத்தினக்கல் மற்றும் ஆபரண வணிகர்கள் | | | | | | | | | |
| காப்புறுதியாளர்கள் | | | | | | | | | |
| வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள் | | | | | | | | | |
| 2013.01.01ஆம் திகதியிடப்பட்ட 1791/16ஆம் இலக்கமிடப்பட்ட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பொதுவான அனுமதியின் கீழான கணக்கு உடமையாளர்கள் | | | | | | | | | |
| சிறப்பு/ தற்காலிக வெளிநாட்டு நாணயக் கணக்குகள் | | | | | | | | | |
| 2013.01.01ஆம் திகதியிடப்பட்ட 1791/15ஆம் இலக்கமிடப்பட்ட அரச வர்த்தமானியின் நியதிகளில் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டத்தின் கீழான கடன்பாடுகள் | | | | | | | | | |
| ஏனையவை (தயவுசெய்து வகையைக் குறிப்பிடவும்) | | | | | | | | | |

**குறிப்பு: அனைத்துக் கணக்குகளிலும் நாணயங்களின் வேறுபட்ட வகைகள் தொடர்பான தகவல்களைத் தயவுசெய்து தரவும்.**

தொடர்பான ஆவணங்களைப் பரீட்சித்தேனென்றும் மேற்குறிப்பிட்ட தகவல்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ........................................ ........................................
(நாள்/மாதம்/ஆண்டு) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களின் கையொப்பமும் முத்திரையும்

**தொடர்பு எண்: 06/04/14/2013** 2013 ஏப்பிறல் 29

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## துறைமுகக் களஞ்சியசாலை வர்த்தகம்

பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு, துறைமுக களஞ்சியசாலை வர்த்தகத்தின் பொருட்டு பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான கோரிக்கைகளுக்கு வசதியளிக்கலாம் என அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. துறைமுகக் களஞ்சியசாலை வர்த்தகத்தினை பின்வரும் முறைகளில் ஏதேனுமொன்றின் மூலம் மேற்கொள்ளுதல் வேண்டும்:
   அ) மூன்றாவது நாடொன்றிற்கு அவை ஏற்றுமதி செய்யப்படும் வரை இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் சுங்கப் பிணைய களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்படல் வேண்டும்.
   ஆ) மூன்றாவது நாடொன்றிற்கு ஏற்றுமதி செய்யப்படுவதற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீள்பொதியிடல்/ மீள்சுட்டுத்துண்டிடல்/ மற்றும் பொருட்களின் எளிமையான பதனிடல் என்பன சுங்கப் பிணைய களஞ்சியசாலைகளிலேயே மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
   இ) இலங்கைக்குள் பொருட்கள் கொண்டு வரப்படாமலேயே இரண்டாவது நாடொன்றிலிருந்து மூன்றாவது நாட்டிற்கு நேரடியாகப் பொருட்களை ஏற்றுமதி செய்தல்.
   ஈ) சுங்கப் பிணைய களஞ்சியசாலையொன்றிற்குப் பொருட்களைக் கொண்டு செல்லாமலேயே துறைமுகத்தினுள்ளேயே கப்பல்/ வானூர்தியொன்றிலிருந்து இன்னொன்றிற்கு மாற்றல் செய்தல்.

2. துறைமுகக் களஞ்சியசாலை வர்த்தகத்தின் கீழ் பின்வரும் பொருட்களை இறக்குமதி செய்வது கடுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.
   அ) போதைப் பொருட்கள்
   ஆ) படைக்கலங்களும் துப்பாக்கிக் குண்டுகளும்

3. துறைமுகக் களஞ்சியசாலை வர்த்தகத்தின் கீழ், மீள்ஏற்றுமதி நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்கான கொடுப்பனவுகள் கீழேயுள்ள (அ), (ஆ) மற்றும் (இ) இலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பின்வரும் கொடுப்பனவு நியதிகளின் கீழ் அனுமதிக்கப்படுகின்றன.
   i) நாணயக் கடிதம்
   ii) கொடுப்பனவுகளுக்கெதிராக ஆவணங்கள்
   iii) ஏற்றுக்கொள்ளலுக்கெதிராக ஆவணங்கள்
   iv) முற்பணக் கொடுப்பனவுகள் (முற்பணமாகக் காசு)
   v) திறந்த கணக்கு
   அ) துறைமுகக் களஞ்சியசாலை வர்த்தகத்தின் கீழ் பொருட்களின் இறக்குமதிக்கான கொடுப்பனவுகள், பெறுமதிகூட்டப்பட்ட செலவுகள் வங்கிக் கட்டணங்கள் உள்ளிட்ட ஏனைய உள்ளூர் விதிப்புக்கள் மற்றும் இலாபம் என்பனவற்றை உள்ளடக்கிய விதத்தில் உள்ளூர் வர்த்தகருக்குப் போதுமான இலாபத்தினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் நேரிணையான கொடுப்பனவினை விட குறைவான தொகையாக பெறப்படுதல் வேண்டும்.
   ஆ) முற்பணக் கொடுப்பனவின் கீழான கொடுப்பனவுகள் (முற்பணமாகக் காசு) மீள்ஏற்றுமதிகள் தொடர்பான பெறுகைகள் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கிற்கு வரவு வைக்கப்படல் வேண்டும் என்ற நியதிகளின் அடிப்படையில் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன.
   இ) திறந்த கணக்கு நியதிகளின் கீழான கொடுப்பனவுகள் வார் நாமம்/ விமான வழிப்பட்டியல் என்பனவற்றின் திகதியிலிருந்து 365 நாட்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும்.

4. துறைமுகக் களஞ்சியசாலை வர்த்தகத்தின் கீழான மீள்ஏற்றுமதிகள் பின்வரும் கொடுப்பனவு நியதிகளிலேயே அனுமதிக்கப்படுகின்றன.
   i) முற்பணக் கொடுப்பனவுகள் (காசு முற்பணம்)
   ii) நாணயக் கடிதம்
   iii) கொடுப்பனவிற்கு எதிரான ஆவணங்கள்
   iv) 120 நாட்கள் வரையில் ஏற்றுக்கொள்ளலுக்கெதிராக ஆவணங்கள்

5. முறையே 1993.02.25 மற்றும் 2001.07.30 ஆம் திகதிகளிடப்பட்ட முறையே ஈசி/26/93 (எச்) மற்றும் 06/05/06/2001 ஆம் தொடர்பு எண்களைக் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/15/2013** 2013 யூன் 12

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## புலம்பெயர்வோருக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனை

புலம்பெயர்வோருக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனை நடைமுறைகளை இலகுபடுத்துமொரு வழிமுறையாக, புலம்பெயரும் இலங்கையர்களுக்குப் பின்வரும் விதத்தில் வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குவதற்கு/ மாற்றல் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் அனுமதிக்கப்படுகின்றனர்.

1. இப்பணிப்புரை வழங்கப்படுகின்ற திகதிக்குப் பின்னர், இன்னொரு நாட்டிற்கு நிரந்தர வதிவிட அந்தஸ்தைப் பெற்றிருக்கும் புலம்பெயர்வோருக்கு இப்பணிப்புரை ஏற்புடைத்தாகும்.

2. தனிப்பட்ட ஒருவர் இன்னொரு நாட்டின் நிரந்தர வதிவிட அந்தஸ்து புறக்குறிப்பீடு செய்யப்பட்டுள்ள செல்லுபடியாகக்கூடிய இலங்கைக் கடவுச்சீட்டினை வைத்திருக்குமிடத்து தனிநபர் ஒவ்வொருவருக்கும் ஆரம்பப் பயணத்தினை மேற்கொள்ளும் வேளையில் ஐ.அ.டொலர் 150,000 வரையிலான ஆரம்ப புலம்பெயர்விற்கான படியொன்று வழங்கப்படலாம். நிரந்தர வதிவிடம் பெற்று முதற்தடவையாக இலங்கையை விட்டுப் புறப்படும் நேரத்தில் (இதனகத்துப் பின்னர் புறப்படுகை எனக் குறிப்பீடு செய்யப்படும்) புலம்பெயர்பவர் தகைமைப்படியாக ஐ.அ.டொலர் 5,000 இனை நாணயத் தாள்கள் வடிவில் பெற்றுக் கொள்ளமுடியும்.

3. புறப்படும் நேரத்தில் புலம்பெயரும் வயது வந்தவர்கள் அனைவரும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன்அனுமதியினைப் பெற்று ஏதேனுமொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் புலம்பெயர்வோர் தடுத்துவைக்கப்பட்ட கணக்கு என குறித்துரைக்கப்பட்ட வதிவற்றோர் தடுத்துவைக்கப்பட்ட கணக்கொன்றினைத் திறந்து கொள்ளுதல் வேண்டும். தனிநபர் ஒருவர் ஒரு தடுத்துவைக்கப்பட்ட கணக்கினை மாத்திரம் பேண வேண்டுமென்பதுடன், நிதிய மாற்றல் நோக்கத்திற்காக அதனைத் தொடர்ந்தும் பேணிவருதலும் வேண்டும்.

4. (i) புலம்பெயருமொருவருக்காக புலம்பெயர் தடுத்துவைக்கப்பட்ட கணக்கொன்றினைத் திறக்கும் பொழுது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
   (ii) புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கினைத் திறப்பதற்கான கோரிக்கைக்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் இலங்கைக் கடவுச்சீட்டின் பிரதிகளுடன் (அடையாளப்படுத்தல் பக்கம், நிரந்தர வதிவிட புறக்குறிப்பீடு இடப்பட்டுள்ள பக்கம், அவதானிப்பு மற்றும் மாற்றங்கள் செய்யப்பட்ட பக்கங்கள் உட்பட) சேர்த்து அலுவல்சார் மின்னஞ்சல் (ecd@cbsl.lk) அல்லது தொலைநகல் (011-2477716) ஊடாக இணைப்பு 1இல் காட்டப்பட்டுள்ளவாறு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
   (iii) பதிவிலக்கமொன்று, செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் புலம்பெயர்பவருக்கு வழங்கப்படவுள்ளதுடன் தொடர்பான இவ்விலக்கம் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு கோரிக்கையில் தெரிவிக்கப்பட்ட முன்னுரிமையளிக்கப்பட்ட தொடர்பூட்டல் முறையொன்றினூடாக அறிவிக்கப்படும்.
   (iv) பதிவிலக்கமொன்று கிடைக்கப்பெற்றதும், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கொன்றினைத் திறந்து புலம்பெயர்பவருக்கு வெளிநாட்டுச் செலாவணியினை விடுவித்தல் வேண்டும். புலம்பெயர்பவரின் அதற்குப் பின்னரான அனைத்து மாற்றல்களும் இந்தப் புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கினூடாகவே மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
   (v) செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன்னொப்புதலைப் பெறாமல் புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கினை மூடிவிடக்கூடாது.
   (vi) புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கிற்கு ஒதுக்கப்பட்ட இலக்கம் அவ்வாறு ஒதுக்கப்பட்டதன் பின்னர் இத்திணைக்களத்திற்கு உடனடியாக அறிவிக்கப்படுதல் வேண்டும்.
   (vii) திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கம் அதேபோன்று புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கு இலக்கம் என்பன மூலம் புலம்பெயர்பவரை அடையாளம் காணக்கூடிய பொறிமுறையொன்றினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் கொண்டிருத்தல் வேண்டும்.
   (viii) சேமிப்புக் கணக்குகளை மட்டுமே புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்குகளாக வைத்திருக்க முடியும்.
   (ix) புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்குகளுக்கு எதிராக இலத்திரனியல் நிதிய மாற்றல் அட்டைகளை வழங்கமுடியாது.

5. புலம்பெயர்ந்தவர் அவர் புறப்படும் நேரத்தில் ஆரம்ப புலம்பெயர்வுப் படியினை முழுமையாகப் பயன்படுத்தியிருக்காவிடின் மீதியினை பின்னர் மாற்றல் செய்யமுடியும்.

6. புலம்பெயரும் ஒருவர் ஐ.அ.டொலர் 20,000 கொண்ட ஆண்டுப் படியொன்றிற்கு உரித்துடையவராவர். அத்தகைய முதலாவது படியினை, ஆரம்பப் படியான ஐ.அ.டொலர் 150,000 கொண்ட தொகை முழுமையாகப் பயன்படுத்தப்பட்டதிலிருந்து 12 மாதங்கள் கடந்த பின்னர் மட்டுமே மாற்றல் செய்யமுடியும். முதலாவது படிக்கு விதிவிலக்கான முறையில் அடுத்துவரும் படிகளை ஒவ்வொரு கலண்டர் ஆண்டும் மாற்றல் செய்யமுடியும். மேலும், முன்னைய ஆண்டிற்கான ஆண்டுப் படியினை புலம்பெயர்ந்தவர் மாற்றல் செய்யாத சந்தர்ப்பமொன்றில் அதனையும் சேர்த்து மாற்றல் செய்யமுடியும்.

7. புறப்படும் நேரத்தில் புலம்பெயர்பவருக்கு வெளிநாட்டுச் செலாவணியினை விற்கும் பொழுது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் வழங்குகின்ற திகதி, தொகை, வழங்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியின் வடிவம் (நாணயத் தாளா, பயணிகள் காசோலையா அல்லது வரைவுகளா) புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கு இலக்கம் மற்றும் புலம்பெயரும் நாடு போன்ற விபரங்களை கடவுச்சீட்டில் புறக்குறிப்பீடு செய்தல் வேண்டும்.

8. புலம்பெயர்வோருக்கான படிகள், புலம்பெயர்பவருக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் மற்றும் வாழ்க்கைத் துணைவர் மற்றும் பெற்றோரிடமிருந்து புலம்பெயர்பவரினால் பெறப்பட்ட அன்பளிப்புக்கள் என்பனவும் உள்ளடங்குகிறது. சொத்துக்கள் அருங்கற்கள், அருமையான உலோகங்கள், தனிநபருக்கான ஆபரணங்கள் மற்றும் மரண சாசனமாகக் கிடைத்த நன்மைகள் உட்பட இலங்கையில் வைத்திருக்கப்படும் சொத்துக்கள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன.

9. ஆண்டுப்படியினை உள்ளடக்கிய புலம்பெயர்வுப் படிகளுக்குப் புறம்பாக, புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கினை வைத்திருப்பவரின் பின்வரும் வருமானங்களையும் புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கினூடாக மாற்றல் செய்யலாம்.
   (i) சேம நிதியம் மற்றும் பணிக் கொடை நன்மைகள்
   (ii) வட்டி, பங்கிலாபங்கள், ஓய்வூதியம், வாடகை, குத்தகை மற்றும் இலாபங்கள் உள்ளிட்ட நடைமுறை வருமானம்.

10. ஒவ்வொரு மாற்றல் தொடர்பான ஆவணச் சான்றுகளை புலம்பெயர்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன் அத்தகைய பதிவுகள் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் (வன் அல்லது மென்பொருட்களில்) பேணப்படுதல் வேண்டும். இப்பணிப்புரையின் கீழ் மாற்றல் தொடர்பான பதிவேடுகளைப் பேணுகின்ற காலம் சட்ட ரீதியான பதிவேடுகளைப் பேணுகின்ற தேவைப்பாடுகளின் மூலம் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. புலம்பெயர்வோர் படிகளை விடுவிப்பது தொடர்பில் பெறப்பட வேண்டிய ஆவணங்களுக்கு தயவுசெய்து இணைப்பு 2 இனைப் பார்க்கவும்.

11. புலம்பெயர்பவர் சார்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றல்கள் தொடர்பாக இத்திணைக்களத்திற்கு, இணைப்பு 3இல் உள்ளவாறு மாதாந்த அறிக்கையொன்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.

12. இப்பணிப்புரையின் கீழ் அனுமதிக்கப்பட்ட அனைத்து நிதிய மாற்றல்களும் புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கிலுள்ள நிதியத்திலிருந்து மாற்றல் செய்யப்பட வேண்டியதுடன் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மாற்றல் செய்வதற்கு உரித்துடைய நிதியங்களிலிருந்தும் புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கினை வைத்திருப்பவர்களின் அறிவுறுத்தல்களுக்கிணங்க பின்வரும் கணக்குகளுக்கு வரவு வைப்பதற்காக மாற்றல் செய்யப்படுதலும் வேண்டும்.
   (i) இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற ஏதேனும் வர்த்தக வங்கியில் பேணப்படும் வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு அத்துடன்/ அல்லது,
   (ii) இலங்கைக்கு வெளியே பேணப்படும் கணக்கொன்றிற்கு.

13. இப்பணிப்புரையானது 18 வயதிற்கும் அதற்கு மேற்பட்ட புலம்பெயருமொருவருக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

14. பராயமடையாத குழந்தையொன்று புலம்பெயர்வதனைப் பொறுத்தவரை அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் இப்பணிப்புரையின் ஏற்பாடுகளை அத்தகைய பராயமடையாதவர் 18 வயதினை அடையும் பொழுது பிரயோகிக்கலாம்.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

இணைப்பு I

புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்குகள்

விடயம்: புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கினைத் திறப்பதற்கான கோரிக்கை

<u>புலம்பெயர்பவரின் விபரங்கள்</u>

முழுப் பெயர்: ..........

தே.அ. இல.: ..........

இலங்கை கடவுச்சீட்டு இல.: ..........

வெளிநாட்டு கடவுச்சீட்டு இல. (ஏதுமிருப்பின்): ..........

பிறந்த திகதி: ..........

நிரந்தர வதிவிடத்தினைப் பெறுகின்ற திகதி: ..........

நிரந்தர வதிவிடத்தினைப்பெறும் நாடு: ..........

<u>அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் விபரங்கள்</u>

பெயர்: ..........

கிளை: ..........

பதிலிறுப்பதற்கு விரும்புகின்ற முறை: மின்னஞ்சல்/ தொலைநகல்

மின்னஞ்சல்/ தொலைநகல் இல.: ..........

கோரிக்கை விடுகின்ற அலுவலரின் முழுப் பெயர்: ..........

பதவி: ..........

தொடர்பு கொள்வதற்கான இல.: ..........

இணைப்பு II

**புலம்பெயர்வோருக்கான படிகளை வழங்கும் பொழுது பெறப்பட வேண்டிய ஆவணங்கள்**

புலம்பெயர்வோருக்கான படிகளை வழங்கும் பொழுது அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் தகவல்களை/ ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

I. வெளிநாட்டு அஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கங்கள், மின்னஞ்சல் முகவரிகள் என்பன உட்பட புலம்பெயர்பவரினைத் தொடர்பு கொள்வதற்கான விபரங்கள்.
II. நிரந்தர வதிவிட அனுமதியின் பிரதி உட்பட, புலம்பெயரும் நேரத்தில் வைத்திருக்கப்பட்ட புலம்பெயர்பவரின் முழுமையான கடவுச்சீட்டின் பிரதியொன்று.
III. ஆரம்பப் படியான ஐ.அ.டொலர் 150,000 மற்றும் ஆண்டுப் படியான ஐ.அ.டொலர் 20,000 ஆகியவற்றிற்கு மேலதிகமாக மாற்றல்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனை பிரகடனப்படுத்துகின்ற சமாதான நீதவான்/ சட்டத்தரணி/ சொலிசிஸ்டர் ஒருவரினால் முத்திரையிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட சத்தியக்கடதாசியொன்று. பிரகடனப்படுத்தும் திகதிக்கு முன்னதாக புலம்பெயர்வதற்கான ஏதேனும் படி பயன்படுத்தப்படாதிருக்குமாயின் அது பிரகடனப்படுத்தப்படல் வேண்டும்.
IV. நிதியின் மூலங்களை நிரூபிப்பதற்காக செல்லுபடியான ஆவணங்கள்.
V. இலங்கை ரூபா ஒரு மில்லியனை விஞ்சிய மாற்றல்களுக்கு உள்நாட்டரசிறைத் திணைக்கள ஆணையாளர் நாயகத்திடமிருந்து பெற்ற வரித் தீர்ப்பனவுச் சான்றிதழ்.
VI. புலம்பெயர்பவரின் அட்டோணித் தத்துவம் (பொருத்தமானவிடத்து).
VII. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட படிவம் 4 (இது தொடர்பில் அனைத்துத் தகவல்களும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்).
VIII. விமானப் பயணச்சீட்டு (முதல்தரம் புறப்படுகையில்).

பின்னர் செய்யப்பட வேண்டிய மாற்றல்களைக் கருத்திற் கொண்டு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கு உடமையாளர்களிடமிருந்து பின்வரும் தகவல்கள்/ ஆவணங்கள் பெறப்படல் வேண்டும்.

I. புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கின் உடமையாளர் வெளிநாட்டில் நிரந்தரமாக வதிகின்றார் என்பதனை உறுதிப்படுத்தி பிரகடனப்படுத்துகின்ற சத்தியக்கடதாசியொன்று.
II. நிதியத்தின் மூலத்தினை நிரூபிக்கின்ற செல்லுபடியாகக்கூடிய ஆவணங்கள்.
III. இலங்கை ரூபா ஒரு மில்லியனை விஞ்சிய மாற்றல்களுக்கு உள்நாட்டரசிறைத் திணைக்கள ஆணையாளர் நாயகத்திடமிருந்து பெற்ற வரித் தீர்ப்பனவுச் சான்றிதழ்.
IV. புலம்பெயர்ந்தவரின் அட்டோணித் தத்துவம் (பொருத்தமானவிடத்து).
V. சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட படிவம் 4 (இது தொடர்பில் அனைத்துத் தகவல்களும் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்).

இணைப்பு III

**புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்கிலிருந்து புலம்பெயர்ந்தவர்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதியத்தின் மீதான மாதாந்த அறிக்கை**

ஒவ்வொரு மாதமும் முடிவடைந்ததிலிருந்து 3 கிழமைகளுக்குள் இவ்வறிக்கையானது பின்வரும் படிவத்தில் மாதாந்த அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

| முழுப் பெயர் | கடவுச் சீட்டு இல. | தே.அ. அ. இல. | நாடு | நிரந்தர வதிவிடப் பத்திரத்தின் திகதி | புலம் பெயர்வோர் தடுத்து வைத்தல் கணக்கு | நாடு | | மூலம் | | | | | தொகை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | வெளிநாட்டுக் கணக்கு இல. | வதிவற்றோர் வெளிநாட்டுக் கணக்கு | மூலதனப் படி | வருடாந்த மூலதனப் படி | நடைமுறை | ஊ.சே. நிதியம் | பணிக் கொடை | நாணய வகை | தொகை | வழங்கல் மாதிரி |
| | | | | | | | | | | | | | | | |

**தொடர்பு எண்: 06/04/16/2013** 2013 யூன் 12

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

இப்பணிப்புரையானது, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது காலத்திற்குக் காலம் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமானதாகும்.

2. ஆளொருவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் தற்பொழுது பேணப்படும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து மாற்றல் செய்யப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி அதே ஆளுக்காக மற்றொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் புதிய வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றினைத் திறப்பதற்கு நாணய வகையினைக் கருத்திற் கொள்ளாது அனுமதி இத்தால் வழங்கப்படுகிறது.

3. புதிய வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கினைத் திறக்கும் நோக்கத்திற்காக நிதிகளை மாற்றல் செய்யும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், நிதிகளை மாற்றல் செய்வதற்கு அறிவுறுத்தல்களை வழங்கிய ஆள் 1991/08/01 ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு இல. ஈசி/52/91 (டி) தாங்கிய தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளில் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கினைத் திறக்க உரித்துடையவராக இருந்தார் என்பதனை, பெறுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு குறிப்பிட்ட கணக்கினைத் திறக்கும் நேரத்தில் அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட சிறப்பு அனுமதியின் கீழ் உறுதிப்படுத்தலொன்றினை வழங்குதல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/17/2013** 2013 யூன் 12

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் நொஸ்ரோ கணக்குகளைத் திறந்து பேணுதல்

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் மற்றைய நாடுகளில் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களை காத்திரமான முறையில் தீர்ப்பனவு செய்வதற்கு வசதியளிக்கின்றதொரு வழிமுறையாக, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கிகளில் அல்லது இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்டுள்ள அத்தகைய வங்கிகளின் கிளைகளில், எது பொருத்தமானதோ அதன்படி, நொஸ்ரோ கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதி வழங்குவதென தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

1. நொஸ்ரோ கணக்குகளை எந்தவொரு வெளிநாட்டு நாணயத்திலும் திறக்கமுடியும். எனினும், கரைகடந்த வங்கித்தொழில் பிரிவிலுள்ள கொடுக்கல்வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யும் நோக்கத்தினை உள்ளடக்கும் விதத்தில் நொஸ்ரோ கணக்கினை விரிவுபடுத்தும் சந்தர்ப்பத்தில், அத்தகைய நொஸ்ரோ கணக்குகள் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் மட்டுமே திறக்கப்படுதல் வேண்டும்.

2. அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர், உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு மற்றும் வெளிநாட்டு வங்கித்தொழில் பிரிவின் தொழிற்பாடுகள் இரண்டிற்குமாக ஒரு நொஸ்ரோ கணக்கினை மாத்திரம் பேணுவதற்கு விரும்புமிடத்து, அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவு மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவு என்பன தொடர்பில் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களைத் தனித்தனியாக அடையாளம் காண்பதற்காக முறைமையொன்றினை உருவாக்குதல் வேண்டும்.

3. ஒவ்வொரு நொஸ்ரோ கணக்கும் காலாந்தர அடிப்படையில் குறைந்தபட்சம் மாதாந்தம் மீள்இணைக்கப்படுதலுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

4. அனைத்து நொஸ்ரோ கணக்குகளினது விபரங்களும் மாதாந்த அடிப்படையில் அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதிக்கு முன்னதாக இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**நொஸ்ரோ கணக்குகளின் மாதாந்தக் கூற்றுக்கள்**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர்: ........................................................................................................

மாதம் : ........................................................................................................

| | நொஸ்ரோ கணக்கு பேணப்படும் வங்கியின் பெயரும் முகவரியும் | திறக்கப்பட்ட திகதி | நாணயத்தின் வகை | மாதத்தின் தொடக்கத்திலுள்ளவாறு ஆரம்ப நிலுவை | மொத்த வரவுகள் | மொத்தப் பற்றுக்கள் | மாதத்தின் இறுதியிலுள்ளவாறு இறுதி நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | |
| 2 | | | | | | | |

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானவையெனவும் துல்லியமானவையெனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ................................

.......................................................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

.........................................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பதவி

**தொடர்பு எண்: 06/04/18/2013** 2013 யூன் 12

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகள்

முதலீட்டு நோக்கங்களுக்காக இலங்கைக்குள் வரும் உள்முகப் பணவனுப்பல்களுக்கு வசதியளிக்கின்றதொரு வழிமுறையாக, பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு நிதிகளைப் பெறுதல் மற்றும் தாய் நாட்டிற்கு திரும்ப அனுப்புதல் தொடர்பான வழிகளுக்குக் கூடுதலான நெகிழ்ச்சித்தன்மையினை வழங்குவதென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இதற்கமைய, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகளைத் திறக்கவும் தொழிற்படுத்தவும் இத்தால் அனுமதிக்கப்படுகிறார்கள்.

2. தகைமையுடைய முதலீட்டாளர்கள்:
   (i) நாட்டு நிதியம், பிராந்திய நிதியம் அல்லது சமவாய நிதியம் உட்பட வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள்.
   (ii) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள்.
   (iii) இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ வதிகின்ற வெளிநாட்டுப் பிரசைகள்.
   (iv) வதிவற்ற இலங்கையர்கள்

3. பிணையங்கள் முதலீட்டுக் கணக்கொன்றிற்கான வரவுகள் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்:
   (i) பன்னாட்டு வங்கித்தொழில் வழிமுறைகளினூடாக வெளிநாட்டிலிருந்து நேரடியாகப் பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்கள்.
   (ii) வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள், வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகள் வதிவற்ற இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் கணக்கு வைத்திருப்போரினால் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளில் பேணப்படும் கணக்குகள் ஆகியவற்றிலிருந்தான நிதியங்களின் மாற்றல்கள்.
   (iii) கணக்கு வைத்திருப்பவர், இலங்கைக்கு விஜயம் செய்த காலப்பகுதியில் இலங்கைச் சுங்கத்திற்கு வெளிப்படுத்திய பின்னர் நாட்டிற்குள் கொண்டு வந்து கணக்கு வைத்திருப்பவரினால் நேரடியாகவே அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் ஒப்படைக்கப்பட்ட பயணிகள் காசோலைகள், வங்கி வரைவுகள் அல்லது நாணயத் தாள்கள் வடிவில் அமைந்த வெளிநாட்டு நாணயம். எனினும், இது பயணிகள் காசோலை இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்டதாகவும் வரைவுகள் இலங்கைக்கு வெளியேயான வங்கியினால் வழங்கப்பட்டதாகவும் கணக்கு வைத்திருப்பவரின் பெயரில் புறக்குறிப்பீடு செய்யப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டதாகும்.
   (iv) தகைமையுடைய முதலீட்டாளர்களுக்காக உள்முகப் பணவனுப்பல்களால் பெறப்பட்டு இன்னொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைப்பதற்காக மாற்றல் செய்யப்பட்ட நிதியங்கள். இவ்விடயத்தினைப் பொறுத்தவரையில் நிதியத்தினை மாற்றல் செய்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால், குறிப்பிட்ட நிதியமானது பந்தி 3(i) இல் உள்ளவாறு உள்முகப் பணவனுப்பலால் பெறப்பட்டது என்பதனைத் தெரிவிக்கின்ற எழுத்து மூலமான உறுதிப்படுத்தலொன்று வழங்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு மாற்றல் செய்யப்பட்ட நிதியத்தினைப் பெறுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் பங்குகள் முதலீட்டுக் கணக்கிற்கு நிதியத்தினை வரவு வைப்பதற்கு முன்னர் குறிப்பிட்ட உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்ளுதலும் வேண்டும்.
   (v) பந்தி 5இல் குறித்துரைக்கப்பட்ட வரவுகள்.
   (vi) பந்தி 5இல் குறித்துரைக்கப்பட்ட வசதிப்படுத்தல் கொடுக்கல்வாங்கல்களினால் பெறப்பட்ட தரகுப் பணம் மற்றும் தரகுக் கட்டளை.
   (vii) கணக்கில் வரவு வைக்கப்பட்ட நிதியத்திலிருந்து உழைக்கப்பட்ட வட்டி

4. பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கான பற்றுக்கள் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்படல் வேண்டும்:
   (i) பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் வரவாகப் பெறப்பட்ட நிதியத்தின் வெளிமுக பணவனுப்பல்கள்.
   (ii) வங்கிக் கட்டணங்கள், அரசாங்க வரிகள், முத்திரைத் தீர்வைகள் மற்றும் தரகர்கள், முதனிலை வணிகர்கள், தலைமை முகாமையாளர்கள் மற்றும் கூறுநம்பிக்கைகளின் முகாமைத்துவக் கம்பனிகள் என்பனவற்றிற்கான கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக பந்தி 5இல் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான அனைத்துத் துணைக் கொடுப்பனவுகள்.
   (iii) வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள், வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள், பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகள், வதிவற்ற இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் கணக்கு வைத்திருப்போரினால் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளில் பேணப்பட்ட கணக்குகள் என்பனவற்றிற்கான நிதிய மாற்றல்கள்.
   (iv) பந்தி 5இல் குறித்துரைக்கப்பட்ட பற்றுக்கள்.
   (v) இலங்கை ரூபாவிலான உள்நாட்டுப் பகிர்ந்தளிப்புக்கள்.

5. முதலீட்டுக் கொடுக்கல்வாங்கல்கள்:

| முதலீட்டு வகை | | கொடுக்கல்வாங்கல்கள் | |
|---|---|---|---|
| | | வரவு | பற்றுக்கள் |
| (i) | பங்குகள் (பட்டியலிடப்பட்டவை மற்றும் பட்டியலிடப்படாதவை இரண்டும்) | பங்கிலாபங்கள், விற்பனை மீதான பெறுகைகள், ஒடுக்குதல், மூலதன மீட்பு அல்லது பங்குகளை மீண்டும் வாங்குதல் | பங்குகளுக்கான கொடுப்பனவுகள் |
| (ii) | திறைசேரி முறிகள் | விற்பனை முதிர்ச்சி மீதான பெறுகைகள், நறுக்கு | திறைசேரி முறிகளைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுகள் |
| (iii) | திறைசேரி உண்டியல்கள் | விற்பனை அல்லது முதிர்ச்சியின் மீதான பெறுகைகள் | திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுகள் |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கூறுநம்பிக்கைகளிலுள்ள கூறுகள் | கூறுகளின் விற்பனை அல்லது மீட்பு மீதான பெறுகைகள், பங்கிலாப வருமானம் | கூறுகளைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுகள் |
| (v) | தொகுதிக் கடன்கள் | விற்பனை அல்லது முதிர்ச்சி மீதான பெறுகைகள், வட்டி | தொகுதிக் கடன்களை கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவுகள் |
| (vi) | சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகள் | வைப்புக்களின் முதிர்ச்சிப் பெறுகைகள் | வைப்புக்களை மேற்கொள்ளுதல் |
| (vii) | வெளிநாட்டுக் கம்பனிகளாக வியாபாரத் தலங்களை ஏற்படுத்துதல் | இலாபங்கள், மிகை நிதியங்கள், நடத்துரிமை/ வேத்துரிமைக் கொடுப்பனவுகள் | வெளிநாட்டுக் கம்பனிகளில் முதலீடு அல்லது வெளிநாட்டுக் கம்பனிகளை பேணுவதற்கான கொடுப்பனவுகள், ஏற்புடைத்தான விதத்தில் |
| (viii) | அசையாச் சொத்து | வாடகை வருமானம், விற்பனை மீதான பெறுகைகள் | அசையாச் சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமான கொடுப்பனவுகள் |
| (ix) | வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாட்டுத் திட்டங்கள் அல்லது கடன்பாட்டாளருக்கு செலாவணிக் கட்டுப்பாளரினால் சிறப்பு அனுமதியின் கீழ் வதிவோருக்கு வழங்கப்பட்ட கடன்கள் | முதல் தொகை, வட்டி, கட்டணம் என்பனவற்றின் அறவிடல்கள் மற்றும் பிணையங்களை விற்பதிலிருந்து பெறப்படுகின்ற நிதியம், கடன்களை மீளச் செலுத்தாமை தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் இழப்பீடுகள் | கடன்களின் பகிர்ந்தளிப்பு, கடன்கள் தொடர்பான கொடுப்பனவுகள் |

6. வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்களினால் செய்யப்பட்ட முதலீடுகள்:

6.1 இங்கே இதற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள அனுமதிகளுக்குப் புறம்பாக, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்களினால் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களுக்கு வசதியளிப்பதற்காக அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

(அ) இப்பந்தியின் கீழ் அனுமதிக்கப்பட்ட முதலீடுகளாக பட்டியலிடப்பட்ட பங்குகள், பட்டியலிடப்பட்ட தொகுதிக் கடன்கள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், கூறுநம்பிக்கைகளிலுள்ள பங்குரிமை மூலதனம் மற்றும் சிறப்பு வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்கு என்பன இருத்தல் வேண்டும்.

(ஆ) வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்களின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கொன்றிற்கு வரவு வைக்கப்படுவதற்கான நிதியங்கள் வதிவற்ற இடையீட்டாளரொருவரினால் இலங்கையில் பேணப்படும் கணக்கொன்றினூடாக பின்வருமாறு வழிப்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுகிறது.

(i) வதிவற்ற இடையீட்டாளர் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டதொரு வங்கியாக அல்லது இலங்கைக்கு வெளியே நிறுவப்பட்டுள்ள அத்தகைய வங்கியின் கிளையாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்ட கணக்கு வொஸ்ரோ கணக்காக அல்லது பிணையங்கள் முதலீட்டுக் கணக்காக இருத்தல் வேண்டும்.

(ii) வேறு ஏதேனும் வதிவற்ற இடையீட்டாளராக இருக்கும் சந்தர்ப்பத்தில், மேலே குறிப்பிடப்பட்ட கணக்குப் பிணையங்கள் முதலீட்டுக் கணக்காக இருத்தல் வேண்டும்.

(இ) நிபந்தனை 6.1(ஆ) இன் கீழ் பெறப்பட்ட நிதியத்திலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் மீது பெறப்பட்ட விற்பனைகள் அல்லது முதிர்ச்சிப் பெறுகைகள் மற்றும் வருவாய்கள் அதே செயன்முறைகளினூடாக தாய் நாட்டிற்கு மீள அனுப்பப்படலாம்.

(ஈ) வொஸ்ரோ கணக்குகளுக்கு அல்லது அத்தகைய வதிவற்ற இடையீட்டாளர்களின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகளுக்கு நிதியிடுகின்ற நோக்கத்திற்காக வதிவற்ற இடையீட்டாளர்களுக்கு வங்கியொன்று கடன் வசதிகளெதனையும் வழங்கக்கூடாது.

(உ) வொஸ்ரோ கணக்குகளினூடாக மேற்கொள்ளப்பட்ட மேற்குறிப்பிட்ட முதலீடுகள் தொடர்பான அனைத்துக் கொடுக்கல்வாங்கல்களும் இணைப்பு 1இல் உள்ளவாறு அல்லது பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகளினூடாக மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து பந்தி II இல் உள்ளவாறு மாதாந்த அடிப்படையில் அறிக்கையிடப்படுதல் வேண்டும்.

(ஊ) பந்தி 3(iv) மற்றும் 7(v) இன் ஏற்பாடுகள் பந்தி 6இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு ஏற்புடைத்தானவாதல் வேண்டும்.

6.2 அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், மேலேயுள்ள பந்தி 6.1இன் கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் எழக்கூடிய தீர்ப்பனவு, இணைத்தரப்பு போன்று ஏதேனும் இடர்நேர்வினைத் தணிப்பதற்குப் பொருத்தமான வழிமுறைகளைப் பேணுதல் வேண்டும்.

7. ஏனைய நியதிகளும் நிபந்தனைகளும்:

(i) பந்தி 3இன் துணைப் பந்திகள் (i), (ii), (iii) மற்றும் (iv) இல் குறித்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட வரவுத் தொகைகளைப் பயன்படுத்தி பிணையங்கள் முதலீட்டுக் கணக்கொன்றினைத் திறத்தல் வேண்டும்.

(ii) பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினை இலங்கை ரூபாவில் அல்லது வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பேணமுடியும்.

(iii) பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினை தகுதிபெற்ற முதலீட்டாளர்கள் கூட்டாகவும் பேணலாம்.

(iv) பங்குகள் முதலீட்டுக் கணக்கில் மேலதிக எடுப்பனவுகள் இருத்தல்கூடாது என்பதுடன் பங்குகள் முதலீட்டுக் கணக்கு உடமையாளருக்கு கடன் வசதிகளும் வழங்கப்படக்கூடாது. பங்கு முதலீட்டுக் கணக்கிற்கெதிராக காசோலைப் புத்தகமும் வழங்கப்படக்கூடாது.

(v) பந்தி 4 (i)இன் மூலம் அனுமதிக்கப்பட்ட நிதியத்தின் வெளிமுகப் பணவனுப்பல்கள், பிணையங்கள் முதலீட்டு கணக்கு பேணப்படும் அதிகாரம்பெற்ற வணிகரொருவர் தவிர்ந்த இன்னொரு அதிகாரம்பெற்ற வணிகரொருவரூடாக மேற்கொள்ளப்படலாம். எனினும், வாடிக்கையாளரின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்து நிதியம் பற்று வைக்கப்பட்டது என்பதற்கு பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு எங்கு பேணப்படுகின்றதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடமிருந்து உறுதிப்படுத்தல் பத்திரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டதாகும்.

(vi) தகைமையுடைய முதலீட்டாளர்கள் திறைசேரி முறிகளையும் திறைசேரி உண்டியல்களையும் முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டிலிருந்தும் கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். எனினும், அத்தகைய அனைத்து முதலீடுகளினதும் கூட்டுத்தொகை எந்தவொரு நேரத்திலும் தகைமைபெற்ற முதலீட்டாளர்களினால் வைத்திருக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட திறைசேரி முறிகள் அல்லது திறைசேரி உண்டியல்களின் வெளிநின்ற சதவீதத்தினை விஞ்சக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டதாகும்.

(vii) பந்தி 5இன் கீழ் பட்டியலிடப்பட்ட வரவுகள், அதே ஆரம்ப முதலீடுகளுக்கான கொடுப்பனவுகள் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்து பற்று வைக்கப்பட்டிருந்தால் மட்டுமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அதிகாரம்பெற்ற வணிகர் ஆரம்ப முதலீடுகள் தொடர்பான சான்றுகளை பதிவு செய்து பேணுதல் வேண்டும். மிகை இலாபக் கொடுப்பனவு வாயிலாகக் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகள்

விற்கப்படும் சந்தர்ப்பத்தில் அத்தகைய பங்குகளின் விற்பனை மீது பெறப்பட்ட தொகைகள், ஆரம்பப் பங்குகளுக்கான கொடுப்பனவு அதே பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலுள்ள நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து பிணையங்கள் முதலீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன.

8. பிணையங்கள் முதலீட்டுக் கணக்கொன்றினை மூடிவிடுதல்:
   (i) குறிப்பிட்ட பிணையங்கள் முதலீட்டுக் கணக்கொன்றினூடாகக் கொள்வனவு செய்த அனைத்து முதலீடுகளையும் உடமையாளர் விற்பனை செய்திருப்பின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகளை மூடிவிடுவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.
   (ii) எனினும், புதிய பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினைத் திறக்கின்ற அல்லது இன்னொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் உள்ள பிணயங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு நிதியத்தினை மாற்றல் செய்யும் நோக்கத்திற்காக, அதே கணக்கினூடாகச் செய்யப்பட்ட முதலீடுகளை விற்பதற்கு முன்னர் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினை மூடுவதற்கான கோரிக்கையினை பிணையங்கள் முதலீட்டு கணக்கு உடமையாளர் விடுக்கும் சந்தர்ப்பத்தில் ஆரம்பப் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினை வைத்திருக்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரெவரோ அவர் பெறுகின்ற பெறுகைகளை, முதலீட்டுக் கணக்கினைத் தொழிற்படுத்துகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மூடப்படவிருக்கும் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலுள்ள நிதியத்திலிருந்தும் செய்யப்பட்ட வெளிநின்ற முதலீடுகளின் உறுதிப்படுத்தலொன்று வாடிக்கையாளரின் கோரிக்கையின் பேரில் வழங்கப்படுதல் வேண்டும்.

9. பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ள நிதிகளின் மீது வட்டி செலுத்தப்படலாம்.

10. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர், பிணையங்கள் முதலீட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள நிதிக்கெதிராக தகைமையுடைய முதலீட்டாளர்களின் சார்பில் அல்லது அதே முதலீட்டாளரினால் பேணப்படும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளில் பேணப்படும் கணக்குகளின் மீது இலங்கையிலுள்ள கம்பனிகளின் பங்குகளின் ஆரம்ப வழங்கல்களுக்கான உதவுதொகைகள் தொடர்பில் உத்தரவாதங்களை வழங்கமுடியும்.

11. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இணைப்பு II இல் உள்ளவாறு மாதாந்த அடிப்படையில் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு பிணையங்கள் முதலீட்டுக் கணக்கின் விபரங்களை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுகின்றனர்.

12. 2013 சனவரி 1ஆம் நாளிடப்பட்ட தொடர்பு இல. 06/04/01/2013 கொண்ட பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இணைப்பு I**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர்: ........................................................................................................

மாதம் : ........................................................................................................

| பந்தி 6 தொடர்பிலான வொஸ்ரோ அறிக்கையிடல் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வொஸ்ரோ உடமையாளரின் பெயர் | கணக்கு இலக்கம் | உள்முகப் பணவனுப்பல்கள் | | | | வெளிமுகப் பணவனுப்பல்கள் | | | |
| | | திகதி | தொகை | மூலம் | நோக்கம் | திகதி | தொகை | நன்மை பெறுநர் | நோக்கம் |
| | | | | | | | | | |

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானவையெனவும் துல்லியமானவையெனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .................................

........................................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர், கையொப்பம்
மற்றும் முத்திரை

**இணைப்பு II**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர்: ........................................................................................................

மாதத்திற்கான மாதாந்தக் கூற்று : ........................................................................................................

| பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினை வைத்திருப்பவரின் பெயர் | கணக்கு இலக்கம் | நாணயம் | வரவுகள் | | பற்றுக்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்முகப் பணவனுப்பல்கள் | மற்றைய கணக்குகளிலிருந்தான மாற்றல்கள் | வெளிமுகப் பணவனுப்பல்கள் | ஏனைய கணக்குகளுக்கான மாற்றல்கள் |
| | | | | | | |

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானவையெனவும் துல்லியமானவையெனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .................................

........................................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர், கையொப்பம்
மற்றும் முத்திரை

**தொடர்பு எண்: 06/04/19/2013** 2013 யூன் 12

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## வெளிநாட்டிற்குப் பயணம் மேற்கொள்கின்ற இலங்கையர்களுக்கு வெளிநாட்டு நாணயத் தாள்களை வழங்குதல்

வெளிநாட்டிற்குப் பயணத்தினை மேற்கொள்ளும் இலங்கையர்களுக்கான பயணப் படியில் ஒரு பகுதியினை அதாவது ஐ.அ.டொலர் 5,000 வரையான தொகையினை அல்லது அதற்குச் சமனான வேறு மாற்றத்தக்க வெளிநாட்டு நாணயத்தினை வெளிநாட்டு நாணயத் தாள்களாக வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது. அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், அவ்வாறு நாணயத் தாள்களை வழங்கும் பொழுது மிக நுணுக்கமாக நடந்து கொள்ளுமாறும் தனிப்பட்ட கோரிக்கைகளின் உண்மைத் தன்மையினைப் பற்றி மதிப்பிட்டுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் 02/06/2010ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/06/2010 கொண்ட பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/20/2013** 2013 யூன் 12

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

### வதிவற்றோர் வசமிருந்த அசையாச் சொத்துக்களின் விற்பனைப் பெறுகைகளை தாய் நாட்டிற்கு திரும்ப அனுப்புதல்

12.06.2013ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 1814/39 கொண்ட அரச வர்த்தமானியில் (அதிவிசேடம்) வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் இலங்கையில் வதியும் ஒருவர் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு இலங்கை ரூபாவில் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதற்கான பொதுவான அனுமதியினை வழங்குகிறது. அத்தகைய சொத்தின் உரிமையாளர் அல்லது அத்தகைய சொத்தின் உரிமையாளரது வாரிசு இலங்கைக்கு வெளியே வதியுமிடத்து (இதனகத்துப் பின்னர் முறையே சொந்தக்காரர் மற்றும் வாரிசு எனக் குறிப்பிடப்படும்) இலங்கையிலுள்ள அத்தகைய அசையாச் சொத்துக்களின் விற்பனை தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய தொகையில் கணிசமான கவனம் செலுத்தப்படும்.

2. மேலே குறிப்பிடப்பட்டவற்றை கருத்தில் கொண்டு, மூலதன இலாபங்கள் ஏதுமிருப்பின் அவை உட்பட இலங்கை ரூபாவில் பெறப்பட்ட விற்பனைப் பெறுகைகளை மேலே வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டவாறு பின்வரும் கணக்குகளில் வரவு வைப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.
   - (அ) அசையாச் சொத்தின் ஆரம்பக் கொள்வனவு பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலுள்ள நிதியங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் சொந்தக்காரர் அல்லது வாரிசின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு; அல்லது
   - (ஆ) ஆரம்பக் கொள்வனவு அத்துடன்/ அல்லது அத்தகைய சொத்துக்களின் அபிவிருத்தி உள்முகப் பணவனுப்பல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான சான்றுகள் கண்டறியப்படுமிடத்து சொந்தக்காரரினால் அல்லது வாரிசினால் வெளிநாட்டில் பேணப்படும் கணக்கிற்கு.

3. மேலேயுள்ள பந்தி 2 இன் நோக்கங்களுக்காக உள்முகப் பணவனுப்பல்கள் தொடர்பில் ஆராய்ந்தறிவதற்காக, அதிகாரமளிக்கப்பட்ட வணிகரொருவர், சொந்தக்காரரினால் அசையாச் சொத்துக்களைக் கொள்வனவு செய்யப்படுவதற்கு வசதியளித்த மூன்றாந்தரப்பினரால் பேணப்பட்ட கணக்கொன்றிற்கு சொந்தக்காரரினால் அனுப்பப்பட்ட உள்முகப் பணவனுப்பல்கள் பற்றி கவனத்தில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

4. 2003 திசெம்பர் 9ஆம் நாளிடப்பட்ட தொடர்பு இல. 06/04/11/2003 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**தொடர்பு எண்: 06/04/21/2013** 2013 யூன் 12

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளின் உடமையாளர்களுக்கான கடன் வசதிகள்

வெளிநாட்டுச் செலாவணி உழைப்போரின் வியாபார நடவடிக்கைகளுக்கு மேலும் வசதிகளை வழங்கும் பொருட்டு, உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளைப் பேணுகின்ற ஆட்களுக்கு பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு கடன் வசதிகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் அனுமதிக்கப்படுகின்றனர்.

(i) கடன் வசதிகள், வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளின் உடமையாளரின் (இதனகத்துப் பின்னர் “கடன்பாட்டாளர்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிலையான அல்லது தொழிற்படு மூலதனத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காகவே வழங்கப்படுதல் வேண்டும்.

(ii) மீள்கொடுப்பனவுக் காலமும் வட்டி வீதமும் கடன்பாட்டாளருக்கும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்குமிடையில் (இதனகத்துப் பின்னர் “கடன் வழங்குநர்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) இணங்கிக் கொள்ளப்பட்ட விதத்தில் இருக்கும்.

(iii) வெளிநாட்டுச் செலாவணியினை உழைப்போர் கடனைச் சரியான நேரத்தில் முழுமையாகச் செலுத்தும் விதத்தில் வழமையான காலப்பகுதியில் வெளிநாட்டுச் செலாவணிக் காசுப்பாய்ச்சலைக் கிரமமான முறையில் பெறுகின்றனர் என்பதனையிட்டு கடன் வழங்குநரை திருப்திப்படுத்தும் உழைப்பாளர்களுக்கும் மட்டுமே இவ்வசதிகளின் கீழ் வெளிநாட்டுச் செலாவணியில் கடன் வசதிகளை வழங்குதல் வேண்டும்.

(iv) கடன் வழங்குநர், வெளிநாட்டுச் செலாவணியில் எதிர்காலக் காசுப்பாய்ச்சலை முன்மதியுடன் மதிப்பிட்டுக் கொள்ள வேண்டியதுடன் கடன்பாட்டாளரின் நம்பகத்தன்மையினையும் கவனத்தில் கொள்வதுடன் அவை தொடர்பான பதிவேடுகளையும் பேணி வருதல் வேண்டும்.

(v) கடன் தொகைகளை கடன் வழங்குநருடன் பேணிவரும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கிற்கு வரவு வைக்கும் விதத்தில் பகிர்ந்தளித்தல் வேண்டும்.

(vi) இப்பணிப்புரையின் கீழ் வழங்கப்பட்ட கடன்களுக்காக கடன் வழங்குநர் வெளிநாட்டு நாணயத்தில் பேணப்படும் வைப்புக்களையும் உருவச் சொத்துக்களையும் பிணையாகப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(vii) கடனைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் கடன் வழங்குநர் வெளிநிற்கின்ற தொகையினைப் பின்வரும் விதத்தில் அறவிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

(அ) குறிப்பிட்ட கடன் வசதிகளின் பொருட்டு பிணையாகப் பெறப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்களுக்கெதிராக எதிரீடு செய்து கொள்ளுதல்.

(ஆ) வெளிநாட்டு நாணயத்தில் விற்பனை செய்யப்பட்ட பிணைகளின் பெறுகைகள்.

(இ) வெளிநாட்டு நாணயத்தில் பிணையங்களை தேறல் செய்யும் அனைத்து முயற்சிகளும் தோல்வியடையும் சந்தர்ப்பத்தில் பின்வருமாறு இருக்குமிடத்து இறுதி முயற்சியொன்றாக, கடன் வசதிகளின் வெளிநின்ற தொகையினை, ரூபாவில் விற்பனை செய்யப்பட்ட பிணையங்களின் பெறுகைகளிலிருந்து அறவிட்டுக் கொள்ளலாம்.

(i) கடன்பாட்டாளர் வெளிநாட்டுச் செலாவணியில் வருமானத்தினைப் பெற்ற தொழிலினை நிரந்தரமாக மூடிவிட்டிருத்தல்; அத்துடன்

(ii) இறுதித் தவணைக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து 12 மாதங்கள் முடிவடைந்திருத்தல்.

(viii) கடன் வழங்குநர், இப்பணிப்புரையின் கீழ் வழங்கப்பட்ட கடன் வசதிகள் மீதான காலாண்டுக் கூற்றுக்களை ஒவ்வொரு காலாண்டும் முடிவடைந்ததனை உடனடுத்துவரும் மாதத்தின் 15ஆம் நாளுக்கு முன்னதாக இணைப்பு Iஇல் உள்ளவாறு சமர்ப்பித்தல் வேண்டும்.

(ix) பின்வரும் பணிப்புரைகள் மற்றும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட கடன் வசதிகளின் அறவிடல் ஏற்புடைத்தான விதத்தில் மேலே (vii) மற்றும் (viii) இல் குறிப்பிடப்பட்டிருக்கும் நடைமுறை நியதிகளுக்குட்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் இப்பணிப்புரைகளும் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும் இரத்துச் செய்யப்படுகின்றன.

(i) 22.04.1994 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/10/94 (சி அன்ட் எவ்)
(ii) 04.11.1994 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/17/94 (சி அன்ட் எவ்)
(iii) 30.11.1994 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/20/94 (சி அன்ட் எவ்)
(iv) 03.01.1997 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசிடி/02/97 (சி அன்ட் எவ்)
(v) 03.01.1997 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசிடி/03/97 (சி அன்ட் எவ்)
(vi) 07.04.2000 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/05/2000 டி
(vii) 21.01.2003 திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/02/03/2003
(viii) 06.01.2011 திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/01/2011

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இணைப்பு I**

**வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கு உடமையாளர்களுக்கான கடன் வசதிகள்**

அதிகாரமளிக்கப்பட்ட வணிகரின் பெயர்: ..........................................................................................................

அறிக்கையிடும் காலம் : ..........................................................................................................

| | | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ஐ.அ.டொலர் நியதிகளில்) |
|---|---|---|---|
| 1 | இக்காலப்பகுதியில் வழங்கப்பட்ட கடன் வசதிகள் | | |
| 2 | காலாண்டு இறுதியிலுள்ளவாறு வழங்கப்பட்ட மொத்தக் கடன் வசதிகள் | | |
| 3 | செலுத்தத் தவறிய கடன் வசதிகள் | | |
| 4 | செலுத்தத் தவறிய கடன் வசதிகளும் ஐ.அ.டொலர் நியதிகளில் அறவிடப்பட்டவையும் | | |
| | (i) வெளிநாட்டு நாணய வைப்புக்கள் | | |
| | (ii) வெளிநாட்டு நாணயத்தில் விற்கப்பட்ட பிணைகள் | | |
| | (iii) ரூபாவில் விற்கப்பட்ட பிணைகள் | | |

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானவையெனவும் துல்லியமானவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .................................

.......................................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

.......................................................................
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பதவி

**தொடர்பு எண்: 06/04/22/2013** 2013 யூன் 12

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள்

இப்பணிப்புரையானது, வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது காலத்திற்குக் காலம் விடுக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமானதாகும்.

2. வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான வரவுகள்

2.1 2013.06.12 திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/15/2013 இனைத் தாங்கிய புலம்பெயர்வோருக்கான வெளிநாட்டுச் செலாவணி விற்பனை மீதான பணிப்புரைகளின் ஏற்பாடுகளுக்குட்பட்டு புலம்பெயர்வோர் தடுத்துவைத்தல் கணக்குகளிலிருந்து மாற்றல் செய்யப்படும் நிதியினை வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு வரவு வைப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

3. புதிய வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறத்தல்

3.1 மேலும், நாணயத்தின் வகையினைக் கருத்திற்கொள்ளாது, ஏற்கனவே ஆளொருவரினால் மற்றொரு அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன் பேணப்படும் ஏற்கனவேயுள்ள வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து மாற்றல் செய்யப்படும் நிதியினைப் பயன்படுத்தி அத்தகைய ஆளுக்காக புதிய வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கினைத் திறப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.

3.2 புதிய வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறக்கும் நோக்கத்திற்காக, நிதிகளை மாற்றல் செய்யும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் அதனைப் பெறுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட வணிகருக்கு நிதியினை மாற்றல் செய்யுமாறு அறிவுறுத்தலை வழங்கிய ஆள்,

1988.05.05 திகதியிடப்பட்ட தொடர்பு எண் ஈசி/08/88 (டி) கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளுக்கிணங்க குறிப்பிட்ட கணக்கினைத் திறந்த நேரத்தில் அல்லது செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்பட்ட சிறப்பு அனுமதியின்படி வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கு தகுதியுடையவர் என்பதனை உறுதிப்படுத்துகின்ற ஆவணமொன்றினை வழங்குதல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**
1814/39 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**
**பகுதி I : தொகுதி (I) - பொது**
**இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்**
**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**
**(இலங்கை சட்டவாக்கத்தின் அத்தியாயம் 423)**

**வதிவற்றோர் வசமுள்ள அசையாத சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கு வதிவுள்ளோருக்கு அனுமதியளித்தல்**

(1) காலத்திற்குக் காலம் விதிக்கப்பட்ட அசையாத சொத்துக்களை கொள்வனவு செய்தல், உரிமையாக்குதல் மற்றும் உடமையில் வைத்திருப்பதற்கு ஏற்புடைத்தான சட்டவிதிகளுக்கு உட்பட்டு, பிரிவு 7(அ)வின் கீழ் இலங்கையில் வதியும் ஒருவர் இலங்கைக்கு வெளியே வதியும் ஒரு நபருக்கு இலங்கை ரூபாவில் கொடுக்கல்களை மேற்கொள்வதற்கான அனுமதி இத்தால் வழங்கப்படுகிறது. அத்தகைய சொத்தின் உரிமையாளர் அல்லது அவரின் வாரிசு இலங்கைக்கு வெளியே வதியுமிடத்து இலங்கையிலுள்ள அத்தகைய அசையாச் சொத்துக்களின் விற்பனை தொடர்பான கொடுப்பனவில் கணிசமானளவு கவனம் செலுத்தப்படும்.

(2) இந்தப் பணிப்புரையின் நோக்கத்திற்காக -
   (அ) “அசையாத சொத்து” என்பது காணி மற்றும் கட்டடங்கள் எனப் பொருள்படும்;
   (ஆ) “இலங்கையில் வதியும் ஆள்” என்பது செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 37(1) இன் கீழ் நிதி அமைச்சினால் விடுக்கப்பட்டு, 21 ஏப்பிறல் 1972ஆம் திகதி அரச வர்த்தமானி இல. 15007இல் வெளியிடப்பட்ட பணிப்புரையில் வழங்கப்பட்ட அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

(3) 2003.10.28ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 1312/9 கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இத்தால் நீக்கப்படுகிறது.

பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2013 யூன் 12

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**
1814/40 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**
**பகுதி I : தொகுதி (I) - பொது**
**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**
**(இலங்கை சட்டவாக்கத்தின் அத்தியாயம் 423)**

**இலங்கைக்கு வெளியேயுள்ள வங்கிகளுடன் கணக்கினை ஆரம்பித்தல் மற்றும் பேணுதலுக்கான அனுமதி**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் 2010ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11ஆம் திகதியிடப்பட்ட 1644/26ஆம் இலக்க அதிவிசேட அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் பின்வருவனவற்றை உப பந்திகளான (vi) மற்றும் (vii) இனைப் பந்தி 1 இற்குள் உட்புகுத்துவதனூடாகத் திருத்தப்படுகிறது.

“(vi) மற்றொரு நாட்டிலிருந்து செல்லுபடியாகக் கூடிய ஒரு நிரந்தர வதிவிட அனுமதிப்பத்திரத்தினை பெற்றிருக்கும் நபரொருவர்;
(vii) இரட்டைக் குடியுரிமையொன்று”.

பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

கொழும்பு
2013 யூன் 12

**தொடர்பு எண்: 06/04/23/2013** 2013 யூலை 15

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களினால் நொஸ்ரோ கணக்குகளைத் திறந்து பேணுதல்

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக 2013 யூன் 12ஆம் திகதியிடப்பட்ட தொடர்பு எண் 06/04/17/2013 இனைத் தாங்கிய பணிப்புரைகளுக்கு மேலதிகமாக.

மேற்குறிப்பிடப்பட்ட பணிப்புரையின் 4ஆம் நிபந்தனைகளின்படி, நொஸ்ரோ கணக்குகளின் விபரங்களை அனுப்பி வைக்க வேண்டுமென்ற தேவைப்பாடு இனிமேல் இருக்காது என்ற தகவல் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

தொடர்பு எண்: 06/04/24/2013 2013 ஒகத்து 26

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினால் இரண்டாந்தரச் சந்தையில் நாட்டிற்கான இலங்கை முறிகள் கொள்வனவு செய்யப்படுதல்

இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளினை இரண்டாந்தரச் சந்தையில் கொள்வனவு செய்வதற்கான எமது ஒப்புதல்களை எதிர்பார்த்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்து பல கோரிக்கைகளை நாம் பெற்றிருக்கின்றோம்.

அத்தகைய கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு, 2010, 2011 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் இலங்கை அரசாங்கத்தினால் இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை, இரண்டாந்தரச் சந்தையில் கொள்வனவு செய்யவும் வைத்திருக்கவும் மாற்றல் செய்யவும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களாக நியமிக்கப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

தொடர்பு எண்: 06/04/25/01/2013 2013 ஒத்தோபர் 21

சேரல்: அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான பணிப்புரைகள்

அன்புள்ள ஐயா,

## வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வான் நிறுவனங்களின் முகவர்களினால் பேணப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனங்கள் / வான் நிறுவனங்களின் முகவருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்காக மாற்றுதல்

இப்பணிப்புரையானது, செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் விதத்தில், குறிப்பிட்ட சட்டத்தின் 7ஆம் பிரிவின் நியதிகளில், இலங்கையிலுள்ள கப்பற்படுத்தல் நிறுவனங்கள் மற்றும் வான் நிறுவனங்களின் கொடுக்கல்வாங்கல்களை ஒழுங்குபடுத்துகின்றதொரு வழிமுறையாக, இப்பணிப்புரை விடுக்கப்படுகின்றது.

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வான் நிறுவனங்களுக்கான கணக்கொன்றினைத் திறந்து பேணுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**2. வெளிநாட்டு கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வான் நிறுவனங்களின் முகவருக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறத்தல்**

2.1 தகைமை

வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனம் அல்லது வெளிநாட்டு வான் நிறுவனத்தினை (இதனகத்துப் பின்னர் வெளிநாட்டு தாய்க் கம்பனி எனக் குறிப்பிடப்படும்) இலங்கையில் பிரதிநிதித்துப்படுத்துகின்ற இலங்கையில் வதிகின்ற பின்வரும் ஆட்கள்:

(i) மேர்ச்சன்ட் சிப்பிங் ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்பட்டுள்ள "கப்பற்படுத்தல் முகவராக தொழிலினைக் கொண்டு நடாத்துவதற்கான உரிமம் " இல் விபரங்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ள வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனத்தின் சார்பில் இலங்கையில் கப்பற்படுத்தல் முகவராக வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆட்கள்.

(ii) செல்லுபடியாகக்கூடிய பன்னாட்டு வான் நிறுவன உரிமத்தினை அல்லது இலங்கையின் சிவில் வான் போக்குவரத்து அதிகாரசபையின் சிவில் வான் போக்குவரத்து ஆணையாளரினால் விடுக்கப்பட்ட ஏதேனும் அங்கீகாரத்தினைக் கொண்டிருக்கும் இலங்கையில் பொது விற்பனை முகவராக வியாபாரத்தினைக் கொண்டு நடத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வெளிநாட்டு வான் நிறுவனத்தின் எவரேனும் ஆள்.

2.2. வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வான் நிறுவனங்களின் முகவர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகளின் வகை

(i) வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வான் நிறுவனங்களின் முகவர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகளை வெளிநாட்டுத் தாய்க் கம்பனிகளின் சார்பில் இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவுகளில் திறந்து பேணி வரமுடியும்.

(ii) இதனை குறித்துரைக்கப்பட்ட ஏதேனுமொரு வெளிநாட்டு நாணயத்தில் நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்காகப் பேணி வரமுடியும்.

(iii) அதே வெளிநாட்டுத் தாய்க் கம்பனியின் சார்பில், அதே அதிகாரமளிக்கப்பட்ட வணிகருடன், முகவரினால் பேணப்பட்டு வரும் ரூபாக் கணக்கிற்குப் புறம்பாக வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வான் நிறுவனங்களின் முகவர்களுக்கான கணக்குகளைத் திறக்கமுடியும்.

(iv) வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வான் நிறுவனங்களின் முகவர்களுக்கான கணக்குகளை "ஓ/பீ" (வெளிநாட்டுத் தாய்க் கம்பனியின் பெயர்) என்ற பிற்சேர்க்கையினை உள்ளடக்குவதன் மூலம் முகவரின் பெயரில் பேணி வரலாம்.

2.3. தேவைப்படும் ஆவணங்கள்

கணக்கொன்றினைத் திறப்பதற்குப் பொதுவாகத் தேவைப்படும் ஆவணங்களுக்குப் புறம்பாக, அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் பின்வரும் ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(i) விடயத்தினைப் பொறுத்து, முகவரொருவர் கப்பற்படுத்தல் முகவராக அல்லது தாய்க் கம்பனியின் பொது விற்பனை முகவராக தொழிற்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளார் என்பதனை உறுதிப்படுத்துகின்ற மேர்ச்சன்ட் சிப்பிங் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் அல்லது வான் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் இலங்கை வான் போக்குவரத்து அதிகாரசபையினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகக் கூடிய உரிமம் அல்லது கடிதம்.

(ii) வெளிநாட்டு தாய்க் கம்பனியினால் ஒப்பமிடப்பட்ட கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி அல்லது முகவரினாலும், இலங்கையில் முகவராக வெளிநாட்டுத் தாய்க் கம்பனியினால் நியமிக்கப்பட்ட முகவரினாலும் ஒப்பமிடப்பட்ட உடன்படிக்கையொன்று.

3. அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(i) வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கிற்கு அல்லது உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவினால் பேணப்பட்ட கணக்கொன்றிற்கெதிராக இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட வங்கி மாற்றல் அல்லது வங்கி வரைவின் மூலம் வெளிநாட்டு தாய்க் கம்பனியின் சார்பில் முகவரினால் வெளிநாட்டுச் செலாவணியில் சேகரிக்கப்பட்ட சரக்குக் கட்டணங்கள்.
(ii) நேரடி பன்னாட்டு வங்கித்தொழில் வழிப்படுத்தல்களினூடாக வெளிநாட்டு தாய்க் கம்பனியிடமிருந்து பெற்ற உள்முகப் பணவனுப்பல்கள்.
(iii) உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிலிருந்தான மாற்றல்கள்.
(iv) பொருத்தமானவிடத்து கணக்கிலுள்ள நிதியத்தின் மீது ஒன்றுசேர்ந்த வட்டிகள்.

4. அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

(i) அதே வெளிநாட்டுத் தாய்க் கம்பனியின் சார்பில் முகவரினால் அதே உரிமம் பெற்ற வர்த்தக வங்கியில் பேணப்படும் ரூபாக் கணக்குகளுக்கான மாற்றல்.
(ii) கலம்கள் புறப்பட்ட/ பணிகள் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் அத்தகைய மாற்றல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்குமிடத்து முகவராண்மையின் தரகரான முகவரின் வங்கிக் கணக்கிற்கான மாற்றல்.
(iii) வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கிற்கு அல்லது துறைமுக முனைக்கோடிக் கட்டணம் தொடர்பாக, அட்டவணை 1இல் பட்டியலிடப்பட்டவாறான துறைமுக முனைக்கோடி தொழிற்பாட்டாளரின் பெயரில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படுகின்ற கணக்கொன்றிற்கான மாற்றல்.
(iv) வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கிற்கு அல்லது பெற்றோலியக் கைத்தொழில் துறைக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சினால் வழங்கப்பட்ட செல்லுபடியான நீர்க்கல எரிபொருள் தொழிற்பாடுகளுக்கான உரிமத்தினை வைத்திருக்கின்ற நீர்க்கல தொழிற்பாட்டாளரின் பெயரில் உரிமம் பெற்ற வங்கியொன்றின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கான மாற்றல்.
(v) வெளிநாட்டுத் தாய்க் கம்பனியிலிருந்து பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்களுக்கெதிராக செலுத்தத்தக்க கப்பல் வசதி ஏற்பாட்டாளர்/ பொருத்தி (சரக்குக் கட்டணம்) கொடுப்பனவுகள் தொடர்பில் வெளிநாட்டு தாய்க் கம்பனியின் சார்பில் இன்னொரு கப்பற்படுத்தல் முகவராண்மையினால் பேணப்படும் வெளிநாட்டு கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வான் நிறுவனங்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான மாற்றல்கள்.
(vi) வெளிநாட்டு தாய்க் கம்பனியிடமிருந்து பெறப்பட்ட உள்முகப் பணவனுப்பல்களுக்கெதிராக வதிபவரினால் வெளிநாட்டுத் தாய்க் கம்பனிக்கு நேரடியாக வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் பொருட்களுக்கான கொடுப்பனவுகள் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கிற்கு அல்லது அத்தகைய வதிபவரின் பெயரில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவில் பேணப்படும் கணக்கொன்றிற்கான மாற்றல்கள்.
(vii) தாய்க் கம்பனியிடமிருந்து பெற்ற உள்முகப் பணவனுப்பல்களுக்கெதிராக முதன்மையாளருக்கான காசுக் கொடுப்பனவொன்றாக முகவரினால் கோரிக்கை விடுக்கப்படுமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகரினால் ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களுக்கமைவாக இருக்குமிடத்து கலமொன்றிற்கு ஐ.அ.டொலர் 50,000 வரையான நாணயத் தாள்களைக் கொண்ட மீளப்பெறுகை.
(viii) வெளிநாட்டு கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வான் நிறுவனங்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அத்துடன் அல்லது வெளிநாட்டுத் தாய்க் கம்பனியின் சார்பில் பேணப்படும் ரூபாக் கணக்கில் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய வரி மற்றும் முகவராண்மை தரகுகள் என்பன உட்பட இலங்கையிலுள்ள தாய்க் கம்பனியின் அனைத்து உள்ளூர் பொறுப்புக்களையும் ஈடுசெய்யத்தக்க அளவிற்குப் போதுமான நிதி வைத்திருக்கப்படுகிறது என்பதனை உறுதிப்படுத்தும் ஆவணமொன்றினை முகவரிடமிருந்து எழுத்து மூலம் பெற்றுக்கொள்ளுமிடத்து தாய்க் கம்பனிக்கு திருப்பி அனுப்பப்படும் மிகை நிதியம்.

5. பொதுவான நிபந்தனைகள்

(i) வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வான் நிறுவனங்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கெதிராக காசோலைப் புத்தகங்கள் வழங்கப்படக்கூடாது.
(ii) வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வான் நிறுவனங்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு மேலதிகப் பற்றுக்களோ, கடன் வசதிகளோ வழங்கப்படக்கூடாது.
(iii) 2002.03.22ஆம் திகதியிடப்பட்ட இல. 06/07/07/2002 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளில் திறக்கப்பட்டு பேணப்படும் அனைத்துக் கணக்குகளும் வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வான் நிறுவனங்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் என மீளப் பெயரிடப்பட வேண்டுமென்பதுடன் இப்பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கிணங்கவும் பேணப்படல் வேண்டும்.
(iv) சரக்குக் கட்டணத்தின் கூறொன்றாக இல்லாத உள்ளூர் கட்டணங்கள்/ விதிப்புக்களாக சேகரிக்கப்பட்டவற்றை எந்தவொரு சூழ்நிலையிலும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனங்கள்/ வான் நிறுவனங்களின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கு கட்டணமாகவோ வைப்புக்களாகவோ வரவு வைக்கக்கூடாது.
(v) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ரூபாவில் சேகரிக்கப்பட்ட சரக்குக் கட்டணத்தினை தாய்க் கம்பனியின் சார்பில் பேணப்படும் ரூபாக் கணக்கில் வரவு வைத்தல் வேண்டும்.
(vi) 2002.03.22ஆம் திகதியிடப்பட்ட இல.06/07/07/2002 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

6. வரைவிலக்கணம்

(i) “வெளிநாட்டுக் கப்பற்படுத்தல் நிறுவனம்” என்பது 1972ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க கப்பற்படுத்தல் முகவர்களுக்கு உரிமமளித்தல் (திருத்தப்பட்டவாறு) சட்டத்தின் கருத்திற்குள்வரும் இலங்கைக்கு வெளியே வதிகின்ற எந்தவொரு கப்பற்படுத்தல் நிறுவனத்தினையும் குறிப்பதாக இருக்கும்.
(ii) வெளிநாட்டு வான் நிறுவனமென்பது இலங்கைக்கு வெளியே வதியும் 2010ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க சிவில் வான் போக்குவரத்து (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் “வெளிநாட்டு வான் போக்குவரத்து தொழிற்பாட்டாளர்” என்ற கருத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
பி. எச். ஓ சந்திரவன்ச
**செலாவணிக் கட்டுப்பாட்டாளர்**

அட்டவணை 1
1. வரையறுக்கப்பட்ட வானூர்தி நிலைய மற்றும் வான் போக்குவரத்துப் பணிகள் (இலங்கை)
2. இலங்கை துறைமுக அதிகாரசபை
3. சவுத் ஏசியா கேட்வே டேர்மினல்ஸ் (பிறைவேட்) லிமிடெட்
4. கொழும்பு இன்ரநஷனல் கொன்டெய்னர் டேர்மினல்ஸ் லிமிடெட்

**தொடர்பு எண்: 37/03/004/006/007**

சேரல்: அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுக் கம்பனிகளுக்கும்

## 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம்

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 2இன் துணைப் பிரிவு 3இன் நியதிகளில் நிதியியல் உளவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட விதிகள்

கொழும்பு
2013 சனவரி 31

டி எம் ரூபசிங்க
**பணிப்பாளர் நிதியியல் உளவறிதல் பிரிவு**

## 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் கீழான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல்

2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவின் ஏற்பாட்டு நியதிகளின்படி, (இதனகத்துப் பின்னர் நி.கொ.அ.சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணம் மற்றும் நாணய மாற்றுப் பணிகள், ஏனைய அறிக்கையிடல் நிறுவனங்களிடையே அறிக்கையிடல் நிறுவனங்களாக குறித்துரைக்கப்பட்டுள்ளன. ஆகவே, நி.கொ.அ.சட்டத்தின் பிரிவு 2(3) இன் கீழ் பின்வரும் விதிகள் விடுக்கப்படுகின்றன. அத்தகைய ஏற்பாடுகளுக்கு ஏதேனும் விதத்தில் முரணாக அல்லது இணங்கியொழுகாமல் இருக்குமிடத்து தண்டனையொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

### பகுதி I
### அனைத்து அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுக் கம்பனிகளுக்கும் ஏற்புடைத்தானது

1. இவ்விதிகளின் நோக்கத்திற்காக,
   அ. "அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுக் கம்பனி" என்பது 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி வெளிநாட்டு நாணயத் தாள்களை வாங்கவும் பரிமாற்றவும், பயணிகள் காசோலைகளை காசாக மாற்றவும் அத்துடன்/ அல்லது வெளிநாட்டு நாணயத் தாள்களை விற்கவும் அனுமதிக்கப்பட்ட கம்பனியொன்று எனப் பொருள்படும்.
   ஆ. "செலாவணிக் கட்டுப்பாட்டாளர்" என்பது 1953ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   இ. "சட்டத்திற்கு மாறான நடவடிக்கை" என்பது 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 33ஆம் பிரிவின் அதே கருத்தினையே கொண்டிருத்தல் வேண்டும்.

2. நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 6(அ) இன் நியதிகளின்படி, ரூபா ஒரு மில்லியன் (ரூ.1,000,000) காசினை அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தினை விஞ்சிய ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டது [2008.06.25 ஆம் திகதியிடப்பட்ட இல. 1555/9 கொண்ட வர்த்தமானி (அதிவிசேடம்)]. மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றுகின்ற விதத்தில், நிதியியல் உளவறிதல் பிரிவு, மேற்குறிப்பிட்ட அளவினை விஞ்சுகின்ற கொடுக்கல்வாங்கல்களின் விபரங்களை, செலாவணிக் கட்டுப்பாட்டாளரால் விடுக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு, செலாவணிக் கட்டுப்பாட்டாளருக்கு அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுக் கம்பனிகளினால் சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்துத் தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள்/ அறிக்கைகளிலிருந்து பெற்றுக்கொள்ளவிருக்கிறது.

3. நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின்படி அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுக் கம்பனியொன்று:
   அ. ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் ஏதேனும் சட்ட விரோதமான செயற்பாட்டை அல்லது வேறு ஏதேனும் குற்றவியல் தவறைப் புரிதல் தொடர்பிலானதாக இருக்கக்கூடும் எனச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணத்தினைக் கொண்டிருக்குமிடத்து: அல்லது
   ஆ. அது
      (i) 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பினை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தவறொன்றிற்கு ஆயத்தம் செய்கின்றதோர் செயலொன்றிற்கு இயைபுள்ளதென;
      (ii) சட்ட விரோதமான செயற்பாடொன்றை அமைத்துருவாக்கும் செயலொன்றிற்கான புலனாய்வொன்றிற்கு அல்லது வேறுவகையில் இச்சட்டத்தினை அல்லது 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலைத் தடைசெய்யும் சட்டத்தை அல்லது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பினை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தினை வலுவூட்டுவதில் இயைபுள்ளதென

   சந்தேகிக்கின்ற தகவலைக் கொண்டிருக்குமிடத்து,

   அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுக் கம்பனி, அச்சந்தேகம் உருவாகிய பின்னர் சாத்தியப்படக் கூடியளவிற்கு விரைவாக, ஆனால் அதிலிருந்து இரண்டு வேலை நாட்களுக்குப் பிந்தாமல் கொடுக்கல்வாங்கல்களை அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு அறிவித்தல் வேண்டும். குறிப்பிடப்பட்ட அறிக்கை எழுத்தில் இருக்கவேண்டியதுடன் அஞ்சல் மூலமாக, தொலைபேசி அறிவித்தலைத் தொடர்ந்து இருபத்து நான்கு மணித்தியாலத்திற்குள் எழுத்து மூலமாக தொலைநகல் அல்லது இலத்திரனியல் அஞ்சல் மூலமாக அல்லது நிதியியல் உளவறிதல் பிரிவினால் தீர்மானிக்கப்படுகின்ற வேறு ஏதேனும் ஒரு முறையில் அனுப்பி வைக்கலாம்.

4. மேற்குறிப்பிட்ட தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுக் கம்பனியும் "சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கை" என இங்கு இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கு ஏற்றவிதத்தில் சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுமாறு தேவைப்படுத்தப்பட்டன.

5. நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் 9ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு உட்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ள சந்தேகத்திற்குரிய கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான ஏதேனும் தகவல்களை ஆளொருவர், வாடிக்கையாளருக்கோ அல்லது வேறு எவரேனும் ஆளுக்கோ வெளிப்படுத்தக்கூடாது. அத்தகைய வெளிப்படுத்தல் நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றமொன்றாகும்.

6. நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 14இன் நியதிகளில், ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுக் கம்பனியும் இணங்குவிப்பு அலுவலரை நியமிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. அவர் நிதிசார் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு கம்பனி இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

7. நிதிசார் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் பிரிவு 4 இனால் குறித்துரைக்கப்பட்டவாறு, ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுக் கம்பனியும் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்பான கடிதத் தொடர்புகளையும் பதிவேடுகளையும் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் அனைத்து பதிவேடுகளையும் ஆறு ஆண்டு காலப்பகுதிக்கு பேணிவருதல் வேண்டும்.

### பகுதி II
### "வெளிநாட்டு நாணயத் தாள்களை வாங்கவும் மாற்றவும் பயணிகள் காசோலையினை காசாக்குவதற்குமான" அனுமதிப்பத்திரத்தினை வைத்திருக்கின்ற உடமையாளர்களுக்கு ஏற்புடைத்தானவை

8. ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுக் கம்பனியும், செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் விடுக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் பிரிவு (ஓ) இல் குறித்துரைக்கப்பட்டவாறு, ஒவ்வொரு வாடிக்கையாளரினதும் தகவல்களைப் பேணுதல் வேண்டும். மேலும், அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுக் கம்பனி முகவரியினையும் வெளிநாட்டு நாணயம் கிடைத்த மூலத்தினையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதுடன் வாடிக்கையாளரின் அடையாளத்தினை சரிபார்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அனைத்துத் தொடர்பான ஆவணங்களின் பிரதிகளையும் வைத்திருத்தல் வேண்டும்.

### பகுதி III
### "வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்கின்ற இலங்கைப் பிரசைகளுக்கும் இலங்கையிலுள்ள வெளிநாட்டு வதிவோருக்கும் வெளிநாட்டு நாணயத் தாள்களை விற்பனை செய்வதற்கான அனுமதி" இனைவைத்திருப்பவர்களுக்கு ஏற்புடைத்தானவை

9. ஒவ்வொரு அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுக் கம்பனியும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் விடுக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் (4) மற்றும் (6) ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்டவாறு ஒவ்வொரு வாடிக்கையாளர் தொடர்பிலும் தகவல்களைப் பேணுதல் வேண்டும். மேலும், அதிகாரமளிக்கப்பட்ட நாணய மாற்றுக் கம்பனி நிதி எவ்வாறு கிடைத்ததென்ற மூலத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் வாடிக்கையாளரின் அடையாளத்தினைச் சரிபார்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அனைத்துத் தொடர்பான ஆவணங்களினதும் பிரதிகளை வைத்திருத்தல் வேண்டும்.

**சுற்றறிக்கை எண்: 01/13** 2013 பெப்புருவரி 28

**தொடர்பு எண்: 37/01/062/0001/01**

சேரல்: உரிமம் பெற்ற வங்கிகள், உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள், காப்புறுதிக் கம்பனிகள்
மற்றும் பங்கு தரகுக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

### நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவினால் விடுக்கப்பட்ட பகிரங்க அறிக்கை

பணம் தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் தொடர்பாக உலகளாவியக் கொள்கை வகுப்பாளரான நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவானது, 2013 பெப்புருவரி 22ஆம் நாளன்று நடைபெற்ற அதன் முழுமை வாய்ந்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அவர்களது விதந்துரைப்புக்களின் நியதிகளில் அதாவது 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பினை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் மற்றும் 2006ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க பணம் தூயதாக்கலைத் தடைசெய்கின்ற சட்டம் போன்ற பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குகின்ற சட்டங்கள் பற்றி மீளாய்வுகளை மேற்கொண்டது.

பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குகின்ற சட்டங்களில் காணப்படும் குறைபாடுகளைக் களைவதில் இலங்கையின் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டு, இலங்கையானது இணங்குவிப்பு ஆவணங்களைக் கொண்ட நாடாகப் பட்டியலிடப்பட்டிருப்பதுடன் அதன் பகிரங்க அறிக்கையில் உலகளாவிய பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒடுக்குகின்ற சட்டங்களின் மூலம் மேம்பட்டு வருகின்ற நாடு என அடையாளம் காணப்பட்டிருக்கிறது. நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழு மற்றும் பணம் தூயதாக்கல் தொடர்பான ஆசிய பசுபிக் குழுமம் என்பனவற்றுடன் பணியாற்றுவதில் இலங்கையின் கடப்பாட்டிற்குப் பதிலிறுத்தும் விதத்தில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தொடர்பான பகிரங்க அறிக்கையினை நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் வெப்தளத்தில் https://www.fatf_gafi.org என்ற வெப் இணைப்பைப் பயன்படுத்தி பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

உங்கள் உண்மையுள்ள,
**பணிப்பாளர் நிதியியல் உளவறிதல் பிரிவு**

பிரதி: இணங்குவிப்பு அலுவலர்கள்

**சுற்றறிக்கை - 02/13** 2013 ஒத்தோபர் 29

நிதியியல் உளவறிதல் பிரிவு

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

### பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதிக்கு நிதியிடுவதனைத் தடை செய்கின்ற மற்றும் ஒடுக்குகின்றமை தொடர்பாக அறிக்கையிடும் நிறுவனங்களின் கடப்பாடு

அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள்/ உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் கவனம் 2012 பெப்புருவரியிலிருந்து நடைமுறைக்குவந்த திருத்தப்பட்ட நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் 6ஆம் இலக்க விதந்துரைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் விடுக்கப்பட்ட 2012 மே 31ஆம் நாளிடப்பட்ட இல. 1760/40 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் என்பனவற்றின்பால் ஈர்க்கப்படுகிறது.

1. இதற்கமைய, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1267 (1999) மற்றும் அதனைத் தொடர்ந்து கொண்டு வரப்பட்ட, குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்களை உடனடியாக முடக்குதல் மற்றும் அத்தகைய நிதிகளை நிதியியல் சொத்துக்களை அல்லது பொருளாதார மூலவளங்களை அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ அல்லது நன்மைபெறுநர்களுக்கோ அவர்கள் நன்மையடையும் விதத்தில் கிடைக்கச் செய்யப்படக்கூடாது என நாடுகளைத் தேவைப்படுத்தும் தீர்மானங்களுக்கும் இணங்கியொழுகுவதற்காக, மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் விபரிக்கப்பட்ட இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்கமைய, ஒவ்வொரு உரிமம் பெற்ற வங்கியும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனியும் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்களை முடக்குவதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருக்கின்றன.

2. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்களினதும் நிறுவனங்களினதும் பெயர்களை அறிவிக்கும் வேளையிலிருந்து முடக்குதல் நடைமுறைக்குவரும் என்பதுடன், அத்தகைய முடக்கும் நடவடிக்கை ஆட்கள் அல்லது நிறுவனம் குறிப்பிட்ட பட்டியலிலிருந்து நீக்கப்படுகின்ற வரையில் நடைமுறையிலிருந்து வருதலும் வேண்டும்.

3. பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதுடன் தொடர்பான இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளுடன் இணங்கியொழுகின்ற விதத்தில் உரிமம் பெற்ற வங்கி அல்லது உரிமம் பெற்ற நிதிக் கம்பனியின் கடப்பாடுகள் மீதான விபரங்களுக்கு தயவுசெய்து இணைக்கப்பட்டுள்ள எவ்ஐயு/ யுஎன்எஸ்சிஆர்1267/ பணிப்புக்கள் இல.01 இனைப் பார்க்கவும். இப்பணிப்புரைகள் தற்போதுள்ள பணம் தூயதாக்கலைத் தடைசெய்கின்ற மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதற்கு எதிரானவை தொடர்பான உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகளின் இணங்குவிப்பு கட்டமைப்பின் ஒரு பகுதியாக கருதப்படல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
**பணிப்பாளர் நிதியியல் உளவறிதல் பிரிவு**

படி: அனைத்து உரிமம் பெற்ற வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் ஆகியவற்றின் இணங்குவிப்பு அலுவலர்கள்
பணிப்பாளர், வங்கி மேற்பார்வை
பணிப்பாளர், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வை

**எவ்ஐயு/ யுஎன்எஸ்சிஆர்1267/ பணிப்புரை இல. 01**

## பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாத நிதியிடலை தடை செய்தல் மற்றும் ஒடுக்குதல் தொடர்பாக அறிக்கையிடும் நிறுவனங்களின் கடப்பாடுகள்

2012 மே 31ஆம் திகதியிடப்பட்ட இல. 1760/40 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிக்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1267 (1999)இன் பந்தி 4(ஆ) மற்றும் அதனுடன் தொடர்பான பந்தி மற்றும் முன்னர் கூறப்பட்டவற்றில், குறிப்பாக, 1988 (2011) மற்றும் 1989 (2011)இல் செய்யப்பட்ட தீர்மானங்களின் பந்தி 1இல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை பின்னர் செய்த திருத்தங்கள் மற்றும் வலுப்படுத்தல்கள் என்பனவற்றின் கீழ், நிதிகள் அல்லது சொத்துக்களினை முடக்குவது தொடர்பான கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கும் பொருட்டு இலங்கைக்குள் மேற்குறிப்பிட்ட கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவது பற்றி இத்தால் குறித்துரைக்கப்படுகின்றன.

1. 2012 மே 31ஆம் திகதி வர்த்தமானப்படுத்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் 2ஆம் இலக்க ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளை கடுமையான முறையில் பின்பற்றுமாறும் (படி இணைக்கப்பட்டுள்ளது) கடுமையான முறையில் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துமாறும் வங்கிகள்/ நிதிக் கம்பனிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

2. தீர்மானங்கள் 1267 (1999)/ 1989 (2011) மற்றும் 1267 (1999)/ 1988 (2011) இற்கிணங்க நிறுவப்பட்ட பாதுகாப்புச் சபைக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் (குறிப்பிடப்பட்ட வர்த்தமானியில் திரட்டப்பட்ட பட்டியல் என குறிப்பீடு செய்யப்பட்டது) பட்டியலுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் பெறப்படும் நேரத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவு அத்தகைய திருத்தங்களை வங்கிகள்/ நிதியியல் கம்பனிகளின் அனைத்து இணங்குவிப்பு அலுவலர்களுக்கும் மின்னஞ்சலினூடாக சுற்றோட்டப்படுத்தும். மேலும், வங்கிகள்/ நிதிக் கம்பனிகளுக்கு, அத்தகைய தனிநபர்கள் நிறுவனங்களின் இற்றைப்படுத்தப்பட்ட பட்டியலை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் வெப்தளமான https://www.un.org/sc/committees/1267/consolist.shtml மற்றும் https://www.un.org/sc/committees/1988/list.shtml இல் பார்க்குமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது.

3. குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள்/ நிறுவனங்களின் பட்டியலை இற்றைப்படுத்துவதற்கான அறிவித்தல்கள் நிதியியல் உளவறிதல் பிரிவிலிருந்து கிடைத்ததும் அதற்குள் புதிய வியாபார தொடர்புகளை மேற்கொள்வதற்கு முன்னதாக உத்தேச வாடிக்கையாளர்களின் பெயர்கள் பட்டியலில் காணப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலும், குறித்துரைக்கப்பட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் நிறுவனங்களுடன் அல்லது தனிநபர்களுடன் வியாபார உறவுமுறைகளையோ அல்லது தொடர்புகளையோ கொண்டிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் வங்கிகள்/ நிதியியல் கம்பனிகள் தற்போதுள்ள வியாபாரத் தொடர்புகளை ஆராய்தல் வேண்டும்.

4. சந்தேகத்திற்குரிய பயங்கரவாதத்திற்கான நிதியிடலை வினைத்திறனுடன் கூடிய விதத்தில் கண்டறிவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில், அறிக்கையிடுகின்ற நிறுவனம் குறித்துரைக்கப்பட்ட பட்டியலிலுள்ள தனிநபர்கள்/ நிறுவனங்களின் பெயர்களையும் விபரங்களையும் தரவுத் தளத்தில் பேணுதல் வேண்டும்.

5. தரவுத் தளத்திலுள்ள தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டு தொடர்பான விதத்தில் காணப்படுகின்றமை பற்றி வங்கிகள்/ நிதியியல் கம்பனிகள் குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்கள் என்பனவற்றை அடையாளங்காணும் நோக்கத்திற்காக, தலைமை அலுவலகம், கிளைகள் அல்லது துணை நிறுவனங்களிலுள்ள ஊழியர்களை சுலபமாக அணுகுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

6. குறித்துரைக்கப்பட்ட தனிநபர்/ நிறுவனங்களின் விபரங்கள் எவரேனும் வாடிக்கையாளர்களுடன் பொருந்துவதாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில், வங்கிகள் குறித்துரைக்கப்பட்ட ஆட்களை ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதிலிருந்தும் தடை செய்ய வேண்டியதுடன் 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் 5ஆம் 6ஆம் பந்திகளின்படி தாமதமின்றி நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்களை முடக்கி வைத்தலும் வேண்டும்.

7. குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது நிதியியல் மூலவளங்கள் என்பன முடக்கப்பட்டவுடன் அல்லது குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள்/ நிறுவனங்களினால் கொடுக்கல்வாங்கல்களுக்கான எத்தனிப்புக்கள் நிகழுமிடத்து வங்கிகள்/ நிதிக் கம்பனிகள் அத்தகைய வாடிக்கையாளரை கண்டறிந்த நேரத்திலிருந்து 24 மணித்தியாலங்களுக்குள் உடனடியாக அத்தகைய வாடிக்கையாளர்களினால் அவர்களின் ஏடுகளில் வைத்திருக்கப்படும் நிதியம், நிதியியல் சொத்துக்கள் அல்லது நிதியியல் மூலவளங்கள் தொடர்பான விபரங்களை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு தொலைநகல் இல. 011-2477692 அல்லது 011-2477722 இற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன் 011-2477125 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் அறிவிக்கலாம். அஞ்சல்/ தொலைநகல் மூலமாக அனுப்பப்படுகின்ற விபரங்களுக்குப் புறம்பாக (fiu@cbsl.lk) என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமும் அனுப்புவது அவசியமாகும்.

8. வங்கிகள்/ நிதிக் கம்பனிகள் மேலேயுள்ள பந்தி 7இல் குறிப்பிடப்பட்ட தொடர்பூட்டல்களின் பிரதியொன்றினை தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் (தேசிய புலனாய்வுத் தலைவர், தகுதி வாய்ந்த அதிகாரி அலுவலகம், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, 15/5 பலடக்ஷ மாவத்தை, கொழும்பு 3 என்ற முகவரிக்கு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்ட விபரங்களுக்குப் புறம்பாக அவற்றினை (cniofficemod@gmail.com) மின்னஞ்சலிலும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

9. 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஐக்கிய நாடுகளினது விதிகளின் ஏற்பாடுகள் தொடர்பில் வங்கிகள்/ நிதிக் கம்பனிகள் அவற்றின் அலுவலர்களுக்கு அறிவிக்க வேண்டியதுடன் அவற்றிற்கு கடுமையாக இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

10. இணங்குவிப்பு அலுவலர்கள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1267 (1999) மற்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1988 (2011) மற்றும் 1989 (2011) என்பன உட்பட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1267 (1999) இற்கு தற்போதும் மற்றும் எதிர்காலத்திலும் மேற்கொள்ளப்படக்கூடிய தீர்மானங்களை நடைமுறைப்படுத்தத்தக்க விதத்தில் எழுத்து மூலமான உள்ளக நடைமுறைகளையும் முறைமைகளையும் உருவாக்கிப் பேணி வருவதற்கும் பொறுப்புடையவர்களாவர்.

சுற்றறிக்கை - 03/13 2013 நவெம்பர் 04

சேரல்: காப்புறுதிக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதிக்கு நிதியிடுவதனைத் தடை செய்கின்ற மற்றும் ஒடுக்குகின்றமை தொடர்பாக அறிக்கையிடும் நிறுவனங்களின் கடப்பாடு

அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளினதும் கவனம் 2012 பெப்புருவரியிலிருந்து நடைமுறைக்குவந்த திருத்தப்பட்ட நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் 6ஆம் இலக்க விதந்துரைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் விடுக்கப்பட்ட 2012 மே 31ஆம் நாளிடப்பட்ட இல. 1760/40 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் என்பனவற்றின்பால் ஈர்க்கப்படுகிறது.

1. இதற்கமைய, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1267 (1999) மற்றும் அதனைத் தொடர்ந்து கொண்டு வரப்பட்ட, குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்களை உடனடியாக முடக்குதல் மற்றும் அத்தகைய நிதிகளை நிதியியல் சொத்துக்களை அல்லது பொருளாதார மூலவளங்களை அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ அல்லது நன்மைபெறுநர்களுக்கோ அவர்கள் நன்மையடையும் விதத்தில் கிடைக்கச் செய்யப்படக்கூடாது என நாடுகளைத் தேவைப்படுத்தும் தீர்மானங்களுக்கும் இணங்கியொழுகுவதற்காக மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் விபரிக்கப்பட்ட இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்கமைய, ஒவ்வொரு காப்புறுதிக் கம்பனியும் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்களை முடக்குவதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருக்கின்றது.

2. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்களினதும் நிறுவனங்களினதும் பெயர்களை அறிவிக்கும் வேளையிலிருந்து முடக்குதல் நடைமுறைக்குவரும் என்பதுடன், அத்தகைய முடக்கும் நடவடிக்கை ஆட்கள் அல்லது நிறுவனம் குறிப்பிட்ட பட்டியலிலிருந்து நீக்கப்படுகின்ற வரையில் நடைமுறையிலிருந்து வருதலாதலும் வேண்டும்.

3. பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதுடன் தொடர்பான இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளுடன் இணங்கியொழுகின்ற விதத்தில் காப்புறுதிக் கம்பனிகளின் கடப்பாடுகள் மீதான விபரங்களுக்கு தயவுசெய்து இணைக்கப்பட்டுள்ள எவ்ஐயு/ யுஎன்எஸ்சிஆர்1267/ பணிப்புக்கள் இல.02 இனைப் பார்க்கவும். இப்பணிப்புரைகள் தற்போதுள்ள பணம் தூயதாக்கலைத் தடைசெய்கின்ற மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதற்கு எதிரானவை தொடர்பான காப்புறுதிக் கம்பனிகளின் இணங்குவிப்பு கட்டமைப்பின் ஒரு பகுதியாக கருதப்படல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
**பணிப்பாளர் நிதியியல் உளவறிதல் பிரிவு**

படி: அனைத்து காப்புறுதிக் கம்பனிகளின் இணங்குவிப்பு அலுவலர்கள் பணிப்பாளர் நாயகம்/ இலங்கை காப்புறுதிச் சபை

**எவ்ஐயு/ யுஎன்எஸ்சிஆர்1267/ பணிப்புரை இல. 02**

## பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாத நிதியிடலை தடை செய்தல் மற்றும் ஒடுக்குதல் தொடர்பாக அறிக்கையிடும் நிறுவனங்களின் கடப்பாடுகள்

2012 மே 31ஆம் திகதியிடப்பட்ட இல. 1760/40 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிக்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1267 (1999)இன் பந்தி 4(ஆ) மற்றும் அதனுடன் தொடர்பான பந்தி மற்றும் முன்னர் கூறப்பட்டவற்றில், குறிப்பாக, 1988 (2011) மற்றும் 1989 (2011)இல் செய்யப்பட்ட தீர்மானங்களின் பந்தி 1இல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை பின்னர் செய்த திருத்தங்கள் மற்றும் வலுப்படுத்தல்கள் என்பனவற்றின் கீழ், நிதிகள் அல்லது சொத்துக்களினை முடக்குவது தொடர்பான கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கும் பொருட்டு இலங்கைக்குள் மேற்குறிப்பிட்ட கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவது பற்றி இத்தால் குறித்துரைக்கப்படுகின்றன.

1. 2012 மே 31ஆம் திகதி வர்த்தமானப்படுத்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் 2ஆம் இலக்க ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளை கடுமையான முறையில் பின்பற்றுமாறும் (படி இணைக்கப்பட்டுள்ளது) கடுமையான முறையில் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துமாறும் காப்புறுதிக் கம்பனிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

2. தீர்மானங்கள் 1267 (1999)/ 1989 (2011) மற்றும் 1267 (1999)/ 1988 (2011) இற்கிணங்க நிறுவப்பட்ட பாதுகாப்புச் சபைக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் (குறிப்பிடப்பட்ட வர்த்தமானியில் திரட்டப்பட்ட பட்டியல் என குறிப்பீடு செய்யப்பட்டது) பட்டியலுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் பெறப்படும் நேரத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவு அத்தகைய திருத்தங்களை காப்புறுதிக் கம்பனிகளின் அனைத்து இணங்குவிப்பு அலுவலர்களுக்கும் மின்னஞ்சலினூடாக சுற்றோட்டப்படுத்தும். மேலும், காப்புறுதிக் கம்பனிகளுக்கு, அத்தகைய தனிநபர்கள் நிறுவனங்களின் இற்றைப்படுத்தப்பட்ட பட்டியலை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் வெப்தளமான https://www.un.org/sc/committees/1267/consolist.shtml மற்றும் https://www.un.org/sc/committees/1988/list.shtml இல் பார்க்குமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது.

3. குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள்/ நிறுவனங்களின் பட்டியலை இற்றைப்படுத்துவதற்கான அறிவித்தல்கள் நிதியியல் உளவறிதல் பிரிவிலிருந்து கிடைத்ததும் அதற்குள் புதிய வியாபார தொடர்புகளையும் மேற்கொள்வதற்கு முன்னதாக உத்தேச வாடிக்கையாளர்களின் பெயர்கள் பட்டியலில் காணப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலும், குறித்துரைக்கப்பட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் நிறுவனங்களுடன் அல்லது தனிநபர்களுடன் வியாபார உறவுமுறைகளையோ அல்லது தொடர்புகளையோ கொண்டிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் காப்புறுதிக் கம்பனிகள் தற்போதுள்ள வியாபாரத் தொடர்புகளை ஆராய்தல் வேண்டும்.

4. சந்தேகத்திற்குரிய பயங்கரவாதத்திற்கான நிதியிடலை வினைத்திறனுடன் கூடிய விதத்தில் கண்டறிவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில், அறிக்கையிடுகின்ற நிறுவனம் குறித்துரைக்கப்பட்ட பட்டியலிலுள்ள தனிநபர்கள்/ நிறுவனங்களின் பெயர்களையும் விபரங்களையும் தரவுத் தளத்தில் பேணுதல் வேண்டும்.

5. தரவுத் தளத்திலுள்ள தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டு தொடர்பான விதத்தில் காணப்படுகின்றமை பற்றி காப்புறுதிக் கம்பனிகள் குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்கள் என்பனவற்றை அடையாளங்காணும் நோக்கத்திற்காக, தலைமை அலுவலகம், கிளைகள் அல்லது துணை நிறுவனங்களிலுள்ள ஊழியர்களை சுலபமாக அணுகுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

6. குறித்துரைக்கப்பட்ட தனிநபர்/ நிறுவனங்களின் விபரங்கள் எவரேனும் வாடிக்கையாளர்களுடன் பொருந்துவதாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில், காப்புறுதிக் கம்பனிகள் குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதிலிருந்தும் தடை செய்ய வேண்டியதுடன்

2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் 5ஆம் 6ஆம் பந்திகளின்படி தாமதமின்றி நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்களை முடக்கி வைத்தலும் வேண்டும்.

7. குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது நிதியியல் மூலவளங்கள் என்பன முடக்கப்பட்டவுடன் அல்லது குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள்/ நிறுவனங்களினால் கொடுக்கல்வாங்கல்களுக்கான எத்தனிப்புக்கள் நிகழுமிடத்து காப்புறுதிக் கம்பனிகள் அத்தகைய வாடிக்கையாளரை கண்டறிந்த நேரத்திலிருந்து 24 மணித்தியாலங்களுக்குள் உடனடியாக அத்தகைய வாடிக்கையாளர்களினால் அவர்களின் ஏடுகளில் வைத்திருக்கப்படும் நிதியம், நிதியியல் சொத்துக்கள் அல்லது நிதியியல் மூலவளங்கள் தொடர்பான விபரங்களை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு தொலைநகல் இல. 011-2477692 அல்லது 011-2477722 இற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன் 011-2477125 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் அறிவிக்கலாம். அஞ்சல்/ தொலைநகல் மூலமாக அனுப்பப்படுகின்ற விபரங்களுக்குப் புறம்பாக (fiu@cbsl.lk) என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமும் அனுப்புவது அவசியமாகும்.

8. காப்புறுதிக் கம்பனிகள் மேலேயுள்ள பந்தி 7இல் குறிப்பிடப்பட்ட தொடர்பூட்டல்களின் பிரதியொன்றினை தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் (தேசிய புலனாய்வுத் தலைவர், தகுதி வாய்ந்த அதிகாரி அலுவலகம், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, 15/5 பலடக்ஷ மாவத்தை, கொழும்பு 3 என்ற முகவரிக்கு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்ட விபரங்களுக்குப் புறம்பாக அவற்றினை (cniofficemod@gmail.com) மின்னஞ்சலிலும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

9. 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஐக்கிய நாடுகளினது விதிகளின் ஏற்பாடுகள் தொடர்பில் காப்புறுதிக் கம்பனிகள் அவற்றின் அலுவலர்களுக்கு அறிவிக்க வேண்டியதுடன் அவற்றிற்கு கடுமையாக இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

10. இணங்குவிப்பு அலுவலர்கள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1267 (1999) மற்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1988 (2011) மற்றும் 1989 (2011) என்பன உட்பட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1267 (1999) இற்கு தற்போதும் மற்றும் எதிர்காலத்திலும் மேற்கொள்ளப்படக்கூடிய தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்தத்தக்க விதத்தில் எழுத்து மூலமான உள்ளக நடைமுறைகளையும் முறைமைகளையும் உருவாக்கிப் பேணி வருவதற்கும் பொறுப்புடையவர்களாவர்.

**சுற்றறிக்கை - 04/13** 2013 நவெம்பர் 04

சேரல்: பங்குத்தரகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதிக்கு நிதியிடுவதனைத் தடை செய்கின்ற மற்றும் ஒடுக்குகின்றமை தொடர்பாக அறிக்கையிடும் நிறுவனங்களின் கடப்பாடு

அனைத்து பங்குத்தரகர்களினதும் கவனம் 2012 பெப்புருவரியிலிருந்து நடைமுறைக்குவந்த திருத்தப்பட்ட நிதியியல் நடவடிக்கை செயலணிக் குழுவின் 6ஆம் இலக்க விதந்துரைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் விடுக்கப்பட்ட 2012 மே 31ஆம் நாளிடப்பட்ட இல. 1760/40 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் என்பனவற்றின்பால் ஈர்க்கப்படுகிறது.

1. இதற்கமைய, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1267 (1999) மற்றும் அதனைத் தொடர்ந்து கொண்டு வரப்பட்ட, குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்களை உடனடியாக முடக்குதல் மற்றும் அத்தகைய நிதிகளை நிதியியல் சொத்துக்களை அல்லது பொருளாதார மூலவளங்களை அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ அல்லது நன்மைபெறுநர்களுக்கோ அவர்கள் நன்மையடையும் விதத்தில் கிடைக்கச் செய்யப்படக்கூடாது என நாடுகளைத் தேவைப்படுத்தும் தீர்மானங்களுக்கு இணங்கியொழுகுவதற்காக மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் விபரிக்கப்பட்ட இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை கேட்டுக் கொள்ளப்பட்டது. இதற்கமைய, ஒவ்வொரு பங்குத்தரகரும் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்களை முடக்குவதற்கான வழிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிருக்கின்றார்.

2. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட ஆட்களினதும் நிறுவனங்களினதும் பெயர்களை அறிவிக்கும் வேளையிலிருந்து முடக்குதல் நடைமுறைக்குவரும் என்பதுடன், அத்தகைய முடக்கும் நடவடிக்கை ஆட்கள் அல்லது நிறுவனம் குறிப்பிட்ட பட்டியலிலிருந்து நீக்கப்படுகின்ற வரையில் நடைமுறையிலிருந்து வருதலும் வேண்டும்.

3. பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதுடன் தொடர்பான இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளுடன் இணங்கியொழுகின்ற விதத்தில் பங்குத்தரகர்களின் கடப்பாடுகள் மீதான விபரங்களுக்கு தயவுசெய்து இணைக்கப்பட்டுள்ள எவ்ஐயு/ யுஎன்எஸ்சிஆர்1267/ பணிப்புக்கள் இல.02 இனைப் பார்க்கவும். இப்பணிப்புரைகள் தற்போதுள்ள பணம் தூயதாக்கலைத் தடைசெய்கின்ற மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடுவதற்கு எதிரானவை தொடர்பான பங்குத்தரகர்களின் இணங்குவிப்பு கட்டமைப்பின் ஒரு பகுதியாக கருதப்படல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,
**பணிப்பாளர் நிதியியல் உளவறிதல் பிரிவு**

படி: அனைத்துப் பங்குத்தரகர்களினதும் இணங்குவிப்பு அலுவலர்கள்
பணிப்பாளர் நாயகம்/ இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு
பணிப்பாளர் நாயகம்/ கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

**எவ்ஐயு/ யுஎன்எஸ்சிஆர்1267/ பணிப்புரை இல. 03**

## பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாத நிதியிடலை தடை செய்தல் மற்றும் ஒடுக்குதல் தொடர்பாக அறிக்கையிடும் நிறுவனங்களின் கடப்பாடுகள்

2012 மே 31ஆம் திகதியிடப்பட்ட இல. 1760/40 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிக்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1267 (1999)இன் பந்தி 4(ஆ) மற்றும் அதனுடன் தொடர்பான பந்தி மற்றும் முன்னர் கூறப்பட்டவற்றில், குறிப்பாக, 1988 (2011) மற்றும் 1989 (2011)இல் செய்யப்பட்ட தீர்மானங்களின் பந்தி 1இல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை பின்னர் செய்த திருத்தங்கள் மற்றும் வலுப்படுத்தல்கள் என்பனவற்றின் கீழ், நிதிகள் அல்லது சொத்துக்களினை முடக்குவது தொடர்பான கடப்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிக்கும் பொருட்டு இலங்கைக்குள் மேற்குறிப்பிட்ட கடப்பாடுகளுக்கு இணங்கியொழுகுவது பற்றி இத்தால் குறித்துரைக்கப்படுகின்றன.

1. 2012 மே 31ஆம் திகதி வர்த்தமானப்படுத்தப்பட்ட ஐக்கிய நாடுகளின் 2ஆம் இலக்க ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளை கடுமையான முறையில் பின்பற்றுமாறும் (படி இணைக்கப்பட்டுள்ளது) கடுமையான முறையில் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்துமாறும் பங்குத்தரகர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

2. தீர்மானங்கள் 1267 (1999)/ 1989 (2011) மற்றும் 1267 (1999)/ 1988 (2011) இற்கிணங்க நிறுவப்பட்ட பாதுகாப்புச் சபைக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் (குறிப்பிடப்பட்ட வர்த்தமானியில் திரட்டப்பட்ட பட்டியல் என குறிப்பீடு செய்யப்பட்டது) பட்டியலுக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் பெறப்படும் நேரத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவு அத்தகைய திருத்தங்களை பங்குத்தரகர்களின் அனைத்து இணங்குவிப்பு அலுவலர்களுக்கும் மின்னஞ்சலினூடாக சுற்றோட்டப்படுத்தும். மேலும், பங்குத்தரகர்களுக்கு, அத்தகைய தனிநபர்கள்/ நிறுவனங்களின் இற்றைப்படுத்தப்பட்ட பட்டியலை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் வெப்தளமான https://www.un.org/sc/committees/1267/consolist.shtml மற்றும் https://www.un.org/sc/committees/1988/list.shtml இல் பார்க்குமாறு ஆலோசனை வழங்கப்படுகிறது.

3. குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள்/ நிறுவனங்களின் பட்டியலை இற்றைப்படுத்துவதற்கான அறிவித்தல்கள் நிதியியல் உளவறிதல் பிரிவிலிருந்து கிடைத்ததும் அதற்குள் புதிய வியாபார தொடர்புகளை மேற்கொள்வதற்கு முன்னதாக உத்தேச வாடிக்கையாளர்களின் பெயர்கள் பட்டியலில் காணப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலும், குறித்துரைக்கப்பட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் நிறுவனங்களுடன் அல்லது தனிநபர்களுடன் வியாபார உறவுமுறைகளையோ அல்லது தொடர்புகளையோ கொண்டிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் பங்குத்தரகர்கள் தற்போதுள்ள வியாபாரத் தொடர்புகளை ஆராய்தல் வேண்டும்.

4. சந்தேகத்திற்குரிய பயங்கரவாதத்திற்கான நிதியிடலை வினைத்திறனுடன் கூடிய விதத்தில் கண்டறிவதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில், அறிக்கையிடுகின்ற நிறுவனம் குறித்துரைக்கப்பட்ட பட்டியலிலுள்ள தனிநபர்கள்/ நிறுவனங்களின் பெயர்களையும் விபரங்களையும் தரவுத் தளத்தில் பேணுதல் வேண்டும்.

5. தரவுத் தளத்திலுள்ள தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டு தொடர்பான விதத்தில் காணப்படுகின்றமை பற்றி பங்குத்தரகர்கள் குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்கள் என்பனவற்றை அடையாளங்காணும் நோக்கத்திற்காக, தலைமை அலுவலகம், கிளைகள் அல்லது துணை நிறுவனங்களிலுள்ள ஊழியர்களை சுலபமாக அணுகுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

6. குறித்துரைக்கப்பட்ட தனிநபர்/ நிறுவனங்களின் விபரங்கள் எவரேனும் வாடிக்கையாளர்களுடன் பொருந்துவதாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில், பங்குத்தரகர்கள் குறித்துரைக்கப்பட்ட ஆட்களை ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்வதிலிருந்தும் தடை செய்ய வேண்டியதுடன் 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் ஒழுங்குவிதிகளின் 5ஆம் 6ஆம் பந்திகளின்படி தாமதமின்றி நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்களை முடக்கி வைத்தலும் வேண்டும்.

7. குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் நிதிகள், நிதியியல் சொத்துக்கள் அல்லது நிதியியல் மூலவளங்கள் என்பன முடக்கப்பட்டவுடன் அல்லது குறித்துரைக்கப்பட்ட தனிநபர்கள்/ நிறுவனங்களினால் கொடுக்கல்வாங்கல்களுக்கான எத்தனிப்புக்கள் நிகழுமிடத்து பங்குத்தரகர்கள் அத்தகைய வாடிக்கையாளரை கண்டறிந்த நேரத்திலிருந்து 24 மணித்தியாலங்களுக்குள் உடனடியாக அத்தகைய வாடிக்கையாளர்களினால் அவர்களின் ஏடுகளில் வைத்திருக்கப்படும் நிதியம், நிதியியல் சொத்துக்கள் அல்லது நிதியியல் மூலவளங்கள் தொடர்பான விபரங்களை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு தொலைநகல் இல. 011-2477692 அல்லது 011-2477722 இற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன் 011-2477125 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் அறிவிக்கலாம். அஞ்சல்/ தொலைநகல் மூலமாக அனுப்பப்படுகின்ற விபரங்களுக்குப் புறம்பாக (fiu@cbsl.lk) என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமும் அனுப்புவது அவசியமாகும்.

8. பங்குத்தரகர்கள் மேலேயுள்ள பந்தி 7இல் குறிப்பிடப்பட்ட தொடர்பூட்டல்களின் பிரதியொன்றினை தகுதிவாய்ந்த அதிகாரிக்கும் (தேசிய புலனாய்வுத் தலைவர், தகுதி வாய்ந்த அதிகாரி அலுவலகம், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, 15/5 பலடக்ஷ மாவத்தை, கொழும்பு 3 என்ற முகவரிக்கு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்ட விபரங்களுக்குப் புறம்பாக அவற்றினை (cniofficemod@gmail.com) மின்னஞ்சலிலும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

9. 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஐக்கிய நாடுகளினது விதிகளின் ஏற்பாடுகள் தொடர்பில் பங்குத்தரகர்கள் அவர்களின் அலுவலர்களுக்கு அறிவிக்க வேண்டியதுடன் அவற்றிற்கு கடுமையாக இணங்கியொழுகுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

10. இணங்குவிப்பு அலுவலர்கள் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் 1267 (1999) மற்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1988 (2011) மற்றும் 1989 (2011) என்பன உட்பட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1267 (1999) இற்கு தற்போதும் மற்றும் எதிர்காலத்திலும் மேற்கொள்ளப்படக்கூடிய தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்தத்தக்க விதத்தில் எழுத்து மூலமான உள்ளக நடைமுறைகளையும் முறைமைகளையும் உருவாக்கிப் பேணி வருவதற்கும் பொறுப்புடையவர்களாவர்.

**தொடர்பு எண்: 34/07/029/0001/002** 2013 பெப்புருவரி 27

**சுற்றறிக்கை இல: ஆர்ரிஜிஎஸ்/01/2013**

லங்கா செட்டில் முறைமையின் அனைத்துப் பங்கேற்பாளர்களுக்கும்

**லங்கா செட்டில் முறைமை 2013 மாச்சு 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமையன்று அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து நேரடித் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும்**

இலங்கை மத்திய வங்கி, தடங்கலற்ற வியாபார ஒழுங்குகளைப் பரீட்சித்துக் கொள்ளும் நோக்கத்திற்காக லங்கா செட்டில் முறைமை (ஆர்ரிஜிஎஸ் முறைமை மற்றும் லங்கா செகுயர் முறைமை) மற்றும் அதனுடன் தொடர்பான முறைமைகளின் தொழிற்பாடுகளை 2013 மாச்சு 5ஆம் நாளன்று (செவ்வாய்க்கிழமை) அதன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து மேற்கொள்ளும் என்பதனை அறிவித்துக் கொள்கிறது.

இதன் பொருட்டு லங்கா செட்டில் பங்கேற்பாளர்கள் அவர்களது தொழிலிடத்தில் எந்த மாற்றத்தினையும் செய்யத் **தேவையில்லை** எனவும் மத்திய வங்கியுடனான அவர்களின் வியாபாரத் தொழிற்பாடுகளை வழமையான முறையில் மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.
2013 மாச்சு 05ஆம் நாளன்று இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களைத் தொடர்பு கொள்ள விரும்புவீர்களாயின் நீங்கள் பின்வரும் இலக்கங்களில் தொடர்பினை மேற்கொள்ளமுடியும்.

- ஆர்ரிஜிஎஸ் மற்றும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - 2477068, 2477055, 2477858, 2477832
- சுவிற்ட் - 2477046, 2477858, 2477832
- வெளிநாட்டுச் செலாவணி பின்னரங்க அலுவலகம் - 2477065, 2477852, 2477832
- ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம் - 2477053, 2477057
- லங்கா செகுயர் - 2477852, 2477832, 4858876, 4858879
- ஏனைய பிரிவுகள் - 2477858, 2477832, 4858876, 4858879
- தொலைநகல் - 2866184, 2873244

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்**

என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்காரா
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/002** 2013 ஏப்பிறல் 4

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/02/2013**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்

**2013 ஏப்பிறல் 12ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல்**

இலங்கை மத்திய வங்கி 2013 ஏப்பிறல் 12ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையில் பங்கேற்கும் நிறுவனங்களினது கட்டுப்படுத்தப்பட்ட அலுவலக நேரத்தினைக் கருத்திற் கொண்டு (சிங்கள தமிழ் புத்தாண்டிற்கு முதல் நாள் சனிக்கிழமை வருவதற்குப் பதிலாக அரைநாள் விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது) 2013 ஏப்பிறல் 12ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவலக நேரத்தினை மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கிறது. இதற்கமைய 2013 ஏப்பிறல் 12ஆம் நாளிற்கான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணையின் நண்பகல் 12.00 மணிக்குப் பின்னரான நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்படும்.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (ஏலங்கள்) தீர்ப்பனவுகள் | பி.ப. 12.45 |
| ரூபா வரைவுத் தீர்ப்பனவின் பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் மற்றும் சீராக்க தீர்ப்பனவுகள் | பி.ப. 2.00 |
| மூன்றாந்தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெட்டு நேரம் | பி.ப. 2.15 |
| பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் - இலங்கை உள்ளகக் கொடுப்பனவு முறைமை (பிரிவு 2) | பி.ப. 2.15 |
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (நிலையியல் வசதி) தீர்ப்பனவுகள் | பி.ப. 2.30 |
| ஒரு நாளுக்குள்ளேயான நேர்மாற்று மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுத் தீர்ப்பனவுகள் | பி.ப. 2.45 |
| அலுவல்களை மூடிவிடுதல் | பி.ப. 3.00 |
| கணனி முறைமையினை மூடிவிடுதல் | பி.ப. 3.30 |

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்**

என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்காரா
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்**

**தொடர்பு எண்: 34/07/029/0001/002**

2013 மே 17

**சுற்றறிக்கை எண்: ஆர்ரிஜிஎஸ்/03/2013**

சேரல்: லங்கா செட்டில் முறைமையின் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும்

**2013 மே 23ஆம் நாளன்று (வியாழக்கிழமை) லங்கா செட்டில் முறைமையின் அலுவலக நேரத்தினைக் கட்டுப்படுத்தல்**

இலங்கை மத்திய வங்கி 2013 மே 23ஆம் நாளன்று லங்கா செட்டில் முறைமையில் பங்கேற்கும் நிறுவனங்களினது கட்டுப்படுத்தப்பட்ட அலுவலக நேரத்தினைக் கருத்திற் கொண்டு (வெசாக் நோன்மதி தினத்திற்கு மறுதினம் 2013 மே 25ஆம் நாள் சனிக்கிழமை வருவதற்குப் பதிலாக அரைநாள் விடுமுறை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது) 2013 மே 23ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவலக நேரத்தினை மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்திருக்கிறது. இதற்கமைய 2013 மே 23ஆம் நாளிற்கான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணையின் நண்பகல் 12.00 மணிக்குப் பின்னரான நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்படும்.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (ஏலங்கள்) தீர்ப்பனவுகள் | பி.ப. 12.45 |
| ரூபா வரைவுத் தீர்ப்பனவின் பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் மற்றும் சீராக்க தீர்ப்பனவுகள் | பி.ப. 2.00 |
| மூன்றாந்தரப்பினரின் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெட்டு நேரம் | பி.ப. 2.15 |
| பல்புடை தேறிய தீர்ப்பனவுகள் - இலங்கை உள்ளகக் கொடுப்பனவு முறைமை (பிரிவு 2) | பி.ப. 2.15 |
| திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (நிலையியல் வசதி) தீர்ப்பனவுகள் | பி.ப. 2.30 |
| ஒரு நாளுக்குள்ளேயான நேர்மாற்று மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுத் தீர்ப்பனவுகள் | பி.ப. 2.45 |
| அலுவல்களை மூடிவிடுதல் | பி.ப. 3.00 |
| கணனி முறைமையினை மூடிவிடுதல் | பி.ப. 3.30 |

ரஞ்சனி வீரசிங்க
**பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுகள்**

என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்காரா
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்**

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை**
**அதிவிசேடமானது**

**1813/25 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை**
**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**

**பகுதி I : தொகுதி (I) - பொது**
**அரசாங்க அறிவித்தல்கள்**
**2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்கக் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம்**

**2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைமை ஒழுங்குவிதிகள்**

அரசியலமைப்பின் 44ஆம் உறுப்புரையின் (2)ஆம் பந்தி மற்றும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 11ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

மஹிந்த ராஜபக்ஷ
**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி**

கொழும்பு
2013 மே 30

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கக் கொடுப்பனவு அட்டைகள் மற்றும் செல்லிடக் கொடுப்பனவு முறைமை ஒழுங்குவிதிகள் (இதனகத்துப் பின்னர் “ஒழுங்குவிதிகள்” எனக் குறிப்பிடப்படும்) என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (அ) இலங்கை மத்திய வங்கி (இதனகத்துப் பின்னர் “மத்திய வங்கி” எனக் குறிப்பிடப்படும்) ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை அதிகாரசபையாக செயலாற்றுதல் வேண்டும் என்பதுடன், கொடுப்பனவு அட்டைகளின் அனைத்துச் சேவை வழங்குநர்கள் அத்துடன்/அல்லது செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளினதும் ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் கண்காணிப்பிற்குப் பொறுப்பாதலும் வேண்டும்.
   (ஆ) இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க, மத்திய வங்கியின் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு அதன் அலுவலர்களில் எவருக்கேனும் மத்திய வங்கி எழுத்து மூலமான அதிகாரத்தினை வழங்கலாம்.

3. இவ்வொழுங்கு விதிகளில் “கொடுப்பனவு அட்டை” என்பது பற்று அட்டைகள், கொடுகடன் அட்டைகள், விதிப்பு அட்டைகள் மற்றும் பெறுமதி சேமிக்கப்பட்ட அட்டைகள் என்பவற்றை மாத்திரம் குறிக்கும்.

4. ஆளெவரும் அதிகாரசபையினால் வழங்கப்படும் அதிகாரத்தின் கீழன்றியும் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உரிமமொன்றிற்கு இணங்கவன்றியும் பணி வழங்குநர் ஒருவராக வியாபாரத்தில் ஈடுபடவோ அல்லது தொழிற்படவோ அல்லது இன்னுமொருவரை வியாபாரத்தில் ஈடுபடுத்துதலோ அல்லது தொழிற்படுத்துதலோ ஆகாது.

5. (அ) பணி வழங்குநர் ஒருவராக வியாபாரத்தில் ஈடுபட அல்லது தொழிற்பாட்டில் ஈடுபடுவதற்கான உரிமத்தினைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க பின்வரும் ஆட்கள் உரித்துடையவராவார்;
   (i) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி;
   (ii) உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கி;
   (iii) நிதிக் கம்பனியொன்று;
   (iv) திருத்தப்பட்டவாறான 1991ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க இலங்கை தொலைத் தொடர்பூட்டல் சட்டத்தின் நியதிகளில் வழங்கப்பட்ட உரிமமொன்றின் கீழ் செலூலர் செல்லிடத் தொலைபேசிப் பணிகளை வழங்கும் ஒரு தொழிற்பாட்டாளர்;
   (v) 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கருத்திற்குட்பட்ட உத்தரவாதத்தின் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட கம்பனி, தனியார் கம்பனி, கரைகடந்த கம்பனி அல்லது வெளிநாட்டுக் கம்பனி தவிர்ந்த, 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கம்பனியொன்றாகப் பதிவு செய்யப்பட்டு குறைந்தபட்சம் ரூபா நூற்று ஐம்பது மில்லியன்களை (150) நிலையான மூலதனமாகக் கொண்டுள்ள அல்லது மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படுகின்ற வேறு ஏதேனும் தொகையினைக் கொண்டுள்ள கம்பனியொன்று.
   (ஆ) இவ்வொழுங்குவிதிகளின் நியமங்களில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட உரிமத்தின் அதிகாரத்தின் கீழ் மேலே பந்தி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய ஆட்கள் பின்வரும் வியாபாரப் பிரிவுகளில் ஒன்று அல்லது அதற்கு கூடுதலானவை தொடர்பில் பணி வழங்குபவர்களாக வியாபாரங்களை மேற்கொள்ளவோ அல்லது தொழிற்படவோ முடியும்;
   (i) கொடுப்பனவு அட்டைகளை வழங்குபவர்;
   (ii) கொடுப்பனவு அட்டைகளின் நிதிசார் கொள்வனவாளர்;
   (iii) வாடிக்கையாளர் கணக்கை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு முறைமையின் தொழிற்பாட்டாளர்;
   (iv) செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பணமுறைமையின் தொழிற்பாட்டாளர்.
   (இ) மேலேயுள்ள பந்தி (ஆ) இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வியாபாரப் பிரிவுகளில் ஒன்று அல்லது அதற்கும் கூடுதலானவை தொடர்பில் பணிகள் வழங்குபவராக வியாபாரம் செய்வதற்கு அல்லது தொழிற்படுவதிலிருந்தும் மேலே பந்தி (அ)இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய தரப்பினர்களில் ஏதேனும் ஒருவரையோ அல்லது கூடுதலானவர்களையோ இலங்கை மத்திய வங்கி கட்டுப்படுத்திக் கொள்ளமுடியும்.

6. (அ) பணி வழங்குநராக வியாபாரத்தில் அல்லது தொழிற்பாட்டில் ஈடுபடுவதற்கு விரும்புகின்ற தகைமையுடைய ஆட்கள் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவமொன்றில் உரிமமொன்றிற்காக விண்ணப்பிக்க முடியும்;
   (ஆ) விண்ணப்பம், ஆவணங்கள், தகவல்கள் மற்றும் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்குமாறு மத்திய வங்கியினால் கேட்டுக் கொள்ளப்பட்ட வேறு ஏதேனும் விபரங்கள் மற்றும் மத்திய வங்கியினால் தேவைப்படுத்தப்படும் அத்தகைய வேறு ஏதேனும் ஆவணங்கள் அல்லது தகவல்களில் தெரிவிக்கப்பட்டவை தொடர்பாக திருப்திப்படுமிடத்து பணிகள் வழங்குபவராக தொழிற்படுவதற்கான உரிமத்தினை மத்திய வங்கி வழங்கும்;
   (இ) காரணங்கள் எதனையும் குறிப்பிடாமலேயே உரிமம் வழங்குவதற்கும் மத்திய வங்கி மறுக்கலாம்;
   (ஈ) ஒழுங்குவிதியின் பந்தி (அ) இன் கீழ் வழங்கப்பட்ட உரிமமானது உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது உரிமத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும்.

7. (அ) ஒழுங்குவிதி 6இன் பந்தி (அ)இன்படி விண்ணப்பங்களை சமர்ப்பித்த பின்னர் மத்திய வங்கியிலிருந்து அறிவித்தல் கிடைத்ததும் விண்ணப்பதாரி உரிமக் கட்டணத்தினை செலுத்துதல் வேண்டும்;

(ஆ) உரிமமொன்று வழங்கப்பட்டு அவ்வுரிமம் நடைமுறையிலிருக்கும் வரை ஆண்டுக் கட்டணம் மத்திய வங்கிக்கு செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கொடுப்பனவுகள் ஒவ்வொரு கலண்டர் ஆண்டிலும் சனவரி மாதத்திற்குள் செலுத்தப்படுதலும் வேண்டும்;

(இ) மத்திய வங்கி காலத்திற்குக் காலம் உரிமக் கட்டணத்தினையும் ஆண்டுக் கட்டணத்தினையும் தீர்மானிக்கும்.

8. ஒழுங்குவிதி 6இன் பந்தி (அ) இன் கீழ் உரிமம் வழங்கப்பட்ட ஆளொருவர் இதனகத்துப் பின்னர் “உரிமம் பெற்ற பணி வழங்குநர்” என குறிப்பிடப்படுவார்.

9. ஒவ்வொரு உரிமம் பெற்ற பணி வழங்குநரும் ஒழுங்குவிதி 6இன் பந்தி (ஆ)இன் கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின் பிரதியை பிரதான தொழில் தலத்திலும் அதன் ஒவ்வொரு கிளையிலும் காட்சிக்கு வைத்தல் வேண்டும்.

10. ஒவ்வொரு உரிமம் பெற்ற பணி வழங்குநரும் மேலேயுள்ள ஒழுங்குவிதி 5 இன் பந்தி (இ) இற்குட்பட்டு:

(அ) பணி வழங்குநருக்கு வழங்கப்பட்ட உரிமத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வியாபாரப் பிரிவுகள் தொடர்பில் மாத்திரமே அத்தகைய பணி வழங்குநர்களாக வியாபாரம் அல்லது தொழிற்பாட்டில் ஈடுபடுவதற்கு உரித்துடையவராக இருப்பார்;

(ஆ) உரிமம் பெற்ற அத்தகைய பணி வழங்குநருக்கு வழங்கப்பட்ட உரிமத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தவிர்ந்த வியாபாரப் பிரிவுகள் தொடர்பில் உரிமம் பெற்ற பணி வழங்குநராக வியாபாரம் அல்லது தொழிற்பாட்டில் ஈடுபடுவதற்கு மத்திய வங்கியின் எழுத்து மூலமான முன்னொப்புதலைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய உரிமம் பெற்ற பணி வழங்குநர் மத்திய வங்கியில் பெறக்கூடிய விண்ணப்பப் படிவமொன்றில் விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பத்துடன் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட கட்டணமும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. ஒவ்வொரு பணி வழங்குநரும் அவர்களது பெயர், பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி, பணிப்பாளர் சபை அல்லது அமைப்பு அகவிதிகளில் ஏதேனும் மாற்றங்கள் இடம்பெறும் பொழுது, அத்தகைய மாற்றங்கள் இடம்பெற்று மூன்று நாட்களுக்குள் மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

12. (அ) உரிமம் பெற்ற பணி வழங்குநர் ஒருவர்:

(i) உரிமம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதியொன்றினுள் கொடுப்பனவு அட்டைகள்/ செல்லிடக் கொடுப்பனவு முறைமை தொடர்பிலான வியாபாரத்தினை ஆரம்பிப்பதற்கு தவறிவிட்டார் என்றும்; அல்லது

(ii) பொய்யான அல்லது சரியற்ற தகவல்களை வழங்கியுள்ளார் அல்லது ஏதேனும் முக்கியமான தகவல்களை வழங்கத் தவறியுள்ளார் என்றும்; அல்லது

(iii) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடுகளுக்கு, இச்சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி, பணிப்புரை, கட்டளை, நெறிப்படுத்தல், விதி, நிபந்தனைகள், வழிகாட்டல்கள் அல்லது அறிவுறுத்தல்களுக்கிணங்கி நடக்கத் தவறியுள்ளார் என்றும்; அல்லது

(iv) மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் மத்திய வங்கியினால் தேவைப்படுத்தப்பட்ட சரி செய்யும் வழிமுறைகளை மேற்கொள்ளத் தவறியுள்ளார் என்றும்; அல்லது

(v) இது கடன் தீராற்றலற்றது அல்லது கடன் தீராற்றலற்ற நிலையினை அடையக்கூடுமென்றும்; அல்லது

(vi) நீதிமன்றத்தினால் ஏதேனும் தவறுக்கு குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார் என்றும்;

மத்திய வங்கி திருப்திப்படுமளவிற்கு நிரூபிக்கப்படின், மத்திய வங்கி அத்தகைய உரிமம் பெற்ற பணி வழங்குநருக்கு வழங்கப்பட்ட உரிமத்தினை இரத்துச் செய்வதற்கான அறிவித்தலை வழங்கும்.

(ஆ) மேலேயுள்ள பந்தி (அ) இன் கீழ் அறிவித்தல் வழங்கப்பட்ட உரிமம் பெற்ற பணி வழங்குநர் அத்தகைய அறிவித்தல் கிடைக்கப் பெற்ற திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் இரத்துத் தொடர்பாக கருதப்பட்ட அறிவித்தலுக்கெதிராக 6ஆவது ஒழுங்குவிதியின் பந்தி (ஆ) இன் கீழ் அத்தகைய பணி வழங்குநருக்கு வழங்கப்பட்ட உரிமத்தினை ஏன் இரத்துச் செய்யக்கூடாது என்பதற்கான காரணங்களை விளக்கி மத்திய வங்கிக்கு எழுத்து மூலமான ஆட்சேபனையினைத் தெரிவிக்கலாம்.

(இ) மத்திய வங்கி மேலேயுள்ள பந்தி (ஆ) இன் கீழ் ஆட்சேபனைகளைப் பெற்ற இறுதித் திகதியிலிருந்து முப்பது நாட்களுக்கிடையில் அப்பந்தியின் கீழ் கையளிக்கப்பட்ட ஆட்சேபனைகளை பரிசீலனை செய்ததன் பின்னர் அந்த ஆட்சேபனைகளுக்குப் பக்கபலமாக உரிமம் பெற்ற பணி வழங்குநர் ஏதேனும் தெரிவித்திருப்பின் அதனையும் விசாரித்த பின்னர் மேலேயுள்ள பந்தி (அ) இன் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலை ஒன்றில் நிபந்தனையுடனோ நிபந்தனையின்றியோ புறக்கீடு செய்து அல்லது உரிமம் பெற்ற பணி வழங்குநருக்கு வழங்கப்பட்ட உரிமத்தினை இரத்துச் செய்து அதனை அத்தகைய உரிமம் பெற்ற பணி வழங்குநருக்கு எழுத்து மூலமாக அவ்வாறே அறிவிக்கும்.

13. உரிமம் பெற்ற பணி வழங்குநருக்கு வழங்கப்பட்ட உரிமம் இரத்துச் செய்யப்பட்டிருக்குமிடத்து, மத்திய வங்கி, அத்தகைய பணி வழங்குநரை கொடுப்பனவு அட்டை/ அத்துடன் அல்லது செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான வியாபாரத்தினை உடனடியாக நிறுத்துவதற்கு பணித்தல் வேண்டும். மத்திய வங்கியின் அத்தகைய தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஏதேனும் நடவடிக்கைகளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்கொள்ளலாம்.

14. ஏதேனும் உரிமம் பெற்ற பணி வழங்குநரின் கொடுப்பனவு அட்டைகள் அத்துடன்/ அல்லது செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான வியாபாரம் மீதான தலத்திலான பரீட்சிப்புக்களையும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினையும் மத்திய வங்கி மேற்கொள்ளலாம்.

15. தலத்திலான பரீட்சிப்புக்களையும் தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினை அல்லது உரிமம் பெற்ற பணி வழங்குநர்கள் தொடர்ந்தும் உரிமம் பெற்ற பணி வழங்குநர்களாகத் தொழிற்படுவதற்கான இயலளவினை மதிப்பிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கத்திற்காக மத்திய வங்கியினால் தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்களையும் தகவல்களையும் ஏனைய குறிப்பிட்ட விடயங்களையும் உரிமம் பெற்ற பணி வழங்குவோர் சமர்ப்பித்தல் வேண்டும்.

16. (அ) தலத்திலான பரீட்சிப்புக்கள் அத்துடன்/ அல்லது தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு அல்லது பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை என்பனவற்றினைத் தொடர்ந்து,

(i) உரிமம் பெற்ற பணி வழங்குநர் ஒருவர் கொடுப்பனவு அட்டைகள் அத்துடன்/ அல்லது செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான வியாபாரத்தினை மேற்கொள்ள இயலாமல் இருக்கின்றார்; அல்லது

(ii) உரிமம் பெற்ற பணி வழங்குநர் ஒருவர் கொடுப்பனவு அட்டைகள் அத்துடன்/ அல்லது செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான வியாபாரத்தின் போது பாதுகாப்பற்ற அத்துடன்/ அல்லது ஆற்றலற்ற நடைமுறைகளில் ஈடுபடுகின்றமை நிதிசார் முறைமை உறுதிப்பாட்டினைப் பாதிக்கும் சாத்தியமுள்ளதென; அல்லது

(iii) அத்தகைய முறையில் பணி வழங்குநர் ஒருவரின் வியாபாரம் தொடருகின்றமை வாடிக்கையாளரின் பாதுகாப்பிற்கும் இலங்கையில் கொடுப்பனவு முறைமைகளின் ஒருமைப்பாடு, மேம்பாடு மற்றும் இலங்கையில் கொடுப்பனவு முறைமைகளின் சுமுகமான தொழிற்பாடு என்பனவற்றிற்கு பங்கமாக இருக்கின்றதெனவும்

வெளிப்படுத்தப்படின், மத்திய வங்கி அத்தகைய உரிமம் பெற்ற பணி வழங்குநர் உரிமத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத்தில் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட வகைகளுடன் தொடர்பான வியாபாரங்களை உடனடியாக நிறுத்துமாறு பணிப்பதுடன் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான காலப்பகுதிக்குள் அத்தகைய முறை மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு திருத்த நடவடிக்கைகளை எடுக்கவும் பணித்தல் வேண்டும்.

(ஆ) உரிமம் பெற்ற பணி வழங்குநர் அத்தகைய திருத்த நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தத் தவறுமிடத்து மத்திய வங்கி,
(i) மேலேயுள்ள 12ஆவது ஒழுங்குவிதியின் நியதிகளின்படி உரிமத்தினை இரத்துச் செய்வதற்கும்; அல்லது
(ii) உரிமத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வியாபார பிரிவுகளின் ஏதேனும் ஒன்று அல்லது கூடுதலான பிரிவுகளில் ஈடுபடுவதற்கு உரிமம் பெற்ற பணி வழங்குநர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்புதலை புறக்கீடு செய்வதற்கும்,
நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

17. (அ) எவரேனும் உரிமம் வழங்கப்பட்ட பணி வழங்குநரின் பணிப்பாளர் சபை உரிமத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வியாபாரத்தின் வகையில் ஒன்றையோ அல்லது கூடுதலானவற்றையோ தன்னிச்சையாக முடிவுறுத்துவதற்குத் தீர்மானிக்குமிடத்து, அத்தகைய உரிமம் பெற்ற பணி வழங்குநர் அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் பின்வருவனவற்றை மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.
(i) கொடுப்பனவு அட்டைகள் அத்துடன்/ அல்லது செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளுடன் தொடர்பான வியாபாரத்தினை முடிவுறுத்தலுக்கான காரணங்களை அல்லது வியாபாரத்தினை தொடருவதற்கு இயலாமைக்கான காரணங்களை; அத்துடன்
(ii) தற்போதுள்ள வாடிக்கையாளர்களின் உரிமைகள் மற்றும் கடப்பாடுகளைக் கையாளும் முறைகளின் விபரமான முன்மொழிவுகளையும் அத்துடன் இணங்கப்பட்ட பணிகளை வழங்குவதற்கான மாற்றீடான முறை.
(ஆ) உரிமம் பெற்ற பணி வழங்குநரின் பணி முடிவுறுத்தலுக்கான தீர்மானத்தின் அறிவிப்பின் மேல், மத்திய வங்கி முடிவுறுத்தலின் முறை மற்றும் அத்தகைய முடிவுறுத்தல் எந்த நிபந்தனைகளுக்கமைய இடம்பெற வேண்டுமோ அந்த நிபந்தனைகள் பற்றி பணிப்புரைகளை வழங்கும்.

18. உரிமம் பெற்ற பணி வழங்குநர் (கள்) களின் அனைத்து அல்லது ஏதேனும் வகை வியாபாரங்களின் அம்சங்கள் எந்த வகையில் நடத்தப்பட வேண்டும் என்பது பற்றி உரிமம் பெற்ற பணி வழங்குநருக்கோ அல்லது பணி வழங்குநர்களுக்கோ மத்திய வங்கி காலத்திற்குக் காலம் பணிப்புரைகள், கட்டளைகள், நெறிப்படுத்தல்கள், விதிகள், நிபந்தனைகள், சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள் அல்லது அறிவுறுத்தல்களை வழங்கலாம். மேற்கூறப்பட்டவற்றிற்குப் பங்கமில்லாமல் மத்திய வங்கி பின்வருவனவற்றைக் குறித்துரைக்கும் பணிப்புரைகள், கட்டளைகள், பணிப்புக்கள், விதிகள், நிபந்தனைகள், சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள் அல்லது அறிவுறுத்தல்களை வழங்கலாம்:-
(அ) ஆளுகை, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு;
(ஆ) மூலதனப் போதுமை மற்றும் ஏனைய மூலதனத் தேவைப்பாடுகள்;
(இ) கொடுப்பனவு அட்டைகள்/ செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளின் பயன்பாடு மீதான வரையறைகள்;
(ஈ) கொடுப்பனவு அட்டைகள்/ செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான பணிகளை வாடிக்கையாளர் பெற்றுக் கொள்வதற்கு பிரயோகிக்கத்தக்க கட்டணங்களும் விதிப்புக்களும்;
(உ) வாடிக்கையாளர்களையும் உரிமம் பெற்ற பணி வழங்குவோரையும் பாதுகாப்பதற்குத் தேவையான வழிமுறைகள்;
(ஊ) கொடுப்பனவு அட்டைகள்/ செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளின் வியாபாரம் தொடர்பில் முகவர்கள், துணை நிறுவனங்கள் மற்றும் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ளும் ஒழுங்குகள்;
(எ) கொடுப்பனவு அட்டைகள்/ செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள் தொடர்பிலான தொழில்நுட்ப பாதுகாப்புப் பண்புகள்;
(ஏ) வியாபாரம் மற்றும் முதலீட்டு வரையறைகள்;
(ஐ) கொடுப்பனவு அட்டைகள்/ செல்லிடக் கொடுப்பனவு முறைமைகள் தொடர்பான தகவல்களைப் பரப்புதல்.

19. 6ஆவது ஒழுங்குவிதியின் பந்தி (அ) இன் கீழ் வழங்கப்பட்ட உரிமமானது 12ஆவது ஒழுங்குவிதியின் கீழ் இரத்துச் செய்யப்படுகின்றவிடத்து மத்திய வங்கியினால் குறைந்தபட்சம் ஒரு சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்தித்தாளில் அதனை அறிவித்தலாக வெளியிடுவதன் மூலம் பொதுமக்களுக்கு தெரியப்படுத்தப்படல் வேண்டும்.

20. மத்திய வங்கி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் அல்லது சட்டத்திற்கு முரணாக ஏதேனும் விளம்பரம் வெளியிடப்பட்டது, பரப்பப்பட்டது, ஒலிபரப்பப்பட்டது, ஒளிபரப்பப்பட்டது அல்லது காட்சிப்படுத்தப்பட்டது அல்லது இவ்வொழுங்குவிதிகளின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகள், வழிகாட்டல்கள் அல்லது அறிவுறுத்தல்கள் பொதுமக்களைத் தவறாக இட்டுச் செல்லும் சாத்தியமுள்ளது என அபிப்பிராயப்படுமிடத்து, மத்திய வங்கி அத்தகைய விளம்பரத்தினை, பிரசுரித்தல், பரப்புதல், ஒலிபரப்புச் செய்தல், ஒளிபரப்புச் செய்தல் அல்லது காட்சிப்படுத்தலிலிருந்து இடைநிறுத்துவதற்கு அல்லது நியாயமானதொரு காலப்பகுதியினுள் அத்தகைய விளம்பரத்தினை மாற்றுவதற்கு உரிமம் பெற்ற பணி வழங்குநரை தேவைப்படுத்துதலும் வேண்டும்.

21. சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலொழிய இவ்வொழுங்கு விதிகளில்:
"சட்டம்" என்பது, 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத்தீர்த்தல் முறைமைகள் சட்டம் எனப் பொருளாகும்;
"அட்டை வைத்திருப்பவர்" என்பது, வழங்குநரொருவரால் வழங்கப்படும் கொடுப்பனவு அட்டையொன்றைப் பயன்படுத்த அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் என்று பொருளாகும்;
"இலங்கை மத்திய வங்கி" என்பது, 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க (422 ஆம் அத்தியாயமான) நாணச் சபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருளாகும்;
"விதிப்பனவு அட்டை" என்பது, அட்டை வைத்திருப்பவர் ஏதேனும் நீடித்த கடன் இன்றி, வழங்குநரால் குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முழுமையாகச் செலுத்தவேண்டியுள்ளவிடத்து அட்டை வைத்திருப்பவருக்கு வழங்குநரால் வழங்கப்பட்ட தொடர் கொடுகடனுடன் தொடர்புபட்ட கொடுப்பனவு அட்டை என்று பொருளாகும்;
"கடன் அட்டை" என்பது, அட்டை வைத்திருப்பவருக்கு வழங்குநரால் அளிக்கப்படும் தொடர் கொடுகடனுடன் தொடர்புபட்ட கொடுப்பனவு அட்டையொன்று என்பதுடன் அட்டை வைத்திருப்பவர் பயன்படுத்தப்பட்ட கடனை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் கொடுத்துத் தீர்க்கலாம். வழங்குநர் கடனின் ஏதேனும் தொகை குறித்துரைக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முழுமையாகக் கொடுத்துத் தீர்க்கப்பட்டிருக்காவிடத்து அத்தொகையின் மீது வட்டி, அல்லது வேறு விதிப்பனவுகளை விதிக்கலாம்;
"வாடிக்கையாளர் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு முறைமை" என்பது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் அல்லது நிதிக் கம்பனியொன்றினால் தொழிற்படுத்தப்படும் அத்தகைய நிதியியல் நிறுவனங்களில் பேணப்படும் கணக்குகளை அணுகுவதற்காக செல்லிடத் தொலைபேசியினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு முறைமை எனப் பொருள்படும்.
"நாள்" என்பது, கலண்டர் நாள் என்று பொருளாகும்;
"பற்று அட்டை" என்பது, அட்டை வைத்திருப்பவரின் கணக்கின் வரவு மீதியிலிருந்து நேரடியாகப் பற்று வைக்கப்படுவதன் மூலம், காசு மீளப்பெறல் அத்துடன்/ அல்லது பொருட்கள் மற்றும் பணிகளின் கொள்வனவுக்காக ஒழுங்குபடுத்தப்பட்ட மூன்றாம் தரப்பினருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்படக்கூடிய கொடுப்பனவு அட்டை என்று பொருளாகும்;
"இ-பணமுறைமை" என்பது நிதி கிடைத்ததும் பணப் பெறுமதி எதனூடாக வழங்கப்படுகின்றதோ அந்த முறைமையும் கொடுப்பனவு முறையொன்றாக பயன்படுத்தும் நோக்கத்திற்காக இலத்திரனியல் ரீதியில் சேமிக்கப்படுகின்ற அல்லது நிதியியல் கடப்பாடுகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான முறைமை எனப் பொருள்படும்;
"நிதிக் கம்பனி" என்பது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்ட ஒரு நிதிக் கம்பனி எனப் பொருள்படும்;

"நிதிசார் கொள்வனவாளர்" என்பது, வாடிக்கையாளரின் கொடுப்பனவு அட்டைகளை ஏற்பதற்கு வணிகருடன் ஒழுங்குகளைச் செய்வதுடன் வாடிக்கையாளரால் கொள்வனவு செய்யப்படும் பண்டங்கள் மற்றும் சேவைகளின் பெறுமதிக்கு வணிகருக்கு பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கு வணிகருடன் ஒழுங்குகளைச் செய்கின்ற அல்லது அட்டை வைத்திருப்பவராலான காசு மீளப்பெறலுக்கென கொடுப்பனவை முற்பணமளிக்கின்ற எவரேனும் ஆள் என்று பொருளாகும்;

"வழங்குநர்" என்பது, கொடுப்பனவு அட்டையொன்றை வழங்குகின்றதும் அதனால் அட்டை வைத்திருப்பவருடன் ஒப்பந்தசார் உறவில் ஈடுபடுகின்ற நிறுவனம் என்று பொருளாகும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கீழ் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி என்று பொருளாகும்;

"உரிமமளிக்கப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த வங்கி" என்பது, திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ள சிறப்பியல்பு வாய்ந்த வங்கி என்று பொருளாகும்;

"பணி வழங்குநர்" என்பது, கொடுப்பனவு அட்டை பணி வழங்குநர் அத்துடன்/ அல்லது செல்லிடக் கொடுப்பனவு முறைமையை வழங்குபவர் என்று பொருளாகும்;

"செல்லிடக் கொடுப்பனவு முறைமைகளின் பணி வழங்குவோர்" என்பது வாடிக்கையாளர் கணக்கினை அடிப்படையாகக் கொண்ட செல்லிடக் கொடுப்பனவு முறைமையினை யார் தொழிற்படுத்துகின்றாரோ அவரையும் அத்துடன்/ அல்லது செல்லிடத் தொலைபேசியை அடிப்படையாகக் கொண்ட இ-பணமுறைமை யார் தொழிற்படுகின்றாரோ அவரையும் குறிக்கும் எனப் பொருள்படும்;

"கொடுப்பனவு அட்டைகளின் பணி வழங்குவோர்" என்பது கொடுப்பனவு அட்டை வழங்குநரராகவும் அத்துடன்/ அல்லது கொடுப்பனவு அட்டைகளின் நிதிப் பொறுப்பேற்பாளராகவும் தொழிற்படும் எவரேனும் ஆளைக் குறிக்கும்;

"உள்ளடக்கப் பெறுமதி" என்பது, 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகள் சட்டத்தின் 18 ஆம் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டுள்ளதாகும்;

"பெறுமதி சேமிக்கப்பட்ட அட்டை" என்பது கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தத்தக்க பெறுமதி சேமிக்கப்பட்ட கொடுப்பனவு அட்டை அல்லது வேறு ஏதேனும் சாதனமெனப் பொருள்படும். சொற்பதமானது அட்டை வழங்குநருக்கான கொடுப்பனவுக் கடப்பாடுகளை தீர்ப்பனவு செய்வதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகின்ற அட்டைகளை உள்ளடக்கவில்லை;

"பழுதுறா மூலதனம்" என்பது ஏதேனும் பொறுப்பினை அல்லது விதிப்புக்கள் எதனையும் கொண்டிராத மூலதனம் எனப் பொருள்படும்.

22. 2009ஆம் ஆண்டு யூலை 31ஆந் திகதிய 1612/32ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கக் கொடுப்பனவு அட்டை பணி வழங்குவோர் ஒழுங்குவிதிகள், அவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு நடவடிக்கைக்கும் பங்கமின்றி இத்தால் நீக்கப்படுகின்றது.

## 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியினைத் தொழிற்படுத்துதல்

### 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சட்டம்

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சட்டத்தின் 44ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட பொதுவான பணிப்புரை.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2013 மே 31

## 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியைத் தொழிற்படுத்துதல்

இப்பணிப்புரையானது, 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் உறுப்பினர்களுக்கு ஏற்புடைத்தானதாகவும் 2013 மே 31இல் தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

2. **வரைவிலக்கணங்கள்**

வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலன்றி, இப்பணிப்புரையில்:

2.1 **த.கூ.**பொறி அல்லது **"தன்னியக்கக் கூற்றுப் பொறி"** என்பது தனிப்பட்ட அடையாள இலக்கத்தினைச் சரிபார்க்கவும் அனைத்து உடனடிக் கொடுக்கல்வாங்கல்களுக்குப் பயன்படுத்தப்படுவதுமான அட்டை வைத்திருப்பவரினால் தொழிற்படுத்தப்படுகின்ற முனைக்கோடி எனப் பொருள்படும்.

2.2 **"இ.ம.வங்கி"** என்பது 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி என்று பொருள்படும்.

2.3 **"பொ.த.ஆ"** அல்லது **"பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி"** என்பது லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டினால் தொழிற்படுத்தப்படும் இலத்திரனியல் கொடுப்பனவு முறைமையாகும். இது காசு மீளப்பெறல், நிலுவை தொடர்பான விசாரணை மற்றும் ஏதேனும் மற்றைய தன்னியக்கக் கூற்றுப் பொறிப் பணிகளின் தொடர்பூட்டல் மற்றும் செயற்பாடுகளுக்கு வசதியளிப்பதுடன் லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட் முறைமைகள், செயன்முறைகள் மற்றும் இலத்திரனியல் தரவு மாற்றலுக்கான நடைமுறைகள் என்பனவற்றையும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்களினால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் கொடுப்பனவுகளிற்கான அதிகாரமளிப்பினையும் உள்ளடக்குதல் வேண்டும்.

2.4 **"பொ.த.ஆ. உறுப்பினர்"** என்பது பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் முதனிலை உறுப்பினர் மற்றும் இரண்டாந்தர உறுப்பினர் எனப் பொருள்படும்.

2.5 **"தீர்ப்பனவு வட்டம்"** என்பது லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் வரைவிலக்கணம் செய்யப்படுகின்றவாறான ஒரு தீர்ப்பனவு நேரத்திற்கும் அதனை உடனடுத்து வருகின்ற மற்ற தீர்ப்பனவு நேரத்திற்குமிடையிலான காலம் எனப் பொருள்படும்.

2.6 **"தொழிற்பாட்டு ரீதியான நடைமுறைக் கைநூல்"** என்பது பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழித் தொழிற்பாடுகள் பற்றி லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்களுக்கான வழிகாட்டலுக்கான நடைமுறைகளை உள்ளடக்கிய லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று பொருள்படும்.

2.7 **"முதனிலை உறுப்பினர்"** என்பது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையில் பங்கேற்பாளராகவுள்ள பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரொருவராக இருப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினாலும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினாலும் ஒப்புதலளிக்கப்பட்ட ஏதேனும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி என்று பொருள்படும்.

2.8 **"அ.நே.மொ.தீ.முறைமை"** என்பது அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை எனப் பொருள்படும். இது மத்திய வங்கிக்குச் சொந்தமானதும் அதனால் தொழிற்படுத்தப்படுவதுமான முழுமையாக தன்னியக்கப்படுத்தப்பட்ட கொடுப்பனவு முறைமையொன்றாகும்.

2.9 **"இரண்டாந்தர உறுப்பினர்"** என்பது பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்கு

முதனிலை உறுப்பினரால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் சட்ட ரீதியான நிறுவனம் எனவும் அத்தகைய முதனிலை உறுப்பினரின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை கணக்கினூடாக தேறிய நிலுவையை தீர்ப்பனவு செய்கின்றதும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினராக இருப்பதற்கு இலங்கை மத்திய வங்கியினாலும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினாலும் ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவனம் என பொருள்படும்.

2.10 **"உறுப்புரிமை உடன்படிக்கை"** என்பது பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி உறுப்பினர் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் உடன் செய்து கொண்ட உடன்படிக்கையென பொருள்படும்.

3. **லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரின் பொறுப்புக்கள்:**

3.1 பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியில் பங்கேற்றல் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பில் ஒவ்வொரு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டும் உறுப்புரிமை உடன்படிக்கையொன்றை செய்து கொள்ளுதல் வேண்டும்.

3.2 ஒவ்வொரு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டும் விதிகள், நடவடிக்கை முறைகள் என்பன வடிவிலான மற்றும் காலத்திற்குக் காலம் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் விபரிக்கப்பட்ட ஏனைய ஒழுங்குகள் உட்பட பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகள் தொடர்பில் அவற்றிற்கிடையேயான உடன்படிக்கைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

3.3 ஒவ்வொரு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரும், லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டும் தொழிற்பாட்டு நடவடிக்கைக்காக கைநூலில் குறித்துரைக்கப்பட்டவற்றையும் வழிகாட்டல்களையும் பின்பற்ற உடன்பட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

3.4 ஒவ்வொரு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் விதிக்கத்தக்க ஏதேனும் வரையறைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

4. **லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டின் பொறுப்புக்கள்**

4.1 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் ஏகத் தொழிற்பாட்டாளராவர்.

4.2 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் பின்வருவனவற்றிற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்:

4.2.1 ஒவ்வொரு நாளும் இருபத்து நான்கு மணி நேரமும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியினைத் தொழிற்படுத்தல்;

4.2.2 இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதலுடன் தகைமை வாய்ந்த நிறுவனங்களுக்கு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியில் முதலாந்தர மற்றும் இரண்டாந்தர உறுப்புரிமைகளை வழங்குதல்;

4.2.3 இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளரின் ஒப்புதலுடன் தெளிவானதும் அனைத்தையும் உள்ளடக்கியதுமான முறைமை விதிகளை ஏற்படுத்துகின்றமை. லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் விடுக்கப்படுகின்ற முறைமை விதிகளை மற்றைய விடயங்களுடன் அதிகாரங்கள், உரிமைகள் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்களின் கடமைகள் மற்றும் கடப்பாடுகள், சேருதல், விலகிக்கொள்ளுதல், நிறுத்துதல் மற்றும் இடைநிறுத்துதல் என்பன உள்ளிட்ட பங்கேற்புகளுக்கான நிபந்தனைகள், தொழிற்பாட்டுத் தேவைப்பாடுகள், பிணக்குகளைத் தீர்க்கும் பொறிமுறைகள் மற்றும் தகவல்களின் இரகசியத் தன்மையினை பேணுவதற்கான நிபந்தனைகள் என்பனவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும்;

4.2.4 பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகளுக்கு ஏற்புடைத்தான விளக்க விபரங்கள், நியமங்கள், பாதுகாப்புப் பண்புகள் மற்றும் கணக்காய்வு இணங்குவிப்பினை வரைவிலக்கணம் செய்தல்;

4.2.5 இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட வெட்டு நேரத்தின் போதோ அல்லது அதற்கு முன்னதாகவோ ஒவ்வொரு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரினதும் தேறிய நிலைமையினைப் பற்றிக் குறிப்பிடும் பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆழியின் பல்புடை தேறிய தீர்ப்பனவு தொகுதி கோவையினை இலங்கை மத்திய வங்கிக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்;

4.2.6 பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறித் தொழிற்பாடுகளுடன் தொடர்பான ஏதேனும் பணி வழங்குநருடன் உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல் மற்றும் அவற்றை முடிவுறுத்தல்;

4.2.7 3.4இல் தரப்பட்டுள்ள கிளை வாசகத்திற்கு உட்பட்டு காலத்திற்குக் காலம் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் திருத்தப்படக்கூடிய ஒரே சீரான கட்டணங்களையும் தண்டப் பண அமைப்பினையும் பின்பற்றுதல்;

4.2.8 பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையிடல் தொழிற்பாடுகளுடன் இணங்கியொழுகுதல்.

5. **பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்களின் பொறுப்புக்கள்:**

ஒவ்வொரு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினரும் பின்வருவனவற்றிற்குப் பொறுப்பானவராக இருத்தல் வேண்டும்:

5.1 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டின் விளக்க விபரங்களுடன் முழுமையாக இணங்கிச் செல்கின்ற வன்பொருள், மென்பொருள் மற்றும் வலையமைப்பு உட்கட்டமைப்புக்களினதும் கொள்வனவிற்கு;

5.2 அதன் தன்னியக்கக் கூற்றுப் பொறிகளை சரியான முறையில் பேணுவதற்கும் அதன் தன்னியக்கக் கூற்றுப் பொறிகள் ஒவ்வொன்றிலும் எல்லா நேரங்களிலும் போதுமான காசு இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு;

5.3 பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி முறைமையினைப் பாதுகாப்பதற்கும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் விடுக்கப்பட்ட அனைத்துப் பாதுகாப்புப் பண்புகளையும் அறிவுறுத்தல்களையும் உறுதிப்படுத்தி அவற்றைக் கண்காணிப்பதற்கு;

5.4 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்பட்ட தொழில்நுட்ப, நிருவாக மற்றும் ஏனைய தேவைப்பாடுகளைப் பின்பற்றுவதற்கு;

5.5 இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட வெட்டு நேரத்தில், அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையிலுள்ள பொதுவான தன்னியக்க கூற்றுப்பொறி ஆழி பல்புடை ரீதியான தேறிய தீர்ப்பனவுத் தொகுதியினைத் தீர்ப்பனவு செய்வதற்கு அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கணக்கில் போதுமான நிதியம் இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு;

5.6 தரவுத் தளங்களின் கிரமமான பின்னூட்டல்களையும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகளுடன் தொடர்பான அதன் அனைத்துத் தகவல்கள் மற்றும் தரவுத் தளங்களையும் கிடைக்கச் செய்வதற்கும், கணனி முறைமை பழுதடைகின்ற அல்லது தரவுகள் பழுதடைந்து போதல் அல்லது இழக்கப்படுதல் போன்ற சந்தர்ப்பங்களில் மீட்பு நடைமுறைகளை உருவாக்கிப் பேணுவதற்கும்;

5.7 நாளாந்த கொடுக்கல்வாங்கல் அறிக்கைகளை மீளிணக்கப்படுத்தல் மற்றும் தீர்ப்பனவு அறிக்கை கிடைக்கப் பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் ஏதேனும் குறைபாடுகளிருப்பின் அவற்றினை எழுத்தில் வரையறுக்கப்பட்ட லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டிற்கு அறிவிப்பதற்கு;

5.8 லங்கா செட்டில் பிறைவேற் லிமிடெட்டினால் ஏற்படுத்தப்பட்ட பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் முறைமை ஒழுங்குவிதிகளைப் பின்பற்றுவதற்கு;

5.9 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட்டினால் அறிவிக்கப்பட்ட கட்டணம் மற்றும் தண்டப் பண அமைப்புக்களுக்கு இணங்கியொழுகுவதற்கு.

6. **தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல்**

6.1 எல்லா நேரங்களிலும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழிப் பணியின் கிடைப்பனவினை உறுதிப்படுத்தும் விதத்தில் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி என்பனவற்றின் உறுப்பினர்கள் தொடர்பான பணிப்பாளர் சபைகளினால் ஒப்புதலளிக்கப்பட்ட பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாட்டிற்கான நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடலொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6.2 இடையூறுகளற்ற தொழிற்பாடுகளை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி என்பனவற்றின் உறுப்பினர்கள் முழுமையாக கருவி மயப்படுத்தப்பட்ட அனர்த்த மீட்பு அமைவிடத்தினையும் நன்கு பயிற்றப்பட்ட அனர்த்த முகாமைத்துவத்தினையும் வியாபார மீட்புக் குழுவினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

6.3 எந்தவொரு இடையூறுகளுமில்லாமல் தொழிற்பாடுகள் கொண்டு நடத்தப்படுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில், தொழிலாளர் பிணக்குகள் உட்பட, எதிர்பாராத சூழ்நிலையில் பணிக்கமர்த்தப்படுவதற்காக பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆழியின் மையத் தொழிற்பாடுகள் தொடர்பில் தேர்ச்சியும் பயிற்சியும் பெற்ற பின்னூட்டல் அலுவலர்களை லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் கொண்டிருத்தல் வேண்டும்.

6.4 பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி அதன் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்குத் தடையாக விளங்கும் ஏதேனும் தொழில்நுட்ப அல்லது தொழிற்பாட்டுப் பிரச்சனைகளை லங்கா கிளியர் லிமிடெட் உணருமாயின் அத்தகைய பிரச்சனைகள் தெரிய வந்தவுடன் உடனடியாக இலங்கை மத்திய வங்கிக்கு தெரியப்படுத்தப்படல் வேண்டும். முக்கியமான அமைவிடத்தில் திருத்த முடியாத பழுதுகள் நிகழ்ந்திருக்கும் சந்தர்ப்பத்தில் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் உடனடியாக அதனை இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்க வேண்டியதுடன் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து தொழிற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும் என்பதுடன் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி பல்புடைத் தேறிய தீர்ப்பனவுத் தொகுதி கோப்பினையும் அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து சமர்ப்பித்தல் வேண்டும். பிரதான இடத்திலும் அனர்த்த மீட்பு அமைவிடத்திலும் நீண்ட காலம் திருத்த முடியாத பழுதுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் இது பற்றி மத்திய வங்கிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டியதுடன், இறுதித் தீர்ப்பனவு வட்டத்திலிருந்து முறைமை பழுதடைந்த நேரம் வரையிலான காலப்பகுதிக்காக பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் பல்புடை தேறிய தீர்ப்பனவினைப் பெறுவதற்கான மாற்று ஏற்பாட்டு முறைகளையும் பயன்படுத்துதல் வேண்டும் என்பதுடன் அவற்றை இலங்கை மத்திய வங்கிக்கும் கிடைக்கச் செய்தலும் வேண்டும்.

**7. இரகசியமானது**

7.1 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்கள் அனைத்துத் தரவுகள், தகவல்கள் மற்றும் பதிவேடுகள் தொடர்பில் இரகசியத்தினைப் பேண வேண்டும் என்பதுடன் அதன் அலுவலர்கள், ஊழியர்கள், முகவர்கள் அத்துடன்/ அல்லது ஏதேனும் பதவியில் தொழில்புரியும் எவரேனும் ஆள் எல்லா நேரங்களிலும் ஏற்புடைத்தான சட்டங்களுக்கிணங்க இரகசியத்தினைப் பேணுதல் வேண்டும்.

7.2 லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்கள், பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகள் தொடர்பில் சட்டத்தின் மூலம் அல்லது வேறு ஏதேனும் விதத்தில் காலத்திற்குக் காலம் கையளிக்கப்பட்ட அதிகாரங்களிலிருந்து அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் விதத்தில் தாமாகவே கூட்டாகவும் தனித்தனியாகவும் கட்டுப்பாடுகள், மேற்பார்வை, ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்கு உட்பட வேண்டியவர்களாக இருப்பதுடன் மத்திய வங்கியின் அனைத்து அறிவுறுத்தல்கள், கட்டளைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்கும் இணங்கியொழுக வேண்டும்.

7.3 மேலும், மேலே சொல்லப்பட்டவற்றிற்கு எவ்வித பங்கமுமில்லாமல் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுப் பணிப்பாளர் காலத்திற்குக் காலமும் எந்த நேரத்திலும் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்களை, பொதுவான தன்னியக்கக் கூற்று ஆழியின் தொழிற்பாடுகள் தொடர்பான தகவல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளலாம் என்பதுடன் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்கள் அத்தகைய தகவல்களை இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களப் பணிப்பாளருக்கு வழங்குதலும் வேண்டும்.

7.4 பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு பணிப்பாளருக்கான லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் உறுப்பினர்களிடமிருந்தான அனைத்து அறிக்கைகளும் தகவல்களும் துல்லியமானவையாகவும் சரியானவையாகவும் இருத்தல் வேண்டும்.

**8. பொது**

8.1 இப்பணிப்புரையானது மேலதிகமானதாகவும் ஏதேனும் எழுதப்பட்ட சட்டங்கள் மற்றும் விதிகள், ஒழுங்குவிதிகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் வலுக்களை குறைக்காததொன்றாக விளங்குமென்பதுடன் லங்கா கிளியர் பிறைவேற் லிமிடெட் மற்றும் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்கள் இவற்றிற்கு உட்பட்டவர்களாகவும் அல்லது காலத்திற்குக் காலம் உட்படும் விதத்திலும் தொழிற்படுதல் வேண்டும்.

8.2 மேற்குறிப்பிட்ட பந்தியின் பொதுவான தன்மைக்குப் பங்கமின்றி, இப்பணிப்புரையானது, 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தினால் விதிக்கப்பட்ட ஏதேனும் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை மட்டுப்படுத்துகின்ற விதத்தில் பொருள் கொள்ளப்படவும் கூடாது.

## 2013ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கத்தக்க கட்டணம்
## 2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் சட்டம்

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் சட்டத்தின் 44ஆம் பிரிவின் பொதுவான பணிப்புரையின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

கொழும்பு
2013 யூலை 02

## பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கத்தக்க கட்டணம்

இப்பணிப்புரையானது பொதுவான தன்னியக்கக் கூற்றுப்பொறி ஆழியினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கத்தக்க கட்டணம் மீதான 2013ஆம் ஆண்டின் 2ஆம் இலக்கப் பொதுவான பணிப்புரையென எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழி உறுப்பினர்களுக்கு ஏற்புடைத்தானதாகவும் 2013 யூலை 2ஆம் நாளிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

2. இப்பணிப்புரையானது, பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி ஆழியின் தொழிற்பாடுகள் மீதான 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பொதுவான பணிப்புரைக்கு மேலதிகமாக, வழங்குநர்களினால் வாடிக்கையாளர்களிடமிருந்து விதிக்கப்படத்தக்க கட்டணத்தின் மீது உச்ச எல்லையினை விதிப்பதற்காகவும் நிதியியல் கொள்வனவாளர்களினால் வழங்குநர்களிடமிருந்து விதிக்கப்படத்தக்க பரஸ்பர கட்டணத்தின் பொருட்டும் விடுக்கப்படுகிறது.

3. பொதுவான தன்னியக்க கூற்றுப் பொறி ஆழியூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்கள் மீது விதிக்கப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பில், ஒவ்வொரு பொதுவான தன்னியக்கக் கூற்றுப் பொறி உறுப்பினர்களினாலும் பின்வரும் வரையறைகள் விதிக்கப்படுதல் வேண்டும்.

3.1 வழங்குநர்களினால் வாடிக்கையாளர்களிடமிருந்து விதிக்கப்பட வேண்டிய கட்டணம்:

3.1.1 நிதியினை மீளப் பெறுவதற்காக இன்னொரு வங்கியின் தன்னியக்கக் கூற்றுப் பொறியினை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களிடமிருந்து வழங்குநர் விதிக்கும் கட்டணம் மீளப்பெறலொன்றிற்கு ரூ.15.00 (வரிகள் உட்பட) இனை விஞ்சக்கூடாது.

3.1.2 மீதி விசாரணைக்காக இன்னொரு வங்கியின் தன்னியக்கக் கூற்றுப் பொறியினை பயன்படுத்தும் வாடிக்கையாளரிடமிருந்து வழங்குநர் விதிக்கக்கூடிய கட்டணம் ரூ.7.50 இனை விஞ்சக்கூடாது (வரிகள் உட்பட).

3.2 நிதி ஏற்பாட்டாளர்களினால் வழங்குநர்களிடமிருந்து விதிக்கப்படத்தக்க பரஸ்பர ஏற்பாட்டுக் கட்டணம்:

3.2.1 வழங்குநரின் வாடிக்கையாளரினால் எடுப்பனவு செய்யப்பட்ட நிதிக்காக வழங்குநரிடமிருந்து நிதி ஏற்பாட்டாளரினால் விதிக்கப்படத்தக்க பரஸ்பர மாற்றல் கட்டணம் மீளப்பெறலொன்றிற்கு ரூ.20.00 இனை (வரிகள் உட்பட) விஞ்சக்கூடாது.

3.2.2 வழங்குநரின் வாடிக்கையாளரினால் மீதி தொடர்பான விசாரணைக்காக அத்தகைய வழங்குநரிடமிருந்து நிதி ஏற்பாட்டாளரினால் விதிக்கப்படத்தக்க பரஸ்பர மாற்றல் கட்டணம் ரூ.10 இனை (வரிகள் உட்பட) விஞ்சக்கூடாது.

**2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சட்டம்**

2005ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைச் சட்டத்தின் 44ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட பொதுவான பணிப்புரை.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவர் மற்றும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**

கொழும்பு
2013 திசெம்பர் 30

## 2013ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - காசோலை வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கும் காசோலைப் பெறுகைகளை வரவு வைத்துக் கொள்வதற்குமான பணி வசதிகள் மற்றும் நியம நேரங்கள்

இப்பணிப்புரையானது 2013ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொதுவான பணிப்புரை - காசோலை வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கும் காசோலைப் பெறுகைகளை வரவு வைத்துக் கொள்வதற்குமான பணி வசதிகள் மற்றும் நியம நேரங்கள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் இது, 2007ஆம் ஆண்டில் திசெம்பரில் விடுக்கப்பட்ட வாடிக்கையாளரிடமிருந்து காசோலை வைப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கும் காசோலைப் பெறுகைகளை வாடிக்கையாளர் கணக்குகளில் வரவு வைத்துக் கொள்வதற்குமான பங்கேற்கின்ற நிறுவனங்களின் பண வசதிகளும் நியம நேரங்களும் என்பது தொடர்பான பொதுவான பணிப்புரை இல. 1/2007 இற்குப் பதிலீடானதாகும். இப்பொதுவான பணிப்புரையானது காசோலை பிரதிமைப்படுத்தல் மற்றும் சுற்றோட்டக் குறைப்பு முறைமையின் அனைத்துப் பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் பொதுவான பணிப்புரையாகும் என்பதுடன் 2013 திசெம்பர் 30ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

2. ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் காசோலை வைப்புக்களைச் சேகரிப்பதற்காக நாடளாவிய குறைந்தபட்ச வெட்டு நேரமாகிய பி.ப. 3.00 மணியினைப் பின்பற்றுதல் வேண்டுமென்பதுடன் அவ்வாறு சேகரிக்கப்பட்ட காசோலைகளை, அதே வியாபார நாளில் தீர்ப்பனவு செய்வதற்காக லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டிற்கு, லங்கா கிளியரினால் குறித்துரைக்கப்பட்ட நேரத்திற்கு முன்னதாக அதனிடம் சமர்ப்பித்தலும் வேண்டும்.

3. ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் லங்கா கிளியர் (பிறைவேற்) லிமிடெட்டிலிருந்து உள்வரும் திரும்பல் தரவுகள் பெறப்பட்ட நாளன்று பி.ப. 2.30 மணியளவில் தீர்ப்பனவு செய்யப்பட்ட காசோலைகளின் பெறுகைகளை தொடர்பான வாடிக்கையாளர்களின் கணக்கில் வரவு வைத்தல் வேண்டும்.

4. இப்பணிப்புரையின் நோக்கத்தினை அடைவதற்காக, ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் காசோலைச் சேகரிப்பு; காசோலைப் பெறுகைகளை வாடிக்கையாளர் கணக்குகளுக்கு வரவு வைத்தல் மற்றும் வாடிக்கையாளர் முறைப்பாடுகளைக் கையாள்வதற்கான முறைகள் என்பன மீது நடைமுறைகளையும் வசதி வழங்கல்களையும் வடிவமைத்துக் கொள்ளுதல் வேண்டும். அத்தகைய நடைமுறைகளும் வசதிகளும் வாடிக்கையாளர்களுக்கான பங்கேற்கும் நிறுவனங்களின் கடப்பாடுகளும் வாடிக்கையாளர்களின் உரிமைகளும் நிறுவப்பட்டு நடைமுறையில் பேணப்பட்டு வருவதனை உறுதிப்படுத்துவனவாக இருத்தல் வேண்டும்.

5. பங்கேற்கும் நிறுவனங்கள் ஒவ்வொன்றும் பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:

(i) மேலேயுள்ள பந்தி 4இன் கீழ் நிறுவப்பட்ட நடைமுறைகள் மற்றும் வசதிகள், காசோலைகள் சேகரிக்கப்படும் மற்றும் வாடிக்கையாளர் கணக்குகளுக்கு வரவு வைக்கப்படும் தடவைகள் என்பன பின்வரும் விதத்தில் அறிவிக்கப்படுகின்றன.

(அ) வங்கிக் கிளைகள் அவற்றின் வங்கித்தொழில் மண்டபத்திலுள்ள விளம்பரப் பலகையிலும் காசோலைச் சேகரிப்புப் பெட்டிகளுக்கண்மையிலும் துலாம்பரமாக காட்சிக்கு வைப்பதன் மூலம் வாடிக்கையாளர் கவனத்தினையும் அதேபோன்று அவற்றைப் பின்பற்றுவதற்கான ஊழியர்களின் கவனத்தினையும் கவரலாம்;

(ஆ) நடைமுறை மாதாந்த நடைமுறைக் கணக்கு கூற்றுக்களின் மீது செய்தியாக இதனை அச்சிடல்;

(இ) காலத்திற்குக் காலம் செய்தித்தாள்களில் பிரசுரித்தல்; மற்றும்

(ஈ) அவற்றின் வெப்தளங்களில் வெளியிடல்.

(ii) காசோலைச் சேகரிப்பு மற்றும் வாடிக்கையாளர் கணக்குகளில் வரவு வைத்தல் என்பன தொடர்பான நடைமுறைகள் விதிகள் அல்லது நேரம் பற்றி ஏதாவது மாற்றங்கள் இருப்பின் அவை வாடிக்கையாளர்களுக்கு சரியான முறையில் அறிவிக்கப்படுகின்றன;

(iii) மனக் குறைகளுக்கு ஆளாகியிருக்கும் தரப்பினரின் அக்குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக பங்கேற்கும் நிறுவனங்களினால் குறித்துரைக்கப்பட்ட அதிகாரிகளை அணுகும் உரிமையைக் கொண்டிருப்பதன் மூலம் இவற்றைக் கையாளப் பொருத்தமானதும் வசதியானதுமான ஒழுங்குகள் கிடைக்கின்றன;

(iv) திருத்தப்பட்ட வெட்டு நேரங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட 3 நாட்களுக்குள் அது பற்றி பணிப்பாளர், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

6. ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனமும் காசோலைச் சேகரிப்பிற்கான தற்போதைய ஒழுங்குகள் மற்றும் காசோலை சேகரிப்பிற்கான வெட்டு நேரத்தினை நீடிப்பதற்கான முயற்சி, காசோலையைத் திரும்பல் அறிவிப்பு பெறப்பட்டதன் பின்னர் வாடிக்கையாளர் கணக்குகளுக்கு பெறுகைகளை வரவு வைப்பதற்குத் தேவைப்படும் நேரத்தினைக் குறைத்தல் என்பனவற்றை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்தல் வேண்டும்.

தொடர்பு எண்: 08/11/011/0019/001 2013 பெப்புருவரி 14

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை முதனிலை வணிகர்களாக நியமித்தல்

1. இலங்கை மத்திய வங்கி, மாண்புமிகு நிதியமைச்சரினால் ஆக்கப்பட்ட 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதிகளிலும் 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதிகளிலும் குறித்துரைக்கப்பட்ட பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை முதனிலை வணிகர்களாக நியமிப்பதற்குத் தீர்மானித்திருக்கின்றது.
   (i) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள் தொடர்பிலான நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் (அரச பிணையங்கள்) தனியான கணக்கேடுகளைப் பேணுதல் வேண்டும்.
   (ii) உரிமம் பெற்ற வர்த்தக வங்கி அதன் பணிப்பாளர் சபையில் மற்றொரு முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளரையோ அல்லது ஊழியரையோ கொண்டிருக்கக்கூடாது.
   (iii) உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் முதனிலை வணிகர் (அரசாங்கப் பிணையங்கள்) தொழிற்பாடுகளுக்கு, அத்தகைய முதனிலை வணிகர் தொழிற்பாடுகளுக்கு அவரின்/ அவளின் முழு நேரத்தினையும் அர்ப்பணித்துள்ள அத்தகைய வங்கியில் மூத்த முகாமைத்துவப் பதவியினை வகிக்கும் தகைமையும் தகுதியும் வாய்ந்த ஆளொருவரே தலைமை வகித்தல் வேண்டும்.
   (iv) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர் நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பில், காலத்திற்குக் காலம் மத்திய வங்கியினால் விதிக்கப்படும் தொழிற்பாட்டு வழிகாட்டல்களுக்கும் முன்மதியுடைய தேவைப்பாடுகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன்;
   (v) முதனிலை வணிகர் (அரசாங்கப் பிணையங்கள்) நடவடிக்கைகளும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் தொழிற்பாடுகளும் மத்திய வங்கியினால் கண்காணிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும்.

2. 2013.02.04 இலிருந்து, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் விடுக்கப்பட்ட 2006.06.22ஆம் திகதியிடப்பட்ட இல.08/24/002/0005/006 கொண்ட பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்ட முதனிலை வணிகர்களுக்கான இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமைக் கட்டமைப்பு மீதான தேவைப்பாடுகளிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டுள்ளன.

3. அரசாங்க பிணையங்களில் முதனிலை வணிகர்களாக நியமனம் பெற விரும்புகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அவர்களது விண்ணப்பப் படிவங்களை கண்காணிப்பாளர், பொதுப்படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்கார
**கண்காணிப்பாளர் பொதுப்படுகடன்**

தொடர்பு எண்: 08/11/011/0019/001 2013 மாச்சு 8

சேரல்: உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை முதனிலை வணிகர்களாக நியமித்தல்

1. 2013.02.14ஆம் திகதியிடப்பட்ட இல. 08/11/011/0019/001 கொண்ட கடிதத்திற்கு மேலதிகமாக.

2. பொதுப்படுகடன் திணைக்களக் கண்காணிப்பாளரினால் விடுக்கப்பட்ட 2005.04.18ஆம் திகதியிடப்பட்ட இல. 08/24/002/0005/005 கொண்ட பணிப்புரையில் குறித்துரைக்கப்பட்டவாறு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் சிறப்பு ஒதுக்குகளைப் பேண வேண்டுமென்ற தேவைப்பாட்டிலிருந்து 2013.02.14ஆம் திகதி தொடக்கம் விலக்களிக்கப்படுகின்றன.

என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்கார
**கண்காணிப்பாளர் பொதுப்படுகடன்**

தொடர்பு எண்: 08/24/031/0018/001 2013 ஏப்பிறல் 10

சேரல்: வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வதிவற்ற இலங்கையர்களுக்கு

## இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கொள்வனவு மற்றும் விற்பனை பற்றிய வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வதிவற்ற இலங்கையர்களுக்கான வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்

(அ) வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களுக்கும் புலம்பெயர்ந்த வேலையாட்களுக்குமென இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் விற்பனை மற்றும் கொள்வனவுகளுக்கு ஏற்புடைத்தான பின்வரும் வழிகாட்டல்கள்/ நடைமுறைகள் 2013 ஏப்பிறல் 10ஆம் நாளிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

   (அ) 2008 மே 6ஆம் திகதியும் 2008 மே 23ஆம் திகதியும் பங்கேற்கின்ற முகவர்களுக்கு விடுக்கப்பட்ட வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்.
   (ஆ) திறைசேரி முறிகள் முதலீட்டு வெளிநாட்டு ரூபாக் கணக்கு - டி திட்டம் தொடர்பில் 2009 சனவரி 6ஆம் திகதி தலைமை முகாமையாளர்களுக்கு விடுக்கப்பட்ட வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்
   (இ) 2008 மே 6ஆம் திகதியும் 2008 மே 23ஆம் திகதியும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விடுக்கப்பட்ட வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்.
   (ஈ) 2009 சனவரி 6ஆம் திகதி வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களுக்கும் புலம்பெயர்ந்த வேலையாட்களுக்கும் விடுக்கப்பட்ட வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்.

(ஆ) வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் வதிவற்ற இலங்கையர்களுக்குமென இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பில் கீழே காட்டப்பட்டிருக்கும் வழிகாட்டல்களும் நடைமுறைகளும் 2013 ஏப்பிறல் 10ஆம் நாளிலிருந்து ஏற்புடைத்தாதல் வேண்டும்.

1. **தகைமையுடைய முதலீட்டாளர்கள்**

   பின்வரும் முதலீட்டாளர் வகையினர் மாத்திரமே இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்களிலும் திறைசேரி முறிகளிலும் முதலீடு செய்ய தகைமையுடையவர்களாவர்:
   (அ) நாட்டு நிதியங்கள், பிராந்திய நிதியங்கள் அல்லது சமவாய நிதியங்களை உள்ளடக்கிய வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள்.
   (ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள்.
   (இ) ஒன்றில் இலங்கையில் வதியும் அல்லது இலங்கைக்கு வெளியே வதியும் வெளிநாட்டுப் பிரசைகள்
   (ஈ) வதிவற்ற இலங்கையர்கள்

2. முதலீடுகள்

மேலே கிளை வாசகம் 1இல் குறிப்பிடப்பட்ட வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வதிவற்ற இலங்கையர்கள் (இதனகத்துப் பின்னர் “தகைமையுடைய முதலீட்டாளர்கள்” எனக் குறிப்பிடப்படுவர்) இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் முதனிலை வணிகர்களூடாகவும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளூடாகவும் (இதனகத்துப் பின்னர் “பங்கேற்கின்ற முகவர்கள்” எனக் குறிப்பிடப்படும்) கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.
(அத்தகைய பங்கேற்கின்ற முகவர்களின் பட்டியல் இச்சுற்றறிக்கையின் இறுதியில் தரப்பட்டுள்ளது).

3. பதிவுகள்

லங்கா செட்டில் முறைமை விதிகளின் நியதிகளில், இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பேணப்படும் மத்திய வைப்பக முறைமையில் பங்கேற்கின்ற முகவர்கள் தமது தகைமையுடைய முதலீட்டாளர்களின் விபரங்களை பதிவு செய்வதற்குப் பொறுப்புடையவராவர்.
தகைமையுடைய முதலீட்டாளர்களுக்கு மத்திய வைப்பக முறைமை பின்வருவனவற்றை உள்ளடக்கிய கூற்றுக்களை வழங்கும்.

(அ) குறிப்பிட்ட மாத காலப்பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களை உறுதிப்படுத்துகின்ற மாதாந்தக் கூற்றொன்று.
(ஆ) ஒவ்வொரு முதலீட்டாளர் வசமுமுள்ள வெளிநின்ற நிலுவையினை உறுதிப்படுத்துகின்ற அரையாண்டுக் கூற்றொன்று.
(இ) முதிர்ச்சிப் பெறுகைகள்/ வட்டிக் கொடுப்பனவுகள் எப்பொழுது கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமோ அதனை எடுத்துக்காட்டுகின்ற மாதாந்தக் கூற்றொன்று

இக்கூற்றுக்கள் மத்திய வைப்பக முறைமையில் பதிவு செய்யப்பட்டவாறான முதலீட்டாளரின் பெயர் மற்றும் முகவரிக்கு நேரடியாக வழங்கப்படும்.

4. அந்தஸ்து

திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் முதிர்ச்சிப் பெறுகைகள் மற்றும் திறைசேரி முறிகளிலிருந்து வரவேண்டிய நறுக்குக் கொடுப்பனவுகள் என்பன இலங்கை அரசாங்கத்தின் நேரடியான நிபந்தனைகளற்ற, பொதுவான பிணையிடப்படாத கடப்பாடுகளாக இருக்குமென்பதுடன் தற்பொழுதும் எதிர்காலத்திலும் அவர்களிடையே நிலவக்கூடிய அந்நிலைக்கு சரிசமமான நிலையிலும் அவற்றிற்கிடையேயான எவ்வித முன்னுரிமைகளுமின்றி இலங்கை அரசாங்கத்தின் அனைத்து வெளிநிற்கும் பிணையிடப்படாத மற்றும் கீழ்நிலைப்படுத்தப்படாத கடப்பாடுகளையும் கொண்டிருக்கும்.

5. காலம்

தகுதியுடைய முதலீட்டாளர்கள், எந்தவொரு முதிர்ச்சிக் காலத்துடனும் கூடிய திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் கொள்வனவு செய்வதற்கு அல்லது விற்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

6. திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளுக்கான கொடுப்பனவுகள்

தகைமையுடைய முதலீட்டாளர்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றில் “பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு” என அழைக்கப்படும் சிறப்பு ரூபாக் கணக்கொன்றினைத் திறந்து அக்கணக்கிற்கு ரூபாவில் வரவு வைப்பதன் மூலம் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கொள்வனவிற்கான கொடுப்பனவுகளைச் செய்தல் வேண்டும். (தகைமையுடைய முதலீட்டாளர்கள் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியில் ஏற்கனவே பிணையங்கள் முதலீட்டு கணக்கொன்றினைப் பேணுவார்களேயாயின் புதிய கணக்கொன்றினைத் திறப்பது அவசியமற்றது.) தொடர்பான தரப்பினருக்கு தொடர்பான ரூபாத் தொகையினை மாற்றல் செய்வதற்கு தகைமையுடைய முதலீட்டாளர்/ பங்கேற்கின்ற முகவர் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியுடன் தேவையான ஒழுங்குகளைச் செய்து கொள்ளல் வேண்டும்.

7. திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

கிளை வாசகம் 6இல் குறித்துரைக்கப்பட்டவாறு முறையாகக் கொடுப்பனவுகளைச் செய்த மற்றும் மேலே கிளை வாசகம் 3இல் குறித்துரைக்கப்பட்டவாறு மத்திய வைப்பக முறைமையில் பதிவுகளை மேற்கொண்ட தகைமையுடைய முதலீட்டாளர்களுக்கு பத்திரங்களற்ற வடிவில் திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் வழங்குதல் வேண்டும்.

8. நறுக்கு மற்றும் முதிர்ச்சிப் பெறுகைகளின் கொடுப்பனவு

திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான முதிர்ச்சிப் பெறுகைகள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான நறுக்குக் கொடுப்பனவுகள் அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினூடாக தொடர்பான பங்கேற்கின்ற முகவர்களுக்குத் தொடர்பான திகதிகளில் செய்யப்படல் வேண்டும். அத்தகைய பங்கேற்கின்ற முகவர்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு அத்தகைய கொடுப்பனவுகளை அதே நாளன்று உள்ள பெறுமதிக்கு மாற்றல் செய்வதற்கு பொறுப்புடையவர்களாவர்.
முதிர்ச்சித் திகதி அல்லது நறுக்குக் கொடுப்பனவுத் திகதி ஏதேனும் இலங்கையில் வங்கி அலுவல்கள் இடம்பெறாத நாளன்று வருமாயின் திறைசேரி உண்டியலைப் பொறுத்தவரை முதிர்ச்சிப் பெறுகைகளின் கொடுப்பனவுகள் அவை செலுத்தப்பட வேண்டிய திகதிக்கு முன்னருள்ள அலுவலக நாளொன்றில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் திறைசேரி முறியைப் பொறுத்தவரை முதிர்ச்சிப் பெறுகைகளும் அத்துடன் அல்லது நறுக்குக் கொடுப்பனவுகளும் அவை செலுத்தப்பட வேண்டிய திகதிக்குப் பின்னர் வரும் அலுவலக நாளொன்றில் மேற்கொள்ளப்படுதலாதலும் வேண்டும்.

9. பணத்தினை தாய் நாட்டிற்கு அனுப்புதல்

திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் விற்பனை அல்லது முதிர்ச்சியின் மூலம் பெறப்படுகின்ற அனைத்துப் பெறுகைகளையும் திறைசேரி முறிகள் மீதான நறுக்குக் கொடுப்பனவுகளையும் முழுதாகவே தாய் நாட்டிற்கு அனுப்பி வைக்கலாம்.

10. கூட்டு உடமைகள்

தகைமையுடைய முதலீட்டாளர்களினால் திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் கூட்டாக வைத்திருக்கப்படலாம். முதிர்ச்சிப் பெறுகைகள் மற்றும் நறுக்குக் கொடுப்பனவுகள் கூட்டு உடமையாளர்களுக்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்குமிடையிலான உடன்படிக்கையின் அடிப்படையில் கூட்டு உடமையாளர்களின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு/ கணக்குகளுக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

11. வரிச் சலுகை

திறைசேரி உண்டியல்களிலும் திறைசேரி முறிகளிலும் முதலீடு செய்கின்ற தகைமையுடைய முதலீட்டாளர்கள் அத்தகைய திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட போது விதிக்கப்பட்ட 10 சதவீத பிடித்துவைத்தல் வரி நீங்கலாக அத்தகைய திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மீதான வருவாய்களின் மீது மேலதிக வரி எதையும் செலுத்தத் தேவையில்லை.

12. முத்திரைத் தீர்வை

திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் வழங்கல் விற்பனை அல்லது மீட்பு மீது பயன்படுத்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளன.

13. நியாயாதிக்கம்

இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் தொடர்பான அனைத்து விடயங்களைப் பொறுத்தவரையிலும் இலங்கையிலுள்ள நீதிமன்றங்கள் பிரத்தியேகமான நியாயாதிக்கத்தினைக் கொண்டிருக்கும்.

14. ஆளுகைச் சட்டம்

திறைசேரி உண்யடில்கள் மற்றும் திறைசேரி முறிகள் தொடர்பான இவ்வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்ட நியதிகளும் நிபந்தனைகளும் இலங்கைச் சட்டங்களுக்கிணங்க ஆளப்பட்டு பொருள் கோடப்படல் வேண்டும்.

(இ) இது தொடர்பான மேலதிக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், விடயத்தினைப் பொறுத்து, செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் அல்லது பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும்.

என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்கார
**கண்காணிப்பாளர் பொதுப்படுகடன்**

| பங்கேற்கும் முகவர்களின் பட்டியல் | தொடர்பு இலக்கம் |
|---|---|
| **உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்** | |
| அக்ஸிஸ் பாங்க் | 94-11-2577733 |
| இலங்கை வங்கி | 94-11-2348878 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 94-11-2447516 |
| சிற்றி பாங்க் என் ஏ | 94-11-4794718 |
| டொயிஷ் பாங்க் | 94-11-4791250 |
| டிஎவ்சிசி வர்தன பாங்க் லிமிடெட் | 94-11-2371414 |
| ஹபீப் பாங்க் லிமிடெட் | 94-11-2370390 |
| ஹற்றன் நஷனல் பாங்க் லிமிடெட் | 94-11-2661303 |
| ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பிரேசன் | 94-11-2447536 |
| ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட் | 94-11-4242424 |
| இந்தியன் பாங்க் | 94-11-2446122 |
| இந்தியன் ஓவசீஸ் பாங்க் | 94-11-2320515 |
| எம்சிபீ பாங்க் லிமிடெட் | 94-11-2440569 |
| நஷனல் டெவலப்மென்ட் பாங்க் லிமிடெட் | 94-11-2448889 |
| நேஷன்ஸ் றஸ்ட் பாங்க் லிமிடெட் | 94-11-4313101 |
| பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட் | 94-11-2565555 |
| பப்பிளிக் பாங்க் | 94-11-2576288 |
| மக்கள் வங்கி | 94-11-2334041 |
| சம்பத் வங்கி லிமிடெட் | 94-11-2300152 |
| செலான் வங்கி லிமிடெட் | 94-11-2456771 |
| ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா | 94-11-4622350 |
| ஸ்ரான்டட் சார்டட் பாங்க் | 94-11-2446160 |
| யுனியன் பாங்க் ஒவ் கொழும்பு லிமிடெட் | 94-11-2370690 |
| **முதனிலை வணிகர்கள்** | |
| அக்குயிட்டி செக்குற்றீஸ் லிமிடெட் | 94-11-2206297 |
| இலங்கை வங்கி முதனிலை வணிகர் பிரிவு | 94-11-2439566 |
| கப்பிட்டல் அலையின்ஸ் லிமிடெட் | 94-11-2317720 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி முதனிலை வணிகர் பிரிவு | 94-11-2486334 |
| என்றஸ்ட் செக்குற்றீஸ் பிஎல்சி | 94-11-4444999 |
| பெஸ்ட் கப்பிட்டல் ரெஷறீஸ் லிமிடெட் | 94-11-2639883 |
| என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 94-11-2564601 |
| நற்வெல்த் செக்குற்றீஸ் லிமிடெட் | 94-11-4716274 |
| மக்கள் வங்கி முதனிலை வணிகர் பிரிவு | 94-11-2206765 |
| செலான் வங்கி பிஎல்சி முதனிலை வணிகர் பிரிவு | 94-11-2456325 |
| சம்பத் வங்கி பிஎல்சி முதனிலை வணிகர் பிரிவு | 94-11-2300145 |
| வெல்த் ரறஸ்ட் செக்குற்றீஸ் லிமிடெட் | 94-11-2689823 |

**தொடர்பு எண்: 08/24/031/0018/001** 2013 ஏப்பிறல் 10

சேரல்: அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் முதனிலை வணிகர்களினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

## வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மற்றும் வதிவற்ற இலங்கையர்களுக்காக இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கொள்வனவு மற்றும் விற்பனை மீதான பங்கேற்கின்ற முகவர்களுக்கான வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்

(அ) வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களுக்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்குமென இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் விற்பனை மற்றும் கொள்வனவுகளுக்கு ஏற்புடைத்தான பின்வரும் வழிகாட்டல்கள்/ நடைமுறைகள் 2013 ஏப்பிறல் 10ஆம் நாளிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

(அ) 2008 மே 6ஆம் திகதியும் 2008 மே 23ஆம் திகதியும் பங்கேற்கின்ற முகவர்களுக்கு விடுக்கப்பட்ட வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்.

(ஆ) திறைசேரி முறிகள் முதலீட்டு ெ வெளிநாட்டு ரூபாக் கணக்கு - டி திட்டம் தொடர்பில் 2009 சனவரி 6ஆம் திகதி தலைமை முகாமையாளர்களுக்கு விடுக்கப்பட்ட வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்

(இ) 2008 மே 6ஆம் திகதியும் 2008 மே 23ஆம் திகதியும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விடுக்கப்பட்ட வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்.

(ஈ) 2009 சனவரி 6ஆம் திகதி வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களுக்கும் புலம்பெயர்ந்த வேலையாட்களுக்கும் விடுக்கப்பட்ட வழிகாட்டல்கள்/ நடைமுறைகள்.

(ஆ) வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் வதிவற்ற இலங்கையர்களுக்குமென இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பில் கீழே காட்டப்பட்டிருக்கும் வழிகாட்டல்களும் நடைமுறைகளும் 2013 ஏப்பிறல் 10ஆம் நாளிலிருந்து ஏற்புடைத்தாதல் வேண்டும்.

1. **பொது**

1.1 தகைமையுடைய முதலீட்டாளர்கள்

பின்வரும் முதலீட்டாளர் வகையினர் மாத்திரமே இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல்களிலும் திறைசேரி முறிகளிலும் முதலீடு செய்ய தகைமையுடையவர்களாவர்:

(அ) நாட்டு நிதியங்கள், பிராந்திய நிதியங்கள் அல்லது சமவாய நிதியங்களை உள்ளடக்கிய வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள்.

(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிச் சபைகள்.

(இ) ஒன்றில் இலங்கையில் வதியும் அல்லது இலங்கைக்கு வெளியே வதியும் வெளிநாட்டுப் பிரசைகள்

(ஈ) வதிவற்ற இலங்கையர்கள்

முதலீட்டிற்கான கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வேளையில், அனைத்து பங்கேற்கும் முகவர்களும் “உங்கள் வாடிக்கையாளர்களைத் தெரிந்து கொள்ளுங்கள்” என்ற சரிபார்ப்புத் தேவைப்பாடுகளை பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1.2 திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறி முதலீடுகள் மீதான வரையறை

திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளிலுள்ள தகைமையுடைய முதலீட்டாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த முதலீடு, மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வரம்பினை விஞ்சக்கூடாது (கீழேயுள்ள கிளைவாசகம் 2.3 இற்குட்பட்டு)

1.3 திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் காலம்

மேலேயுள்ள 1.1இல் குறிப்பீடு செய்யப்பட்ட (இதனகத்துப் பின்னர் தகைமையுடைய முதலீட்டாளர்கள் எனக் குறிப்பீடு செய்யப்படும்) வெளிநாட்டு முதலீட்டாளர்களும் வதிவற்ற இலங்கையர்களும் எந்தவொரு முதிர்ச்சிக் காலத்துடனும் கூடிய திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் கொள்வனவு செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

1.4 பதிவுகள்

லங்கா செட்டில் முறைமை விதிகளின் நியதிகளில், இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் பேணப்படும் மத்திய வைப்பக முறைமையில் பங்கேற்கின்ற முகவர்கள் தமது தகைமையுடைய முதலீட்டாளர்களின் விபரங்களை பதிவு செய்வதற்குப் பொறுப்புடையவராவர்.

தகைமையுடைய முதலீட்டாளர்களுக்கு மத்திய வைப்பக முறைமை பின்வருவனவற்றை உள்ளடக்கிய கூற்றுக்களை வழங்கும்.

(அ) குறிப்பிட்ட மாத காலப்பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்களை உறுதிப்படுத்துகின்ற மாதாந்தக் கூற்றொன்று.

(ஆ) ஒவ்வொரு முதலீட்டாளர்கள் வசமுமுள்ள வெளிநின்ற நிலுவையினை உறுதிப்படுத்துகின்ற அரையாண்டுக் கூற்றொன்று.

(இ) முதிர்ச்சிப் பெறுகைகள்/ நறுக்குக் கொடுப்பனவுகள் எப்பொழுது கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமோ அதனை எடுத்துக்காட்டுகின்ற மாதாந்தக் கூற்றொன்று

இக்கூற்றுக்கள் மத்திய வைப்பக முறைமையில் பதிவு செய்யப்பட்டவாறான முதலீட்டாளரின் பெயர் மற்றும் முகவரிக்கு நேரடியாக வழங்கப்படும்.

2. **விற்பனை நடைமுறை**

தகைமையுடைய முதலீட்டாளர்கள் இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்படும் திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் கொள்வனவு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் அனுமதிக்கப்படுகின்றனர்.

2.1 தகைமையுடைய முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளும் பொருட்டு, பங்கேற்கின்ற முகவர்கள், அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் சட்ட ரீதியான தேவைப்பாடுகளுக்குள் நடைபெறுகின்றன என்பதனையும் லங்கா செட்டிலுக்கு ஏற்புடைத்தான முறைமைகளின் விதிகளையும் மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களம் மற்றும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட மற்றைய வழிகாட்டல்களையும் மீறவில்லை என்பதனையும் உறுதிப்படுத்த வேண்டும்.

2.2 திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கொள்வனவிற்காக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி மற்றும் திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் விற்பனை/ முதிர்ச்சியின் மீது அடையப்பட்ட பெறுகைகள், நறுக்குக் கொடுப்பனவுகள் மற்றும் மூலதன இலாபத்தின் மூலம் அடையப்பட்ட ஏதேனும் வருமானம் என்பன தகைமையுடைய முதலீட்டாளர்களின் பெயரில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளில் ரூபாவில் திறக்கப்பட்ட “பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினூடாக” அனுப்பப்படுதல் வேண்டும்.

2.3 விற்பனையை உறுதிப்படுத்துவதற்கு முன்னர், பங்கேற்கும் முகவர்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் முதலீடு செய்வதற்காக தகைமையுடைய முதலீட்டாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளில் கிடைக்கத்தக்கதாகவுள்ள கட்டுப்பாடற்ற தன்மையினை இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்திலிருந்து விசாரிப்பதற்கு பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும்.

2.4 பங்கேற்கும் முகவர்கள் தமது முதலீட்டாளர்களுக்காக மத்திய வைப்பக முறைமையில் முதலீட்டாளர் கணக்குகளைச் சரியான முறையில் உருவாக்குவதற்குப் பொறுப்புடையவர்களாக இருத்தல் வேண்டுமென்பதுடன் கொடுக்கல்வாங்கல்கள் லங்கா செட்டில் முறைமை விதிகளுக்கிணங்க பதிவு செய்யப்படுதலும் வேண்டும்.

3. **நிதிய மாற்றல்கள்**

தகைமையுடைய முதலீட்டாளரொருவர் முதனிலை சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் வாங்கும் பொழுது தொடர்பான முதனிலை வணிகர் திறைசேரி உண்டியல்களினதும் திறைசேரி முறிகளினதும் பெறுகைகளை இலங்கை மத்திய வங்கியின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைக் கணக்கிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். இப்பெறுகைகள் தகைமையுடைய முதலீட்டாளர்களின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிலிருந்து அனுப்பப்படுதல் வேண்டும். தகைமையுடைய முதலீட்டாளர்கள் இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் கொள்வனவு/ விற்பனை செய்யும் பொழுது முதலீட்டாளர்/ பங்கேற்கும் முகவர், முதலீட்டாளரின் சார்பில் தொடர்பான தரப்பினருக்குத் தொடர்பான ரூபாத் தொகையினை மாற்றல் செய்வதற்கு பிணையங்கள் முதலீட்டுக் கணக்கினைப் பேணுகின்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.

4. **நறுக்கு மற்றும் முதிர்ச்சிப் பெறுகைகளின் கொடுப்பனவு**

4.1 திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான முதிர்ச்சிப் பெறுகைகள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான நறுக்குக் கொடுப்பனவுகள் அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமையினூடாக தொடர்பான பங்கேற்கின்ற முகவர்களுக்குத் தொடர்பான திகதிகளில் செய்யப்படல் வேண்டும். அத்தகைய பங்கேற்கின்ற முகவர்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கிற்கு அத்தகைய கொடுப்பனவுகளை அதே நாளன்று உள்ள பெறுமதிக்கு மாற்றல் செய்வதற்கு பொறுப்புடையவர்களாவர்.

4.2 முதிர்ச்சித் திகதி அல்லது நறுக்குக் கொடுப்பனவுத் திகதி ஏதேனும் இலங்கையில் வங்கி அலுவல்கள் இடம்பெறாத நாளன்று வருமாயின் திறைசேரி உண்டியலைப் பொறுத்தவரை முதிர்ச்சிப் பெறுகைகளின் கொடுப்பனவுகள் அவை செலுத்தப்பட வேண்டிய திகதிக்கு முன்னருள்ள அலுவலக நாளொன்றில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் திறைசேரி முறியைப் பொறுத்தவரை முதிர்ச்சிப் பெறுகைகளும் அத்துடன் அல்லது நறுக்குக் கொடுப்பனவுகளும் அவை செலுத்தப்பட வேண்டிய திகதிக்குப் பின்னர் வரும் அலுவலக நாளொன்றில் மேற்கொள்ளப்படுதலாதலும் வேண்டும்.

**5. பணத்தினை தாய் நாட்டிற்கு அனுப்புதல்**

திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் விற்பனை அல்லது முதிர்ச்சியின் மூலம் பெறப்படுகின்ற அனைத்துப் பெறுகைகளையும் திறைசேரி முறிகள் மீதான கூப்பன் கொடுப்பனவுகளையும் முழுதாகவே தாய் நாட்டிற்கு அனுப்பி வைக்கலாம்.

**6. கூட்டு உடமைகள்**

தகைமையுடைய முதலீட்டாளர்களினால் திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் கூட்டாக வைத்திருக்கப்படலாம். முதிர்ச்சிப் பெறுகைகள் மற்றும் நறுக்குக் கொடுப்பனவுகள் கூட்டு உடமையாளர்களுக்கும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்குமிடையிலான உடன்படிக்கையின் அடிப்படையில் கூட்டு உடமையாளர்களின் பிணையங்கள் முதலீட்டுக் கணக்கு/ கணக்குகளுக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

**7. வரிச் சலுகை**

திறைசேரி உண்டியல்களிலும் திறைசேரி முறிகளிலும் முதலீடு செய்கின்ற தகைமையுடைய முதலீட்டாளர்கள் அத்தகைய திறைசேரி உண்டியல்களும் திறைசேரி முறிகளும் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட போது விதிக்கப்பட்ட 10 சதவீத பிடித்துவைத்தல் வரி நீங்கலாக அத்தகைய திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மீதான வருவாய்களின் மீது மேலதிக வரி எதையும் செலுத்தத் தேவையில்லை.

**8. ஏனையவை**

செலாவணி அல்லது மற்றைய இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காக பெறுதிகளின் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதற்கு தகைமையுடைய முதலீட்டாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களமும் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களமும் இத்திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளுடன் தொடர்பான கொடுக்கல்வாங்கல்களைக் கண்காணித்து மேற்பார்வை செய்தல் வேண்டும்.

(இ) இது தொடர்பான மேலதிக தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள், விடயத்தினைப் பொறுத்து, செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் அல்லது பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் காலத்திற்குக்காலம் வழங்கப்படும்.

(ஈ) இதன் தொழிற்பாட்டு அம்சங்கள் ஏதேனும் தொடர்பில் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டிகள் இல்லாதவிடத்து பங்கேற்கும் முகவர்கள் அதாவது உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள் ஆகியோர், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் கொடுக்கல்வாங்கல்களைக் கொண்டு நடத்துவது தொடர்பில் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு விடுக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் தற்போதைய தொழிற்பாட்டு வழிகாட்டிகள், நடைமுறைகள், முறைமை விதிகள், ஒழுங்குமுறைப்படுத்தல் ஏற்பாடுகள் மற்றும் பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும். அத்தகைய ஏற்புடைத்தான விதிகள் போன்றன இல்லாதவிடத்து பங்கேற்கின்ற முகவர்கள் இவை தொடர்வான தெளிவுபடுத்தல்களுக்காக கீழே கையொப்பமிட்டவரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்கார
**கண்காணிப்பாளர் பொதுப்படுகடன்**

தொடர்பு எண்: 08/24/008/0019/001

## முதனிலை வணிகர் கம்பனிகளில் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பிடுவதன் மீதான பணிப்புரை

இப்பணிப்புரையானது, முறையே 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் நிதியமைச்சரினால் ஆக்கப்பட்ட 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதிகளின் 11(1)(பி) இன் கீழ் விடுக்கப்படுவதுடன் 2013.06.01 இலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

கொழும்பு
2013 மே 28

என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்கார
**கண்காணிப்பாளர் பொதுப்படுகடன்**

1. முதனிலை வணிகர் கம்பனிகளில் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி (நேர்மை, மேன்மை, கீர்த்தி, தகுதி, இயலாற்றல் மற்றும் நிதியியல் ஆற்றல்தன்மை) என்பன முதனிலை வணிகர் தொழில்துறையின் பாதுகாப்பு, ஆற்றல்வாய்ந்த தன்மை மற்றும் உறுதிப்பாடு என்பனவற்றை மேம்படுத்துகின்ற, சிறந்த ஆளுகை மற்றும் முதனிலை வணிகர்களின் வியாபாரத்தைக் கொண்டு நடத்துவதன் மீதான இடர்நேர்வு முகாமைத்துவம் என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கு மிக இன்றியமையாததொரு தேவைப்பாடாகக் காணப்படுகின்றது.

2. எனவே, இப்பணிப்புரையின் ஏற்பாட்டு நியதிகளுக்கிணங்க, பணிப்பாளராக அல்லது அலுவலராக பதவி வகிப்பதற்கு நியமிக்கப்படும் ஆள் பொருத்தமும் தகுதியுமுடைய ஒருவராக இருந்தாலொழிய, அத்தகைய கம்பனியின் பணிப்பாளரொருவராக அல்லது நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலரொருவராக (இதனகத்துப் பின்னர் "அலுவலர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) நியமிக்கப்படக்கூடாது. இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கும் பிரமாணங்களுடன் இணங்கிச் செல்லாத எந்தவொரு ஆளும் பணிப்பாளரொருவராக, அல்லது அலுவலரொருவராக நியமிக்கப்படவோ அல்லது தெரிவு செய்யப்படவோ, நியமனம் செய்யப்படவோ அல்லது பணிப்பாளரொருவராக அல்லது அலுவலரொருவராக தொடர்வதற்கோ தகுதியற்றவராக இருத்தல் வேண்டும்.

**3. பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்கான பிரமாணங்கள்**

3.1 ஆளொருவரின் பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பிடுகையில் பின்வரும் விடயங்கள் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் கவனத்தில் கொள்ளப்படும்:

(அ) அத்தகைய ஆள் கல்விசார் அல்லது தொழில்சார் தகைமைகளை அல்லது வங்கித்தொழில், நிதி வியாபாரம் அல்லது நிருவாகம் அல்லது வேறு ஏதேனும் துறையில் காத்திரமான அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஆ) முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளராக பணியாற்றும் ஒருவரின் வயது 70 இனை விஞ்சக்கூடாது;

(இ) முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளரொருவர், 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும்

பிணையங்கள் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதிகள் என்பனவற்றிற்குட்பட்டு, முதனிலை வணிகர் கம்பனியின் தொடர்பான கம்பனிகள் உட்பட, 20 இற்கும் மேற்பட்ட கம்பனிகள்/ நிறுவகங்கள்/ நிறுவனங்களில் பணிப்பாளராகவோ அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் பதவிகளையோ வகித்தல்கூடாது;

(ஈ) அத்தகைய ஆள், இலங்கையில் அல்லது வெளிநாட்டில் நீதிமன்றத்தினால், ஏதேனும் ஒழுங்குபடுத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் சபையினால், உயர் தொழில்சார் கழகத்தினால், விசாரணை ஆணைக்குழுவினால் நாணயச் சபையினால் அல்லது சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் சபையினால் மோசடி, ஏமாற்றுகை, நேர்மையீனம், தவறான நடத்தை போன்றவற்றுடன் தொடர்பான நடத்தைகளை இழைத்தாரென அல்லது அத்தகைய நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டவராக இருந்தாரென அல்லது ஏதேனும் சட்டம் அல்லது விதிகள், ஒழுங்குவிதிகள், பணிப்புரைகளின் ஏற்பாடுகளுக்கு அல்லது அவற்றின் கீழ் விடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்கியொழுக மறுத்தாரென கண்டறியப்பட்டவராக இருத்தல்கூடாது

(உ) அத்தகைய ஆள், குற்றவியல் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட குற்றமொன்றிற்காக இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்புக்கு ஆளானவராக இருத்தல்கூடாது

(ஊ) அத்தகைய ஆள் இலங்கையிலோ அன்றி வெளிநாட்டிலோ கடன் தீராற்றலற்றவராகவோ, வங்குரோத்து நிலையினை அடைந்தவராகவோ பிரகடனப்படுத்தப்பட்டிருக்கக்கூடாது

(எ) அத்தகைய ஆள், இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள ஏதேனும் நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்ப்பினை அல்லது கட்டளையினை மதிக்கத் தவறியவராக அல்லது படுகடனை மீளச் செலுத்த தவறியவராக இருத்தல்கூடாது

(ஏ) அத்தகைய ஆள் சித்த சுவாதீனமற்றவரானத் தகுதி வாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றமொன்றினால் வெளிப்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்

(ஐ) அத்தகைய, ஆள் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள உரிமம் பெற்ற வங்கி, நிதிக் கம்பனி, முதனிலை வணிகர் கம்பனி, நிதியியல் நிறுவனங்கள் அல்லது கம்பனிச் சபையில் பணிப்பாளராக, முதன்மை நிறைவேற்று அலுவலராக அல்லது ஏனைய அலுவலராக அல்லது ஊழியரொருவராக பணியாற்றுவதிலிருந்தும் ஒழுங்குமுறைப்படுத்தல் அல்லது மேற்பார்வை அதிகாரசபையினால் அகற்றப்பட்டவராகவோ அல்லது இடைநிறுத்தப்பட்டவராகவோ இருத்தல்கூடாது

(ஒ) அத்தகைய ஆள் பின்வரும் ஏதேனும் உரிமம் பெற்ற வங்கிகள், நிதிக் கம்பனி, முதனிலை வணிகக் கம்பனி அல்லது நிதியியல் நிறுவனம் ஒன்றில் பணிப்பாளராகவோ முதன்மை நிறைவேற்று அலுவலராகவோ அல்லது வேறு ஏதேனும் அதிகாரப் பதவியை வகிப்பவராகவோ இருத்தல்கூடாது
  - (i) ஒழுங்குமுறைப்படுத்தல் காரணங்களுக்காக உரிமம் அல்லது வியாபாரம் இரத்துச் செய்யப்பட்ட அல்லது இடைநிறுத்தப்பட்டவைகள்;
  - (ii) இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ வியாபாரத்தினை முடிவிற்குக் கொண்டு வந்த அல்லது முடிவிற்குக் கொண்டு வரப்படுகின்ற அல்லது கட்டாயமாக ஒடுக்கப்பட்ட நிறுவனங்கள்.

3.2 மேலும், 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதி மற்றும் 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்கள்) ஒழுங்குவிதிகளின் 3(இ), 5(இ) மற்றும் 5(ஈ) இல் காட்டப்பட்ட பிரமாணங்களும் ஏற்புடைத்தானவையாக இருத்தல் வேண்டும். அவற்றின் விபரம் வருமாறு:

ஒழுங்குவிதி 3(இ): முதனிலை வணிகராக நியமிக்கப்படவிருக்கும் விண்ணப்பதாரியின் தகைமையைக் கண்டறிவதற்காக தகுதி, பண்புகள், மேன்மை மற்றும் பணிப்பாளர்கள் மற்றும் முதன்மை அலுவலருக்கான பொருத்தம் போன்றன தொடர்பான விசாரணைகள் உட்பட மத்திய வங்கி அது அவசியமானதெனக் கருதுகின்ற அத்தகைய விசாரணைகளை மேற்கொள்ள முடியும்.

ஒழுங்குவிதி 5(இ): கம்பனியொன்று அதன் பணிப்பாளர் சபையில் மற்றொரு முதனிலை வணிகரின் பணிப்பாளரை அல்லது ஊழியரை அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலர் தவிர்ந்த கம்பனியின் ஊழியரை நியமிக்கக்கூடாது.

ஒழுங்குவிதி 5(ஈ): 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் பணிப்பாளருக்கு ஏற்புடைத்தான ஏதேனும் தகைமையீனங்களுக்கு உட்பட்ட எவரேனும் ஆளினை கம்பனியின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கக்கூடாது.

4. **பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியினை மதிப்பீடு செய்தல்**

4.1 ஒவ்வொரு முதனிலை வணிகக் கம்பனியும் பொதுப்படுகடன் கண்காணிப்பாளருக்கு பின்வருவனவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்:

(அ) புதிய பணிப்பாளர்களிடமிருந்து அல்லது நியமனத்திற்காக தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களிடமிருந்து முறையே இணைப்பு I மற்றும் இணைப்பு II இல் உள்ளவாறு சத்தியக்கடதாசியொன்று மற்றும் பிரகடனமொன்று;

(ஆ) நியமனம் செய்யப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்ட புதிய பணிப்பாளர் அல்லது அலுவலர், நியமனத்திற்கு உடனடியாக முற்போந்த அலுவலகத்தில் அவருக்கு/ அவளுக்கு ஒப்படைக்கப்பட்ட கடமையின் செயலாற்றத்தின் மட்டம் பற்றி குறிப்பிட்ட நிறுவனத்திடமிருந்து பெற்ற கடிதமொன்று.

4.2 ஏற்கனவேயுள்ள பணிப்பாளர்கள் மற்றும் அலுவலர்களைப் பொறுத்தவரையில் முதனிலை வணிகர் கம்பனிகள், இப்பணிப்புரையின் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் சத்தியக்கடதாசியையும் பிரகடனத்தையும் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

4.3 முதனிலை வணிகர் கம்பனியில் தொடர்ந்தும் பதவி வகிக்கும் பணிப்பாளர்/ பணிப்பாளர்கள் முதன்மை நிறைவேற்று அலுவலர்களைப் பொறுத்தவரையில், அத்தகைய பணிப்பாளர்கள் மீண்டும் நியமிக்கப்படுவதற்கு நியமனம் செய்யப்பட்டிருக்குமிடத்து தொடர்பான முதனிலை வணிகர் கம்பனியின் ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு 30 நாட்கள் முன்னதாக ஆண்டுதோறும் பொதுப்படுகடன் கண்காணிப்பாளருக்கு சத்தியக்கடதாசியையும் பிரகடனத்தையும் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.

4.4 முதனிலை வணிகர் கம்பனியில் தொடர்ந்து பதவி வகிக்கும் முதன்மை நிறைவேற்று அலுவலர் ஒவ்வொருவரையும் பொறுத்தவரையில், முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளர் சபையின் தலைவர், அத்தகைய அலுவலர் முதன்மை நிறைவேற்றுப் பதவியில் தொடர்ந்தும் இருப்பதற்கு நியமிக்கப்பட்டிருப்பின் அல்லது இன்னொரு பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு நியமனம் செய்யப்பட்டிருப்பின், கலண்டர் ஆண்டு தொடங்குவதற்கு 30 நாட்கள் முன்னதாக, ஆண்டுதோறும் பொதுப்படுகடன் கண்காணிப்பாளருக்கு சத்தியக்கடதாசியையும் பிரகடனத்தையும் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.

4.5 தொடரும் ஒவ்வொரு அலுவலரையும் பொறுத்தவரையில், முதனிலை வணிகர் கம்பனியின் முதன்மை நிறைவேற்று அலுவலர், அத்தகைய அலுவலர் தொடர்பான பதவியில் தொடர்வதற்கு நியமனம் செய்யப்பட்டிருப்பாராயின் அல்லது இன்னொரு பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு நியமனம் செய்யப்பட்டிருப்பாராயின் கலண்டர் ஆண்டு தொடங்குவதற்கு முப்பது நாட்களுக்கு முன்னதாக ஆண்டுதோறும் சத்தியக்கடதாசியையும் பிரகடனத்தையும் பெற்று பொதுப்படுகடன் கண்காணிப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. **பொதுப்படுகடன் கண்காணிப்பாளரின் ஒப்புதல்**

5.1 மேலே பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்டுள்ள விடயங்களைக் கருத்திற் கொண்டு பொதுப்படுகடன் கண்காணிப்பாளர், விடயத்தினைப் பொறுத்து, முதனிலை வணிகர் கம்பனியொன்றின் பணிப்பாளராக அல்லது அலுவலரொருவராக ஆளொருவரை நியமிப்பதற்கு அல்லது தொடர்ந்தும் பதவியிலிருப்பதற்கு ஒப்புதலளிக்கலாம் அல்லது மறுக்கலாம்.

5.2 பொதுப்படுகடன் கண்காணிப்பாளர், மேலே பந்தி 4இல் குறிப்பிடப்பட்ட சரியாக பூரணப்படுத்தப்பட்ட ஆவணங்கள் கிடைத்ததிலிருந்து முப்பது நாட்களுக்குள் முதனிலை வணிகருக்கு ஒப்புதல் வழங்கப்பட்டமை பற்றி அல்லது நிராகரிக்கப்பட்டமை பற்றி அறிவிக்க வேண்டுமென்பதுடன் காரணங்களையும் தெரிவித்தல் வேண்டும். எனவே, முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளர் சபையின் தலைவர் அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலர், அத்தகைய அறிவித்தலை பணிப்பாளருக்கு அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலருக்கு அல்லது உரிய அலுவலருக்கு அறிவிப்பதும் அதனை நடைமுறைக்கிடுவதும் அவரின் கடமையாகும்.

6. **எந்தவொரு நேரத்திலும் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் எடுக்கப்படும் தீர்மானம்**

6.1 மேலே பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டு பொதுப்படுகடன் திணைக்கள கண்காணிப்பாளர், நியமிக்கப்பட்ட ஆளொருவர் பணிப்பாளராக அல்லது அலுவலரொருவராக தொடர்வதற்குப் பொருத்தமும் தகுதியுமற்றவரென எந்தவொரு நேரத்திலும் திருப்திப்படுமிடத்து, முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளரொருவராக அல்லது அலுவலரொருவராக இருப்பதற்கு பொருத்தமும் தகுதியுமற்றவரென தீர்மானிக்கலாம் என்பதுடன் அதன் பின்னர் மேலேயுள்ள பந்தி 5.2 ஏற்புடைத்ததாதலும் வேண்டும்.

7. **பின்னர் அவதானிக்கப்படக்கூடிய தகைமையீனங்கள்**

7.1 முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளர் சபையின் ஒவ்வொரு தலைவரும் அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலரும், விடயத்தினைப் பொறுத்து எவரேனும் பணிப்பாளர் அல்லது அலுவலர் தொடர்பான முதனிலை வணிகர் கம்பனியில் பதவி வகிப்பதற்குப் பொருத்தமும் தகுதியுமற்ற ஆள் என்பதற்கான நியாயமான சந்தேகம் அல்லது விடயங்கள் கண்டறியப்பட்டிருக்குமாயின் அதனைப் பொதுப்படுகடன் கண்காணிப்பாளருக்கு அத்தகைய சந்தேகம் அல்லது விடயம் கண்டறிப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் அறிவித்தல் வேண்டும்.

7.2 பணிப்பாளரொருவரினால் அல்லது அலுவலரினால் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக்கடதாசி அல்லது பிரகடனத்தில் உள்ளடக்கியுள்ள தகவல்கள், சூழ்நிலைகள் வேறுபட்டு, மாற்றமடைந்து, விளக்கங்கள் செல்லுபடியற்றனவாக, ஏற்புடைத்தற்றனவாக அல்லது பொய்யானவையாக இருக்குமிடத்து அத்தகைய ஆள் பதினான்கு நாட்களுக்குள் அது பற்றி பொதுப்படுகடன் கண்காணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

8. **நாணயச் சபைக்கு மனுச் செய்தல்**

8.1 மேலேயுள்ள பந்தி 5.1 அல்லது 6.1 இன் கீழ், பொதுப்படுகடன் கண்காணிப்பாளரின் நிராகரிப்பு அல்லது தீர்மானத்தினால் பாதிக்கப்பட்ட ஆளொருவர், முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளர் சபையின் தலைவரினால் அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலரினால் விடயத்தினைப் பொறுத்து அனுப்பி வைக்கப்பட்ட தகவல் கிடைக்கப் பெற்று பதினான்கு நாட்களுக்குள் நியாயம் கேட்கின்ற முறையில் நாணயச் சபைக்கு எழுத்து மூலமாகக் காரணங்களை விளக்கி மனுச் செய்தல் வேண்டும்.

8.2 நாணயச் சபையானது, பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் வழங்கப்பட்ட காரணங்களையும் பாதிக்கப்பட்டவரின் எதிர்க்கருத்துக்களையும் பரிசீலனையில் கொண்ட பின்னர், பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட நிராகரிப்பினை உறுதிப்படுத்தலாம் அல்லது நிராகரிப்பினை இரத்துச் செய்துவிடலாம்.

9. **இப்பணிப்புரையில் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலன்றி:**

9.1 “முதனிலை வணிகர் கம்பனி” என்பது, 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில் நியமிக்கப்பட்டு பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் விடுக்கப்பட்ட தற்போதைய பணிப்புரையின் கீழ் ரூ.300 மில்லியனுக்கும் மேற்பட்ட மூலதனத் தளத்தைப் பேணுகின்றதும் முதனிலை வணிகர்களாக நியமிக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளல்லாதனவுமான முதனிலை வணிகர் கம்பனிகளை உள்ளடக்கும்.

9.2 முதனிலை வணிகர் கம்பனியொன்றில் “நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலர்கள்” என்பது பின்வருவோரை உள்ளடக்குகிறது:

அ. முதன்மை நிறைவேற்று அலுவலர்/ பொது முகாமையாளர்
ஆ. முதன்மை இடர்நேர்வு அலுவலர்
இ. முதன்மைக் கணக்காளர்
ஈ. முதன்மை உள்ளகக் கணக்காளர்
உ. இணங்குவிப்பு அலுவலர்
ஊ. தகவல் தொழில்நுட்பத் தலைவர்
எ. கம்பனிச் செயலாளர்
ஏ. முன்னரங்க அலுவலகத் தலைவர்
ஐ. நடு அலுவலகத் தலைவர்
ஒ. பின்னரங்க அலுவலகத் தலைவர்
ஓ. முக்கிய முதன்மை ஆளணியினர் என பதவி வகிக்கும் மற்றைய எவரேனும் அலுவலர்

**இணைப்பு I**

**முதனிலை வணிகர் கம்பனியின் பெயர்:** ......................................................

## முதனிலை வணிகர் கம்பனிகளிலுள்ள பணிப்பாளர்கள் மற்றும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளையாற்றும் அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சத்தியக்கடதாசி

......................................... என்னும் முகவரியில் வசிப்பவரும் ................................ என்ற இலக்கத்தைக் கொண்ட தேசிய அடையாள அட்டை/ கடவுச் சீட்டு என்பவற்றைக் கொண்டவரும் ........................................................................ (முழுப்பெயர்) ஆகிய நான் இத்தால் பின்வருமாறு (பௌத்த/ இந்து/ கிறிஸ்தவர்/ கத்தோலிக்கர்/ முஸ்லீம் சமயத்தவர் என்ற வகையில் உண்மையாகவும் பயபக்தியுடனும் பிரகடனம் செய்து பின்வருமாறு உறுதிப்படுத்துகின்றேன்/ சத்தியப் பிரமாணம் செய்கின்றேன்.

1. மேற்கூறப்பட்ட பெயரையுடைய உறுதிப்படுத்துபவர்/ வாக்குமூலம் அளிப்பவராகிய நான் ................................. இல் (முதனிலை வணிகர் கம்பனியின் பெயர்) ........................................................... ஆக பதவி வகிக்கின்றேன் (பதவி).

2. பின்வரும் கல்விசார் அத்துடன்/ அல்லது தொழில்சார் தகைமைகளைக் கொண்டிருக்கின்றேன் என உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன் ......................................................................................................................................................

3. வங்கித்தொழில், நிதி, வியாபாரம் அல்லது நிருவாகத்தில் அல்லது இவை தொடர்பான ஏதேனும் துறைகளில் காத்திரமான பின்வரும் அனுபவங்களைக் கொண்டிருக்கின்றேன் எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன் .................................................... ......................................................................................................................................................

4. நான் முதனிலை வணிகர் கம்பனிகளிலுள்ள பணிப்பாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதி மீதான பணிப்புரையின் பந்தி 3இன் கீழ் தரப்பட்டுள்ள ஏதேனும் தகைமையீனங்களுக்கு உள்ளாகவில்லையெனவும் 2009இன் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதி மற்றும் 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதிகளின் கீழ் குறிப்பிடப்படும் ஏதேனும் தகைமையீனங்களுக்கு உள்ளாகவில்லையெனவும் உறுதிப்படுத்துகின்றேன்/ தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதில் அடக்கப்பட்ட பிரதிக்ஞைகளை இப் பிரதிக்ஞை செய்பவர் (உறுதிப்படுத்துபவர்/ தெரிவிப்பவர்) வாசித்து விளங்கப்படுத்திய பின்னர் அதனை உண்மை என உறுதிப்படுத்தி/ சத்தியப்பிரமாணம் செய்து ........... இல் .......... ஆம் திகதியில் .......... மாதத்தில் அவரின்/ அவளின் கையொப்பத்தினை இடுகின்றார்.

ஏற்புடைத்தான முத்திரையை ஒட்டவும்

என் முன்னிலையில்
**சமாதான நீதிவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்**

**இணைப்பு II**

முதனிலை வணிகர் கம்பனியின் பெயர்: ......................................................

## விண்ணப்பதாரக் கம்பனியிலுள்ள பணிப்பாளர்களினாலும் நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலர்களினாலும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிரகடனம்[1] (........................................... இற்குப் பொருத்தமான இணைப்புக்களுடன்)

**1. தனிப்பட்ட விபரங்கள்**

1.1 முழுப் பெயர்: ....................................................................................................

1.2 பிறந்த திகதி: ....................................................................................................

1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம்: ....................................................................................................

1.4 கடவுச்சீட்டு இலக்கம்: ....................................................................................................

1.5 நிரந்தர முகவரி: ....................................................................................................

1.6 தற்போதைய முகவரி: ....................................................................................................

**2. முதனிலை வணிகர் கம்பனியில் நியமனம்**

2.1 சபைக்கு/ தற்போதைய பதவிக்கு நியமனம் பெற்ற திகதி:
(நிறைவேற்றுப் பணிகளை ஆற்றுகின்ற அலுவலரொருவரைப் பொறுத்தவரையில் வரைவு நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றினை இணைக்கவும்): ....................................................................................................

2.2 பதவி: ....................................................................................................

2.3 உள்நாடு அல்லது வெளிநாடு: ....................................................................................................

2.4 ஆண்டு ஊதியம் (விபரங்களுடன்): ....................................................................................................

2.5 பணிப்பாளர் அல்லது அத்துடன் நிறைவேற்றுப் பணிகளையாற்றுகின்ற அலுவலர் மற்றும் அல்லது அவரின்/ அவளின் குடும்பத்தவர் கம்பனிச் சொத்துக்களிலிருந்து (உதாரணமாக கம்பனியின் நிலம், கட்டடம், ஊர்தி போன்றவை) பெற்றுக் கொள்ளும் நன்மைகளின் ஆண்டுப் பெறுமதி.

2.5.1 2.5இல் குறிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களைப் பேணுவது தொடர்பாக அல்லது வேறு ஏதேனும் செலவுகளை (கொடுகடன் அட்டைப்பட்டியல், பொதுப் பயன்பாட்டு வசதிப்பட்டியல் போன்றன) மீளளிப்பதனால் கம்பனிக்கு ஏற்படுகின்ற செலவுகள்.

2.6 அத்தகைய சொத்துக்களின் கொள்வனவுப் பெறுமதி மற்றும் ஏட்டுப் பெறுமதியும் அசையாச் சொத்துக்கள் அமைந்துள்ள இடமும்

**3. உறவினர்களின் தனிப்பட்ட விபரங்கள்**

3.1 வாழ்க்கைத்துணையின் முழுப் பெயர்: ....................................................................................................

3.2 தேசிய அடையாள அட்டை இலக்கம்: ....................................................................................................

3.3 கடவுச்சீட்டு இலக்கம்: ....................................................................................................

3.4 தங்கி வாழும் பிள்ளைகளின் பெயர்கள்: ....................................................................................................

| | முழுப் பெயர் | தே.அ.அ. இலக்கம் | கடவுச்சீட்டு இலக்கம் |
|---|---|---|---|
| 3.4.1 | | | |
| 3.4.2 | | | |

**4. பின்னணியும் அனுபவமும்**

தற்பொழுது பணிப்பாளராக உள்ள அல்லது நிறைவேற்று பணிகளை ஆற்றுபவராகத் தொழில் செய்யும் உரிமம் பெற்ற வங்கி/கள் அல்லது பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனி/கள்:

| நிறுவனத்தின் பெயர் | பதவியிலிருக்கும் காலம் | பதவி |
|---|---|---|
| | | |
| | | |

**5. முதனிலை வணிகர் கம்பனிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட கம்பனிகளிலுள்ள பங்குடமை**

முதனிலை வணிகர் கம்பனிகள், அவற்றுடன் தொடர்பான நிறுவனங்களில் 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதிகள் மற்றும் 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதலாந்தர வணிகர்) ஒழுங்குவிதிகளுக்குட்பட்டு பங்குடமைகள் ஏதாவது இருப்பின்:

| நிறுவனத்தின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | உடமைகளின் சதவீதம் |
|---|---|---|
| | | |
| | | |

**6. வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்[1]**

முதனிலை வணிகர் கம்பனியில், அல்லது அதன் தொடர்பான கம்பனிகளில் அல்லது இணைக் கம்பனிகளில் எவற்றிலேனும் பணிப்பாளரானவர் அல்லது நிறைவேற்றுத் தொழிற்பாடுகளளை ஆற்றும் அலுவலர் தற்பொழுது கொண்டிருக்கும் ஏதேனும் கொடுக்கல்வாங்கல்கள்.

| நிறுவனத்தின் பெயர் | கொடுக்கல்வாங்கல் திகதி | ................இல் தொகை (ரூ.மில்.) | | வகைப்படுத்தல் (செயற்படும்/ செயற்படாத) | பிணையிடப்பட்ட பிணையங்களின் வகையும் பெறுமதியும் (ரூ. மில்.) | முதனிலை வணிகர் கம்பனிகளின் மூலதன நிதியத்தின் (%) |
|---|---|---|---|---|---|---|
| | | வரையறை | நிலுவை | | | |
| முதனிலை வணிகர் கம்பனியுடனான உடனடிக் கொடுக்கல்வாங்கல்கள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முதனிலை வணிகர் கம்பனியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| முதனிலை வணிகர் கம்பனியுடனான மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

1 - "வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்" என்பது உடனடி, மீள்கொள்வனவு அல்லது நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களைக் குறிக்கும்

**7. உறவினர்களின் நியமனம், பங்குடமை மற்றும் வியாபாரக் கொடுக்கல்வாங்கல்கள்**

7.1 பணிப்பாளர் அல்லது தற்பொழுது நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலரின் நெருங்கிய உறவினர்கள் எவராவது ஏதேனும் முதனிலை வணிகர் கம்பனிகளில் இருப்பின்,

| முதனிலை வணிகர் கம்பனியின் பெயர் | உறவினரின் முழுப் பெயர் | வகிக்கும் பதவி |
|---|---|---|
| | | |
| | | |

7.2 எவரேனும் உறவினர்கள் முதனிலை வணிகர் கம்பனியில் தற்பொழுது நேரடியாக அல்லது மறைமுகமாக வைத்திருக்கும் பங்குடமை ஏதுமிருப்பின்

| உறவினரின் முழுப் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | | வைத்திருக்கும் சதவீதம் | |
|---|---|---|---|---|
| | நேரடியாக | மறைமுகமாக | நேரடியாக | மறைமுகமாக |
| | | | | |
| | | | | |

7.3 உறவினர் முதனிலை வணிகர் கம்பனியுடன் தற்பொழுது வைத்துள்ள ஏதாவதொரு வியாபாரக் கொடுக்கல்வாங்கல் ஏதுமிருப்பின்

| உறவினரின் முழுப் பெயர் | கொடுக்கல்வாங்கலின் தன்மை | கொடுக்கல்வாங்கலின் திகதி | .............. இல் வரையறை (ரூ. மில்.) | .............. இல் வெளிநின்றவை (ரூ. மில்.) | பிணையிடப்பட்ட பிணையங்களின் வகையும் பெறுமதியும் (ரூ. மில்.) | முதனிலை வணிகர் கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தின் சதவீதம் (%) |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |

**8. மேற்கூறப்பட்ட தகவல்களுடன் தொடர்புடைய வேறு ஏதாவது விளக்கம்∴ தகவல்கள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளராக உள்ளவரின் அல்லது நிறைவேற்று தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற அலுவலரின் பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்வதுடன் தொடர்புடையது எனக் கருதப்படும் ஏனைய தகவல்கள்.**

பிரகடனம் :

எனது அறிவுக்கு எட்டிய வரையில் மேலேயுள்ள தகவல்கள் சரியானவையும் பூரணமானவையுமென நம்புகிறேன். மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்பாக இனிமேல் இடம்பெறக்கூடிய அனைத்து நிகழ்வுகளையும் சாத்தியமானளவிற்கு விரைவாக இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்கள கண்காணிப்பாளருக்கு அறியத் தருவேன் என்பதற்கும் உடன்படுகின்றேன்.

மேற்குறிப்பிட்ட பதவிக்கு நான் நியமிக்கப்படுவதனை எந்தவொரு சட்டமும் தடை செய்யவில்லை என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி : ....................................

..........................................................................................................
முதனிலை வணிகர் கம்பனியின் பணிப்பாளர் அல்லது
நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற
அலுவலரின் கையொப்பம்

## நிறைவேற்றுப் பணிகளை ஆற்றும் அலுவலர்கள் தொடர்பாக முதன்மை நிறைவேற்று அலுவலரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது

மேலே தரப்பட்ட தகவல்களுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விளக்கங்கள்/ தகவல்கள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனியில் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற ஆளின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதுடன் தொடர்பானது எனக் கருதப்படுகின்ற ஏனைய தகவல்கள்.

திகதி: ....................................

..........................................................................................................
முதன்மை நிறைவேற்று அலுவலரின் கையொப்பமும்
அலுவலக முத்திரையும்

## முதன்மை நிறைவேற்று அலுவலர் தொடர்பாக பணிப்பாளர் சபையின் தலைவரினால் பூர்த்தி செய்யப்பட வேண்டியது

மேலே தரப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புடைய வேறு ஏதேனும் விளக்கங்கள்/ தகவல்கள் மற்றும் முதன்மை நிறைவேற்றுத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்ற ஆளின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவதுடன் தொடர்பானது எனக் கருதப்படுகின்ற வேறு தகவல்களும்.

திகதி : ....................................

.............................................................
பணிப்பாளர் சபைத் தலைவரின்
கையொப்பம்

**தொடர்பு எண்: 08/24/008/0021/001** 2013 யூலை 10

முதனிலை வணிகர் நிறுவனங்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

## கம்பனி படுகடன் வணிகர்களாக முதனிலை வணிகர்களை நியமித்தல்

1. பின்வருவனவற்றை மேற்கொள்வதற்கு முதனிலை வணிகர்களை அனுமதிப்பதென மத்திய வங்கி தீர்மானித்துள்ளது.
   (அ) மொத்த முதலீட்டில் 5 சதவீதம் வரையிலான தொகையினை விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பங்குகள், விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட தொகுதிக் கடன்கள் அல்லது முறிகள் மற்றும் விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட வர்த்தகப் பத்திரங்கள் என்பனவற்றில் முதலீடு செய்யவும்; அத்துடன்
   (ஆ) விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட கம்பனி முறிகள் அல்லது தொகுதிக் கடன்களைப் பொறுத்தவரை தரகர்களாக தொழிற்படவும்.

2. இதற்கமைய, முதனிலை வணிகர்கள், கம்பனி படுகடன் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தேவையான ஒப்புதல்களைப் பெறும் பொருட்டு இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவிடம் தற்பொழுது விண்ணப்பிக்க முடியும்.

3. கம்பனி படுகடன் சந்தையில் ஈடுபடுகின்ற முதனிலை வணிகர்கள் அத்தகைய தொழிற்பாடுகள் தொடர்பில் தனியான பதிவேடுகளைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன் இணைப்பு I இல் தரப்பட்டுள்ள படிவத்தில் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு மாதாந்தக் கூற்றுக்களை சமர்ப்பித்தலும் வேண்டும்.

என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்கார
**கண்காணிப்பாளர் பொதுப்படுகடன்**

**இணைப்பு I**

**பட்டியலிடப்பட்ட பங்குகள் மற்றும் படுகடன் சாதனங்களிலான முதலீடுகள் மீதான கூற்று**

| | | ஏட்டுப் பெறுமதி ரூ.மில். | சந்தைப் பெறுமதி ரூ.மில். |
|---|---|---|---|
| 1 | அறிக்கையிடும் திகதியிலுள்ளவாறு மொத்த முதலீட்டு (மொத்தச் சொத்துப்பட்டியல்) பெறுமதி | | |
| 2 | விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட முதலீடுகள் | | |
| | விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட பங்குகள் | | |
| | விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட தொகுதிக் கடன்கள் | | |
| | விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட முறிகள் | | |
| | விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட வர்த்தகப் பத்திரங்கள் | | |
| | ஏனைய சாதனங்கள் | | |
| 3. | மொத்த முதலீடுகளின் பெறுமதியினது சதவீதமாக (மொத்தச் சொத்துப்பட்டியல்) (%) மொத்த விலைக்குறிப்பீடு செய்யப்பட்ட முதலீடுகளின் பெறுமதி | | |

**தொடர்பு எண்: 08/24/008/0022/001**

## வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களினால் பேணப்பட்ட வாடிக்கையாளர் கணக்குகளில் கோரப்படாது எஞ்சியிருக்கும் நிதிகள் மீதான நாணயச் சபையின் பணிப்புரை

இப்பணிப்புரையானது, 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 10(6) மற்றும் பிரிவு 10(7) மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 21(உ)(6) மற்றும் பிரிவு 21(உ)(7) என்பனவற்றின் கீழ் விடுக்கப்படுவதுடன் இது 2013 செத்தெம்பர் 2ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

கொழும்பு
2013 செத்தெம்பர் 02

என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்கார
**கண்காணிப்பாளர் பொதுப்படுகடன்**

1. 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 10(6) மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 21உ(6) என்பனவற்றின் நியதிகளில், வாடிக்கையாளர் கணக்குகளில் வைக்கப்பட்டிருந்த பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்கள் அல்லது பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் தொடர்பில் மத்திய வங்கியிலிருந்து கொடுப்பனவு வாயிலாக வணிகர் நேரடி பங்கேற்பாளர்கள் ஏதேனும் தொகையினைப் பெறுமிடத்து, வணிகர் நேரடி பங்கேற்பாளர் அத்தகைய தொகையினை வாடிக்கையாளருக்குச் சட்டத்தின் மூலம் அல்லது வணிகர் நேரடி பங்கேற்பாளர் மற்றும் வாடிக்கையாளர்களை தரப்பினராகக் கொண்ட எழுத்து மூலமான உடன்படிக்கையின் நியதிகளின்படி உரித்துடைய வாடிக்கையாளருக்கு அல்லது வேறு எவரேனும் தரப்பினருக்கு கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

2. 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 10(6) மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் நியதிகளில், மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றிற்குள் மேற்குறிப்பிட்ட கொடுப்பனவுகளுக்கு உரித்துடைய வாடிக்கையாளருக்கு அல்லது தரப்பினருக்கு வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் ஏதேனும் காரணங்களுக்காக கொடுப்பனவுகளைச் செய்யமுடியாமல் போகுமிடத்து செலுத்தப்படாது எஞ்சியுள்ள தொகையினை முன்னர் குறிப்பிடப்பட்ட மத்திய வங்கியின் கணக்கிற்கு மாற்றல் செய்ய வேண்டுமென்பதுடன், கொடுப்பனவு மற்றும் வாடிக்கையாளர் அல்லது தரப்பினர் தொடர்பாக, விடயத்தினைப் பொறுத்து, மத்திய வங்கியினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய தகவல்களை மத்திய வங்கிக்கு வழங்குதலும் வேண்டும்.

3. இதற்கமைய, பத்திரங்களற்ற திறைசேரி உண்டியல்கள் அல்லது பத்திரங்களற்ற திறைசேரி முறிகள் தொடர்பில் மத்திய வங்கியிலிருந்து கொடுப்பனவு வாயிலாக பெற்ற ஏதேனும் தொகையினை அவ்வாறு பெற்ற 90 நாட்களுக்கிடையில் வாடிக்கையாளருக்கு அல்லது சட்டப்படி அல்லது வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்கள் மற்றும் வாடிக்கையாளர் தரப்பினருக்கிடையேயான எழுத்து மூலமான உடன்படிக்கைகளின் நியதிகளில் அத்தகைய கொடுப்பனவுகளுக்கு உரித்துடைய வாடிக்கையாளருக்கு அல்லது வேறு எவரேனும் தரப்பினருக்கு செலுத்தமுடியாமல்

இருக்குமிடத்து, மேலே குறிப்பிடப்பட்ட 90 நாள் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் 7 நாள் காலப்பகுதிக்குள் அத்தகைய செலுத்தப்படாத தொகையினை இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தில் வைத்திருக்கும் பின்வரும் கணக்கிற்கு மாற்றல் செய்யவேண்டும் என்பதுடன் இணைப்பு I இல் தரப்பட்டுள்ள படிவத்தில் பொதுப்படுகடன் கண்காணிப்பாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

**கணக்கு இலக்கம்: 4682**

**கணக்கின் பெயர்: அரசாங்கப் பிணையங்கள் கோரப்படாத கணக்கு**

4. மேலேயுள்ள பணிப்புரை 3 இற்கிணங்க, நிதிகளை மாற்றல் செய்த பின்னர் வாடிக்கையாளர் ஏதேனும் கோரல்களைச் செய்யுமிடத்து, வாடிக்கையாளரை அடையாளம் காணுதல், சட்ட ரீதியான தன்மை மற்றும் கோரலின் செல்லுபடியாகும் தன்மை என்பன தொடர்பில் வணிகர் நேரடி பங்கேற்பாளர்கள் திருப்தியடைந்த பின்னர் வணிகர் நேரடிப் பங்கேற்பாளர்களினால் பொதுப்படுகடன் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

5. மேலேயுள்ள பணிப்புரை 4 இற்கிணங்க, பொதுப்படுகடன் கண்காணிப்பாளர் கோரல்களைப் பெற்றதன் பின்னர், கோரப்பட்ட தொகையினை தொடர்பான வணிகர் நேரடிப் பங்கேற்பாளருக்கு செலுத்துதல் வேண்டும்.

6. மேலே 3இல் குறிப்பிடப்பட்ட அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை உண்மையென உறுதிப்படுத்துவதற்கு வணிகர் நேரடி பங்கேற்பாளர்கள் தேவையான ஆவணங்களை குறைந்தபட்சம் சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து பத்தாண்டு காலப்பகுதிக்கு பேணி வருதல் வேண்டும்.

**இணைப்பு I**

**இலங்கை மத்திய வங்கிக்கு மாற்றல் செய்யப்பட்ட கோரப்படாத/ பகிர்ந்தளிக்கப்படாத நிதிகளின் விபரங்கள்**

| தொகை (ரூ.) | மாற்றல் திகதி | முழுமையான ஏனைய பெயர்களுடன் வாடிக்கையாளர்களின் இறுதிப் பெயர் | வாடிக்கையாளர் அடையாளம் (தே.அ.அட்டை, கடவுச்சீட்டு இல. பிறந்த திகதி போன்றன) | பிணையத்தின் பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |

**தொடர்பு எண்: 08/24/008/0020/001**

## முதனிலை வணிகர் மற்றும் அவர்களது வாடிக்கையாளர்களுக்கான வாடிக்கையாளர் சாசனத்தின் மீதான பணிப்புரை

இப்பணிப்புரையானது, முறையே 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் நிதியமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட 2009.06.24 ஆம் திகதியிடப்பட்ட 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் (முதலாந்தர வணிகர்) ஒழுங்குவிதிகளின் 11ஆவது ஒழுங்குவிதியின் கீழும் 2009.06.24ஆம் திகதியிடப்பட்ட 2009ஆம் ஆண்டின் 2009ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதியின் 11ஆம் ஒழுங்குவிதியின் கீழும் விடுக்கப்படுவதுடன் 2013 நவெம்பர் 7ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

கொழும்பு
2013 நவெம்பர் 07

என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்கார
**கண்காணிப்பாளர் பொதுப்படுகடன்**

1. வாடிக்கையாளர் பணி, அரச பிணையங்கள் சந்தையில் மிகப் பெரிய முக்கியத்துவமொன்றைக் கொண்டுள்ளது. இலங்கையில் முதனிலை வணிகர் முறைமையானது இன்று படுகடன் சாதனங்களின் வழங்கலுக்கான பாரிய நன்கமைந்த தொழில் விளைவினைக் கொண்டதாக இருப்பதுடன் நிதிப் பணிகளின் வழங்கலுக்கான ஓர் முக்கிய வழியாகவும் விளங்குகின்றது. முதனிலை வணிகர் முறைமையின் செயற்பரப்பு நாளுக்கு நாள் விரிவடைந்து வருகின்ற வேளையில், இலங்கை மத்திய வங்கி, அரச பிணையங்களிலுள்ள முதலீட்டாளர்களின் கேள்வியையும் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்வதனை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் வாடிக்கையாளர் பணிகளிலிருந்து வழங்கலின் தரமும் அளவும் மேலும் மேம்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருக்கிறது. ஆகவே, முதனிலை வணிகர்களுக்கும் அவர்களுடைய வாடிக்கையாளர்களுக்குமிடையிலான தொடர்புகளை நிருவகிப்பதற்கு முறைசார்ந்த வாடிக்கையாளர் சாசனமொன்றை நடைமுறைக்கிடுவது இன்றியமையாததொன்றாக மாறியது.

2. இப்பணிப்புரையின் இணைப்பு I(அ), (ஆ) மற்றும் (இ) இல் தரப்பட்டுள்ள வாடிக்கையாளர் சாசனத்தினைப் பின்பற்றுமாறு முதனிலை வணிகர்கள் இத்தால் பணிக்கப்படுகின்றனர்.

3. முதனிலை வணிகர்கள் இணைக்கப்பட்டுள்ள வாடிக்கையாளர் சாசனத்தின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலப் பதிப்புக்களை அவர்களின் வெப்தளத்தில் போதுமான முக்கியத்துவமளித்து வெளியிடுமாறும் வாடிக்கையாளரின் கோரிக்கையின் பேரில் அவர்கள் விரும்பிய மொழியில் பிரதிகளை கிடைக்கச் செய்யுமாறும் தேவையானவிடத்து வாடிக்கையாளர்களுக்கு அறிவூட்டுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

**தொடர்பு எண்: 08/24/003/0014/001**

## முதனிலை வணிகர்கள் தம்வசமில்லாத திறைசேரி உண்டியல்களையும் திறைசேரி முறிகளையும் விற்பனை செய்வது மீதான பணிப்புரை

இப்பணிப்புரையானது, முறையே 1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் என்பனவற்றின் கீழ் நிதியமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட 2009.06.24 ஆம் திகதியிடப்பட்ட 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க உள்நாட்டுத் திறைசேரி உண்டியல் (முதலாந்தர வணிகர்) ஒழுங்குவிதிகளின் 11ஆவது ஒழுங்குவிதியின் கீழும் 2009.06.24ஆம் திகதியிடப்பட்ட 2009ஆம் ஆண்டின் 2009ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதியின் 11ஆம் ஒழுங்குவிதியின் கீழும் விடுக்கப்பட்டதுடன் 2013 நவெம்பர் 7ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

கொழும்பு
2013 திசெம்பர் 26

என் டபிள்யு ஜி ஆர் டி நாணயக்கார
**கண்காணிப்பாளர் பொதுப்படுகடன்**

1. தம்வசமில்லாதனவற்றை விற்பனை செய்வது, வினைத்திறன்மிக்க விலையினைக் கண்டறிவதற்கான தொழிற்பாட்டு நெகிழ்ச்சித்தன்மையினை வழங்குகின்ற வேளையில் இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகளை உயர்த்துவதன் மூலம் சந்தை திரவத்தன்மையினை உயர்த்துகின்றதென்பதனால் இது அரச பிணையங்களை சுமுகமாக்குவதற்கும் வினைத்திறன் மிக்கதாக்குவதற்கும் மிக இன்றியமையாததொரு பண்பாகக் காணப்படுகின்றது. இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் தம்வசமில்லாத விற்பனையினை அனுமதிப்பதானது முதலாந்தர ஏலங்களில் முதனிலை வணிகர்களின் தீவிரமான பங்கேற்பினை ஊக்குவிக்கும் என மத்திய வங்கி கருதுகிறது.

2. மேற்குறிப்பிட்டதைக் கருத்திற்கொண்டு, முதனிலை வணிகர்கள் பின்வரும் நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் திறைசேரி உண்டியல்களின் தம்வசமில்லாத விற்பனைகளில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்:
   (அ) இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட திறைசேரி உண்டியல் அல்லது திறைசேரி முறிகளின் முதலாந்தர ஏலங்களில் வெற்றிகரமான விலைக்குறிப்பீடுகளைக் கொண்டிருக்கும் முதலாந்தர வணிகர்கள் மாத்திரமே தம்வசமில்லாதவற்றை விற்பதில் ஈடுபடமுடியும்;
   (ஆ) இலங்கை மத்திய வங்கியினால் திறைசேரி உண்டியல்கள் அல்லது திறைசேரி முறிகளின் முதலாந்தர ஏலங்களில் வெற்றிகரமான விலைக்குறிப்பீடுகள் அறிவிக்கப்பட்டதிலிருந்து ஆரம்பித்து அத்தகைய வெற்றிகரமான விலைக்குறிப்பீடுகள் தீர்ப்பனவு செய்யும் இறுதி நாள் வரையான காலப்பகுதியில் மாத்திரமே தம்வசமில்லாதனவற்றை விற்கும் நடைமுறையினை மேற்கொள்ளமுடியும்;
   (இ) மேலே 2(அ)இல் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் குறிப்பிட்ட ஏதேனும் ஒரு நேரத்தில் திறைசேரி உண்டியல் அல்லது திறைசேரி முறிகளின் பன்னாட்டு பிணைய அடையாள இலக்கப் படியான மொத்தத் தொகையானது, தொடர்பான திறைசேரி உண்டியல் அல்லது திறைசேரி முறி ஏலங்களில் மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு முறையாக உறுதிப்படுத்தப்பட்ட திறைசேரி உண்டியல் அல்லது திறைசேரி முறிகளுக்கான வெற்றிகரமான விலைக்குறிப்பீட்டுத் தொகைக்கு "சமனானதாக" அல்லது "அதிலும் குறைவானதாக" இருத்தல் வேண்டும்;
   (ஈ) மேலே 2(அ) இல் குறிப்பிடப்பட்ட முதனிலை வணிகர்களினால் மேற்கொள்ளப்படும் பிணையங்களில் தம்வசமில்லாத விற்பனையுடன் தொடர்பான திறைசேரி உண்டியல்கள் அல்லது திறைசேரி முறிகளின் வழங்கல்; லங்கா செகுயர் பத்திரங்களற்ற பிணையங்கள் வைப்பக முறைமையிலுள்ள முதனிலை வணிகர் கணக்கிற்கு மத்திய வங்கியினால் வரவு வைக்கப்பட்ட பிணையங்களிலிருந்து மட்டுமே மேற்கொள்ள முடியும்;
   (உ) முதனிலை வணிகர்கள் வர்த்தகம் செய்யப்பட்ட திகதியில் அனைத்து தம்வசமில்லாத விற்பனைகளையும் பதிவு செய்து கொள்ளுதல் வேண்டும்;
   (ஊ) முதனிலை வணிகர்கள், இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தின் கணிப்பிற்காக, இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களைக் கணிக்கும் நோக்கத்திற்காக தம்வசமில்லாத விற்பனைத் தொகையினை கழிக்கக்கூடாது;
   (எ) மேலே குறிப்பிடப்பட்ட முன்மதியுடைய தேவைப்பாடுகளுடன் கடுமையாக இணங்கிச் செல்வதனை உறுதிப்படுத்தும் விதத்தில் முதனிலை வணிகர்கள் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துதல் வேண்டும்;
   (ஏ) திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் தம்வசமில்லாதனவற்றை விற்கும் நிலைமையினை வாரந்தோறும் இணைப்பு I இல் தரப்பட்டுள்ள படிவத்தில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

3. பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் பிணையங்களின் தம்வசமில்லாதவற்றை விற்பனை செய்தல் தொடர்பாக விடுக்கப்பட்ட 2004 சனவரி 06ஆம் நாளிடப்பட்ட பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

**இணைப்பு I**

**தம்வசமில்லாதனவற்றை விற்பனை செய்தல் நிலைமை மீதான வாராந்த அறிக்கை**

முதனிலை வணிகரின் பெயர்:

....................................... இல் முடிவடைந்த வாரத்திற்காக (தி/மா/ஆ)

| பன்னாட்டு பிணைய அடையாள இலக்கம் | முதலாந்தர ஏலத்தில் வெற்றிகரமான விலைக்கோரலாக மத்திய வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்ட தொகை முகப்புப் பெறுமதி (ரூ.) | வர்த்தகத் திகதி | தீர்ப்பனவு திகதி | தம்வசமில்லாதனவற்றை விற்பனை செய்வது தொடர்பான நிலைமை | |
|---|---|---|---|---|---|
| | | | | முகப்புப் பெறுமதி (ரூ.) | ஏட்டுப் பெறுமதி (ரூ.) |
| | | | | | |
| | | | | | |

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.: ஆர்டிடி/பிஆர்/2010/03 (ஏ-02)**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
2013 சனவரி 21

சேரல்: அனைத்து பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும்

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## சுபீட்சக் கடன் திட்டம் (சௌபாக்கியா) உயர்ந்தபட்சக் கடன் அளவு மற்றும் தகைமையுடைய துணைச் செயற்றிட்டங்களுக்கான திருத்தங்கள்

2010 மாச்சு 22ஆம் திகதியிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பின்வரும் பிரிவுகள்/ துணைப் பிரிவுகள் மற்றும் 2011 ஏப்பிறல் 01ஆம் திகதியிடப்பட்ட அதற்கான திருத்தங்கள் (ஆர்டிடி/பிஆர்/2010/03 (திருத்தம்) மற்றும் சுபீட்சக் கடன் திட்டத்தின் (சௌபாக்கியா) 2013.01.17ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தின் குறிப்புக்களின் கீழான அறிவுறுத்தல்கள் என்பன கீழே குறிப்பிடப்பட்டவாறு திருத்தப்பட்டுள்ளதுடன் 2013 சனவரி 21ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டுமென்பது பற்றி தங்களுக்கு அறியத் தரப்படுகிறது.

**பிரிவு 3**

3.2 **கடன் எல்லைகள்** விதி விலக்கான விதத்தில், சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள், இலங்கை மத்திய வங்கியிடமிருந்து துணைச் செயற்றிட்டமொன்றிற்கு உயர்ந்தபட்சம் ரூ.25 மில்லியனைக் கொண்ட மீள்நிதியிடலைப் பெற உரித்துடையனவாகும். ரூ.500,000/- இற்கும் மேற்பட்ட தொகை கொண்ட துணைக் கடனுக்கு விதந்துரைத்த கிளை முகாமையாளர், பதிவு செய்தலுக்கான விண்ணப்பப் படிவத்துடன் சேர்த்து செயற்றிட்டத்திற்கான மதிப்பீடலையும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பிரிவு 4

4. **தகைமையுடைய செயற்றிட்டங்கள்** பின்வரும் வகைகளின் கீழ் வருகின்ற துணைச் செயற்றிட்டங்கள், இக்கடன் திட்டத்தின் கீழ் மீள்நிதியிடலுக்காகப் பரிசீலிக்கப்படுவதற்கு தகைமையுடையனவாகும்.

(அ) நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள்

(ஆ) ஏதேனும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள்

(இ) வேளாண்மை மற்றும் விலங்குவளர்ப்பு செயற்றிட்டங்கள் உட்பட வேறு ஏதேனும் வருமான உருவாக்க நடவடிக்கை

உங்கள் உண்மையுள்ள,
எம் ஜே எஸ் அபேசிங்க
**பணிப்பாளர் பிரதேச அபிவிருத்தி திணைக்களம்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.: ஆர்டிடி/சிஎஸ்டிஎல்எஸ்/2013/01**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
2013 மே 10

சேரல்: பொதுமுகாமையாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்
இலங்கை வங்கி
மக்கள் வங்கி
கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
ஹட்டன் நஷனல் வங்கி பிஎல்சி
சம்பத் வங்கி பிஎல்சி
செலான் வங்கி பிஎல்சி
பிரதேசிய சங்வர்த்தன வங்கி
சணச அபிவிருத்தி வங்கி லிமிடெட்
தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி
டிஎவ்சிசி வங்கி
லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி லிமிடெட்

## வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டம்

### 1.1. அறிமுகம்

அண்மைய எதிர்காலத்தில் பாலில் தன்னிறைவடைவதே இலங்கையின் நோக்கமாகும். நாட்டின் தற்போதைய பால் உற்பத்தியினைக் கருத்திற் கொள்கையில் இது சவால்மிக்கதொரு பணியாகவே காணப்படுகிறது. பாலில் தன்னிறைவடைவதற்கு தற்போதைய உற்பத்தி மட்டமான ஏறத்தாழ 253 மில்லியன் லீட்டர் பாலினை மும்மடங்காக மாற்ற வேண்டிய தேவை காணப்படுகின்றது. தற்போதைய உள்நாட்டு உற்பத்தி மட்டத்தில், பால் மற்றும் பால் உற்பத்திகளின் உள்நாட்டு நுகர்வில் மூன்றிலிரண்டு பங்கு ஐ.அ.டொலர் 251 மில்லியனான சராசரி வருடாந்தச் செலவில் இறக்குமதி செய்யப்படுவதுடன் இது மொத்த இறக்குமதிச் செலவில் 1.8 சதவீதத்திற்கு வகைகூறியது. ஆகவே பாலில் தன்னிறைவடைவது மிகத் தேவைப்படும் வெளிநாட்டுச் செலாவணியினைச் சேமிக்கும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோள்களில் ஒன்றான விலை உறுதிப்பாட்டினை அடையவும் உதவும். மேலும், இது செறிவானதும் இருபாலாருக்கும் சமமான தொழில்வாய்ப்பினையும் வழங்கக்கூடிய உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருக்கிறது.

வெளிநாட்டுச் செலாவணியின் சேமிப்பும் தொழில் வழங்கலும் நாட்டின் விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டின் மீது குறிப்பிடத்தக்களவு சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருக்கும். மேலும், ஒப்பீட்டு ரீதியில் மொ.உ.உற்பத்திக்குக் குறைந்தளவு பங்களிப்பினை வழங்குகின்ற மாகாணங்கள் பல பாற்பண்ணைக் கைத்தொழிலுக்கு அளப்பரிய வாய்ப்புக்களைக் கொண்டிருப்பதனால் பாற்பண்ணைக் கைத்தொழிலின் இயல்பான தன்மையானது ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கக்கூடிய உள்ளார்ந்த வளத்தினைக் கொண்டிருக்கிறது.
பன்னாட்டு விலைகள், இறக்குமதிக்குத் தேவையான வெளிநாட்டுச் செலாவணித் தொகை, தொழில்நிலை மட்டங்களின் நியதிகளில் அதன் நிலை மற்றும் பால் சமநிலை, விரிவிற்கான தற்போதுள்ள இயலளவு மட்டம் மற்றும் ஊட்டச்சத்து போன்ற பால், பால் உற்பத்திகள் மற்றும் பண்ணைக் கைத்தொழில் துறையுடன் இணைந்து காணப்படும் அநேகக் காரணிகள் இலங்கை மத்திய வங்கியின் விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டு குறிக்கோள்களிலும் சமநிலையான வளர்ச்சிக் குறிக்கோள்களிலும் நேரடியான தாக்கங்களைக் கொண்டிருக்கும். ஆகவே, நாட்டின் பாற்பண்ணைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான தூண்டுதலை வழங்கும் விதத்திலமைந்த மத்திய வங்கியின் குறிப்பிடத்தக்க அளவிலான தலையீடு, நாட்டின் முக்கிய குறிக்கோள்களுடன், குறிப்பாக, வெளிநாட்டுச் செலாவணிச் சேமிப்பு மற்றும் தொழில்வாய்ப்புக்களை வழங்குதல் என்பனவற்றுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ள பல பிரச்சினைகளைக் கட்டுப்படுத்த உதவுவதன் மூலம் மத்திய வங்கியின் விலை மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டுக் குறிக்கோள்களுக்கும் பங்களிக்கின்றது.
அத்தகைய குறிக்கோள்களை அடைவதற்கானதொரு வழிமுறையாக மத்திய வங்கி, வர்த்தக அளவிலான பாற்பண்ணைக் கைத்தொழிலுக்காக இக்கொடுகடன் திட்டத்தினை அறிமுகப்படுத்துகிறது. இத்திட்டத்தினை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் ஆதரவுடன் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் நடைமுறைப்படுத்துகிறது. இத்திட்டமானது வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டமென பெயரிடப்பட்டிருக்கிறது.

இத்திட்டமானது நடுத்தரத்திலிருந்து பாரிய அளவு வரையிலான பண்ணை அபிவிருத்தியாளர்கள் வர்த்தக மயப்படுத்தப்பட்ட பண்ணை நடவடிக்கைகளுக்கு ஆண்டொன்றிற்கு 8 சதவீதமான சலுகை வட்டி வீதத்தில் கொடுகடன் வசதிகளைப் பெறுவதற்கு வசதியளிக்குமிடத்து இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் பேரில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஆண்டிற்கு இரு தடவையாக ஆண்டொன்றிற்கு வட்டி உதவுதொகையாக 6 சதவீதம் செலுத்தப்படும்.

### 1.2 வர்த்தக அளவிலான பாற்பண்ணை அபிவிருத்திக் கடன் திட்டத்தின் நோக்கங்கள்

i. பால் உற்பத்தியினை ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ 75 மில்லியன் லீற்றர்களினால் அதிகரித்தல்.
ii. பண்ணையொன்றிற்கு குறைந்தபட்சம் 25 பசுக்களுடன் குறைந்தது 1,000 பாரிய பண்ணைகளை நிறுவுதல்.
iii. நடுத்தரளவு தொழில்முயற்சியாளர்களை, பாற்பண்ணை நடவடிக்கைகள், பாற்பண்ணை பதனிடல் நடவடிக்கைகளை உள்ளடக்கத்தக்க விதத்தில் வர்த்தக அளவிலான பாற்பண்ணை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஊக்குவித்தல்.
iv. குறைப் பயன்பாட்டு நில மூலவளங்களை மேம்படுத்துவதற்காக பண்ணை அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு பெருந்தோட்டக் கம்பனிகளை ஊக்குவித்தல்.
v. பால் நிரம்பல் தொடரினை குறிப்பாக பாற்பண்ணை கூட்டுறவுச் சங்கங்கள், பதனிடுபவர்கள் மற்றும் உள்நாட்டு உற்பத்தி சந்தைப்படுத்துவோரின் நடவடிக்கைகளின் வர்த்தக மயப்படுத்தலை ஊக்குவித்தல்.

1.3 **விண்ணப்பதாரிகளுக்கான தகைமைப் பிரமாணம்**

பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்கின்ற பண்ணை வேளாண்மையாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கடன்களைப் பெற தகைமையுடையவராவர்.

1.3.1 கடன்பாட்டாளர் இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்.
1.3.2 தனிபட்டவராக, தனிப்பட்டவர்களைக் கொண்ட குழுவாக அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கம்பனியாக இருத்தல் வேண்டும்.
1.3.3 பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகள்.
1.3.4 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளத்தக்க வியாபாரத் திட்டமொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
1.3.5 வியாபாரத் திட்டம், செயற்றிட்ட மதிப்பீட்டு அறிக்கை மற்றும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் கோரப்பட்ட ஏனைய ஆவணங்களை வழங்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.
1.3.6 செயற்றிட்ட இலாபத்தன்மையினைப் பேணுகின்ற விதத்தில் பாற்பண்ணைச் செயற்றிட்டம்/ பண்ணையுடன் தொடர்பான செயற்றிட்டம் என்பனவற்றை முகாமைப்படுத்தக் கூடியவர்களாயிருத்தல் வேண்டும்.
1.3.7 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் கேட்கப்படும் பிணையத்தினை வழங்கக் கூடியதாயிருத்தல் வேண்டும்.
1.3.8 திருப்திகரமான மீள்கொடுப்பனவு இயலாற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.4 **நிதியிடலுக்குத் தகுதியுடைய நோக்கங்கள்**

பின்வரும் வகைகள் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெறுவதற்கு தகைமையுடையனவாகும்.

i. பசுக்களைக் கொள்வனவு செய்தல்.
ii. மாட்டுத் தொழுவம், கட்டடங்கள், நீர்ப்பாசன முறைமை (தெளித்தல், குழாய் வழி) கிணறு அல்லது வேளாண் - கிணறு போன்றவற்றை அமைத்தல்
iii. விலங்குத் தீவனங்களின் பயிரிடல்
iv. புதிய பண்ணைகளை நிறுவுதல்
v. பண்ணை அபிவிருத்தி
vi. உயிரின வாயு அலகுகளை நிறுவுதல்
vii. ஏற்கனவேயுள்ள பண்ணையினை விரிவாக்குதல்
viii. பண்ணையினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் உற்பத்தி/ பால் பதனிடல்
ix. உழவுப் பொறி, நீரிறைக்கும் பம்பி, குளிர்ச்சாதனப் பெட்டி, பாலாடைகளைப் பிரித்தெடுப்பவை, பால் கறக்கும் எந்திரங்கள், புல்வெட்டும் பொறிகள் போன்ற பொறிகளையும் கருவிகளையும் கொள்வனவு செய்தல்
x. பாலையும் பாலை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளையும் பாதுகாப்பதற்கான போக்குவரத்து மற்றும் களஞ்சியங்கள்.
xi. பாற்பண்ணை அபிவிருத்தியுடன் அல்லது திரவப்பாலை பருகும் கலாச்சாரத்தினை ஊக்குவிப்பதுடன் நேரடியாக தொடர்புபட்ட ஏதேனும் மற்றைய புத்தம் புதிய நடவடிக்கை
xii. உற்பத்தி மற்றும் உற்பத்திகளின் தரம் என்பனவற்றை மேம்படுத்துவதற்காக மிருக வைத்தியர்/ கால்நடை அலுவலரினால் விதந்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் புத்தம் புதிய வழிமுறைகள்.

2. **பங்கேற்கின்ற நிதியியல் நிறுவனங்கள்**

i. இலங்கை வங்கி
ii. மக்கள் வங்கி
iii. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
iv. ஹட்டன் நஷனல் வங்கி பிஎல்சி
v. சம்பத் வங்கி பிஎல்சி
vi. செலான் வங்கி பிஎல்சி
vii. பிரதேசிய சங்வர்த்தன வங்கி
viii. சணச அபிவிருத்தி வங்கி லிமிடெட்
ix. தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி
x. டிஎவ்சிசி வங்கி
xi. லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி லமிடெட்

3. **கொடுகடன் திட்டத்தின் பொதுவான முகாமைத்துவம்**

கொடுகடன் திட்டத்தின் முகாமைத்துவத்திற்கும் நடைமுறைப்படுத்தலுக்கும் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பொறுப்பாக இருக்கும்.

4. **தொழிற்பாட்டுப் பிரதேசம்**

தீவு முழுவதும்

5. **குறைந்தபட்ச நடவடிக்கை:** குறைந்தபட்சம் 25 பசுக்களைக் கொண்ட பாற்பண்ணையொன்று.

6. **கடன் அளவு**

6.1 உயர்ந்தபட்சக் கடன் எல்லை ரூ. 25 மில்லியன்
6.2 கடன்பாட்டாளரின் பங்குரிமை மூலதனப் பங்களிப்பு
கடன்பாட்டாளரின் பங்குரிமை மூலதனப் பங்களிப்பானது காசாகவோ பண்டமாகவோ மொத்தச் செயற்றிட்டச் செலவில் 15 சதவீதமாக இருக்கும்.

7. **வட்டி வீதம்**

7.1 அரையாண்டு ரீதியில் ஆண்டொன்றிற்கு 6 சதவீத வட்டி வீதத்தில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட வெளிநின்ற கடன் தொகையின் மீது வட்டி உதவுதொகையொன்றினை இலங்கை மத்திய வங்கி பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கும்.
7.2 கடன்பாட்டாளர்களுக்கான வட்டி வீதம்
கடன்பாட்டாளர்களுக்கான கடன்கள் மீதான வட்டி வீதம் ஆண்டொன்றிற்கு 8 சதவீதமாக இருக்கும்.
7.3 தொடங்கும் திகதி: திட்டமானது 2013 மே 10ஆம் திகதியிடப்பட்ட இல. ஆர்டிடி/சிஎஸ்டிஎல்எஸ்/2013/01 கொண்ட இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும்.

8. **கடன் மீள்கொடுப்பனவுக் காலம்**

கடனின் மீள்கொடுப்பனவிற்கான உயர்ந்தபட்சக் காலம் தேவைப்படுமிடத்து 6 மாத சலுகைக் காலம் உட்பட 5 ஆண்டுகளாக இருக்கும்.

9. **சலுகைக் காலமும் மீள்அட்டவணையிடலும்**

தேவைப்படுமிடத்து, சலுகைக் காலமானது செயற்றிட்டத்தின் தன்மை தொடர்பில் கடன்பாட்டாளருடன் ஆலோசனை நடத்திய பின்னர் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். எனினும், கடன் மீள்கொடுப்பனவுக் காலம் 5 ஆண்டுகளை விஞ்சக்கூடாது. 5 ஆண்டுகளை விஞ்சுமொரு காலப்பகுதிக்கு கடன்களை மீள்அட்டவணைப்படுத்தும் ஏதேனும் தேவையொன்று எழுமாயின் அதற்கு மத்திய வங்கியிடமிருந்து முன்னொப்புதல் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

10. **பிணையத் தேவைப்பாடுகள்**

பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் தீர்மானிக்கப்பட்ட கடன்களின் பகிர்ந்தளிப்புக்களுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காகப் பொருத்தமான பிணையங்களைப் பெற்றுக் கொள்வதில் பங்கேற்கும் நிறுவனங்கள் சுயாதீனமுடையனவாக இருந்தன. பாற்பண்ணையைப் பொறுத்தவரையில், பசுக்கள் பிணையமாக பரிசீலிக்கப்படலாம் என்பதுடன் கடன்கள் பசுக்களின் கொள்வனவிற்காக வழங்கப்பட்டிருக்குமிடத்து பசுக்களுக்கு காப்புறுதி செய்து கொள்வது கடன்பாட்டாளரின் பொறுப்பாகும்.

11. **பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் வகிபாகம்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள், வாய்ப்புக்களைக் கொண்ட கடன்பாட்டாளர்களிடையே திட்டத்தினை மேம்படுத்துமாறும் நிதியிடுவதற்கு ஆற்றல்மிக்க செயற்றிட்டங்களுடன் கூடிய பொருத்தமான தொழில்முயற்சியாளர்களை அடையாளம் காணுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டன. திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் எதிர்பார்க்கப்படும் வகிபாகம் கீழே தரப்பட்ட விதத்தில் இரண்டு பிரிவுகளைக் கொண்டதாகும்.

11.1 **பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களின் வகிபாகம்**

ஒவ்வொரு பங்கேற்கும் நிதியியல் நிறுவனமும்;

i. கிளை அலுவலகங்களுக்கும் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்குமிடையில் கடன் தொழிற்பாடுகளை ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்வதற்காக தலைமை அலுவலகத்தில் மூத்த அலுவலரொருவரை நியமித்தல்.
ii. கடன்களை வழங்குவதற்காக திட்டம் தொழிற்பாட்டிலுள்ள மாவட்டங்களிலுள்ள கிளைகளின் பொருத்தமான எண்ணிக்கையினை குறித்துரைப்பதுடன் அத்தகைய கிளைகளிலுள்ள அலுவலர்களுக்கு திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் அறிவூட்டுதலும் வேண்டும்.
iii. கடன்பாட்டாளர்களை அடையாளம் காணுதல், கடன் செயன்முறை, கொடுகடன்களை பகிர்ந்தளித்தல் மேற்பார்வை செய்தல் மற்றும் பின் தொடர்தல் மற்றும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் கடன்களை அறவிடல் என்பன தொடர்பில் கிளை முகாமையாளர்களுக்கான விபரமான வழிகாட்டலொன்றினைத் தயாரித்தல்.
iv. மாவட்டங்கள் மற்றும் கிளைகள் மட்டத்தில் வருடாந்த செயலாற்ற கொடுகடன் இலக்குகளை நிர்ணயிப்பதுடன் வழங்கல் முன்னேற்றத்தினை காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்தல்.
v. அத்தகைய செயற்றிட்டங்களை மதிப்பிடுவதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் கடன்களை அளவிடுவதற்குமாக குறித்துரைக்கப்பட்ட கிளைகள் போதுமான அலுவலர்களையும் கள அலுவலர்களையும் கொண்டிருப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
vi. இதன் கிளைகளினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் பௌதீக முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதற்கும் செயற்றிட்டத்தின் நோக்கம் பூர்த்தி செய்யப்படுகின்றதா என்பதனை உறுதிப்படுத்துவதற்காகவும் கிரமமான தலப் பரீட்சிப்புக்கள் நடத்தப்படுவதுடன் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுவதற்காக பரீட்சிப்பு அறிக்கையினையும் தயாரித்தல் வேண்டும்.
vii. குறித்துரைக்கப்பட்ட கிளைகள், நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றம் மற்றும் அறவிடல் செயலாற்றம் என்பன தொடர்பில் தலைமை அலுவலகத்தினூடாக இலங்கை மத்திய வங்கிக்கு கிரமமாக அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். பங்கேற்கும் நிதியிடல் நிறுவனங்களின் தலைமை அலுவலர்கள் அத்தகைய தரவுகளை ஒன்றுதிரட்டி, காலாண்டு அடிப்படையில் மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
viii. கடன்படக்கூடிய வாய்ப்புக்களைக் கொண்டிருப்பவர்களுடன் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் அல்லது ஏதேனும் பொருத்தமான வழிகளினூடாக கொடுகடன் திட்டங்களை ஊக்குவித்தல்.

12. **பங்கேற்கும் நிதியியல் நிறுவனக் கிளைகளின் தொழிற்பாடுகள்**

12.1 **செயற்றிட்டங்களைப் பரீட்சித்தல்**

தொடர்பான கிளையின் கிளை முகாமையாளர், கடனுக்கான விண்ணப்பம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் செயற்றிட்டம் தொடர்பான பரீட்சிப்புக்களை மேற்கொள்ள வேண்டியதுடன் செயற்றிட்டம் தொடர்பில் பின்வரும் பிரமாணங்களையிட்டு திருப்திப்பட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

i. நிதியியலின் ஆற்றல் வாய்ந்த தன்மை
ii. தொழில்நுட்ப ரீதியான சாத்தியங்கள்
iii. உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பு சாத்தியங்கள்
iv. சுற்றாடலுடன் இசைந்து செல்லும் தன்மை
v. கடன்பாட்டாளரின் முகாமைத்துவ இயலளவு

12.2 **பங்கேற்கும் நிதியியல் நிறுவனக் கிளையினால் செயற்றிட்டம் மதிப்பிடப்படல்**

கடன்பாட்டாளர் செயற்றிட்ட முன்மொழிவு அறிக்கையினை பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளை முகாமையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். கிளைச் செயற்றிட்ட அமைவிடத்தினை பரீட்சிக்க வேண்டியதுடன் உத்தேசச் செயற்றிட்டத்தின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக முன்மொழிவுகளை மதிப்பிடுவதும் அவசியமாகும். மதிப்பீட்டு அறிக்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

12.3 **கடன்பாட்டாளர்களைப் பதிவு செய்தல்**

12.3.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கிளை முகாமையாளர் இணைப்பு 1இல் விபரிக்கப்பட்டுள்ளவாறு முழுமையான கடன் பதிவு விண்ணப்பப் படிவமொன்றினைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளை முகாமையாளர் கடன் பெறவிருக்கும் கடன்பாட்டாளரிடமிருந்து செயற்றிட்ட முன்மொழிவு/ மதிப்பீட்டு அறிக்கையினை (பாற்பண்ணைக்கான மாதிரிப் படிவம் இணைப்பு III இல் தரப்பட்டுள்ளது) பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். முகாமையாளர் செயற்றிட்ட முன்மொழிவின் ஆற்றல்வாய்ந்த தன்மை பற்றித் திருப்திப்படுமிடத்து இணைப்பு I இல் விபரிக்கப்பட்டுள்ளவாறான பூரணப்படுத்தப்பட்ட கடன் பதிவு செய்தல் விண்ணப்பப் படிவத்தினை, பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் தொடர்பான தலைமை அலுவலகத்தினூடாக கொழும்பு 1, இல. 30 சனாதிபதி மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். மதிப்பீட்டறிக்கையின் விபரங்களைக் கொண்ட பிரதியொன்றினை கடன்பாட்டாளர் அனுமதிக்காக மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

12.3.2 மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் விசாரணை இலக்கம் மற்றும் மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளரின் கருத்துக்களடங்கிய கடிதமொன்றினை வழங்கும்.

12.3.3 கடன்பாட்டாளரைப் பதிவு செய்த பின்னர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் கடன்களைச் செயன்முறைப்படுத்தவும் கடன்பாட்டாளர்களுக்கு வசதிகளை வழங்கவும் அனுமதிக்கப்படுகிறது. கடன் வழங்கப்பட்டதிலிருந்து 30 நாட்களுக்குள் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வட்டி உதவுதொகை விண்ணப்பப் படிவத்தினை (இணைப்பு IIஅ மற்றும் II ஆ) அனுப்பி வைக்குமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. யாருடைய பதிவு இரத்துச் செய்யப்பட்டதோ அந்த நன்மைபெறுநருக்கு கடன் வழங்க வேண்டுமெனில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனம் புதிய பதிவிற்காக புதிய விண்ணப்பப் படிவமொன்றினை அனுப்பி வைத்தல் வேண்டும்.

12.3.4 குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் செயற்றிட்டத்தினை மதிப்பீடு செய்து கொள்ளும் பொருட்டும் செயற்றிட்டத்தின் இலாபத் தன்மையினை கடன்பாட்டாளர் விளங்கிக் கொள்வதற்கு வசதியளிக்கும் விதத்திலும் கடன்பாட்டாளர் சரியான கணக்கேடுகளையும் கணக்குகளையும் பேணிவருமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களை வலியுறுத்துதல் வேண்டும்.

**12.4 கடனை விடுவித்தல்**

12.4.1 மதிப்பீட்டு அறிக்கையில் விபரிக்கப்பட்டவாறு செயற்றிட்ட நடவடிக்கைகளின் தேவைப்பாடுகளுக்கிணங்க கடன் தவணைகள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்படும்.

12.4.2 பொறித்தொகுதிகள், பொறிகள் மற்றும் கருவிகளின் கொள்வனவினைப் பொறுத்தவரையில் கொடுப்பனவுகளை வழங்குநருக்கு நேரடியாக வழங்குவதற்குச் சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுமாறு கிளை முகாமையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

12.4.3 கடனின் ஒவ்வொரு தவணைப் பணமும் விடுவிக்கப்பட்டதன் பின்னர் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கிளை முகாமையாளர் செயற்றிட்டத்தின் களப் பரீட்சிப்பினை தொடர்ந்தும் மேற்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விஜயம் தொடர்பிலான பதிவேடுகளையும் பேணுதல் வேண்டும்.

**12.5 செயற்றிட்டங்களைக் கண்காணித்தல்**

12.5.1 கடன்களைப் பகிர்ந்தளித்த பின்னர் கிளை முகாமையாளர் கிரமமான இடைவெளிகளில் செயற்றிட்டங்களைப் பரீட்சித்தல் வேண்டும். பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் செயற்றிட்டங்களை மேற்பார்வை செய்யுமாறும் கடன்களை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அறவிட்டுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

12.5.2 இத்திட்டத்தின் நோக்கத்திற்குத் தேவையானவற்றை மத்திய வங்கி இதுவரை மேற்கொண்டு வருவது பற்றியும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் கடன்கள் தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கணக்கேடுகளையும் ஏனைய பதிவுகளையும் பரீட்சிப்பதற்கான உரிமையினைக் கொண்டுள்ளமை பற்றி கிளை முகாமையாளர் தெரிந்திருத்தல் வேண்டுமென்பதுடன் தேவையானவிடத்து களப் பரீட்சிப்புக்களையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

**12.6 கணக்குகளும் நிதியியல் கூற்றுக்களும்**

12.6.1 ஒவ்வொரு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களும் கடன் மதிப்பீடுகள், ஒப்புதல்கள், பகிர்ந்தளிப்புக்கள் மற்றும் அறவிடல்கள் என்பனவற்றுக்கிடையேயான விடயங்களை எடுத்துக்காட்டும் விதத்தில் பொருத்தமான கணக்குகளையும் பதிவேடுகளையும் பேணுதல் வேண்டும்.

12.6.2 கடன்பெறுகைகள் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் தனியான கணக்குகளைப் பேணுமாறு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

**12.7 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பொறுப்புக்கள்**

12.7.1 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் கடன்பாட்டாளர்களை அடையாளம் காண்பதற்கும் செயற்றிட்டங்களை மதிப்பிடுவதற்கும் பொறுப்பாக இருக்கின்றன.

12.7.2 கடந்த தவணைப் பணத்தினை விடுவிப்பதற்கு முன்னதாக, பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கிளை அலுவலர்கள் செயற்றிட்டத்தின் ஆற்றல்வாய்ந்த தன்மையினை மதிப்பிடுவதற்காக செயற்றிட்ட அமைவிடத்திற்கு விஜயம் செய்தல் வேண்டும்.

12.7.3 கடனுக்கு ஒப்புதலளிக்கும் அனைத்து விடயங்கள் தொடர்பிலான இறுதித் தீர்மானம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தொடர்பான அதிகாரிகளிடையே கையளிக்கப்பட்டுள்ளது. கிளையானது கடன்பாட்டாளருடன் நெருக்கமானதும் நிலையானதுமான தொடர்புகளைப் பேணுதல் வேண்டும்.

**13. சூழல் பாதுகாப்பு விதிகளுக்கு இணங்கியொழுகுதல்**

தேவையானவிடத்து தொடர்பான அதிகாரசபைகளிடமிருந்து சுற்றாடல் சாத்தியவள அறிக்கையொன்றினை பெற்றுக் கொள்வது கடன்பாட்டாளரின் பொறுப்பாகும். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் செயற்றிட்டம் தொடர்பான சுற்றாடல் சாத்தியவள அறிக்கை கடன் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**14. இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் வகிபாகம்**

இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பின்வருவனவற்றிற்காக முறைமையொன்றினை நிறுவவுள்ளது:

14.1 கடன் செயற்பாட்டின் முன்னேற்றத்தினை தொடர்ச்சியாகக் கண்காணிப்பது மற்றும் கொடுகடன் திட்டத்தின் நடைமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தொடர்பில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு தேவையான உதவிகளை/ அறிவுறுத்தல்களை வழங்குதல்.

14.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் குறித்துரைக்கப்பட்ட கிளை அலுவலர்களுக்கு அறிவூட்டுவதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குசெய்தல்

14.3 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை மதிப்பிடுவதும் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தின் கருத்துக்களை வெளிப்படுத்துவதும்

14.4 பதிவு செய்தல் மற்றும் வட்டி உதவுதொகையினை வழங்குதல்

**15. கடன்களை அறவிடல்**

**15.1 சலுகைக் காலம்**

சலுகைக் காலம் இருக்குமாயின், சலுகைக் காலத்திற்கும் கடனுக்கான வட்டியை செலுத்துமாறு கடன்பாட்டாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். சலுகைக் காலம் முடிவடைந்த பின்னர், மதிப்பீட்டு அறிக்கையிலும் கடன் ஒப்பந்தத்திலும் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட மீள்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டத்திற்கிணங்க, விடயத்திற்கு ஏற்றவாறு மூலதனத்துடன் சேர்க்கப்பட்ட வட்டியுடன் சேர்த்து தவணைக் கடனை அறவிடுவதற்கு கிளை முகாமையாளர் நடவடிக்கையினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**15.2 முன்னேற்றத்தினை அறிக்கையிடல்**

செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுவதில் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் தீவிரமாக இருக்க வேண்டுமென மத்திய வங்கி எதிர்பார்க்கிறது.

15.2.1 இணைப்பு IV என இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் விபரிக்கப்பட்டமைக்கிணங்க பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம் செயற்றிட்ட நடவடிக்கைகள் மீதான அவற்றின் முன்னேற்றத்தினை காலாண்டு அடிப்படையில் அறிக்கையிடல் வேண்டும்.

**15.3 கடன் வழங்கியமைக்குப் பின்னரான மேற்பார்வையும் பின்தொடர் நடவடிக்கைகளும்**

பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் கிளையானது, கிளையினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டம் தொடர்பாக காலத்திற்குக் காலம் பரீட்சிப்புக்களை மேற்கொள்ள வேண்டியதுடன் பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளை, மேற்கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பில் திருப்திப்படவில்லையாயின் அத்துடன் அல்லது கடனானது மதிப்பீட்டுச் செயற்றிட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படவில்லை என்பது கண்டறியப்படுமாயின் பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் கிளை உடனடியாகப் பின்வரும் நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும்.

15.3.1 எஞ்சிய தவணைக் கடனை விடுவிப்பதனை இடைநிறுத்துதல்.

15.3.2 வெளிநிற்கும் கடன் தொகையினை அறவிட உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும்

15.3.3 இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அறிவித்தல்.

**16. கடன்களைப் பகிர்ந்தளித்தல், வட்டி உதவுதொகைக் கொடுப்பனவுகள் மற்றும் தகவல்களை அறிக்கையிடல்**

16.1 கடன் விண்ணப்பத்திற்கான முன் பரீட்சிப்புக்களுக்குப் பின்னர், கிளை முகாமையாளர் திருப்திப்படுவாராயின் அவர்/ அவள் இணைப்பு I இனை தலைமை அலுவலத்தினூடாக மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது அஞ்சல் மூலமாகவோ இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

16.2 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து பெற்ற கடன் விண்ணப்பங்களை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் பதிவு செய்வதுடன் பதிவு இலக்கங்களை கிளைகளுக்கு அவற்றின் தலைமை அலுவலகங்களூடாக அறிவிக்கும்.

16.3 பதிவு இலக்கம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் கடன்கள் பகிர்ந்தளிக்கப்படும். கடன் பகிர்ந்தளிப்புக்கள் இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும். இது தொடர்பாக அனைத்தையுமுள்ளடக்கிய தரவுத் தளமொன்று மத்திய வங்கியினால் பேணப்படவுள்ளது. இத்தகவல்கள் முன்னேற்றத்தினைப் பகுப்பாய்வு செய்வதற்கும் வட்டி உதவுதொகை, மீளளிப்பு போன்றவற்றினைக் கணிக்கவும் இன்றியமையாதனவாகும்.

16.4 ஒவ்வொரு நிதியியல் நிறுவனமும் ஒவ்வொரு கடன் விண்ணப்பமும் பதிவு செய்யப்பட்டதன் பின்னர் ஒரு மாதத்திற்குள் கடன் பகிர்ந்தளிப்புக்களின் விபரங்களை அறிவித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு செய்யத்தவறின் பதிவு இலக்கத்தின் கீழ் சேமித்து வைக்கப்பட்டுள்ள விபரங்கள் முறைமையிலிருந்து தன்னியக்கமாகவே நீக்கப்பட்டு விடுவதுடன் இப்பதிவு இலக்கத்தின் கீழ் கடன் எதுவும் வழங்கப்படவில்லை என்ற அனுமானத்திற்கும் வரவேண்டியிருக்கும்.

16.5 வட்டி உதவு தொகைக்கான விண்ணப்பம் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தினூடாக மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். வட்டி உதவுதொகையினைக் கோருவதற்கு பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் இணைப்பு IIஅ மற்றும் II ஆ என்பனவற்றில் விபரிக்கப்பட்டுள்ள படிவங்களைப் பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

16.6 பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகம் கிளைகளின் அடிப்படையில் தகவல்களைத் தொகுத்து வட்டி உதவுதொகை விண்ணப்பத்துடன் சேர்த்து பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

16.7 பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் வட்டி உதவுதொகையினைக் கணித்து ஆண்டிற்கு இரு தடவை வழங்கும்.

16.8 இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள் எப்பொழுது தேவையோ அப்பொழுது களப் பரீட்சிப்புக்களை/ கள விஜயங்களை நேரடியாக மேற்கொள்வர்.

**17. ஏனையவை**

17.1 இத்திட்டம் தொடர்பான நியதிகளையும் நிபந்தனைகளையும் எப்பொழுது அவசியமோ அப்பொழுது திருத்துவதற்கான உரிமையினை மத்திய வங்கி கொண்டுள்ளது.

உங்கள் உண்மையுள்ள,  
எம் ஜே எஸ் அபேசிங்க  
**பணிப்பாளர் பிரதேச அபிவிருத்தி திணைக்களம்**

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல் இல.: ஆர்டிடி/ஆர்எவ்/2013/08**

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்  
இலங்கை மத்திய வங்கி  
2013 யூன் 17

சேரல்: இலங்கை வங்கி  
மக்கள் வங்கி  
ஹட்டன் நஷனல் வங்கி  
கொமர்ஷல் வங்கி  
செலான் வங்கி  
சணச அபிவிருத்தி வங்கி  
யூனியன் வங்கி  
பான் ஏசியா வங்கி  
டிஎவ்சிசி வங்கி  
தேசிய அபிவிருத்தி வங்கி  
பிரதேசிய சங்வர்த்தன வங்கி  
சம்பத் வங்கி

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## கிழக்கு மாகாணத்தின் பொருளாதாரச் செயற்பாடுகளை மீள ஆரம்பித்தல் சுழலும் நிதியம் - கட்டம் III

**1. அறிமுகம்**

மேற்கூறப்பட்ட கடன் திட்டமானது, இலங்கையினுடைய கிழக்கு மாகாணத்தில் நீண்டகாலப் பயிர்களின் பயிர்ச்செய்கை, விலங்கு வளர்ப்பு, மீன்பிடி, வர்த்தகம், சுற்றுலா மற்றும் ஏனைய சுயதொழில் செயற்றிட்டங்களின் பொருளாதார செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளை உள்ளடக்கிய பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களினூடாக தகைமை வாய்ந்த துணை கடன்பாட்டாளர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் கொடுகடன் வழங்கப்பட இருக்கிறது.

**2. செயற்றிட்டத்தின் பொதுவான முகாமைத்துவம்**

இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களம், இந்தக் கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாக இருக்கும்.

**3. கடன் திட்டம்**

| | | |
|---|---|---|
| 3.1 ஒதுக்கப்பட்ட மொத்த நிதி | : | கிழக்கு மாகாணத்தின் பொருளாதார நடவடிக்கைகளை மீளத் தொடங்குவதற்காக - சுழலும் நிதியம் - கட்டம் II கடன் திட்டத்திலிருந்து சேகரிக்கப்பட்ட அறவிடல்கள் |
| 3.2 கடன் | : | உயர்ந்தபட்சம் ரூ.500,000/- என்ற நிபந்தனைக்குட்பட்டு செயற்றிட்டத்தினுடைய மதிப்பிடப்பட்ட செலவில் 90 சதவீதம் |
| 3.3 மீள்நிதி | : | பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் தொகையை இலங்கை மத்திய வங்கி மீள்நிதியளிக்கும். |
| 3.4 மீள்நிதியிடல் மீதான வட்டி வீதம் | : | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான கடன்களின் மீது ஆண்டொன்றிற்கு 4 சதவீதம் |
| 3.5 துணைக் கடன்களுக்கான வட்டி வீதம் | : | ஆண்டுக்கு 9 சதவீதம் |
| 3.6 சலுகைக் காலம் | : | துணைச் செயற்றிட்டத்தின் தன்மைக்கேற்ப முதலாவது தவணைக் கட்டணம் பகிர்ந்தளிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆரம்பித்து ஆகக்கூடியது 6 மாதங்கள் |
| 3.7 துணைக் கடன்களை மீளச் செலுத்தும் காலம் | : | துணைச் செயற்றிட்டத்தின் தன்மையின் அடிப்படையில் ஆகக் கூடியது 5 ஆண்டுகள் |
| 3.8 நடைமுறைப்படுத்தப்படும் திகதி | : | 2013 யூலை 1 இலிருந்து இச்செயற்றிட்டம் நடைமுறைக்கு வரும் |
| 3.9 தொழிற்பாட்டு பரப்பு | : | கிழக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்கள் |

**4. தகைமை வாய்ந்த செயற்றிட்டங்கள்**

இந்தக் கடன் திட்டத்தின் கீழ், பின்வரும் துறைகளின் கீழ் வருகின்ற ஏதேனும் சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் உருவாக்கும் செயற்பாடுகள் நிதி வழங்குவதற்கு பரிசீலனையில் கொள்ளப்படுவதற்கு தகைமையுடையனவாக இருக்கும்.

(அ) நீண்டகாலப் பயிர்களின் பயிர்ச்செய்கை
(ஆ) விலங்கு வளர்ப்பு அபிவிருத்தி
(இ) மீன்பிடியும் அது சார்ந்த செயற்பாடுகளும்
(ஈ) வர்த்தகம், சுற்றுலா மற்றும் ஏனைய சுயதொழில் செயற்றிட்டங்கள்

**5. துணைக் கடன்பாட்டாளர்களுக்கான பொதுவான தகைமை நிபந்தனைகள்:**

தகைமை வாய்ந்த துணைக் கடன்பாட்டாளர்கள் பின்வரும் தகைமைகளை உடையவராக இருத்தல் வேண்டும்.

5.1 கிழக்கு மாகாணத்தில் வசிக்கின்ற ஒரு நிரந்தர பிரசையாக இருத்தல்

5.2 ஆரம்பிக்கப்படுகின்ற / மீள ஆரம்பிக்கப்படுகின்ற செயற்றிட்டத்தினுடைய மதிப்பிடப்பட்ட செலவின் 10 சதவீதத்திற்குக் குறையாமல் உரிமை மூலதனப் பங்களிப்பு வழங்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். இவ்வுரிமை மூலதனப் பங்களிப்பு, காசு அல்லது உழைப்பு மற்றும் முகாமைத்துவத் தேர்ச்சி போன்ற காசல்லாத வடிவத்தில் இருக்க முடியும்.

5.3 உத்தேசிக்கப்பட்ட செயற்றிட்டமானது, ஆற்றல்மிக்க காசுப் பாய்ச்சலினையும் ஒரு நல்ல மீள் செலுத்தும் இயலளவையும் உடையதென பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களை திருப்திப்படுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

5.4 பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களினால் நிர்ணயிக்கப்பட்டவாறான ஏதேனும் பிணைகளை வழங்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

**6. பங்குபற்றுகின்ற நிதியியல் நிறுவனங்கள்**

கிழக்கு மாகாணத்தில் கிளைகளைக் கொண்டு தொழிற்படுகின்ற பின்வரும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன.

- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- ஹற்றன் நஷனல் வங்கி
- கொமர்ஷல் வங்கி
- செலான் வங்கி
- சணச அபிவிருத்தி வங்கி
- யூனியன் வங்கி
- பான் ஏசியா வங்கி
- டிஎவ்சிசி வங்கி
- தேசிய அபிவிருத்தி வங்கி
- பிரதேச சங்வர்த்தன வங்கி
- சம்பத் வங்கி

இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தெரிவு செய்யப்படும் ஏதாவது புதிய பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியினால் காலத்திற்குக்காலம் அறிவிக்கப்படும்.

**7. துணைக் கடன்பாட்டாளர்களைப் பதிவு செய்தல்**

7.1 இணைப்பு (I) இல் விபரிக்கப்பட்டவாறு ஒவ்வொரு கடன் விண்ணப்பதாரி தொடர்பாகவும் ஒரு பூரணப்படுத்தப்பட்ட பதிவு படிவத்தை கிளை முகாமையாளர் தயாரிக்க வேண்டும்.

7.2 கடன் விண்ணப்பதாரியை பதிவு செய்வதற்காக இந்தப் பதிவுப் படிவத்தினுடைய மூலப் பிரதி பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், தளம் 07, கோபுரம் 04, இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.

7.3 ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட கடன் விண்ணப்பதாரிக்கும் இலங்கை மத்திய வங்கியினால் ஒரு குறித்துரைக்கப்பட்ட பதிவு இலக்கம் ஒதுக்கப்படும். பதிவு செய்யப்பட்ட கடன் விண்ணப்பதாரிகள் தொடர்பான பதிவு இலக்கங்கள் இலங்கை மத்திய வங்கியினால் தொடர்பான பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்கப்படும்.

**8. கடன்களை விடுவித்தல்**

8.1 துணைக் கடன்களின் பகிர்ந்தளிப்பினை இணங்கிக் கொள்ளப்பட்ட அட்டவணையின் அடிப்படையிலும் துணைக் கடன் அனுமதிக்கப்பட்ட செயற்றிட்டத்தின் உண்மையான முன்னேற்றத்திற்குட்பட்டும் கட்டம் கட்டமாக மேற்கொள்ள முடியும். பங்குபற்றும் நிதியியல் நிறுவனத்தின் கிளை முகாமையாளர்கள், துணைக் கடனின் ஒவ்வொரு தவணைப் பணமும் விடுவிக்கப்பட்டதன் பின்னர் துணைச் செயற்றிட்டம் தொடர்பான பரீட்சிப்பினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

8.2 சாதனங்கள், கருவிகள், எந்திரம் மற்றும் மூலப்பொருட்கள் கொள்வனவினை நிதியிடுவதற்கான துணைக் கடனானது அப்பொருட்களின் வழங்குநர்களுக்கு நேரடியாக வழங்கப்பட வேண்டும்.

**9. துணைக் கடன்களுக்காக விண்ணப்பம் செய்தல்**

9.1 துணைக் கடன்களுக்கான விண்ணப்பம், தகைமை வாய்ந்த துணைக் கடன்பாட்டாளர்களினால், தொடர்பான பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களினால் வடிவமைக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

9.2 விண்ணப்பதாரிக்கு அருகில் அல்லது செயற்றிட்டத்தின் அமைவிடத்திற்கு அருகிலுள்ள பங்குபற்றும் நிதியியல் நிறுவனத்தின் கிளையில் துணைக் கடன் விண்ணப்பத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

9.3 துணைக் கடனின் உயர்ந்தபட்சத் தொகை பந்தி 3.2 இல் குறிப்பிட்டவாறு, துணைச் செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த செலவில் 90 சதவீதத் தொகையாக இருத்தல் வேண்டும்.

9.4 பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கு ஏற்புடைத்தான ஏதேனும் பிணைகளின் மூலம் துணைக் கடன்கள் பிணையிடப்படுதல் வேண்டும்.

**10. மீள்நிதிக்கான விண்ணப்பங்கள்**

10.1 மீள் நிதிக்கான விண்ணப்பங்கள் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்தினால் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மீள்நிதிக்கான விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(i) மீள் நிதிக்கான விண்ணப்பம் (இணைப்பு I)
(ii) கடன் பகிர்ந்தளிப்புக் கூற்று (இணைப்பு II)
(iii) கேள்வி வாக்குறுதிச் சான்றிதழ் (இணைப்பு III) (பொருத்தமான முத்திரைக் கட்டணத்துடன்)
(iv) சேர்ப்பித்தல் கடிதம் (இணைப்பு IV)
(v) கொடுகடன் நிறுவனத்தினுடைய ஒப்படை (இணைப்பு V)
(vi) பகிர்ந்தளிப்பு கடிதம் (இணைப்பு VI)

10.2 துணைக் கடன் தவணைகளின் பகிர்ந்தளிப்பினைத் தொடர்ந்து மீள்நிதியிடலுக்காகச் செய்யப்படும் விண்ணப்பங்களுடன் மேற்குறிப்பிட்ட அனைத்து ஆவணங்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**11. மீள்நிதியின் பகிர்ந்தளிப்பு**

11.1 பந்தி 7.3இல் விபரிக்கப்பட்டவாறு, ஒவ்வொரு விண்ணப்பதாரி தொடர்பிலும் பதிவு இலக்கம் வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்கள், தொடர்பான விண்ணப்பதாரிகளுக்கு கடன்களை வழங்க அனுமதிக்கப்படுவதுடன் ஒவ்வொரு கடன்பாட்டாளர் தொடர்பான பதிவு இலக்கங்களை குறிப்பிட்டு பந்தி 10.1இல் விபரிக்கப்பட்டவாறு தேவையான ஆவணங்களுடன் மீள்நிதியிடலுக்கான விண்ணப்பத்தினை அனுப்பி வைத்தல் வேண்டும். மீள்நிதியிடல் தொடர்பான பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்துடனான அனைத்துக் கடிதத் தொடர்புகளிலும் பதிவு இலக்கத்தினை குறிப்பிடுவது மிக முக்கியமானதாகும். துணைக் கடன்களை அடையாளம் காணும் நோக்கத்திற்காக, பங்குபற்றும் நிதி நிறுவனங்களின் கிளைகள் அவற்றின் பேரேட்டுத் தாள்களில் இப்பதிவு இலக்கத்தினை பயன்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

11.2 மீள் நிதிக்கான விண்ணப்பங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டதும், பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், அவ்விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்ற ஒழுங்கின் அடிப்படையில் மீள்நிதியினை விடுவிப்பதுடன் மீள்நிதி விடுவிக்கப்பட்டமை தொடர்பான தகவல்களை தொடர்பான பங்குபற்றும் நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களுக்கும் அறிவிக்கும்.

(அ) துணைக் கடன்கள் பகிர்ந்தளிப்புச் செய்யப்பட்டு 60 நாட்களினுள் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு மீள்நிதிக்கான கோரல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) தெளிவாகப் பூரணப்படுத்தப்பட்ட மீள்நிதி விண்ணப்பத்தினை பெற்று 30 நாட்களினுள் மீள்நிதிக் கடனானது வழங்கப்படும் என்பதை பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் உறுதிப்படுத்துவதற்கு உத்தரவாதமளிக்கும்.

**12. கொடுகடன் வழங்கப்பட்டமைக்குப் பின்னரான மேற்பார்வை**

12.1 செயற்றிட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட செயற்பாடுகளில் கடன்பெறுநர்கள் ஈடுபட்டுள்ளனரா என்பதை கண்டறிவதற்கு பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களின் கிளைகளினால் நிதியிடப்பட்ட முதலீடு பற்றிய பரிசோதனைகளை வங்கி காலத்திற்குக் காலம் மேற்கொள்ள வேண்டும்.

12.2 துணைக் கடன்களிற்கான சாதனம், எந்திரம், கருவிகள், மூலப்பொருட்கள் மற்றும் வேளாண்மை உள்ளீடுகள் போன்ற சொத்துக்களினுடைய கையேற்பு தொடர்பில் கடன் வழங்கப்பட்டவுடன் கடன்பாட்டாளரின் சார்பாக யாருக்கு கொடுப்பனவு நேரடியாக செய்யப்பட்டதோ அந்த வழங்குநரினால் வழங்கப்பட்ட அப்பொருட்களை அக்கிளையின் கள அலுவலர் சரிபார்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் ஆவணப்படுத்துவதற்காக கடன்பாட்டாளரிடமிருந்து கடன் பெற்றுக் கொண்டதனை உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

12.3 கடன்பாட்டாளருக்கு வழங்கப்பட்ட எந்திரம், கருவிகள் மற்றும் உபகரணத்தினுடைய செயல் நிறைவேற்றத்திற்காக வழங்குநரினால் வழங்கப்பட்ட உத்தரவாதக் கடிதம் கிளையினால் உத்தரவாதமளிக்கப்பட்ட காலப்பகுதியில் வைத்திருக்கப்பட வேண்டும். உத்தரவாதமளிக்கப்பட்ட காலப்பகுதியினுள் உற்பத்திச் சாதனத்தில் ஏதும் குறைபாடிருப்பின் கடன் வழங்கிய கிளையின் கவனத்திற்கு கடன்பாட்டாளர் அதனைக் கொண்டு வருவதற்கு கேட்கப்பட வேண்டும். இதன் மூலம் கிளை, தேவையேற்படின் இவ்விடயத்தினை வழங்குநரின் கவனத்திற்குக் கொண்டு வந்து ஏதேனும் சீர்செய்யும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளும்.

12.4 உண்மையான நோக்கத்திற்காகவே துணைக் கடன் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனை சரிபார்த்துக் கொள்வதற்காக ஒவ்வொரு தவணைப் பணமும் வழங்கப்பட்டதன் பின்னர் சரிபார்ப்பொன்றினை மேற்கொள்ளுமாறு கிளையின் கள அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார். ஒவ்வொரு தவணைப் பணமும் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் கள அலுவலரினால் பயன்பாட்டு சரிபார்ப்பு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பயன்பாட்டு சரிபார்ப்பு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்து மற்றைய தவணைப் பணங்களும் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

12.5 துணைக் கடன்களின் மீள்பெறுகைக்காக துணைக் கடன்பாட்டாளர்களுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணுகின்ற நோக்குடன் துணை செயற்றிட்டங்களிற்கு கிளையினுடைய கள அலுவலர் ஒழுங்காக விஜயம் செய்ய வேண்டும். முதலீட்டின் முன்னேற்றம் மற்றும் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களினால் நிதியளிக்கப்பட்ட பொருட்களை கடன்பாட்டாளர் தொடர்ந்தும் தனது உடமையில் வைத்திருக்கின்றாரா என்பதனையும் விண்ணப்ப காலத்தில் எதிர்பார்க்கப்பட்டபடி வருமானத்தை முதலீடுகள் ஈட்டுகின்றனவா என்பதனையும் கண்டறிவது இவ்விஜயங்களின் நோக்கமாகும்.

**13. அறவிடல் நடவடிக்கை**

13.1 இயலாற்றலைக் கொண்டுள்ள மற்றும் சலுகைக் காலத்தினுள் செலுத்துவதற்கு விருப்பம் இருக்கின்ற கடன் பெறுநர்கள் அப்படி செய்வதற்கு அனுமதிக்கப்படலாம்.

13.2 செயற்றிட்டங்களில் ஏதும் தவறுகள் அல்லது பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களின் கருத்துப்படி தெளிவான நியாயமான காரணங்களின் விளைவாக துணைக் கடன்களைத் தீர்ப்பனவு செய்ய முடியாமல் போகுமிடத்து, இலங்கை மத்திய வங்கியின் முன்னொப்புதலுடன் மீள்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டத்தில் பொருத்தமான சீராக்கங்களை மேற்கொள்வதன் மூலம் இரண்டாண்டுகளை விஞ்சாத நியாயமான காலப்பகுதியைக் கொண்ட நீடிப்பினை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் வழங்கலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களிடமிருந்து புதிய மீள்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டத்தினைப் பெற்றதும் தொடர்பான மீள்நிதியிடல் மீது அதேயளவு கால நீடிப்பினை பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கும்.

**14. இலங்கை மத்திய வங்கிக்கான மீள்கொடுப்பனவு**

14.1 பந்தி 3.4 இல் குறிப்பிட்டுள்ள வட்டி வீதத்தின்படி, சலுகைக் காலத்தினுடைய முடிவிலிருந்து தொடங்குகின்ற ஒவ்வொரு ஆண்டின் யூன் 30ஆம் நாளும் திசெம்பர் 31ஆம் நாளும் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களினால் இலங்கை மத்திய வங்கிக்கு அரையாண்டிற்கு ஒரு முறை மீள்நிதிக் கடனின் மூலதனமும் வட்டிக் கொடுப்பனவும் செலுத்தப்படுதல் வேண்டும்.

14.2 சலுகைக் காலத்தில் செலுத்தப்பட வேண்டிய ஏதேனும் வட்டி அதனுடைய குறிப்பிட்ட திகதியில் செலுத்தப்படாவிட்டால், பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களின் தெரிவிற்கேற்ப அந்த வட்டி செலுத்தப்படும் வரையில் மூலதனமயமாக்கப்படலாம்.

**15. பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களின் பணிகள்**

பங்குபற்றும் நிதியியல் நிறுவனத்தினுடைய துணைக் கடன் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் பொறுப்பாகவிருப்பதற்கு தலைமை அலுவலகத்தில் கடன் திட்டத்தினுடைய நிர்வாக அலுவலராக ஒரு முழு நேர மூத்த அலுவலரை ஒவ்வொரு பங்குபற்றும் நிதியியல் நிறுவனமும் நியமித்தல் வேண்டும். ஒவ்வொரு பங்குபற்றும் நிதியியல் நிறுவனத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொழிற்பாடுகள் பின்வருமாறு:

15.1 இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனையுடன் துணைக் கடன்களை வழங்குவதற்குப் பொருத்தமான கிளைகளை குறித்துரைத்தல் வேண்டும். கடன் திட்டத்தின் நிர்வாகத்தை எளிதாக்குவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் அந்த கிளைகளுக்கு குறியீட்டு இலக்கங்கள் ஒதுக்கப்படும்.

15.2 துணைக் கடன்களின் செயற்பாடு மற்றும் துணைக் கடன்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் என்பன மீது கிளை முகாமையாளர்களுக்காக விரிவான வழிமுறைகளை தயாரித்தல்.

15.3 திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் குறித்து பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களின் ஒவ்வொரு கிளையிலும் தனிப்பட்ட பேரேட்டினை பராமரித்தல்.

15.4 தவணைக் கடன்களின் பகிர்ந்தளிப்பிற்கு முன்னர் துணை செயற்றிட்டங்களினுடைய பௌதீக முன்னேற்றத்தினை மீளாய்வு செய்வதற்காக தொழில் முயற்சிகளின் கிரமமான உடனடி பரிசோதனையை உறுதிப்படுத்தல்.

15.5 துணைக் கடன்களினுடைய அறவிடலினதும் கடனினுடைய பயன்பாட்டினதும் அடிப்படையில் அவற்றின் முன்னேற்றத்தினை மேற்பார்வை செய்வதற்காக குறித்துரைக்கப்பட்ட கிளைகளில் போதுமான கள அலுவலர்கள் கிடைக்கத்தக்கதாகவுள்ளமையினை உறுதிப்படுத்தல்.

15.6 பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களின் தலைமை அலுவலகத்திற்கு கடன்களின் அறவிடுகை, நடைமுறைப்படுத்தல் போன்றவை குறித்து ஒழுங்கான செயலாற்ற அறிக்கைகளை, திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற கிளைகள் சமர்ப்பிப்பதை உறுதிப்படுத்தல்.

15.7 பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களினுடைய தலைமை அலுவலகத்தினால் ஒவ்வொரு காலாண்டும் இலங்கை மத்திய வங்கியினுடைய பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்திற்கு கடன் திட்டம் பற்றிய முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

**16. இலங்கை மத்திய வங்கியின் பணிகள்**

பின்வருவனவற்றுக்காக முறைமையொன்றை மத்திய வங்கி நிறுவும்.

16.1 துணைக் கடன் செய்முறையின் செயலாற்றத்தை தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் கொடுகடனை மேற்பார்வை செய்வதிலும் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலும் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களிற்கு தேவையான உதவிகளை வழங்குதல்.

16.2 கடன் திட்டத்தினுடைய திட்டமிடப்பட்ட குறிக்கோள்கள் தொடர்பாக அதனுடைய பயனுறு தன்மையினை அவதானிக்கின்ற நோக்குடன் துணைக் கடன் பெறுநர்களிற்கு ஏற்படுகின்ற நன்மைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் கண்காணித்தல், அத்துடன் தேவையேற்படுமிடத்து, துணைக் கடன் பெறுநர்களினால் பெறப்படுகின்ற நன்மைகளை முன்னேற்றுவதற்கான வழிவகைகளைப் பின்பற்றுதல்.

16.3 செயற்றிட்டப் பரப்பில் பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களின் செயல்நிறைவேற்றத்தினை மதிப்பிடுதல் மற்றும் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

16.4 பங்குபற்றும் நிதியியல் நிறுவனங்களினால் குறித்துரைக்கப்பட்ட கிளைகளினுடைய அலுவலர்களுக்கு அறிவூட்டுகின்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல்.

**17. ஏனைய விடயங்கள்**

17.1 தேவை ஏற்படுகின்ற போது, மீள்நிதியிடல் திட்டம் குறித்த நியதிகளையும் நிபந்தனைகளையும் திருத்துவதற்கான உரிமையினை இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது.

உங்கள் உண்மையுள்ள,
எம் ஜே எஸ் அபேசிங்க
**பணிப்பாளர் பிரதேச அபிவிருத்தி திணைக்களம்**

**தொடர்பு எண்: 24/10/001/0005/001** 2013 மே 15

தலைவர்
அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள்

அன்புள்ள ஐயா/ அம்மணி,

## 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வழிகாட்டல்களின் வழங்கல்
## உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 32, 39 மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் 7 என்பனவற்றினைப் பின்பற்றுதல்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் 2013.05.15 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் விடுக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட வழிகாட்டல்களின் பிரதியொன்றினை நாம் இத்துடன் இணைத்துள்ளோம்.

பணிப்பாளர் சபையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் இவ்வழிகாட்டலின் பிரதியொன்றினைச் சமர்ப்பிப்பதற்கும் இது கிடைத்தமை பற்றி தொடர்பான அனைத்து அலுவலரும் கையொப்பமிட்ட கடிதமொன்றினை கீழே கையொப்பமிட்டவருக்கு 2013.05.28ஆம் நாளளவில் சமர்ப்பிப்பதற்கும் தயவுசெய்து நடவடிக்கை எடுக்கவும்.

மேலும், அனைத்து மூத்த முகாமையாளர்களுக்கும் உள்ளக/ வெளிவாரி கணக்காய்வாளர்களுக்கும் இணங்குவிப்பு அலுவலர்களுக்கும் இவ்வழிகாட்டல்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

உங்கள் உண்மையுள்ள,
**பதில் பணிப்பாளர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வை**

படி: அனைத்து உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

**இதனகத்துப் பின்னர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் எனக் குறிப்பீடு செய்யப்படும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் இலங்கை கணக்கீட்டு நியமம் 32, 39 மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 7 என்பன பின்பற்றப்படுவது தொடர்பான 2013ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க வழிகாட்டல்**

1. ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடல்

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், விடுக்கப்பட்ட ஏற்கனவேயுள்ள தீர்மானங்கள், பணிப்புரைகள், வழிகாட்டல்கள், சுற்றறிக்கைகள், விதிகள் மற்றும் வழிகாட்டல்கள் என்பனவற்றிற்கிணங்க வெட்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட கூற்றுக்கள் உட்பட அனைத்துக் காலாந்தர தகவல்களையும் மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்கின்ற வேளையில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் 2012.01.01 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ தொடங்குகின்ற ஆண்டு காலப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இலங்கை கணக்கீட்டு நியமம் 32, இலங்கை கணக்கீட்டு நியமம் 39 மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் 7 என்பனவற்றின் பிரயோகத்துடன் கூடிய கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கூற்றுக்களை வெளியிடுதலும் வேண்டும்.

2. மீளிணக்கப்படுத்தல்

இலங்கை கணக்கீட்டு நியமம்/ இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் என்பனவற்றின் கீழ் வெளியிடப்பட்ட கணக்கு மீதிகளுக்கும் ஏற்கனவேயுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்குக் கீழ் எந்தவொரு நேரத்திலும் இலங்கை மத்திய வங்கிக்கு அறிக்கையிடப்பட்ட மீதிகளுக்குமிடையிலான வேறுபாடுகளை மீளிணக்கப்படுத்துவதற்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் போதுமான தரவுகள்/ பதிவேடுகளைப் பேணுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன.

3. பங்கிலாபங்களை பிரகடனம் செய்தல் அல்லது இலாபங்களை தாய் நாட்டிற்கு அனுப்புதல்

2013.05.15 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் போதுமான மூலதனத்தினைப் பேணுவதனை உறுதிப்படுத்துவதற்காக முன்மதியுடையதொரு வழிமுறையாக இடைக்கால/ இறுதி பங்கிலாபங்களைப் பிரகடனப்படுத்த அல்லது இலாபங்கள் ஏதுமிருப்பின் அதனை தாய் நாட்டிற்கு அனுப்புவதற்கு முன்னதாக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளரிடமிருந்து ஒப்புதலைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். உத்தேச பங்கிலாபக் கொடுப்பனவுகளுக்காக வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள்,

அ. இலங்கை மத்திய வங்கியின் முன்மதியுடைய பணிப்புரைகள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள்/ இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்களின் கீழ் பங்கிலாபங்களை கணிப்பதற்கு முன் இலாபங்கள் தொடர்பான மீளிணக்கத்தினை பணிப்பாளர்/ வங்கியல்லா நிதியியல் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும். இம்மீளிணக்கமானது தொடர்பான வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் பணிப்பாளர் சபையினாலும் கணக்காய்வுக் குழுவினாலும் ஒப்புதலைப் பெற்றிருத்தல் வேண்டும். இம்மீளிணக்கமானது நிதியாண்டின் ஆரம்பத்திலிருந்து உத்தேச பங்கிலாபம் அறிவிக்கப்படுவதற்கு முற்போந்த கலண்டர் மாதம் வரையிலான காலப்பகுதிக்கு தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆ. ஏற்கனவேயுள்ள முன்மதியுடைய பணிப்புரைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதியியல் தகவல்களின் அடிப்படையில் உத்தேச பங்கிலாபத்திற்காக சீராக்கம் செய்யப்பட்ட பின்னர் நிதியியல் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) மற்றும் (இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை) பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட முன்மதியுடைய விகிதங்களின் மீதான கணிப்பீடுகள் அளக்கப்படுதல் வேண்டும். கணிப்பீடுகள் உத்தேச பங்கிலாபங்களை அறிவிப்பதற்கு முன்னர் முற்போந்த கலண்டர் மாதத்திற்காக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இத்தேவையானது, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் பணிப்பாளர் சபையினாலும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் கணக்காய்வுக் குழுவினாலும் ஒப்புதலளிக்கப்படுதல் வேண்டும்.

## 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்

**2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்  
**நாணயச் சபையின் தலைவரும்**  
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

கொழும்பு  
2013 யூன் 7

## 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அமைப்பியல் மாற்றங்கள்) பணிப்புரை

**எடுத்துக்காட்டல்**

1. இப்பணிப்புரை 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அமைப்பியல் மாற்றங்கள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நியதிகளில் உரிமம் பெற்ற ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் ஒப்புதலை வேண்டி நிற்கும் அமைப்பியல் மாற்றங்கள்**

2. இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் எழுத்து மூலமான முன்னொப்புதல் இல்லாமல் உரிமம் வழங்கப்பட்ட எந்தவொரு நிதிக் கம்பனியும்:-

2.1 ஏதேனும் துணைக் கம்பனியினை, துணைக் கம்பனியின் துணைக் கம்பனி அல்லது இணைக் கம்பனியினை, அல்லது இணைக் கம்பனியினை அமைத்தல்;

2.2 அதன் வியாபாரத்தினை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ விற்றல்;

2.3 நிதி வியாபாரம், வாடகைக் கொள்வனவு, குத்தகைக்கு விடுதல் அல்லது அடகுபிடித்தல் என்பவற்றுடன் நேரடியாகத் தொடர்புபடாத ஓர் புதிய வியாபார நடவடிக்கையினைத் தொடங்குதல்;

2.4 வேறு ஏதேனும் நிறுவனம் அல்லது கம்பனியின் வியாபாரத்தை முழுமையாக அல்லது பகுதியளவில் கையேற்றல்;

2.5 வேறு ஏதேனும் நிறுவனத்துடன் அல்லது கம்பனியுடன் ஒன்று சேர்த்தல், திரட்சிப்படுத்துதல் அல்லது இணைத்தல்;

2.6 கம்பனியின் பெயரை மாற்றுதல்;

2.7 கம்பனியின் முகாமைத்துவத்தினை மீளமைத்தல்.

**பணிப்பாளரின் ஒப்புதலை வேண்டி நிற்கும் அமைப்பியல் மாற்றங்கள்**

3. பணிப்பாளரின் எழுத்து மூலமான முன்னொப்புதல் இல்லாமல் எந்தவொரு உரிமம் வழங்கப்பட்ட நிதிக் கம்பனியும் பின்வருவனவற்றை மேற்கொள்ளக்கூடாது:-

3.1 அஞ்சல், கூரியர் பணிகள், உணவுப் பரிமாற்றப் பணிகள், பேணல் மற்றும் சுகாதாரப் பணிகள், வளாகப் பாதுகாப்பு, சம்பளப்பட்டியல் மற்றும் செயலாளர் தொழிற்பாடுகள் தவிர்ந்த அதன் ஏனைய ஏதேனும் ஓர் தொழிற்பாட்டை வெளிநபரிடம் ஒப்படைத்தல்;

3.2 அதன் பங்கு மூலதனத்தை அதிகரித்தல் அல்லது குறைத்தல்;

3.3 ஓர் துணைக் கம்பனியின் அல்லது இணைக் கம்பனியின் பங்கு மூலதனத்தில் அதனது முதலீட்டினை அதிகரித்தல்;

3.4 ஓர் துணைக் கம்பனியின் அல்லது இணைக் கம்பனியின் வியாபாரத்தினை முழுமையாக அல்லது பகுதியளவில் விற்றல்;

3.5 நிறுவனத்தின் அகவிதிகளை மாற்றுதல்;

3.6 ரூபா ஐந்து மில்லியனைவிட (ரூ.5,000,000/-) உயர்வான புத்தகப் பெறுமதியினைக் கொண்ட சொத்துக்களை தற்போது நிலவும் சந்தைப் பெறுமதியிலும் குறைவான விலையில் விற்றல் அல்லது மாற்றல் செய்தல்;

3.7 பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் எவரேனும் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலரின் பதவியில் மாற்றம் செய்தல்.

**சொத்துக்களின் மாற்றல்/ விற்றல் மீதான வரையறைகள்**

4. எந்தவொரு நிதிக் கம்பனியின் மாற்றல் செய்பவருக்குச் சாதகமான ரீதியில் அமையக்கூடிய நாணய ரீதியிலான பரிசீலனைகளுக்காகவன்றி, அதன் சொத்துக்களை எந்தவொரு நிறுவனத்திற்கும் மாற்றல் செய்யவோ அல்லது விற்கவோ கூடாது.

**பணிப்பாளர் சபைகளின் ஏதேனும் அங்கத்தவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் பதவி விலகல்கள்**

5. பணிப்பாளர் சபையின் அங்கத்தவர் மற்றும் முதன்மை நிறைவேற்று அலுவலர், பணிப்பாளரின் முன்னொப்புதல் இல்லாமல் கம்பனியிலிருந்து பதவி விலக முடியாது.

**வரைவிலக்கணங்கள்**

6. இப்பணிப்புரையில்,

6.1 “நிதித் தொழில்”, “துணைக் கம்பனி” மற்றும் “இணைக் கம்பனி” என்பன 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

6.2 “தற்போது நிலவும் சந்தைப் பெறுமதி” எனப்படுவது இயலுமையுடைய வாங்குபவருக்கும் இயலுமையுடைய விற்பனையாளருக்குமிடையேயான இயலக்கூடிய ஆற்றல் வாய்ந்த கொடுக்கல்வாங்கலில் பரிமாற்றப்படும் ஓர் சொத்திற்கு உரிமம் பெற்ற மதிப்பீட்டாளர் ஒருவரால் தீர்மானிக்கப்பட்ட மதிப்பீட்டு விலையாகும்.

6.3 “பணிப்பாளர்” எனப்படுபவர் இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளராவார்.

**பணிப்புரை நீக்கம்**

7. 2005ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (அமைப்பியல் மாற்றங்கள்) பணிப்புரை மற்றும் 1991ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (சொத்துக்களின் மாற்றம்) பணிப்புரை என்பன இத்தால் நீக்கப்படுகின்றன.

## 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட பணிப்புரை.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

கொழும்பு
2013 யூலை 26

## 2013ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கடன் வசதிகளைப் பதிவழித்தல்) பணிப்புரை

**எடுத்துக்காட்டல்**

1. இப்பணிப்புரையானது 2013ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கடன் வசதிகளைப் பதிவழித்தல்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நியதிகளில் உரிமம் பெற்ற ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டுமென்பதுடன் இப்பணிப்புரையின் திகதியிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

**கடன் வசதிகளைப் பதிவழித்தல்**

2. எந்தவொரு நிதிக் கம்பனியும் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளரின் எழுத்து மூலமான முன்னொப்புதல் இல்லாமல் கீழே குறிப்பிட்ட எந்தவொரு ஆட்களுக்கும் அல்லது நிறுவனங்களுக்கும் அதனால் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் வசதிகளை பதிவழிக்கக்கூடாது:-

2.1 அதன் பணிப்பாளர்களில் எவரேனும் அல்லது அத்தகைய பணிப்பாளரின் எவரேனும் உறவினர்கள்;

2.2 இதன் பணிப்பாளர்களில் எவரேனும் பணிப்பாளர், பங்காளர், முகாமையாளர், முகவர், முதலீட்டாளர், உத்தரவாதி அல்லது பங்குடமையாளராக ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனம்;

2.3 இதன் ஏதேனும் துணை நிறுவனம், இணை நிறுவனம், துணை நிறுவனமொன்றின் துணை அல்லது இணை நிறுவனம் அல்லது உடமைக் கம்பனி;

2.4 நிதிக் கம்பனிகளின் பணிப்பாளர்கள் பணிப்பாளர்களாக, பங்குகள் அல்லது வேறு ஏதேனும் முதலீடுகளை வைத்திருக்கும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத கம்பனிகள்;

2.5 நிதிக் கம்பனியில் ஊழியரொருவராக, ஆலோசனையாளராக அல்லது மதியுரையாளராக இருக்கும் எவரேனும் ஆள்.

**வரைவிலக்கணம்**

3. இப்பணிப்புரையில் “உறவினர்” என்பது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவிலுள்ள வரைவிலக்கணத்தின் அதே கருத்தினைக் கொண்டிருக்கும்.

**பணிப்புரைகளை நீக்குதல்**

4. 1991ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கடன்களையும் முற்பணங்களையும் பதிவழித்தல்) பணிப்புரை இத்தால் நீக்கப்படுகிறது.

## 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்

**2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட பணிப்புரை.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

கொழும்பு
2013 யூலை 26

## 2013ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (படுகடன் சாதனங்கள்) பணிப்புரை

**எடுத்துக்காட்டல்**

1. இப்பணிப்புரையானது 2013ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (படுகடன் சாதனங்கள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நியதிகளில் உரிமம் பெற்ற ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடைத்தாதலும் வேண்டுமென்பதுடன் இப்பணிப்புரையின் திகதியிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

**படுகடன் சாதனங்கள்**

2. 2.1 இப்பணிப்புரையானது பணத்தினைக் கடன்படுவதற்காக நிதிக் கம்பனியொன்றினால் வழங்கப்பட்ட படுகடன் சாதனங்களுக்கு ஏற்புடைத்தாதல் வேண்டும். ஒரு படுகடன் சாதனமென்பது முறி, தொகுதிக்கடன், வர்த்தகப்பத்திரம், வாக்குறுதிச் சான்றிதழ் அல்லது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான வேறு ஏதேனும் படுகடன் சாதனம் எனப் பொருள்படும்.

2.2 படுகடன் சாதனங்கள் ஒவ்வொன்றினதும் வழங்கல் காசு என அல்லது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக்கூடிய வேறு ஏதேனும் பெறுமதி கொண்டதாக கருப்படுதல் வேண்டும்.

2.3 நிதிக் கம்பனியொன்று இப்பணிப்புரை, நிதிக் கம்பனிகள் (வட்டி வீத) பணிப்புரை மற்றும் நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரை என்பனவற்றின் ஏற்பாடுகளுக்குட்பட்டு படுகடனை வழங்கலாம்.

**படுகடன் சாதனங்களின் முதிர்ச்சி**

3. எந்தவொரு படுகடன் சாதனத்தினதும் மீட்புத் திகதி ஒரு மாதத்திலும் பார்க்க குறைவானதாக இருக்கக்கூடாது என்பதுடன் அத்தகைய படுகடன் சாதனத்தின் வழங்கல் திகதியிலிருந்து அறுபது மாதங்களை விஞ்சாதும் இருத்தல் வேண்டும்.

**நிதியிடல் முதிர்ச்சிகள்**

4. 4.1 ஓராண்டு அல்லது அதற்கும் குறைவான முதிர்ச்சிகளுடன் கூடிய படுகடன் சாதனங்கள்,

(i) தனிப்பட்ட வைப்புக்களூடாக வழங்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ii) ஒரு மில்லியனுக்கும் (1,000,000) குறையாத பெறுமதியொன்றில் வழங்கப்படுதல் வேண்டும்.

4.2 ஓராண்டிற்கும் கூடுதலான முதிர்ச்சியுடன் கூடிய படுகடன் சாதனங்களின் வழங்கலானது,

(i) இலங்கை பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் படுகடன் பட்டியலிடல் விதிகளுக்கிணங்க கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) படுகடன் சாதனங்களை வழங்குவதற்கு முன்னர் பணிப்பாளருக்கு விண்ணப்பித்து எழுத்து மூலமான ஒப்புதலைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வட்டி/ நறுக்கு வீதம்/ கழிவு வீதம்**

5. நிதிக் கம்பனியொன்றினால் வழங்கப்பட்ட படுகடன் சாதனத்திற்கு செலுத்தப்படக் கூடிய உயர்ந்தபட்ச ஆண்டு வட்டி வீதம்/ கழிவு/ நறுக்கு வீதம் நிதிக் கம்பனிகள் (வட்டி வீதங்கள்) பணிப்புரையின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**திரவத் தேவைப்பாடு**

6. ஒவ்வொரு நிதிக் கம்பனியும் நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரையின் ஏற்பாடுகளுக்குட்பட்டு படுகடன் சாதனங்களுக்கான திரவத்தன்மையினைப் பேணுதல் வேண்டும்.

**படுகடன் சாதனங்களின் வடிவமைப்பு**

7. 7.1 பணத்தினைக் கடனாகப் பெறும் ஒவ்வொரு நிதிக் கம்பனியும் படுகடன் சாதனங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ஆட்களுக்கும் அத்தகைய படுகடன் சாதனமொன்றினை வழங்குதல் வேண்டும். இது அனைத்து நோக்கங்களின் பொருட்டும் அத்தகைய பணத்தினை நிதிக் கம்பனி ஏற்றுக் கொண்டதனை அறிவிக்குமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

7.2 அத்தகைய படுகடன் சாதனம் ஒவ்வொன்றும் படுகடன் சாதனங்களை வழங்குகின்ற நோக்கத்திற்காக பணிப்பாளர் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட குறைந்தபட்சம் இரண்டு அலுவலர்களினால் கையொப்பமிடப்பட்டிருத்தல் வேண்டும்.

7.3 ஒவ்வொரு படுகடன் சாதனமும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(i) தொடர் இலக்கம்;

(ii) நிதிக் கம்பனியின் பெயர் மற்றும் பதிவு செய்யப்பட்ட முகவரி;

(iii) வழங்கப்பட்ட திகதி;

(iv) முதலீட்டாளரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கம் மற்றும் முகவரி;

(v) பெறப்பட்ட பணத்தின் தொகை எழுத்திலும் இலக்கத்திலும்;

(vi) கொடுபடத்தக்க ஆண்டு வட்டி வீதமும் கொடுப்பனவு அடிப்படையும்;

(vii) படுகடன் சாதனத்தினை மீட்புச் செய்யக்கூடிய திகதி; அத்துடன்

(viii) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களின் பெயர்களும் பதவியும்.

**ஆவணங்கள்**

8. 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கும் அதில் விடுக்கப்பட்ட ஏதேனும் விதிகளுக்கும் மேலதிகமாக, ஒவ்வொரு நிதிக் கம்பனியும் பின்வருவன உட்பட ஒவ்வொரு வகைச் சாதனங்களுக்கும் வெவ்வேறான பதிவேடுகளைப் பேணுதல் வேண்டும்:

(i) தொடர் இலக்கம்;

(ii) ஒவ்வொரு முதலீட்டாளரினதும் பெயர், முகவரி, தொடர்பு விபரங்கள், தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது கடவுச்சீட்டு இலக்கம் அல்லது கம்பனி முதலீட்டாளர்களைப் பொறுத்தவரையில் பெயர், பதிவு செய்யப்பட்ட முகவரி, தொழில் இடம்பெறும் முக்கிய இடம், கம்பனிப் பதிவு இலக்கம்;

(iii) பெறப்பட்ட பணத்தொகை;

(iv) படுகடன் சாதனங்களின் மீட்புத் திகதி;

(v) வட்டி வீதம் மற்றும் வட்டிக் கொடுப்பனவின் அடிப்படை (மாதாந்தம்/ காலாண்டு/ அரையாண்டு/ ஆண்டு அல்லது மீட்பில்); அத்துடன்

(vi) ஒவ்வொரு கொடுப்பனவினதும் திகதியும் தொகையும் (வட்டி அத்துடன்/ அல்லது முதல் தொகை).

**ஓராண்டிற்கு மேலான முதிர்ச்சிகளைக் கொண்ட படுகடன் சாதனத்திற்கான விளம்பரம் மற்றும் ஏனைய தேவைப்பாடுகள்**

9. 9.1 பொதுமக்களிடமிருந்து வைப்புக்களைக் கோரி நிதிக் கம்பனியினால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பிரசுரிக்கப்படுகின்ற ஒவ்வொரு விளம்பரமும் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:-

(i) அத்தகைய கம்பனிக்கு 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் உரிமம் வழங்கப்பட்டிருக்கின்றது;

(ii) கம்பனி கூட்டிணைக்கப்பட்ட திகதி;

(iii) இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளத்தக்க கொடுகடன் தரமிடல் முகவரினால் கம்பனிக்காகவும் படுகடன் சாதனத்திற்காகவும் வழங்கப்பட்ட கொடுகடன் தரமிடல்;

(iv) அத்தகைய படுகடனின் வட்டியின் காலாந்தரக் கொடுப்பனவு, ஆண்டு நறுக்கு வீதம் மற்றும் அத்தகைய படுகடன்களின் முதிர்ச்சி; மற்றும்

(v) அத்தகைய வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகள்.

9.2 இப்பிரிவின் கீழ் விளம்பரங்களை மேற்கொள்ளும் பொழுது ஏனைய நிதிக் கம்பனிகளிடையே நியாயமற்றதும் ஒழுக்கநெறியற்றதுமான போட்டிகளுக்கு இட்டுச் செல்லக்கூடிய எந்தவொரு பதத்தினையும் நிதிக் கம்பனிகள் பயன்படுத்தக்கூடாது. இப்பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட/ அனுப்பப்பட்ட/ ஒலிபரப்பப்பட்ட/ காட்சிப்படுத்தப்பட்ட ஏதேனும் விளம்பரங்கள் இப்பிரிவின் ஏற்பாடுகளுடன் இணங்கிச் செல்லவில்லை அல்லது பொதுமக்களைத் தவறாக வழிநடத்தக்கூடிய தகவல்களைக் கொண்டிருக்கிறது எனப் பணிப்பாளர் கருதுமிடத்து அவர் திருத்தியமைக்கப்பட்ட வாசகத்தினை பிரசுரிக்குமாறு/ அனுப்புமாறு/ ஒலிபரப்புமாறு/ காட்சிப்படுத்துமாறு அல்லது நியாயமானதொரு காலப்பகுதிக்குள் பணிப்பாளரினால் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் அத்தகைய விளம்பரத்தினை நிறுத்தி வைக்குமாறு நிதிக் கம்பனியினைப் பணிக்கலாம்.

9.3 நிதிக் கம்பனியொன்று படுகடன் வழங்கலுக்கான உதவுதொகையினை திரட்டுவதற்கான ஏதேனும் விளம்பரங்களை வெளியிடுவதற்கு அல்லது காட்சிப்படுத்துவதற்கு முன்னர் பணிப்பாளரின் எழுத்து மூலமான அனுமதியினைப் பெறுவதற்கு விண்ணப்பித்தல் வேண்டும். நிதிக் கம்பனியொன்று ஏதேனும் விளம்பரமொன்றினை வெளியிடுவதற்கு/ காட்சிப்படுத்துவதற்கு குறைந்தபட்சம் 3 வேலை நாட்களுக்கு முன்னதாக அத்தகைய விளம்பரத்தினை அச்சு வடிவிலோ அல்லது இலத்திரனியல் வடிவிலோ பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**வரைவிலக்கணம்**

10. இப்பணிப்புரையில்

(i) “பணிப்பாளர் சபை” என்பது நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபை எனப் பொருள்படும்.

(ii) “பணிப்பாளர்” என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப் பொருள்படும்.

(iii) “நிதியியல் நிறுவனங்கள்” என்பது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற வங்கியொன்றினை அல்லது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற நிதிக் கம்பனியொன்றினை அல்லது 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனமொன்றினைக் குறிக்கும்.

(iv) “தனிப்பட்ட வைப்பு” என்பது முன்விபரணங்களின் வழங்கல் அல்லது இணையத்தளம், அஞ்சல், தொலைநகல், மின்னஞ்சல், துண்டுப் பிரசுரங்கள், பதாதைகள், சுவரொட்டிகள் அல்லது கையேடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய பொதுமக்கள் ஊடகங்களினூடாக அல்லது வேறு ஏதேனும் விதத்தில் மேற்கொள்ளப்பட்ட விளம்பரங்கள் எதுவுமில்லாமல் வழங்கப்படுகின்ற ஏதேனும் படுகடன் சாதனம் எனப் பொருள்படும்.

## 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

கொழும்பு
2013 யூலை 26

## 2013ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரை

**எடுத்துக்காட்டல்**

1. இப்பணிப்புரையானது 2013ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நியதிகளில் உரிமம் பெற்ற ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடைத்தாதலும் இப்பணிப்புரை தொழிற்பாட்டிற்கு வரும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

**தவணை வைப்புக்கள் சேமிப்பு வைப்புக்கள் மற்றும் மாற்றல் செய்ய முடியாத வைப்புச் சான்றிதழ்களுக்காக தேவைப்படுத்தப்படும் திரவச் சொத்துக்கள்**

2. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, ஒவ்வொரு நிதிக் கம்பனியும் ஆகக் குறைந்த திரவச் சொத்தொன்றினைப் பேணி வருதல் வேண்டும். இது, எந்தவொரு வேலை நாள் முடிவின் போதும் மொத்தத்தின் பின்வரும் சதவீதத்திற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும்:

   (i) பின்வருவனவற்றில் பத்து (10) சதவீதம்:

      (அ) அத்தகைய நாளன்று வியாபாரம் முடிவடைகையில் நிதிக் கம்பனியினால் பெறப்பட்ட தவணை வைப்புக்களினதும் செலுத்தப்படத்தக்க ஒன்றுசேர்ந்த வட்டியினதும் வெளிநின்ற பெறுமதியில்; அத்துடன்

      (ஆ) அத்தகைய நாளன்று வியாபாரம் முடிவடைகையில் நிதிக் கம்பனியினால் வழங்கப்பட்ட மாற்றத் தகாத வைப்புச் சான்றிதழின் முகப்புப் பெறுமதி மற்றும் செலுத்தப்படத்தக்க ஒன்று சேர்ந்த வட்டியில்; அத்துடன்

   (ii) அத்தகைய நாளின் வியாபாரம் முடிவடைகையில், அத்தகைய நிதிக் கம்பனியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சேமிப்பு வைப்புக்களினதும் செலுத்தப்படத்தக்க ஒன்றுசேர்ந்த வட்டியினதும் வெளிநின்ற பெறுமதியில் பதினைந்து (15) சதவீதம்.

**கடன்பாடுகளுக்கான திரவச் சொத்துக்களின் தேவைப்பாடு**

3. பிரிவு (2)இல் உள்ள தேவைப்பாடுகளுக்குப் புறம்பாக, ஒவ்வொரு நிதிக் கம்பனியும் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவில் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு, கடன்பாடுகளின் மொத்தப் பெறுமதி சொத்துக்களின் சந்தைப் பெறுமதியினை விஞ்சக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு நிதிக் கம்பனியின் மூலதன நிதியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கடன்பாடுகள் மற்றும் கம்பனியின் ஏதேனும் சொத்துக்களினால் பிணையிடப்பட்ட கடன்பாடுகள் நீங்கலாக, எந்தவொரு நாளிலும் வியாபாரம் முடிவடைகையில் மொத்த வெளிநின்ற கடன்பாடுகள் மற்றும் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான வேறு ஏதேனும் கொடுப்பனவுகளின் தொகையில் 2014.01.01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் ஐந்து (5) சதவீதத்திற்குக் குறையாத அளவிலும் 2014.07.01 இலிருந்து நடைமுறைக்குவரும் வகையில் பத்து (10) சதவீதத்திற்குக் குறையாத அளவிலும் திரவச் சொத்துக்களின் குறைந்தபட்ச உடமையைப் பேண வேண்டும்.

**இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள் இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களின் தேவைப்பாடு**

4. 4.1 ஒவ்வொரு நிதிக் கம்பனியும் முற்போந்த நிதியாண்டினது பன்னிரண்டு மாதங்களின் மொத்த வைப்புப் பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகள் தொடர்பில் மாத இறுதியில் காணப்படும் சராசரியில் ஏழரை சதவீதத்திற்குச் (7.5) சமமான தொகையினை எல்லா நேரங்களிலும் இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள் என்பனவற்றின் வடிவில் பேணுதல் வேண்டும். இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கிப் பிணையங்கள் என்பனவற்றின் அத்தகைய உடமைகள் முதலீட்டு நிதியக் கணக்குப் பயன்பாட்டுக் கணிப்பீட்டிற்குப் பரிசீலனையில் கொள்ளப்படக்கூடாது.

   4.2 மேலேயுள்ள பிரிவு 2 மற்றும் 3இல் குறிப்பிடப்பட்ட இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் என்பன மேலேயுள்ள பந்தி 4.1இல் குறிப்பிடப்பட்ட திரவச் சொத்துக்களின் ஒரு பகுதியினை உள்ளடக்கியதாக இருக்கும்.

   4.3 மேலேயுள்ள பந்தி 4.1இன் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும் விதத்தில் நிதிக் கம்பனியொன்றின் வசமுள்ள இலங்கை அரச திறைசேரி உண்டியல்கள், இலங்கை அரச பிணையங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பிணையங்கள் என்பன ஒரு அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் அல்லது ஒரு அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட முதனிலை வணிகர் கம்பனிகளின் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படல் வேண்டும்.

**அறிக்கையிடல்**

5. ஒவ்வொரு நிதிக் கம்பனியும் திரவச் சொத்துக்களை அடுத்துவரும் மாதத்தின் ஏழாம் (7) திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ வெப்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட அறிக்கையிடல் முறைமையூடாக பணிப்பாளருக்கு அறிக்கையிடல் வேண்டும்.

**வரைவிலக்கணம்**

6. இப்பணிப்புரையில்:

   (i) "தவணை வைப்புக்கள்" என்பது நிதிக் கம்பனிகள் (வைப்புக்கள்) பணிப்புரையின் அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   (ii) "மொத்த வைப்புப் பொறுப்புக்கள்" என்பது தவணை வைப்புக்களின் வெளிநின்ற பெறுமதி, மாற்றல் செய்யமுடியாத வைப்புச் சான்றிதழ்களின் வெளிநின்ற முகப்புப் பெறுமதி மற்றும் சேமிப்பு வைப்புக்களின் வெளிநின்ற பெறுமதி என்பனவற்றை உள்ளடக்குகிறது.

   (iii) "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப் பொருள்படும்.

(iv) "கடன்பாடுகள்" என்பது தொடர்பான கம்பனிகளுக்கு வரவேண்டிய கடன்கள்/ மேலதிகப் பற்றுக்கள் என்பன மூலமாகப் பெறப்பட்ட நிதியம் அல்லது முன்னுரிமைப் பங்குகள், பிணையமயப்படுத்தல்கள், முறிகள், தொகுதிக் கடன்கள், வாக்குறுதிச் சான்றிதழ்கள், வர்த்தகப் பத்திரங்கள், வரவேண்டிய வேறு ஏதேனும் நிலுவைகள் மற்றும் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறான வேறு ஏதேனும் விதத்திலமைந்த கடன்பாடுகள் எனப் பொருள்படும்.

(v) "உரிமம் பெற்ற வர்த்தக வங்கி" என்பது 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கி எனப் பொருள்படும்.

(vi) "முதனிலை வணிகர் கம்பனி" என்பது 1995ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் 16ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட 2002ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் (முதனிலை வணிகர்கள்) கட்டளைச் சட்டம் மற்றும் 1995ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறான பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 420) 55ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட 2002ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள், கட்டளை (முதனிலை வணிகர்) ஒழுங்குவிதிகளின் கருத்துகளுக்குட்பட்ட முதனிலை வணிகர் கம்பனி எனப் பொருள்படும்.

**நீக்கப்படுதல்** 7. 2009ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (திரவச் சொத்துக்கள்) பணிப்புரை இத்தால் நீக்கப்படுகிறது.

**2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

கொழும்பு
2013 யூலை 26

## 2013ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி வீதங்கள்) பணிப்புரை

**எடுத்துக்காட்டல்** 1. 1.1 இப்பணிப்புரையானது 2013ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி வீதங்கள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நியதிகளின் கீழ் உரிமம் பெற்ற ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

1.2 இப்பணிப்புரையின் ஏற்பாடுகள், இப்பணிப்புரையின் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது புதுப்பிக்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட ஏதேனும் தவணை வைப்பு, மாற்றல் செய்ய முடியாத வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் என்பனவற்றிற்கு ஏற்புடைத்தாதல் வேண்டும்.

**தவணை வைப்பிற்கான உயர்ந்தபட்ச வட்டி வீதம்** 2. 2.1 தவணை வைப்புக்களின் மீது நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்படத்தக்க ஆண்டு வட்டி வீதம் கீழே எடுத்துக்காட்டப்பட்டவாறு வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச மேல் எல்லையினை விஞ்சக்கூடாது.

| தவணை வைப்பு முதிர்ச்சிக் காலம் | வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச் மேல் எல்லை | |
|---|---|---|
| ஓராண்டு அல்லது அதற்கும் குறைவானவை | வைப்புக்கள் திரட்டப்படுவதற்கு முன்னைய முற்போந்த காலாண்டுப் பகுதியில் நிதிக் கம்பனிகளுக்கு பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டுச் சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள் | 2.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |
| ஓராண்டிற்கு மேல் - 3 ஆண்டுகள் | | 2.50 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |
| 3 ஆண்டுகளுக்கு மேல் - 5 ஆண்டுகள் | | 3.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது |

2.2 ஆளொருவரிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுமிடத்து அல்லது அவரால் புதுப்பிக்கப்படுமிடத்து அத்தகைய வைப்புக்களை அவர் மேற்கொள்ளும் பொழுது அல்லது புதுப்பிக்கும் வேளையில் அவர் ஐம்பத்தைந்து (55) வயதிற்கு மேற்பட்டவராக இருப்பின் (இதனகத்துப் பின்னர் "மூத்த பிரசை" எனக் குறிப்பிடப்படுவார்) நிதிக் கம்பனியொன்று மேலேயுள்ள பந்தியில் (2.1)இல் குறிப்பிடப்பட்டவாறான வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச மேல் எல்லைக்குக் கூடுதலாக ஒரு சதவீதப் புள்ளியினை விஞ்சாத வட்டியொன்றினை கூடுதலாகச் செலுத்தலாம்.

**சேமிப்பு வைப்புக்களுக்கான உயர்ந்தபட்ச வட்டி வீதம்** 3. 3.1 எந்தவொரு சேமிப்பு வைப்பின் மீதும் நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்படத்தக்க உயர்ந்தபட்ச வட்டி வீதங்கள் சேமிப்பு வைப்புக்கள் திரட்டப்படுவதற்கு முன்னைய முற்போந்த காலாண்டுப் பகுதியில் நிதிக் கம்பனிகளுக்கு பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட 91 நாள் திறைசேரி உண்டியல்களின் நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதத்தினை விஞ்சக்கூடாது.

3.2 சேமிப்பு வைப்புக்கள் மூத்த பிரசையொருவரினால் பேணப்படுமிடத்து நிதிக் கம்பனியானது பந்தியில் (3.1) உள்ளவாறு வட்டி வீதங்களின் உயர்ந்தபட்ச மேல் எல்லைக்குக் கூடுதலாக ஒரு சதவீதப் புள்ளியை விஞ்சாத விதத்தில் மேலதிக வட்டி வீதமொன்றினைச் செலுத்தலாம்.

**மாற்றல் செய்யமுடியாத வைப்புச் சான்றிதழுக்கான உயர்ந்தபட்ச கழிவு வீதம்** 4. முதிர்ச்சியின் போது மீட்கத்தக்க பெறுமதியிலும் பார்க்க குறைந்த விலைகளைக் கொண்ட மாற்றல் செய்யமுடியாத வைப்புச் சான்றிதழ்களின் வழங்கல் மீது நிதிக் கம்பனியொன்றினால் அனுமதிக்கத்தக்க கழிவு வீதம் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையிலுள்ள சாதனத்தின் மீதான உயர்ந்தபட்ச ஆண்டு விளைவு வீதத்தினை விஞ்சக்கூடாது.

<table>
<tr><th>மாற்றல் செய்யமுடியாத வைப்புச் சான்றிதழ்களின் முதிர்ச்சிக் காலம்</th><th colspan="2">விளைவு வீதத்தின் உயர்ந்தபட்ச மேல் எல்லை</th></tr>
<tr><td>ஓராண்டு அல்லது அதற்கும் குறைவானவை</td><td rowspan="3">வைப்புக்கள் திரட்டப்படுவதற்கு முன்னைய முற்போந்த காலாண்டுப் பகுதியில் நிதிக் கம்பனிகளுக்கு பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டுச் சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள்</td><td>2.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது</td></tr>
<tr><td>ஓராண்டிற்கு மேல் - 3 ஆண்டுகள்</td><td>2.50 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது</td></tr>
<tr><td>3 ஆண்டுகளுக்கு மேல் - 5 ஆண்டுகள்</td><td>3.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது</td></tr>
</table>

**படுகடன் சாதனங்களுக்கான வட்டி/ கழிவிடல்/ நறுக்குகளின் உயர்ந்தபட்ச ஆண்டு வீதம்**

5. படுகடன் சாதனமொன்றின் மீது நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்படத்தக்க உயர்ந்தபட்ச ஆண்டு வீதம் கீழே எடுத்துக்காட்டப்பட்டவாறு முதிர்ச்சிக் காலத்திற்கான வட்டி வீதம்/ நறுக்கு வீதத்திற்கான உயர்ந்தபட்ச மேல் எல்லையை விஞ்சக்கூடாது:-

<table>
<tr><th colspan="2">படுகடன் சாதனங்களின் முதிர்ச்சிக் காலம்</th><th colspan="3">வட்டி/ கழிவிடல்/ நறுக்கின் உயர்ந்தபட்ச ஆண்டு வீதம்</th></tr>
<tr><td colspan="2">ஓராண்டு அல்லது அதற்கும் குறைவானது</td><td rowspan="5">முன்னைய காலாண்டுப் பகுதியில் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்ட 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டு சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதம்</td><td>படுகடன் சாதனங்களை வழங்குவதற்கு முன்னர்</td><td>3.50 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது</td></tr>
<tr><td rowspan="2">மிதக்கும் வீதம்</td><td>ஓராண்டிற்கு மேல் - 3 ஆண்டுகள் வரை</td><td rowspan="2">ஒவ்வொரு வட்டி/ நறுக்குக் காலமும் தொடங்குவதற்கு முன்</td><td>4.25 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது</td></tr>
<tr><td>3 ஆண்டுகளுக்கு மேல் - 5 ஆண்டுகள் வரை</td><td>5.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது</td></tr>
<tr><td rowspan="2">நிலையான வீதம்</td><td>ஓராண்டிற்கு மேல் - 3 ஆண்டுகள் வரை</td><td rowspan="2">பொதுமக்களுக்கு படுகடன் சாதனங்களின் திகதியை அல்லது கழிவிடல் திகதியை அறிவிப்பதற்கு முன்</td><td>4.25 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது</td></tr>
<tr><td>3 ஆண்டுகளுக்கு மேல் - 5 ஆண்டுகள் வரை</td><td>5.00 சதவீதப் புள்ளிகளைக் கூட்டியது</td></tr>
</table>

**காலாண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம்**

6. 6.1 பணிப்பாளர், மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31இல் முடிவடைகின்ற ஒவ்வொரு காலாண்டிற்கும் ஏற்புடைத்தான 91 நாள் மற்றும் 364 நாள் திறைசேரி உண்டியல்களின் காலாண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்களை அறிவிப்பார்.

6.2 அத்தகைய வட்டி/ கழிவிடல்/ நறுக்குக் கொடுப்பனவுக் காலப்பகுதிக்கு ஏற்புடைத்தான காலாண்டு நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் நிதிக் கம்பனியினால் ஒவ்வொரு நறுக்குக் கொடுப்பனவுக் காலம் தொடங்குவதற்கு முன்னதாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

**அறிக்கையிடல்**

7. ஒவ்வொரு நிதிக் கம்பனியும், பணிப்பாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி தவணை வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், மாற்றத்தகாத வைப்புச் சான்றிதழ்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் என்பனவற்றிற்குப் பிரயோகிக்கத்தக்க வட்டி வீதம்/ கழிவிடல்/ நறுக்கு வீதங்களின் விபரங்களை அத்தகைய நிதிக் கம்பனிகள் ஒவ்வொரு மாதமும் அடுத்துவரும் மாதத்தின் 7ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.

**வரைவிலக்கணம்**

8. இப்பணிப்புரையில்,

8.1 "தவணை வைப்புக்கள்" என்பது குறிப்பிட்ட காலத்தின் பின்னர் மீளக் கொடுப்பனவு செய்ய வேண்டுமென்ற உடன்படிக்கையுடன் நிதிக் கம்பனியொன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் வைப்பு எனப் பொருள்படும்.

8.2 "படுகடன் சாதனம்" என்பது பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான முறிகள், தொகுதிக் கடன்கள், வர்த்தகப் பத்திரங்கள், வாக்குறுதிச் சான்றிதழ்கள் அல்லது வேறு ஏதேனும் படுகடன் சாதனங்கள் எனப் பொருள்படும்.

8.3 "பணிப்பாளர்" என்பது இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப் பொருள்படும்.

**நீக்கப்படுதல்**

9. 2012ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (வட்டி வீதங்கள்) பணிப்புரை இத்தால் நீக்கப்படுகிறது.

**2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்**

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் விடுக்கப்பட்ட பணிப்புரை.

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

கொழும்பு
2013 செத்தெம்பர் 17

## 2013ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகை - திருத்தங்கள்) பணிப்புரை

**எடுத்துக்காட்டல்**

1. இப்பணிப்புரையானது 2013ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகை திருத்தங்கள்) பணிப்புரை என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நியதிகளில் உரிமம் பெற்ற ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் ஏற்புடைத்தாதலும் இப்பணிப்புரை தொழிற்பாட்டிற்கு வரும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதலாதலும் வேண்டும்.

**திருத்தங்கள்**

2. 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரையின் 5ஆம் பந்தி இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

அதிலுள்ள துணைப் பந்தி 2 நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி உட்புகுத்தப்படுகிறது.

நிதிக் கம்பனியின் பணிப்பாளரொருவர் நிதிக் கம்பனியின் இணைக் கம்பனிகள் அல்லது துணைக் கம்பனிகள் உட்பட 20 இற்கும் கூடுதலான கம்பனிகள்/ சங்கங்கள்/ கம்பனிச் சபைகளில் பணிப்பாளராகவோ அல்லது அதற்குச் சமமான பதவிகளையோ வகித்தல்கூடாது.

3. 2008ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கம்பனி ஆளுகை) பணிப்புரையின் 10ஆம் பந்தி இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகிறது:

(1) அதிலுள்ள துணைப் பந்தி 2(ஆ) நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி உட்புகுத்தப்படுகிறது:

நிதியியல் அறிக்கையிடல் முறைமையானது, நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உறுதிப்பாட்டினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டது என்பதனையும் வெளிவாரி நோக்கங்களுக்காக நிதியியல் கூற்றுக்கள் கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டது என்பதனையும் உறுதிப்படுத்துகின்ற நிதிக் கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறை தொடர்பான சபையின் அறிக்கை.

(2) துணைப் பந்தி 2(இ) நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி உட்புகுத்தப்படுகிறது:

இப்பணிப்புரையின் திகதியிலிருந்து தயாரிக்கப்பட்ட அல்லது பிரசுரிக்கப்பட்ட ஏதேனும் கூற்றுக்கள் தொடர்பில் மேலேயுள்ள துணைப் பந்தி 2(ஆ)இல் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையின் பயனுறுதன்மை தொடர்பான வெளிவாரிக் கணக்காய்வாளரின் சான்றிதழ்.

(3) துணைப் பந்தி 2(ஒ) நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தி உட்புகுத்தப்படுகிறது:

இப்பணிப்புரையின் திகதியிலிருந்து பிரசுரிக்கப்பட்ட வருடாந்த கம்பனி ஆளுகை அறிக்கைகளிலுள்ள கம்பனி ஆளுகை பணிப்புரைகளுடன் இணங்கிச் செல்வது தொடர்பான வெளிவாரிக் கணக்காய்வாளரின் சான்றுபடுத்தல்.

**2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்**

**2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரை.**

எச்.பீ.டி கருணாரத்ன
**பதில் பணிப்பாளர்**
**வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம்**

2013 செத்தெம்பர் 17

## 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (கம்பனி ஆளுகை - திருத்தம்) பணிப்புரை

**எடுத்துக்காட்டல்**

1. 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் 34ஆம் பிரிவின் நியதிகளில், வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் (இதனகத்துப் பின்னர் “பணிப்பாளர்” எனக் குறிப்பிடப்படும்), 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் சட்டத்தின் 3ஆம் பிரிவின் பந்தி (இ)இன் குறிப்பீடு செய்யப்பட்டு பகிரங்கக் கம்பனிகளாகவுள்ள பதிவு செய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனங்களுக்கு (இதனகத்துப் பின்னர் “சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனி” எனக் குறிப்பிடப்படும்) பொதுப் பணிப்புரைகளை விடுப்பதற்கான அதிகாரத்தினைப் பெற்றுள்ளதுடன் இப்பணிப்புரையின் திகதியிலிருந்து தொழிற்பாட்டிற்கு வருதலாதலும் வேண்டும்.

**திருத்தங்கள்**

2. 2009ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (கம்பனி ஆளுகை) பணிப்புரையின் பந்தி 5 பின்வருமாறு திருத்தப்படுகிறது:

அதன் துணைப் பந்தி (2) நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்:

தொடர்பான நிறுவனத்தின் பணிப்பாளரொருவர் அக்கம்பனியின் இணைக் கம்பனிகள் மற்றும் துணைக் கம்பனிகள் உட்பட 20 இற்கும் கூடுதலான கம்பனிகள்/ சங்கங்கள்/ கம்பனிகளில் பணிப்பாளராகவோ அல்லது அதற்குச் சமமான நிலைமையிலோ பதவியில் இருத்தல்கூடாது.

3. 2009ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடல் (கம்பனி ஆளுகை) பணிப்புரையின் 10ஆம் பந்தி பின்வருமாறு திருத்தப்படுகிறது:

(1) அதிலுள்ள துணைப் பந்தி 2 (ஆ) நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்:

நிதியியல் அறிக்கையிடலின் நம்பகத்தன்மை தொடர்பாக நியாயமான உத்தரவாதங்களை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள நிதியியல் அறிக்கையிடல் முறைமைகளையும் தொடர்பான நிறுவனங்கள் உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையின் மீதும் மற்றும் வெளிவாரி நோக்கங்களுக்காக நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்புத் தொடர்பான கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கிணங்கவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துகின்ற சபையின் அறிக்கையொன்று.

(2) அதிலுள்ள துணைப் பந்தி 2(இ) நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:

இப்பணிப்புரையின் திகதியிலிருந்து தயாரிக்கப்படுகின்ற அல்லது வெளியிடப்படுகின்ற ஏதேனும் கூற்றுத் தொடர்பில் மேலேயுள்ள துணைப் பந்தி (2) (ஆ)இல் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையின் காத்திரமான தன்மை மீதான வெளிவாரிக் கணக்காய்வாளரின் சான்றுபடுத்தல்.

(3) அதிலுள்ள துணைப் பந்தி 2(i) நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும்:

இப்பணிப்புரையின் திகதியிலிருந்து வெளியிடப்பட்ட ஆண்டுக் கம்பனி ஆளுகை அறிக்கைகளிலுள்ள கம்பனி ஆளுகையுடன் இணங்கிச் செல்வது தொடர்பான வெளிவாரி கணக்காய்வாளரின் சான்றுபடுத்தல்.

## 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம்

**2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் 16ஆம் பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் ஆக்கப்பட்ட விதி.**

நிவாட் அஜித் லெஸ்லி கப்ரால்
**நாணயச் சபையின் தலைவரும்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்**

கொழும்பு
2013 திசெம்பர் 18

## 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (ஆண்டு உரிமக் கட்டணம்) விதி

**எடுத்துக்காட்டல்**

1. இவ்விதியானது 2013ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (ஆண்டு உரிமக் கட்டணம்) விதி என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள் ஒவ்வொன்றிற்கும் ஏற்புடைத்தாதலும் வேண்டும்.

**முதல் ஆண்டிற்கான உரிமக் கட்டணம்**

2. இவ்விதியின் திகதியிலிருந்து ஆண்டிற்கான உரிமத்தினைப் பெறுவதற்கு நிதிக் கம்பனியொன்றினால் செலுத்தப்பட வேண்டிய உரிமக் கட்டணம் ரூ.1,000,000 ஆக இருத்தல் வேண்டுமென்பதுடன் இதனை உரிமம் பெறும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்துதல் வேண்டும்.

**ஆண்டு உரிமக் கட்டணம்**

3. 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் கீழ் உரிமம் பெற்ற ஒவ்வொரு நிதிக் கம்பனியும் 2014அம் ஆண்டும் அடுத்து வரும் ஆண்டுகளுக்கும் ஏற்புடைத்தான ஆண்டு உரிமக் கட்டணத்தை முன்னைய ஆண்டின் இறுதியிலுள்ளவாறான கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகையில் காட்டப்பட்டவாறான மொத்தச் சொத்துக்களின் அடிப்படையில் கீழே காட்டப்பட்டவாறு தொடர்பான ஆண்டின் சனவரி 31ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ இலங்கை மத்திய வங்கிக்கு செலுத்துதல் வேண்டும்.

| முன்னைய கலண்டர் ஆண்டின் இறுதியிலுள்ளவாறான மொத்தச் சொத்துக்கள் | ஆண்டு உரிமக் கட்டணம் (ரூ.) |
|---|---|
| ரூ. 1 பில்லியன் அல்லது அதற்குக் கீழ் | 300,000 |
| ரூ. 1 பில்லியனிற்கு மேல் ரூ. 5 பில்லியன் வரை | 750,000 |
| ரூ. 5 பில்லியனுக்கு மேல் ரூ.10 பில்லியன் வரை | 1,000,000 |
| ரூ.10 பில்லியனுக்கு மேல் ரூ.20 பில்லியன் வரை | 1,500,000 |
| ரூ.20 பில்லியனுக்கு மேல் | 2,000,000 |

**நீக்கிவிடுதல்**

4. 2012ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (ஆண்டு உரிமக் கட்டணம்) விதி இத்தால் நீக்கப்படுகிறது.